
கோஷாயி

அனுபோக வைத்திய பிரம்ம ரகசியம்

பாகம்-2



தாமரை நூலகம், சென்னை - 600 026.

கோஷாயி

அனுபோக வைத்திய பிரம்ம ரகசியம்

இரண்டாம் பாகம்

பதிப்பாசிரியர்
ஆர்.சி.மோகன்

தாமரை நூலகம்
7, என். ஜி. ஓ. காலனி 3வது தெரு
வடபழனி, சென்னை - 600 026
தொலைபேசி எண் - 044 - 23620249

தாமரை வெளியீடு எண் : 235

முதல் பதிப்பு : மார்ச் - 1999
இரண்டாம் பதிப்பு : ஜனவரி - 2012
மூன்றாம் பதிப்பு : மார்ச் - 2017

நூலைப்பற்றி

நூலின் பெயர் : கோஷாயி - அனுபோக வைத்திய பிரம்ம ரகசியம் இரண்டாம் பாகம்

பதிப்பாசிரியர் : ஆர்.சி. மோகன்

வெளியிட்டோர் : தாமரை நூலகம்
7, என். ஜி. ஓ. காலனி
வடபழனி, சென்னை - 26.

பதிப்பு ஆண்டு : மார்ச் - 2017

உரிமை : பதிப்பகத்திற்கு

நூல் வடிவம் : 21 செ. மீ. x 14 செ. மீ

நூலின் தன்மை : சித்தர் இலக்கியம்

அச்சுத்தாள் : 16.6 கி.கி. வெள்ளைத்தாள்

எழுத்துக்கள் : 11 புள்ளி

மொத்த பக்கங்கள் : 282 +16

பிரதிகள் : 1000

நூல் விலை : ரு. 125.00

அச்சிட்டோர் : கிரியேட்டிவ் ஆப்செட்
நுங்கம்பாக்கம், சென்னை - 34

பதிப்புரை

தமிழ் மருத்துவர்களிடையே கோஷாயியின் பெயர் இவ்வளவு பிரபலமாக இருக்கும் என்று நினைக்க வில்லை.

இந்த நூலின் பெயரைக் கேட்டவுடனே விரும்பி வாங்காதவர் யாருமே இல்லை. கோஷாயியின் எளிமையான முறைகளும், மருந்துகள் அளித்த அற்புதமான பலன்களும்தான் அதற்குக் காரணமாக இருக்க வேண்டும்.

இதன் ஆறாம் பாகத்தில், பலவிதமான நோய்களுக்கும் மூலிகைகளைப் பயன்படுத்தும் முறை விரிவாகக் கூறப்பட்டுள்ளது. நூற்று ஐம்பத்தேழு வகைப் பிரயோகங்கள் கூறப்பட்டுள்ளன. இது வேறெந்த நூலிலும் இல்லாத சிறப்பான அம்சமாகும்.

பல ஆண்டுகளாகக் கிடைக்காமலிருந்த இந்த நூல் மருத்துவ உலகிற்கு ஒரு களஞ்சியம் போல் உதவும் என்று நம்புகிறோம்.

இந்த நூல் முழுமையாகக் கிடைக்க உதவிய திரு. ஏ. என். அனுமந்தன் அவர்களுக்கு நன்றி தெரிவிக்க கடமைப் பட்டுள்ளோம்.

எஸ். பி. ராமச்சந்திரன்
பதிப்பாசிரியர்

உ

தேவிசகாயம்

அனுபோகவயித்திய பிரம்மரகசியம்

ஐந்தாவது காண்டம்

விநாயகர் துதி

பூமாது தனைமணர்ந்த புயல்வண்ணப் பெருமாளும்
புலவர் போற்று
நாமாது தனைமணந்த நான்முகனும் போர்மாது
நயக்கு மெண்டோட்
கோமானுந் தானேயென் றுணர்த்துதற்கே பிரணவருஞ்
சரமாய்த் தோன்றி
மாமாவின் முகத்தானை யுயிர்த்தானை நினைத்திறைஞ்சி
வழுத்து வாமே.

நாடிகள் நடக்கும் விவரம்

இருதயம் விரியவும் சுருங்கவும் நாடி நரம்புகள் விரியவும் சுருங்கவும் செய்யும், இருதய நடைக்கு நாடிநடை ஒத்திருப்பதால் தேகத்திலிருக்கின்ற ரோகங்களை இருதயம் அறிந்து நாடிகளின் வழியாய்த் தெரிவிக்கின்றது.

நாடியைப் பரிட்சிக்கும் இடங்கள்

1-வது. கை, 2-வது, கண்டம், 3-வது, கன்னிச்சுழி,
4-வது, காலின் பெருவிரல், 5-வது, கணுக்கால்,
ஆனால் கையைப் பரிட்சிப்பதுதான் உத்தமம்.

நாடிகள் பரிட்சிக்கும் விவரம்.

கையின் பெருவிரல் பக்கமாக ஓடும் நாடியை மணிக்கட்டுக்கு ஓர் அங்குலம் மேலாக மூன்றுவிரல்களால் அழுத்தியும், தளர்த்தியும், சமமாகவும், மாறி மாறி பரிட்சிக்க நாடி நடை அறியலாம். புருஷர்களுக்கு வலதுகையும், ஸ்திரீகளுக்கு இடதுகையும், பரிட்சிக்க வேண்டியது. இரண்டு கைகளும் பரிட்சிப்பதுமுண்டு.

நோயாளியைப் படுக்கவைத்தாவது உட்காரவைத்தாவது நாடியைப் பரிட்சிக்கலாம்.

நாடிபார்க்கும் மாதவகை.

சித்திரை வைகாசிக்கு உதயத்திலும், ஆனி ஆடி
ஐப்பசி கார்த்திகைக்கு மத்தியானத்திலும், மார்கழி
தை மாசிக்கு அஸ்தம னத்திலும் பங்குனி
ஆவணி புரட்டாசிக்கு இராத்திரியிலும்
பார்க்க நாடி தெளிவாய் தோற்றும்.

நாடிபார்க்கும் விவரம்

நாடியைப் பரிட்சிப்பதில் முதல்விரற்கீழ் வாதநாடி, நடுவிரற்கீழ் பித்தநாடி, கடைவிரற்கீழ் சிலேத்துமநாடி, யென்றறியவும்.

புருஷருக்கு நாடிநடக்கும் விதம்.

வாதநாடி குயில்போலும் அன்னம்போலும் கோழிபோலும்
மயில்போலும் நடக்கும் பித்தநாடி ஆமைபோலும்,
அட்டைபோலும் நடக்கும் சிலேத்மநாடி
பாம்புபோலும் தவளைபோலும் நடக்கும்.

பெண்களுக்கு நாடி நடக்கும் விதம்.

வாதநாடி-சர்ப்பம்போல் நடக்கும்
பித்தநாடி தவளைபோல் நடக்கும்
சிலேத்துமநாடி அன்னம்போல் நடக்கும்.

பஞ்சபூத நாடிகளிருக்குமிடத்தின் விவரம்.

பெருவிரல்	-	பூதநாடி
ஆள்தூண்டிவிரல்	-	வாதநாடி
நடுவிரல்	-	பித்த நாடி
பவுத்திரவிரல்	-	சிலேத்மநாடி
சிறுவிரல்	-	பூதநாடி
குருநாடி	-	ஐந்துட் சேர்ந்து நிற்கும்.

திரேகத்தில் வாதபித்த சிலேஷ்மம்
இருக்கவேண்டிய நிதானம்.

திரேகத்தில் சிலேஷ்மம் ஒருபங்கும், பித்தம் இரண்டு பங்கும், வாதம் நாலுபங்கும் இருக்குமாகில் வியாதியில்லை யென்றறியவும்.

ஒரு நிமிஷத்திற்கு நாடி நடக்கும் பிரமாணம்.

குழந்தை பிறந்தவுடன்	140	க்ஷீணபருவத்தில்	70
பாலியத்தில்	120-130	விருத்தாப்பியத்தில்	75-80
குழந்தையில்	100	உட்கார்ந்திருக்கும்போது	40
யெவன பருவத்தில்	90	நிற்கும்போது	70
சம்பூர்ண பருவபுருஷ	70-75	படுத்திருக்கும்போது	67
சம்பூர்ண பருவஸ்ரீகளி	75-80	(இவ்விதமாய் நாடிநடக்கும்)	

நாடிபேதாபேதம்

நடந்து தேகம் அருண்டிருந்தாலுஞ் சாப்பாடு சுடுபதார்த்தங்கள் சாராயமுதலிய லாகிரிவஸ்துக்கள் புகையிலை வெயில் சுரம் நித்திரைபங்கம் மனசஞ்சலம் அதிக பலயீனம் இரத்தம்வடிதல் முதலானதுகளினாலும் நாடிநடை தீவிரமாயும் படபடென்றுமோடும்.

பசி விசனம் குளிர் அதிக நித்திரை முதலானதுகளினால் நாடிநடை குறையும்.

விருத்தர், பாலர், க்ஷயரோகி, தரித்திரர், சிற்றின்பஞ் செய்தபேர்கள் தண்ணீரில் முழ்கினபேர்கள், இவர்களின் தாதின் உண்மை தெரியாது.

நாடிபார்க்கும் ஸ்தானத்திற்குமேல் யாதொரு கட்டிருந்தாலும் பூமியிற் கரத்தை யூன்றிக்கொண்டிருந்தாலும் காலைக் கட்டிக்கொண்டிருந்தாலும் நாடிநடை தோற்றாது.

மனிதர் வயதின் விபரம்

வயதுநூறில் 30க்குள் உடல்வளரும், அதற்குமேல் முகத்தின் ஒளிகுன்றும், 40-க்குமேல் தேஜஸ் கெடும், 50-க்கு மேல் உடல்தளரும், ரோமம்வெளுக்கும், 60-க்கு மேல் கண்ணொளி மங்கும் நடக்கிற்றிகைப்புண்டாகும். 70-க்கு மேல் அறிவு குறையும், 80-க்குமேல கவாசம் மேல்நோக்கி வெளியிற் பாயும், 90-க்குமேல் ஐம்பொறியும் புலனும் ஒடுங்கி யிந்திரியமற்று நூறில் மரணம். ஆனாலிடையிலவமிருத்து தத்துபிணி முதலானவைகளால் மரணமுண்டு.

தேகக்கட்டளை விபரம்

பிரிதிவி-மண்-அப்பு-ஜெலம்-தேயு-அக்கினி-வாயு-காற்று-ஆகாயம்-வெளியென்று சொல்லி பஞ்சபூதியங்கள் சரீரத்துக்கு ஆதாரமாயிருக்கின்றது.

வாதம் வாயுவின் தன்மையொத்தும், பித்தம் தேயுவின் தன்மையொத்தும், சிலேத்மம் அப்புவின் தன்மையை யொத்துமாயிருப்பதால் சுரோணிதத்துடன் சுக்கிலஞ்சேரும்போது வாதபித்த சிலேத்துமங்களில் எது அதிகரித்திருக்கிறதோ அது சிசுவிற்குப்பற்றி வாததேகம் பித்ததேகம் சிலேத்ம தேகமென்று மூவகைத் தேகக்கட்டளை யுண்டாயிருக்கின்றன.

வாததேகக்குறிகள்

நாடி மெதுவாய் நடக்கும் தேகமெத்த அசதியுள்ளதாயும் புத்திமந்தமாயுமிருக்கும் உற்ற காரியத்தை மெத்தனவா யெண்ணும் சற்றுஞ் சலியாம லுரைப்பதெல்லாம் உழல்வாயிருக்கும் வெற்றியும் புகழும் உண்டாகவேண்டிப் பொய் மெய்யாய்ப்பேசும் உடல்குளிர்ந்து பருத்திருக்கும்.

பித்ததேகக்குறிகள்

நாடி விரைவாய் நடக்கும் திடமுந் தீர்க்கமுங் கடினமான காரியங்களைச் சாதிக்கும் சக்தியுண்டாகும் இளமையில் நரைக்கும் கடைக்கண் சிவப்பாயிருக்கும் சொற்கள் அமிர்தமாயிருக்கும் காமக்குரோதாதிகள் அதிகரித்திருக்கும். உடல் ஊஷ்ணமாயிருக்கும் மெய்பொய் அறியும்படி பல நூல்களை ஆராயும்.

சிலேத்தும தேகக்குறிகள்

நாடி அதிகமிரிட்சியும் துற்பெலனுள்ள தாயுமிருக்கும் உடல் வியர்க்கும் சன்மார்க்கத்தில் இச்சையுண்டாகும் தோகையரின்பமும் பொய் களவும் விலகியிருக்கும் தலை மயிர் நீண்டு காட்டும் பகிடி கூறும் திருமாதணைந்து வாழ்வள்.

வாதபித்த சிலேத்தும நிலை

அனுபானமுத லுந்திவரை வாதநிலை
உந்தியின் மேல் மார்புமட்டும் பித்தநிலை
மார்புமுத லுச்சிவரை அய்யநிலை.

வாதபித்த சிலேத்துமத்தினியல்பு

வாதம், வாய்வு, புளிப்பு, குளிர்ச்சி, நிறம், கருமை, நீலம். பித்தம் - வன்னி, கசப்பு, வெதுப்பு, நிறம், பசுமை, பச்சை. அய்யம்- அப்பு, தித்திப்பு, வியர்வை நிறம் வெண்மை.

வாதம் எழும்பிடில் புளிப்பு நாவிலேறும், பித்தம் எழும்பிடில் கசப்பு நாவிலேறும், சிலேத்துமம் எழும்பிடில் இனிப்பு நாவிலேறும்.

தேகங் குளிர்ந்தால் வாதம், தேகஞ் சுட்டால் பித்தம், தேகம் வியர்த்தால் சிலேத்துமம்.

வாதபித்த சிலேத்துமகாலம்

உதயத்தில் 10-கடிகை வரைவாதம், உச்சியில் 10 கடிகைவரை பித்தம், மாலையில் 10-கடிகைவரை சிலேத்துமம் நடக்கும்.

மனிதர்களுக்கு வயசு 100-ல், 40-வயசு வரைவாத காலம், 40-முதல் 80-வரை பித்தகாலம், 80-க்குமேல் 100-வரை சிலேத்துமம் காலம்.

ரோகஸ்தர்களின் தேகமுதலானகுறிகள்

வாதரோகியுடல் குளிர்ந்து முகம் விழி பல் மலம் கருத்திருக்கும் விழியில் நீர்வடியும் நாக்குக் கறுத்து வரண்டு முள்ளு முள்ளாயிருக்கும் சிறுநீர் பொருமிக் கருமையாய்க் கடுத்துச் சிறுத்திரங்கும்.

பித்தரோகியுடல் சூடாயும் முகம் விழி நாக்கு பல் மலம் மஞ்சளாயிருக்கும் நீர் மஞ்சளாயுஞ் சிவப்பாயுமிரங்கும்

சிலேத்ம ரோகியுடல் வியர்க்கும் முகம் விழி பல்நாக்கு மலம் நீர் வெளுப்பாயிருக்கும் கண்ணிற் பீளைகட்டும்.

தொந்தரோகியுடல் முகம் விழி பல் நாக்கு நீர் மலம் பலவிதம்.

வாதக்கூறு

வாதமீறினால் வாயுவினால் தேகமெல்லாங்குத்தும் கால்கை சந்து பொருத்துக்கள் உளையும் கால்கை யொருபக்கத்தில் முடங்கும் குனிந்தால் நிமிரவொட்டாது. திமிருண்டாகும். உடல் பொருமும், குடல்புரட்டும், அன்னஞ் சுருங்கும், வயிறு மந்திக்கும், பொருமும், மலசலங்கட்டும், அபானஞ் சுருங்கும் நாவு புளிக்கும், தாதுநஷ்டமாகும், கழிச்சலுண்டாகும்.

பித்தக் கூறு

பித்தமீறினால் உடலிற்காந்தலும் வரட்சியுமெறிவும் நடுக்கமுண்டாகும். மண்டைக்குத்து நாவறட்சி கசப்பு அரோசியம் தாகம் வாந்தி விக்கல் மூர்ச்சை கிறுகிறுப்பு காதடைப்பு அயர்வு சோபம்

வயற்றுக்காந்தல் நெஞ்செரிவு அக்கினி மந்தம் குளிர்சுரம் விடாச்சுரம் அஸ்திசுரம் பாண்டு காமாலை சோகை மயக்கம் பிரமேகம் பித்தவெட்டை யுண்டாகும். விழிசுழன்று குழிவிழுந்து இருண்டுவரும் நீர் மஞ்சளாயும் இருக்கும்.

சிலேத்மக்கூறு

சிலேத்தும மீறினால் உடல்காயும், வத்தும், வெளுக்கும், குளிர்ந்து நடுங்கும், அன்னஞ் செல்லாது, விக்கல், சத்தியிருமல், மேல்மூச்சு திகைப்பு, வியர்வை, க்ஷயம், ஈளையண்டாகும். நெஞ்சும் விலாவும் நோகும். இரத்தங்கக்கும் நாவு வழுவழுத்தினிக்கும் வாய்நீருறும் நீர் சிறுத்திரங்கும்.

குருநாடியிருக்குமிடம்

குருநாடி எப்போதும் பித்தத்தின் முன்னேறிற்கும் அது திசைநாடி பத்திற்குந் திறமாய் நிற்கும். உடற்குயிராய் நின்ற குருநாடி வாதபித்தத்திற்கு நடுவில் இருப்பதைப் பார்க்கில் அது மூவிரலுந்தாண்டி மூலமுதலுருவிப் பாய்ந்து விசைநரம்பூடேசேர்ந்து சந்திர்மண்டலம்போய்ச் சார்ந்து பின்பு பம்பரம்போற் கிறுகிறென்று வாதபித்தம் ஐயமென்ற நாடி முதலாடி யோடி மண்டலங்கள் மூன்றுஞ் சுத்தி கத்திரிக்கோல் மாறலெனக் கட்டிச்சேர்ந்து வாதபித்த நடுவிலிருந்து வாதத்தில் கோழி அன்னம் மயில்போலும் நடக்கும். சிலேத்மத்தில் பாம்புபோலும் தவளைபோலும் இயல்பாய் நாடி நடக்கும்.

குருநாடியின் குணம்

குருநாடி வாதத்தில் அட்டைபோற் புரண்டுவர்ில் வாய்வு மிகும் இருமல் தினவுசொரி மிகுதியுண்டாகும். தேகம் வாடும், குருநாடி பித்தத்திலாமைபோல் நடக்கிற் சுரங்காயும், வாய்நீர் சுழற்றும், வியர்க்கும் சிலேத்மத்தில் குருநாடி சிங்கம் போற்சீறி நிற்கில் சன்னிதோன்றும் குருநாடி சிலேத்துமத்தை யூடுருவி அமருமாகில் அசாத்திய மரணக்குறிகள் உண்டாகும். குருநாடி குன்றிப்போகில் வயிறுசுழியும் கடுப்பெடுக்கும் கைகால் வீங்கும் குருநாடி பக்கம்பாயிற் சிலேத்மம் எதிரேமோதும் குருநாடி நேரே நிற்கில் வாத பித்த மிரண்டுஞ்சேரும். குருநாடி பின்வாங்கில் அசாத்தியங்களுண்டாகும் குருநாடி அய்யத்தில் விட்டிலைப் போற்றுக்கிடில் மரணம்.

நாடிகள் கீழுமேலு மீறியோடும் விதம்

சந்திரன் வாதநாடி, சூரியன் பித்தநாடி, சுழிமுனை சிலேத்மநாடி வியாழத்திற் சிலேத்மநாடி, சனி-செவ்வாய்-ஞாயிறு-இந்த கிழமைகளில் வாதநாடி மிறியோடும்.

ஞாயிறில் வாதமோடில் - சளி யிருமலிரைப்புண்டாகும்
செவ்வாயில் வாதமோடில்-சுரமுண்டாகும்
சனியில் வாதமோடில்-சீதளமுஞ் சன்னியுண்டாகும்
வியாழத்தில வாதமோடில் - விலாமுதல் தேகமெல்லாம் வலியுண்டாகும்
திங்கள் பித்தமீறில் - ஜலதோஷமுடனே காணும்
புதனில் பித்தமோடில் - நீரேத்தம் தலைக்குக் துண்டாகும்
வெள்ளியில் பித்தமோடில் - கண்னோய். காதுநோயாம்
வியாழத்திற் பித்தமோடில் - தாபசுரம் தலைவலியுங்காணும்

நாடித் தொந்திப்பு

வாதத்தில் வாதமாகில், உடல் நொந்து நெகிழ்ச்சியாய்ச் சுருங்கும் வாங்கும் உடல்பதறும் அன்னஞ் செல்லாது.

வாதத்திற் பித்தமாகில், வாய்குழறிப் பேசும்கால் குளிரும் வீக்கமுண்டாகும்.

வாதத்திற் சிலேத்துமமாகில், உடல்வீங்கும், வலிக்கும் தலையிடிக்கும், குணங்கள் வெவ்வேறாய் தோற்றும் மெய்வெளுக்கும் அன்னஞ் செல்லாது நாளுக்கு நாள் வீக்கம் அதிகப்படும்.

பித்தத்திற் பித்தமாகில், பிதற்றுங் கிறுகிறுக்கும், சத்திக்கும் இளைக்கும், மேனி அத்திபோல் உலர்ந்து வத்திவெளுக்கும், பின்பு வீக்கமுண்டாகும்.

பித்தித்தில் வாதமாகில், பிடரி கால்கையில் குத்தும் மெய் குறுகும் பதறும் அத்திபோலுலரும் சுரங்காயும் புத்தி மடியும் பொறுமைநீங்கிக் கோபமுண்டாம்.

பித்தத்திற் சிலேத்துமமாகில், வாய்குழறும், பிதற்றும், சத்திக்கும் வாய் நீரொழுகும், தலைசுற்றும், வயிறு நோவும், பித்தமெடுக்கும் பிடரிவலிக்கும்.

சிலேத்துமத்தில் வாதமாகில், நரம்பெல்லாம் வலித்து நிற்கும் பிடரிகுன்ற வலிக்கும் விழிமேலோடும் வாய்குழரும்.

சிலேத்மத்திற் பிததமாகில், உண்பது கசப்புண்டாகும். நாவுகசக்கும், இனிக்கும் பேச்சுத்தடுமாறும் கபங்கட்டும், குரல்வேறுபடும் கண்ணிற்பீளை சாடும்.

சிலேத்மத்திற் சிலேத்மமாகில், விழிவட்டங் கொள்ளும், உயிர் பிரியும்.

வாதத்தில் ஐயஞ்சேரில், ஜன்னிதோஷம், மெய்மயக்கஞ் சோபம் மூர்ச்சை சோகை பாண்டு உண்டாகும்.

பித்தத்தில் வாதஞ்சேரில், பீனிசம் மண்டைக்குத்து வலி பவுத்திர மரையாப்பு நவமூலங்களுண்டாகும்.

பித்தம் வாதத்தேறில் பாண்டு காமாலை நீராம்பல் மகோதரம் கவுசி மகவை வெப்புப் பாவையுண்டாகும்.

ஐயம் பித்தஞ்சேரில், வாயூறல் சுரம் பேதி வாந்தியுண்டாம்.

வாத மிரண்டுபங்கும் பித்தமொரு பங்குமோடில், வாதபித்த தொந்தரோகம் வாய்வுமிகுத்து உதிரம்விம்மும் வலிக்கும். மாதரையிச்சிக்கும் சிந்தைமிகும்.

பித்தமிரண்டு பங்கு வாத மொருபங்கு மோடில், பித்தவாத தொந்தரோகம் உஷ்ணமிருந்து உடல் கண்ணெரியும் பசிதாகமுண்டாகும. வாய்கசக்கும் காடியே தவனம் பற்றும்

வாதமிரண்டுபங்குஞ் சிலேத்மமொரு பங்குமாகில் வாத சிலேத்ம தொந்தரோகம் வயிறுபொருமி வலிக்கும் பசியாது.

பித்தமிரண்டு பங்குஞ் சிலேத்மமொருபங்கு மோடில், பித்த சிலேத்ம தொந்தரோகம் தலை வரண்டு பிடரி நோகும். உடல்பெல்லாந் தினவு உண்டாகும். வயிறெரியும் மந்தித்துப் பொருமும்.

சிலேத்ம மிரண்டுபங்கும் வாதமொருபங்கு மோடினால், சிலேத்ம வாத தொந்தரோகம் ஜன்னியுண்டாகும். தலைநோகும் வாய்தித்திக்கும் அன்னஞ்செறியாது.

சிலேத்ம மிரண்டுபங்கும் பித்தமொருபங்கு மோடினால், சிலேத்ம பித்த தொந்தரோகம் உடல் குளிர்ந்து கூசும் தாகிக்கும்.

வாதமிரண்டு மாத்திரையும் பித்தமொரு மாத்திரையுமாகில் கொடுஞ்சுமை சிரமேற்கொண்டு தாளுறநடப்பது போல நாடி

நடக்கும்.வாதபித்த தொந்தரோகம் உதிரம்தொந்து விம்மிவலிக்கும் தாகிக்கும் தீவனஞ் செல்லாது.

பித்த மிரண்டுமாத்திரையுஞ் சிலேத்ம மொரு மாத்திரையுமாகில், பிள்ளைத்தொட்டிலில் நடுவிலசைவதுபோல நாடி நடக்கும். பித்தசிலேத்ம தொந்தரோகம் பசியிராது அடிக்கடி உதிரம் விம்மும் பிதற்றும் நயனம் எரியும், மஞ்சட்போலிருக்கும்.

சிலேத்ம மிரண்டு மாத்திரையும் வாதமொரு மத்திரையுமாகில் புணர்ச்சிபோல் நாடி நடக்குஞ் சிலேத்மவாத தொந்தரோகம் கபமேலாடும் இனிப்பை விரும்பும் பசிதாக மதிகரிக்கும்.

வாத மிரண்டுமாத்திரையும் சிலேத்மமொரு மாத்திரையுமாகில் முறிந்த அரணைவால் துடிப்பதுபோல் நாடி துடிக்கும் வாதசிலேத்ம தொந்தரோகம் உடல்வலிக்கும் கைகால் திமிராயிருக்கும் வயிறு பொருமும் பித்தமிரண்டு மாத்திரையும் வாதமொரு மாத்திரையுமாகில் வீணையடித்தாற்போல் நாடியடிக்கும் பித்த வாத தொந்தரோகம் உடல்வலிக்கும் எரியும். நெஞ்சும் நாவும் வரளும் நீர் சிறுத்திரங்கும்.

சிலேத்ம மிரண்டு மாத்திரையும் பித்தமொரு மாத்திரையுமாகில் வண்டிச் சக்கரம்போல நாடிசுழலும். சிலேத்ம பித்த தொந்தரோகம் சனனியுண்டாகும். உச்சிவலிக்கும். செவிகேளாது. நாவுயினிக்கும் வயிறு மந்திக்கும்.

நாடியின் குறிப்பு

வாய்வுக்கும் மந்தத்திற்கு மூன்று நாடியும் அமர்ந்து தளர்வாயோடும் பசித்திருக்கும்போது மூன்று நாடியுந் தூங்கியோடும் பாம்பு விஷத்திற்கு மூன்று நாடியுமடங்கியிருக்கும். வயிற்றுவலிக்கு மூன்றுநாடியும் உள்ளூறவாய் வாங்கியோடும் கிரந்திநோய்க்குக் கரையுடைந்த அருவியைப் போலோடும் புண்புரைக்கு வாதமும் பித்தமும் பீனிசத்துக்கு பித்தமுஞ் சிலேத்மமுஞ் சூலைக்குஞ் சிலேத்மமும் பித்தமுஞ் கழன்று காணும் கருப்பவதிக்கு வாதமும் பித்தமுந் தளர்ந்து காணும் நீர்மேகத்துக்கு நாடியெல்லாம் பலங்குறைந்து எரியின்மேற் சுருண்டுவிழும் புழுப்போற் புரட்டிக்காணும் குரு நாடி சீறி நிற்கும். மேகமதிகப்பட்டால் வாதமம் பித்தமும் பின்னித் துடிக்கும் சன்னிக்கு மூன்றுநாடியும் படபடத்தோடும் விக்கலுக்குச் சிலேத்மமும் வாதமுஞ் சுரத்துக்கு வாதமும் பித்தமுங் கனக்காச்சலுக்குப் பித்தமும் வாதமுங்

கலங்கிக்காணும் விஷநீர் சோகை பாண்டுக்கு மூன்று நாடிகளைப் போல் மீட்டும் தலையிடிக்கும் க்ஷயரோகத்திற்கும் பித்தங் கலங்கிகாணும். இளநீர் தெய் பால் இறைச்சி கனிகளுக்கு வாதங்கதிக்குங் கோழி மாமிசத்திற்குங் கோபத்திற்கும் புணர்ச்சிக்கும் பித்தங்களுக்குஞ் சுரதோஷத்திற்கும் புணர்ச்சிக்கும் வாதத்தைத்தாண்டுஞ் சீதருட்சைக்குப் பித்தத்திற்கு சிலேத்மஞ்சேரும் புணர்ச்சிக்கு நாடி புழுப்போல் நிமிர்ந்து வலித்து நின்றுவாங்கும் பித்த சன்னிக்கு வாதமுஞ் சிலேத்மமும் அமர்ந்து பித்தம் வெடுவெடுத்து மீறி நிற்கும் மரணசன்னி உட்குத்து புறவிச்சு இசிவுக்கு வாதமுஞ் சிலேத்மமும் அழுந்திக்காணும்.

மரணக்குறிகள்

இரண்டு தினம் பிங்கலைபாயில் மூவாண்டிலும். மூன்று தினமிடை கலைபாயில் இரண்டு பருவத்திலும், பத்து தினம் உபயத்திற்பாயில் திங்களொன்றிலும், மூக்குவிட்டு வாய்வழி சுவாசம் பாயில் மூன்று தினத்திலும், ஐயரோகத்தா லிளைத்தவுடல் வீங்கிடில் திங்களொன்றிலம், பித்தரோகத்தி லிளைத்தவுடல் வீங்கிடில் மதி ஆறிலும், சிலேத்ம வெள்ளம்போல் மடமடெனச் சுருக்கமாயோடில் மறுநாளிலும், பித்தஞ் சிதறி யோடில் மூன்று தினத்திலும் வாதஞ் சிதறியோடில் எட்டுதினத்திலும் வாதபித்த மிரண்டுங்கூடி நிலைதப்பிச் சிதறில் ஐந்து தினத்திலும் வாதபித்த சிலேத்ம மூன்றுங்கூடி நிலைதப்பிச் சிதறியோடினால் மண்டலத்திலும் மூன்று மொன்றாய்க் கூடி அரணைவால் துடிகாணில் ஒரு தினத்திலும், வாதபித்த சிலேத்ம மொன்றாய்க்கூடி தேள்கொடுக்கைப் போலாடி ஓடம்போல் நடந்தால் திங்களொன்றிலும், நாடிபோத்துப்போற் புறந்துடித்திடில் திங்களொன்றிற் பிணிநீங்காவிட்டால் திங்கள் பத்திலும், சிலேத்ம நாடி குதிரைபோல் நிமிர்ந்துநின்றால் திங்களொன்றிலும் காலையின் சிலேத்ம நாடியும் உச்சியிற் பித்தநாடியும மாலையில் வாதநாடியும் வகைதப்பியோடிடில் நாலைந்து தினத்திலும் சிலேத்மநாடி மயில்போலும் அட்டைபோலும் பதறிநின்றிடில் ஏழுதினத்திலும், ரோகஸ்தன் உமிநீர் சமீபத்தில் விழுந்திடினும் மரணம்.

பாளச்சீலையை நெய்யில் நனைத்து மணிக்கடையிற் சுத்தி மூன்றேமுக்கால் நாழிகை சென்றவிழ்த்துப் பார்க்கில் வாதநாடி குதித்து வாங்கினாலப் பொழுதிலும், நல்லரவு போல் நெளிந்தோடினால் இருபத்திரண்டு நாளிலும், உதைத்து வாங்கினால் ஒன்பது நாளிலும், அட்டைபோல் நடந்தால் மூன்று தினத்திலும், தந்திபோற்சுண்டினால்

அன்று பொழுதிலும் பக்கசென்றேதிர்த்து வாங்கினால் முப்பதுநாளிலு மரணம்.

நாடி புழுப்போல் தெளிந்தாலுஞ் சூடு கொண்டாலும் பஞ்சுபோல் மெதுவாயிருந்தாலும் அன்னம்போல் நடந்தாலும் பிணிநீங்கும்.

இடதுள்ளங்காற் குளிர்ந்தும் வலதுள்ளங்காற் சுட்டுங் குழச்சுகுளிந்திடில் பத்துதினத்திலும், குழச்சிகளிரண்டுங் குளிர்ந்து உச்சிவியர்த்து மூக்குவிறைத்து இளைப்பு விக்கல் தோன்றி உடம்பெல்லாங் குளிர்ந்து விழியிருண்டால் மூன்றுதினத்திலும், பிடறிநெற்றி கழுத்தினுட்புறங் குளிர்ந்து விழி நீலநிறமாகி நெஞ்சிற் கபங்கட்டிடில் மூன்று தினத்திலும் ஒரு நாசியும் முழங்கைப்பள்ளமுங் குளிர்ந்திட துள்ளங்காற் சூடாய்த் தொண்டை கறகறத்தால் ஐந்து தினத்திலும் அடித்துடையும் இரண்டுள்ளங்காலும் குளிர்ந்து இரு செவியும் விரைத்து நின்றா லிரண்டுதினத்திலு மரணம்.

வலதுள்ளங்காற் சுட்டு இடதுள்ளங்காற் குளிர்ந்து உச்சி வியர்த்து உடம்பெல்லாங் கனலாயிருந்தாலும் புருவம் நெத்தி இடதுள்ளங்கைகட்டு உச்சிகுளிர்ந்தாலும் வலது நாசியும் வலதுள்ளங்காலும் வெதுப்பி யிடது நாசியை தேய்க்கும்போது சிவந்தாலும் உடல் ஆதியந்தமுஞ் சூடேறினாலும் பிணி நீங்கும்.

விழி மூக்கு காது உச்சி உந்தி உள்ளங்கால் கைகள் வெளுத்து பாதங்குளிர்ந்தால் ஐந்து நாழிகையிலும் வாதமும் பித்தமும் அடங்கி சிலேத்துமங்கதித்து உடல்வெளுத்து மார்பு குளிர்ந்திடிற் றொண்ணூறு கடிகையிலும், சிலேத்தும நாடி யெழுந்து வீழ்ந்திடி லிரண்டுகடிகையிலும் பித்தமடங்கி வாதமுஞ் சிலேத்மமேவிட்டுக் கண்டத்திற் கபமடைத்து இளைத்து விழி மயங்கிச் சுழன்று கண்ணீர் வடிந்தால் ஐந்து நாழிகையிலும் முகம் நீண்டு உடம்பெல்லாம் நரம்புதோன்றி பாசிபோற் கண்பஞ்சடைந்து இருள்மூடினும் விசைநரம்பு குளிர்ந்து தளர்ந்து விறைத்துவாங்கிப் பொழிகளும் மிகுதியாய்த் தளர்ந்து நெறுநெறெனப்பற்கடித்து நடுக்கமுண்டாய் வாதபித்த சிலேத்துமம் விட்டிலைப்போற் துடித்திடினு மரணம்.

வாதபித்த சிலேத்ம மூன்றும் வெட்டுப்பட்ட அரணைவாற் போற்றுடிக்கும் உடல்வேறுபட்டு குளிர்ச்சிகாணும் கையால் முகத்தைத்தடவும் மனிதரை ஆவலாய் நோக்கிப்பார்க்கும் ஏங்கிப் பெருமூச்செய்து இரண்டுவிலாவும் இளைக்குந் தொண்டையிற்

கபங்கட்டியிரையுங் கண்ணில் நீர் வடியும் எடுபிடி யென்றெழுந்து விழும் உடல்மயங்கும் மூக்கு நீளும் வியர்வைகாணும் விழியும் பல்லுங்கறுக்கும் கபமேலாடி முடிச்சுவிழும் கண்கழன்று பலபேச்சாகும் ஜீவன் மயங்கும்.

நாடிநூல் முற்றிற்று

அனுபோகவயித்தியம் மூன்றாங் காண்டத்தில் நாடிபரிட்சைகள் சுலபமாய் சொல்லியிருப்பது தெளிவாகாமையால்

இதில் பரிதமாய் சொல்லப்பட்டது.

உ

தேவிசகாயம்

குழந்தைகட்குவரும் நோயின்

விவரமும் அவிழ்தமும்

கிரந்தி, செங்கிரந்தி, கருங்கிரந்தி, பட்சிதோஷம், மாந்தம், கணம், பிரளி, கரப்பான், செவ்வாப்பு, தொண்டைக் கட்டு, அக்கரம், வசூரிமுதலான அநேக ரோகங்கள் சம்பவிக்கிறது மாந்தம் தாய்முலைப்பா லாலும் கணம் கர்ப்பச் சூட்டினாலும் மற்றப்பிணிகள் தாய்தந்தையின் புணர்ச்சியினால் எழுந்த சூட்டினாலும் உண்டாகிறது.

செங்கிரந்தியின் குணம்

பிள்ளை பிறந்தவுடன் தொண்டைக்கட்டிப் பூனைக்குரர் போலமும் நீரும்மலமுங்கட்டி வயிறூதும் கால்கை சிவப்பேறும்.

நிவர்த்தி

கோரோஜனையை முலைப்பாலிலுரைத்துக் கொடுக்கத் தீரும் கர்ப்பூரவல்லியிலை குன்றுமணியிலை ஈருள்ளி ஓர் நிரையாய்த்தட்டி சாறுபிழிந்து முரித்துக்கொடுக்கத் தீரும். முருங்கையிலைச்சாற்றை முரித்துக்கொடுக்கத்தீரும். செம்முள்ளியிலையைத் தண்ணீரிற் போட்டுக் காய்ச்சிக் குளிப்பாட்டிவரவும்.

கருங்கிரந்திக்குணம்

குழந்தை அலரிய்ழுது குரல்கம்மும் முலையுண்ணாது மூர்ச்சையாகும் உடல்வெதும்பும் கண்திரவாது நாவரட்சி காணும் கீழுதடு கைகால்கருப்பேறும் வயறூதி வலிகாணும்.

நிவர்த்தி

கழுதைப்பாலிற் ஒரு காசியிடை ஓணானிரத்தம் விட்டுக் கொடுக்கத் தீரும்.

கருங்கழுதை லத்திச்சாறு அவுரி யிலைச்சாறு சிற்றாமணக்கெண்ணை சமமாய்க் கலந்து அதில் வசம்பு உள்ளி தட்டிப்போட்டுக் காய்ச்சிக் கொடுக்கத்திரும்.

ஆவிநெய் சிற்றாமணக்கெண்ணெய் நல்லெண்ணெய் சங்கிலைச்சாறு சமனாய்க்கூட்டி சுக்கு மிளகு திப்பிலி அரைத்துப்போட்டு ரவிபுடம் வைத்து ஒருபணவிடை உள்ளுக்குக் கொடுத்து மேலெங்குந் தடவிவைத்து செம்முள்ளி கிரந்தி நாயகம் நீரிற்போட்டுக் காய்ச்சிக் குளிப்பாட்டி வரத்திரும்.

மூக்கரைச்சாரணை முடக்கொத்தான் செப்பு நெருஞ்சி முத்தெருக்கஞ்செவி ஓரிதழ்த்தாமரை ஈருள்ளி மயிலிறகு இவையெல்லாமோர் நிரையாயெடுத்துத்தட்டி சிற்றாமணக் கெண்ணெயிற்போட்டுக் காய்ச்சிக் குழந்தைக்கு உள்ளுக்குக் கொடுத்துத் தாய்க்குமேலேபூசி அவள் பத்தியமாயிருக்கத்திரும்.

கிரந்தி-12-க்கும், சூலை-18-க்கும்

ஆமணக்கெண்ணெய் தேங்காய்ப்பால் செம்பரித்திச்சாறு வகைக்குப்படி-1, ஒன்றாய்விட்டுக் காய்சசி வடித்து அதில் சுக்கு கிராம்பு ஏலம் திப்பிலி பூரம் மிளகு வகைக்கு விராகனிடை-1, பொடித்துப்போட்டுக் குழந்தைகட்குக் கொடுக்கத்திரும்.

அரைவீட்டிற் குழந்தைக்கு கழுத்துவீங்கி முழங்கால் முழங்கை குளிர்ந்து வயிற்றில் வலிகண்டால்

மேற்படி பிணிகண்டவுடன் கஸ்தூரி திப்பிலி வகைக்குக் காற்பணவிடை பொடியை வெற்றிலைச்சாற்றில் கலந்து கொடுக்கத்திரும். கஸ்தூரியை மட்டும் மேற்படி சாற்றிற் கொடுத்தாலுந்திரும்.

பிள்ளை வயிறுநொந்தழுதால் மலங்கட்டினால்

புன்னை சிறுதேக்கு கோஷ்டம் சமனாயரைத்துக் குழம்பு போற்காய்ச்சி பிள்ளை வயிற்றிற் பூசவயிறு நொந்தழுதல் தீரும்.

அதிமதுரம் வேப்பங்கொழுந்து சர்க்கரை இம்மூன்றும் அரைத்து நெய்யில் வேகவைத்துக் கொடுக்க வயிறு நொந்தழுதல் மலக்கட்டு நீங்கும்.

குழந்தைக்குச் சிறுநீர்கட்டினால்

எலிப்புழுக்கையும் வெள்ளரிவிரையுஞ் சமனாயரைத்து அடிவயிற்றிற்பூசி வெங்காரத்தைப் பொரித்து முலைப்பாலிற் கரைத்துப்புகட்ட நீரிரங்கும்.

பிள்ளைக்கு உரம்விழுந்தால்

வெள்ளைப்பூண்டு பலம், 10, கடுகு பலம் 10 ஒன்றாகக் கலந்து குழித்தயிலமிறக்கி உடம்பிற்பூச குடல்வாதம் உரந்தீரும்.

பிள்ளை சீரியழுதால் விக்கலெடுத்தால் வயறுபொருமினால்

சிறுதேக்கும் திப்பிலியும் பொடித்துக் கொண்டாவது அல்லது திப்பிலியுங் கடுகுரோகணியும் பொடித்தாவது தேன் அல்லது ஆவிநெய்யில் மத்தித்துக் கொங்கையிற்பூசிப் பிள்ளைக்குப் பால்கொடுக்க மேற்படி பிணிகள் நீங்கும்.

பிள்ளை வயிறு வீங்கினால் குடித்த பாலெதிரெடுத்தால் அடிக்கடி கொட்டாவி விட்டால்

அதிமதுரத்தைக் காடியில் அரைத்து வயிற்றிற்பூச வயிற்று வீக்கந்தீரும்.

வெள்ளுள்ளியும் ஓமமும் வெதுப்பிக் கியாழஞ் செய்து கொடுக்கப் பாலெதிரெடுப்பதுங் கொட்டாவியுந்தீரும்.

அதிமதுரத்தை முலைப்பாலிலரைத்து முலைக்காம்பிற் பூசிக் குழந்தைக்குப் பால்கொடுக்கப் பாலுண்ணும்.

பால்சுரக்க

பூனாகத்தைப் பாலிற்போட்டு மண்களைந்து யெலுமிச்சங்காய்ப் பிரமாணமரைத்துப் பசுவின்பாலில் மூன்றுநாட் கொடுக்கவும் நற்றாளி யிலையை யிளவெந்நீரிற் போட்டுப் பிசைந்து மூன்றநாட் கொடுக்கவும்.

பாதிரிவேரையாவது கீழ்க்காய் நெல்லிவேரை யாவது அரைத்துப் பாலிற் கொடுக்கவும் பால் சுரக்கும்.

தோஷவகுப்பு

பட்சிதோஷகுணம்

குழந்தை முலையுண்ணாது ஜலமாய் வயிறுகழியும் வாந்தி பண்ணும் தலையெடாது கண்குழியும் பீளைசாறும் உடல்பேதப்படும் வெதும்பும் அலறும் சீறியழும் கழுத்தும் முகமும் சிறுக்கும்.

நிவர்த்தி

மணித்தக்காளிவேர் பிச்சிவேர் ஈருள்ளி யிவைகளை நறுக்கி சிற்றாமணக்கெண்ணெயிற் போட்டு ரவியில்வைத்து குழந்தைக்குக் கொடுத்து உச்சியிலுந் தேய்க்கத் தீரும்.

பறவைத்தோஷ குணம்

சிரசிற்கனலேறி உடல்நொந்து வெதும்பும் நாவுலரும் சத்திக்கும் நெஞ்சைச் சுழியவாங்கும் வலிப்புகாணும் இளைக்கும் உச்சியுங் கண்ணுங்குழியும் குழந்தை அடிக்கடி திடுக்கிட்டெழுந்து சீறியழும் வயிறுபோகும் விழிவெளுக்கும் முகம் மஞ்சட்போலிருக்கும்.

நிவர்த்தி

சீரகம் ஈருள்ளி வாப்பூலாவேர் இவைகளைச் சமமாய் கஷாயஞ்செய்து கொடுக்கத் தீரும்.

எட்சிதோஷகுணம்

உதிரத்திற் கனலேறி உடம்புதேயும் நாறும் கண்ணிற் பீளை கட்டும் சற்றே வயிறுகழியும் குழந்தை முலையுண்ணாது பதறியழும் கண்ணைப் பிசையும் மயங்கிப்புரளும்.

நிவர்த்தி

வில்வயிலையுஞ் சீரகமுங் கியாழஞ் செய்து கொடுத்து மேற்படி இலையையாவது நிலவிளா யிலையையாவது அரைத்துக் குளிப்பாட்டத்தீரும்.

வீங்குபுள்ளின் தோஷகுணம்

குழந்தை வாந்திபண்ணும் பசுமையாயும் பால்போலுங் கழியும் பின்கையால் முகத்தைத் துடைக்கும் உச்சி குழியும் நாவுலரும்.

நிவர்த்தி

மதுரம் முத்தக்காசு அதிவிடயம் கடுக்காய் வசம்பு தேவதாரம் மஞ்சள் வகைக்கு ஓர் நிரையாய் பொடுதலைச் சாற்றாலரைத்து உண்டைசெய்து முலைப்பாலிலிடத் தீரும்.

தூங்குபுள்ளின் தோஷகுணம்

வயிறுகழியும் வாந்திபண்ணும் மயக்கமாய்த் தூங்கிக் குழந்தை வீறிட்டலறி எழுந்திருக்கும் முகத்தைப் பார்க்கும் அடிக்கடி தாகித்துத் தண்ணீர் விரும்பும் முகம் வேறுபடும் கண்கள்யிருண்டு சோரும் நெருநெறனப் பற்கடிக்கும் உச்சி பள்ளம்விழும்.

நிவர்த்தி

மஞ்சள் வசம்பு ஏலம் வேப்பீர்க்கு ஓமம் குட்டிவிளாம் இவையெல்லாம் நறுக்கி வெதுப்பி கஷாயஞ்செய்து அதிற் கோரோஜனையை யுரைத்து உள்ளுக்கும் கொடுத்து மேற்படி மருந்துகளை அரைத்து மேலிலும்பூசிக் குளிப்பாட்டத்தீரும்.

விளக்கொளிக்கண் புள்ளின் தோஷகுணம்

பாலெதிரெடுக்கும் உடலடிக்கடி காயும் குழந்தை முலையுண்ணாது பெருவிடாய் கொண்டு சோரும்.

நிவர்த்தி

சின்னி வசம்பு குட்டிவிளா இவையெல்லாம் அரைத்துக் குழந்தைக்கு மேலிற்றேய்த்து முழுக்காட்டி அதுகளைத் துணியில் முடிந்து கழுத்திலுங் கையிலுங்கட்டத்திரும்.

வெங்கண்புள்ளித் தோஷகுணம்

பால்போறகழியும் மேனிகாயும் வெளுக்கும் வயிற்றிரைச்சல் வலிகாணும்.

நிவர்த்தி

கற்றாழஞ்சோற்றில் கடுக்காய்பொடித்தூவிப்பிசைந்து வைக்க நீரூறும் அதில் திப்பிலியை வருத்துப் பொடித்துத் தூவிக் கொடுக்கத் தீரும்.

கருடக்கண் புள்ளின் தோஷகுணம்

வாய்நீர்வடியும் வாந்திபண்ணும் இருவிழியுந்தாழும் பீளை கட்டும்.

நிவர்த்தி

கோரோஜனை அதிமதுரம் திப்பிலி ஓர் நிறையாய் முலைப்பாலிலரைத்து ஒருசங்கு கொடுக்கத்திரும்.

செங்கண்புள்ளின் தோஷகுணம்

கண்சிவந்து நீர்வடியும் சிரங்குளிரும் குழந்தை தவழ்ந்து போய் நிலத்தில் விழும் கையால் முகத்தைத் துடைக்கும் சீறியழும் வெப்புநீராய்க்கழியும்.

நிவர்த்தி

அதிமதுரம் சீரகம் முத்தக்காசு ஏலம் பத்திரிசாதிக்காய் கிராம்பு செண்பகப்பூ லவங்கப்பட்டை வகைக்கு விராகனிடை -1 மொகமொசுக்கையிலை பொன்னாங்காணி சிறு கீரை சீந்தில்வேர் வகைக்குப்பலம்-1, ஈருள்ளிச்சாறு படி 1/4, ஆவிரை வேர்பலம்-1 இவைகளையரைத்து இரண்டுபடி சிற்றாமணக்கெண்ணெயிற் போட்டுக் காய்ச்சி கொடுக்க சகல தோஷமுந்தீரும்.

அந்திபுள்ளின் தோஷகுணம்

மேனிவெளுக்கும் காயும் அதில் நரம்பு தோன்றும் கால் கைகுளிரும் பாலெதிரெடுக்கும்.

நிவர்த்தி

சின்னி குட்டிவிளா நொச்சி சீந்தி வேம்பு வசம்பு உள்ளி இவைகளை அரைத்து மேலெங்கும்பூசி மேற்படி மருந்துகளை தட்டிச் சிறுபொட்டணமாய்க் கட்டிக் கண்டத்திலுங் காலிலுங் கட்டத் தீரும்.

நீர்புள்ளின் தோஷகுணம்.

நெஞ்சுவரண்டிடும் கண்குழிந்து வெளுக்கும் குழந்தை பெருமூச்சிடும் பாலுண்ணாது இரவும் பகலும் அலறியழும் உடல்வியர்க்கும்.

நிவர்த்தி

விஷ்ணுகரந்தையும் சீரகமுங் கூட்டிக் கியாழஞ்செய்து கொடுக்கத்தீரும்.

புள்ளின்தோஷ குணம்

உச்சியுங் கண்ணுங்குழியும் குடித்தபால் தக்காது பச்சையாய் வயிறுகழியும் பறவைக்குரல்போற் குழந்தை சீறியழும் இளைக்கும் தண்ணீரை விரும்பும் மெய்மறக்கும்.

நிவர்த்தி

ஓரிதழ் தாமரை வெந்தயம் விடத்தலைவேர் சுக்கு வால்மிளகு ஓரளவாய்க் கஷாயஞ்செய்து கொடுக்கத்தீரும்.

முட்டுதோஷகுணம்

மாதவிடாயான கன்னிகள் குழந்தையை யெடுத்தால் மேனிவாடும் வேறுபடும் வாந்திபண்ணும் உச்சியுங் கண்ணுங் குழியும் நாக்கு வாய் கறுக்கும்.

நிவர்த்தி

மயிரோசனை திரிகடுகு சீரகம் கஷாயஞ் செய்து கொடுக்கத் தீரும்.

குளித்தோஷகுணம்

உச்சியுங்கண்ணுங் குழியும் வாந்தி வியர்வை மிகும் பலவண்ணமாய்க்கழியும் தேகந்தணல்போற் காய்ந்து வற்றும் நெஞ்சுலரும் தாகிக்கும் கண்ணில் நீர் சொரியும் கால்வீங்கும் குய்யம் புண்ணாகும்.

நிவர்த்தி

குட்டிவிளா வேம்பு சோம்பு மஞ்சள் வசம்பு சுக்கு அரைத்து தாய்க்கும் பிள்ளைக்கும் உடம்பிற்றேய்ந்து நீரில் வாகை யிலையைப்போட்டுக் காய்ச்சி நீராட்டி அப்பால் ஆவி நெய் படி அரை நல்லெண்ணெய் படி-1/4, நன்னாரி தண்ணீர் விட்டான் கரந்தை பொன்னாங்கண்ணி வகைக்குப் பலம்-1, ஏலரிசி சீரகம் வகைக்குக் கழஞ்சு-3 இவையெல்லாம் பால் விட்டரைத்துப் போட்டுப் பதமாய்க் காய்ச்சிச் சிறுகரண்டி வீதங் கொடுக்கச் சகலதோஷமுந்தீரும்.

வேப்பங்கொழுந்து ஒருபிடி மிளகு வசம்பு சுக்கு மலைதாங்கி வேர் வகைக்கு விராகநிடை -1 விளக்கெண்ணெயிற் போட்டுக் காய்ச்சிக் கொடுக்கத் தீரும்.

கெற்பமழிந்த தோஷகுணம்

உடம்புநொந்து சிவக்கும் இளைக்கும் நாறும் சத்திக்கும் நெஞ்சயரும் கைகாலில் அழுக்கேறும் கால்பின்னும் கழியும் விழிசொருகி மயங்கும்.

நிவர்த்தி

கழுதை லத்திச்சாற்றில் பரித்திவேரை யரைத்துக் கலக்கிக் கொடுக்கத் தீரும்.

பனை வெல்லத்தை மேற்படி சாற்றில் கலக்கிக் கொடுக்கத் தீரும்.

தேரைத் தோஷகுணம்

உடம்புலர்ந்து வற்றும் வெளுக்கும் நெஞ்சுயர்ந்து கூடும் கண்பொடித்திருக்கும் கைகால் வற்றிச்சுருக்கி முடங்கும் வயிறுபொருமும் மலந்தீயும் நாவுலரும் தாகிக்கும் முகம் வாடும் செவிதாழும் மூச்சுவாங்கும் நெரி குரற்படும் பிள்ளை சற்றுந்தேறாது.

நிவர்த்தி

சிறுபுள்ளடி சீறுகீரை நீராரை காணி நீர்முள்ளி இவைகளின் சமூலம் களா காட்டுமல்லி அவுரி கரிசலாங்கண்ணி நிலக்குமிழ் முடக்கொத்தான் இவைகள்வேர் ஓர் நிரையாயிடித்து 3-படி நீரிற் போட்டு நாலிலொன்றாய் வற்றவைத்து அதில் அதிமதுரம் திப்பிலி ஏலம் மிளகு வகைக்குப்பலம் 1/4, பசுவின் பால் விட்டரைத்துப்போட்டு ஆவிநெய் இருநாழிவிட்டுப் பதமாய்க்காய்ச்சி சிறுகரண்டிவீதம் கொடுக்கத் ,தேரைத்தோஷங் குழித்தோஷந்திரும்.

மாந்தவகுப்பு

மேதிப்பால் நெய் கதலிப்பழம் தேங்காய் இளநீர் கடலை வெல்லம் புளித்தமோர் மாங்கிசம் கனிகள் மலைத்துவரை உளுந்து மொச்சை புளியங்கொட்டை உளுவை வாழைமீன் கெண்டை சாகல் கரை முதலான வாய்வு பண்டங்களைக் குழந்தைகட்குப் பால்கொடுக்கு மாதர்கள் மிகுதியா யனுசரித்தாலும் அவைகளைக் குழந்தைகள்

தின்றாலும் வாதமாந்தம், சுரமாந்தம், நீர்மாந்தம், சொரிமாந்தம், கட்டுமாந்தம், எரிமாந்தம், தலைமாந்தம், கணமாந்தம், வலிப்புமாந்தம், சுழிமாந்தம், மூக்குமாந்தம், சன்னிமாந்தம், ஊதுமாந்தம், வீக்கமாந்தம் யென்று 20-வகை மாந்தரோகங்கள் குழந்தைகட்கு நேரிடும்.

மாந்தகுணம்

குழந்தையுடல் வெதும்பி வியர்க்கும் முலையுண்ணாது வாந்தி பண்ணி மயங்கும் சீதமும் மலமுமாயுங் கெட்ட பால்போலுந் தெளிந்த தண்ணீர் போலுங்கழியும் வெப்புநாறும் கைகால் குளிரும் நாவுலருங் குரல்கம்மும் கண்குழிந்து சுழன்று சிவக்கும் கால்பின்னும் முகம் பளிங்குபோல் மின்னும்.

வாதமாந்தகுணம்

குழந்தை வயிறுபொருமியழும் உடல் வியர்க்கும் பலவிதமாய்க் குழியவலிக்கும் துடிக்கும் கொட்டாவியிடும் நாசி புண்ணாகும்.

பித்தமாந்தகுணம்

வாந்தி பேதி வலிப்பு மூர்ச்சைகாணும் குரல் கம்மும் மேனிமஞ்சணித்து வியர்த்துக்குளிரும்.

சிலேட்மமாந்தகுணம்

உடம்பு சிலிர்த்து நளிரும் நாவெளுக்கும் நெஞ்சிற் கபங்கட்டும் வயிறுபொருமிக் கழியும் குழந்தைமயங்கும்.

இவைகட்கு நிவர்த்தி

நொச்சி பொடுதலை நுணா வேலிப்பரித்தி இவைகளினிலை வகைக்கு ஒருபிடி நறுக்கி வெதுப்பிச் சாறுபிழிந்து கொடுக்கத்திரும்.

வேலிப்பருத்தி பெருந்தும்பை சாணாக்கிலை வெதுப்படக்கி வேளை நொச்சி வகைக்கு ஒரு பிடியிலையை வதக்கிச் சாறு பிழிந்து அதிற் சுட்ட வசம்பு சிறுதேக்கு ஆமையோடு சுட்டகரி ஓர் நிரையாயரைத்துக் கலக்கிக் கொடுக்கத்திரும்.

பொடுதலை கரியுப்பு வகைக்கு ஒருபிடி ஒன்றாயிடித்துப் பிழிந்து முரித்துக் கொடுக்கத் திரும்.

வெற்றிலைக் காம்பு வசம்பு உள்ளி திப்பிலி ஓர் நிறையாய் வெதுப்பி வெந்நீரிலரைத்துக் கொடுக்கத் தீரும்.

ஓமம் வெள்ளுள்ளி மிளகு திப்பிலி சுக்கு சீலையில் முடித்து ஒருபடி தண்ணீரிற்போட்டு எட்டொன்றாய் வற்ற வைத்துக் கொடுக்கத் தீரும்.

விளாயிலையை வதக்கிச் சாறுபிழிந்து அதில் ஆமையோடு வசம்பு வட்டத் திருப்பி இவைகளை வெதுப்பி அரைத்துக் கலக்கிக் கொடுக்கத்தீரும்.

வேலிப்பரித்தி மேனிவேளை இரண்டு பொடுதலை அகத்தி இவைகளினிலையை வதக்கிச் சாறுபிழிந்து அதில் வசம்பு ஆமையோடு ஓமம் வெதுப்பி யரைத்துக் கலக்கி உள்ளுக்குக் கொடுத்து மேலிலுந் துவாலையிடத்தீரும்.

வேளைவேர் சுக்கு வெந்தயம் பூடு வசம்பு ஓமம் இவைகளை ஓர் நிறையாய் வருத்துக் கஷாயஞ்செய்து கொடுக்கத்தீரும்.

நுணா நொச்சி கழற்கொடி இவைகளினிலை வகைக்கொரு பிடியைச் சட்டியிலிட்டுக் கரிக்கி ஒரு படி தண்ணீரைவிட்டு அதில் ஓமம் வசம்பு சுக்கு மிளகு பொடுதலைக்காய் திப்பிலி இவைகளை நல்லெண்ணை விட்டுச் சிவக்க வறுத்து சீலையில் முடிந்துபோட்டு வற்றவைத்துக் கொடுக்கத் தீரும்.

ஊதுமாந்தகுணம்

குழந்தையுடலூதிக்காணும் வயிறிரையும் கழிச்சல் கடுப்பு வாந்தி தொண்டைவலி சுரந்தோன்றும்.

நிவர்த்தி

வெண்காரம் விராகநிடை -1/2, கடுகுரோகணி கருஞ்சீரகம் வகைக்கு விராகனிடை -2, முலைப்பாலாலரைத்து மாத்திரை செய்துக்கொண்டு வெந்நீரிலிடத்தீரும், பொடுதலை வேம்பு மா புளி நுணா நொச்சி வேலிப்பரித்தி இவைகளின் ஈர்க்கையும் ஓமம் உள்ளி திப்பிலியுஞ் சமமாயிடித்து ஒருபடி தண்ணீரிற் போட்டு எட்டொன்றாய்க் க்ஷாயஞ் செய்து கொடுக்க ஊதுமாந்தம் போர்மாந்தம சத்திமாந்தம் செரியாமாந்தம் கட்டுமாந்தமுந்தீரும்.

கோரோஜனை உள்ளி திப்பிலி மதுரம் வகைக்கொரு கழஞ்சு அண்டவெள்ளை கருவிட்டரைத்துக் கொண்டு முலைப்பாலில் மூன்று தினங்கொடுக்க ஏழுவகை யூதுமாந்தமுந் தீரும்.

வேலிப்பருத்தியிலையை வதக்கிச் சாறுபிழிந்து அதில் சீரகமுங் கடுகுரோகணியுஞ் சமமாய் முலைப்பாலிலரைத்துக் கலக்கிக்கொடுக்க ஊதுமாந்தம் மயக்கம் வெப்புத்தீரும்.

நீர்மாந்தகுணம்

உடல்மெலிந்து குளிர்ந்து சிலிர்க்கும் வாய்நீர் சுழற்றிக் குழந்தை வாந்திபண்ணும் முலையுண்ணாது தூங்கி விழித்துச் சிரிக்கும் வயிறுபொருமிக்கழியும் உடம்பு கைகாலில் தினவெடுக்கும் வீங்கும் தலைவலிக்கும் முகமினுக்கும் மலஞ் சிறுத்து நீர்க்கடுத்திறங்கும்.

நிவர்த்தி

ஈருள்ளி மூக்குரட்டை வகைக்குச் சாறுபடி -1/4, விளக்கெண்ணெய்படி -1/4, ஒன்றாய்க் கலந்து காய்ச்சி கொடுக்கத்தீரும்.

நொச்சி வேளை மேனி நுணா பெருந்தும்பை இவைகளினிலையை வெதுப்பிச் சாறுபிழிந்ததில் மிளகு உள்ளி வசம்பு ஓமம் இவைகளை வருத்தரைத்துக் கலக்கிக் கொடுக்கத்தீரும்.

நீலிவேருஞ் செவியமு மோர் நிரையாய்த் தட்டிப்போட்டு கஷாயஞ்செய்து கொடுக்கத் தீரும்.

வெதுப்படக்கி அம்மான் பச்சரிசி சங்கங்குப்பி நுணாசாணாக்கி வகைக்குச்சாறுபடி -1/4, விளக்கெண்ணெய் படி -1, வசம்பு உள்ளி மஞ்சள் வகைக்கு பலம் -1/2, பொடித்தொன்றாய்க் கலந்து காய்ச்சி மூன்றுநாட் கொடுக்கத் தீரும்.

சிற்றாமணக்கெண்ணெய் பலம்-10, அதிற் பூரம் விராகனிடை -1, வாளம் மிளகு லவங்கம் வகைக்கு விராகனிடை -2, இவைகளை மைபோலரைத்துப் போட்டுக் காய்ச்சி யொருதுட்டிடை மூன்றுநாட் கொடுத்துப் பத்தியம் பொரி மிளகு நீர் சாதமுங் கொடுக்கத்தீரும்.

விஷமாந்தகுணம்

மலஞ்சிக்கி வயிறு வலித்திரைந்து கழியும் நின்று நின்று சுரங்காயும் மேனிவாடும் அரையின்கீழ்க் குளிர்ந்திருக்கும் உடல் வியர்க்கும் கையில் பிள்ளை தங்காது அடிக்கடி வாந்தி பண்ணும்.

நிவர்த்தி

நுணா நொச்சி வேளை யிவைகளின்வேர் ஓமம் பொடுதலை உள்ளி வசம்பு சமமாய்த்தட்டி வெதுப்பிக் கஷாயஞ் செய்து கொடுக்கத் தீரும்.

போர்மாந்தகுணம்

குழந்தை பாலுண்ணாது வாந்திபண்ணும் மயங்கும் தலையை யசைக்கும் மார்பு துடிக்கும் மேனிவாடும் நெற்றி நரம்பு புடைக்கும் கண்குழியும் தாகமிகும் வாயும் நெஞ்சுமுலரும்.

நிவர்த்தி

ஓமத்தை வருத்துப் பொடித்து வெந்நீரிலாவது முலைப் பாலிலாவது கொடுக்கத்தீரும்.

கோழிக்கல்லீரலி லிருக்குங்கல் நற்சீரகம் லவங்கம் இவைகளை ஓர் நிரையாயரைத்து முலைப்பாலிற் கொடுக்கத் தீரும்.

உப்பைச் சட்டியில் வறுத்துக் கொட்டிப்போட்டு அதில் வேலிப்பரித்தி தும்பை வெத்திலை யிவைக்ளைச் சமமாய் வெதுப்பிச் சாறுபிழிந்து அதில் ஆமையோடு வசம்பு முறைத்துக் கொடுக்கத்தீரும்.

சத்திசாரணை வேரொன்று ஆமையோடு பூடு வசம்பு வகைக்கு விராகநிடை -1, அரைத்து அரைக்காற்படி விளக்கெண்ணெயிற் காய்ச்சிக் கொடுக்கத் தீரும்.

நுணா வேலிப்பரித்தி பொடுதலை வெற்றிலை யிவைகளின் வாரடை ஆமையோடு வசம்பு பூடு ஓமம் கிராம்பு இவைகளை சமமாய் வெதுப்பி கஷாயஞ்செய்து கொடுக்கத் தீரும்.

வசம்பும் மயிலிறகுஞ் சுட்டசாம்பல் கிராம்பு சீரகம் நிம்பவிரை பேய்ப்பீர்க்கம்வேர் இவைகளைச் சமமாய் முலைப்பால் விட்டரைத்து அதிற்கலக்கிக் கொடுக்கத்தீரும்.

பால்மாந்தகுணம்

வயிறூதிப் புண்போல்நொந்து புளித்தநாற்றமாய் வயிறு கழியும் கண்குழியுஞ் செவிதாழுந் தொண்டையிற் கோழை கட்டும் கைகால்வெதும்புங் குளிரும் குழந்தை வாந்தி பண்ணி பரிதவிக்கும்.

நிவர்த்தி

பொடுதலைக்காய் இந்துப்பு வசம்பு பூடு மிளகு இவைகளை ஓர் நிரையாய் வெதுப்பி கஷாயஞ்செய்து கொடுக்கத் தீரும்.

செரியாமாந்தகுணம்

சுரங்காயும் தலைவலிக்கும் வயிறுநொந்து குழந்தை சீரியழும் மாவுகரைத்ததுபோற் கழியும் அரைக்கண் நித்திரையாய்த் தூங்கிக் கீரைத்தண்டு போற் சோரும்

நிவர்த்தி

வசம்பு சடமாஞ்சில் உள்ளி திரிகடுகு ஓமம் கருஞ் சீரகம் ஆமையோடு இவைகளைப் பொடித்துக் கஷாயஞ் செய்து கொடுக்கத் தீரும்.

வேலிப்பரித்தி யிலையை வதக்கிப் பிழிந்து அதில் மிளகு வசம்பு உள்ளி வெதுப்பி யரைத்துக் கலக்கி யதில் நெய் ஒரு துளிவிட்டுக் கொடுக்கத்தீரும்.

இஞ்சியும் பெருந்தும்பையுந்தட்டி எருமை வெண்ணெயில் வேகவைத்துக் கொடுக்கத்தீரும்.

ஓமம் கோஷ்டம் வசம்பு வகைக்கு விராகனிடை *-1*, கஷாயஞ்செய்து கொடுக்கத்தீரும்.

கட்டுமாந்தகுணம்

மந்தித்திரைத்து வலித்துக் குழந்தையடிக்கடியழும் மலஞ்சிக்கி வயிறுகழியும் சற்றே பாலுண்ணுந் திகைத்திருக்கும் தூக்கம்போற் சோர்ந்துவிழும் சற்றிருமல் சுரம் கொட்டாவி தலைவலி வியர்வையுண்டகும்.

நிவர்த்தி

சீந்திற்றண்டு களிப்பாக்கு சிவதை கடுக்காய் சுக்கு ரோகணி இவையெல்லா மோர் நிறையாய்த் தட்டிப்போட்டு கஷாயஞ்செய்து மூன்று தினங்கொடுக்கத் தீரும்.

சிற்றாம்மணக்கெண்ணெய் படி *-1/4*, சிற்றகத்தி துளசி தகரை கழற்கொடி நொச்சி செம்முள்ளி மணித்தக்காளி சமனாயிடித்துப் பிழிந்த சாறு படி *-1/4*, சதிர்க்கள்ளிப்பால் ஒரு கரண்டி கடுகுரோகணி கடுக்காய் இருசீரகம் உள்ளி பூடுவசம்பு பூதகரப்பன்பட்டை வேளை

வகைக்கு விராகநிடை -3, இடித்து ஒன்றாய்க்கலந்து பதமாய்க் காய்ச்சி வடித்துக் காலையில் ஒரு துட்டிடை கொடுத்து மாலையில் மிளகு சாம்பலுஞ்சுக்கும் கஷாயஞ்செய்து ஒரு சங்கு கொடுக்கத்திரும்.

சதிர்க்கள்ளிப்பால் வெள்ளாட்டுப்பால் வகைக்குப்படி 1/4 விளக்கெண்ணை படி -1, திரிபலை வெள்ளுள்ளி வகைக்கு விராகநிடை -2, பொடித்துப்போட்டுக் காய்ச்சி ஒரு காசிடைகொடுத்து விலாவிலும் பூசத்திரும்.

தலைமாந்தகுணம்

உடல் ஊதிப் புண்போல் நோகும் வயறுபொருமி வலித்துக் குழந்தை துள்ளிவிழும் ஏப்பங்கொட்டாவியிடும் கைகால் குளிரும் முகம் வியர்க்கும் தலைகனத்து வலிக்கும் நாசியில் நீர்வடியும் குளிர்சுரங்காணும்.

நிவர்த்தி

வெதுப்படக்கி பெருந்தும்பை வேலிப்பருத்தி வெள்ளகுரு இவைகளினிலையை வதக்கிச் சாறுபிழிந்ததில் பூடு தேசாவரம் சதகுப்பை திப்பிலி வசம்பு இவைகளை ஓர் நிறையாய் வருத்து அரைத்துக் கலக்கி உள்ளுக்குங் கொடுத்து மேலிலும்பூசத் தீரும்.

துலைமாந்தகுணம்

அதிகமாய்க் குழந்தை வாந்திபண்ணும் அடிக்கடி முருக்கிக் கொட்டாவியிடும் உடம்பு வியர்க்கும் முகங் கடுகடுப்பாயிருக்கும் வலிப்புக்கண்டு கால்கை விறைக்கும்.

நிவர்த்தி

வெள்ளைக்காக் கணான்வேர் ஓர் பாக்களவரைத்து முலைப்பாலிற் கலந்து கொடுக்கத்திரும்.

வசம்பு தைவேளை முடக்கொத்தான் திரிகடுகு திரிபலை அளிஞ்சிவேர் இவையெல்லாமோர் நிரையாய்த்தட்டி விளக்கெண்ணெயிற் போட்டுக் காய்ச்சி யொருதுட்டிடை உள்ளுக்குக் கொடுத்து மேலிலும்பூசத் தீரும்.

சுழிமாந்தகுணம்

சுரங்காயும் இரைப்பு சுவாசம் விக்கல் கக்கல் காணும் குழந்தை முலையுண்ணாது நித்திரை செய்யாது.

நிவர்த்தி

கோடகசாலை துழாய் ஆடாதோடை தும்பை முதியார் கூந்தல் சங்கிலை சீந்தி சிற்றிலைச்செடி நறுந்தாளி இவைகளினிலைச்சாறும் விளக்கெண்ணெயும் சமன் கலந்து அதிற் ஜாதிக்காய் திப்பிலி காயம் கடுகுரோகணி கோரோஜனை உள்ளி வகைக்கு ஒரு கழஞ்சு பொடித்துப் போட்டுக் காய்ச்சி ஒருகாசிடை கொடுக்கத் தீரும்.

ஈருள்ளிச்சாறு இண்டிச்சாறு ஆமணக்கெண்ணெய் ஓர் நிரையாய்க் கலந்து பதமாய்க் காய்ச்சிக் கொடுக்கத்தீரும்.

வீக்கமாந்தகுணம்

சுரங்காயும் காதுங்கண்ணும் வீங்கிவற்றும் நாவுபுண்ணாகும் கைகால்சோரும் அன்னஞ்செல்லாது.

நிவர்த்தி

பூவரசம்பழுப்பு சங்கம்பட்டை சீந்திற்கொடி துழாய் சுக்கு ஓமம் குப்பைமுள்ளி முருங்கையீர்க்கு நீர்முள்ளிச்சாறு வேளைவேர் பிரமியிலை மருட்கிழங்கு தூதுளை சிறு குருஞ்சா சத்திசாரடைவேர் கருஞ்சீரகம் இவையெல்லாம் ஓர் நிறையாய்த் தட்டிப் போட்டுக்கஷாயஞ் செய்து கொடுக்கத்தீரும்.

முக்குமாந்தகுணம்

குழந்தை முக்கிமுக்கிச் சீதமு மலமுமாய்க் கழியும் உடலுருகி மெலியும் சுரங்காயும் தாகங்காணும் பின்கால் வீங்கும்.

நிவர்த்தி

ஓமம் திப்பிலி மிளகு உள்ளி ஆமையோடு இவைகளை ஓர் நிறையாய்ச் சீலையில் முடிந்து ஒருபடி நீரிற்போட்டு வற்றக்காய்ச்சி அதிலந்த மருந்தை'யரைத்துக் கலக்கி மூன்றுவேளை கொடுக்கத்தீரும்

இந்த வியாதிக்குக் கஸ்தூரி யெண்ணெய் கொடுக்க நன்மையுண்டாகும்.

வாளமாந்தகுணம்

உடல் திரைந்து வெளுத்துவற்றிக் குழந்தையுருக்கெடும் கடுப்பு வலிப்பு முதலான பலகுணங்கள் காணும்.

நிவர்த்தி

ஆடுதீண்டாப் பாளைச்சாறும் வேளை மணித்தக்காளி கழற்சி கரிசாலை துளசி நீலி இவைகளினிலைகளை யோர் நிரைாய் ஒன்றாய்ச் சேர்த்திடித்துப் பிழிந்தாலும் ஆவினெய்யும் வகைக்குப்படி அரைக்கால், ஒன்றாய்க்கூட்டி அதிற் கஸ்தூரி மஞ்சள் கோஷ்டம் கரிய சீரகம் கடுகு ரோகணி வகைக்கு விராகனிடை -1/2, பொடித்துப் போட்டுக் கலந்து பதமாய்க்காய்ச்சி அந்திசந்தி துட்டிடை கொடுத்தால் பிணி நீங்கிப் பிள்ளைக்குயுடல் பருக்கும்.

உளைமாந்தகுணம்

மலசலங்கட்டி வயிறுவலித்துக் குழந்தை அலறியழுது பாலுண்ணாது மிரண்டுபார்க்கும்.

நிவர்த்தி

நாக்கிளாப்பூச்சி வசம்பு நிம்பவேர் உள்ளி காயம் சுத்தி செய்தவாளம் வகைக்குக்கழஞ்சு -1, அரைத்து ஒரு படியெண்ணெயிற் போட்டுப் பதமாய்க் காய்ச்சிவடித்து ஒரு காசிடை கொடுக்கத்தீரும்.

நாக்கிளாம்பூச்சி ஈசுரமூலி வசம்பு இருசீரகம் நாரத்தம் வேர் பூடு காயம் வகைக்குப் பலம் -1/4, மணித்தக்காளிச்சாறு விட்டாட்டி ஒருபடி விளக்கெண்ணெயிற் கலக்கிக் காய்ச்சி ஒரு சிறுகரண்டியளவு மூன்றுநாட் கொடுக்கத்திரும்.

உப்பு புளி தள்ளவும் சங்குகொடுவேலி ஆடாதோடை கொன்றை இவைகளின்வேர் இந்துப்பு காயம் புங்கம் பட்டை ஓர்நிறையாயிடித்து இரண்டுபடி தண்ணீரிற் போட்டு உழக்காய்க் காய்ச்சிக் கொடுக்கத்திரும்.

அட்சரமாந்தகுணம்

அஸ்தியிற்கனலேறி குளிர்சுரம் பேதிகாணும் உதடும் வாயும் வெடித்துப் புண்ணாகும் குழந்தையுடல் மெலியும்.

நிவர்த்தி

மணித்தக்காளி அகத்தி கற்றாழை ஈருள்ளி இவைகளின் சாறு விளக்கெண்ணை வகைக்குப்படி -1, காரை பூலாதுத்தி, இவைகளின் வேர்த்தோல் வறுத்தவெந்தயம் வகைக்குப்பலம் -1, அரைத்துப் போட்டுப் பதமாய்க் காய்ச்சி உள்ளுக்குங்கொடுத்து வாய்ப்புண்ணிலும் பூசத்திரும்.

துத்தியிலை வெந்தையம் ஆடாதோடை நுணாயீர்க்கு கஷாயஞ்செய்துக் கொள்ள நுணாயிலை வில்வயிலை தைவேளை பொடுதலை செம்முள்ளி ஆடாதோடை வகைக்குச்சாறு படி -1 அவிரிச்சாறுபடி அரைக்கால், அரத்தை கடுகுரோகணி வகைக்கு விராகனிடை -1 கடுக்காய் விராகனிடை -5, அக்காரகாரம் வெளிச்சிப்பிசின் கருஞ்சீரகம் கஸ்தூரி மஞ்சள் வகைக்கு விராகனிடை-2, ஈருள்ளிச்சாறு விளக்கெண்ணெய் வகைக்குப்படி -1 பேய்க்குமட்டிக்காய்ச் சாறுபடி அரைக்கால், இவைகளை யொன்றாய்க் கலந்து மெழுகுபதமாய்க் காய்ச்சி ஒரு சிறுகரண்டிவீதம் மூன்றுநாள் உப்பு புளி தள்ளிப் பத்தியமாய் கொடுக்கத் தீரும்.

தோஷமாந்தத்திற்கு

முருங்கைபட்டை கோழிமுட்டை வெள்ளைக் கருவெள்ளுள்ளி வேப்பெண்ணெய் ஓர் நிறையாய் ஒன்றாய்க் கலந்து காய்ச்சியுடம்பிலும் நாவிலும் தடவத்தீரும்.

ஈருள்ளியும் முடக்கொத்தானும் வெதுப்பிப் பிழிந்த சாறு மூன்றுகாசிடை கொடுக்கத் தீரும்.

மாந்ததோஷம் வலிப்பு மலக்கட்டு

முடக்கொத்தானிலை மூக்கரைச் சாரணைவேர் இலை கொழுந்து குப்பைமேனியிலை இவைகளைச் சமமாயரைத்து விளக்கெண் ணெயிற்போட்டுப் பதமாய்க்காய்ச்சிப் பிள்ளையின் வயதுக்குத் தக்கபடி கொடுக்கத்திரும்.

மாந்தம் பாலகிரியைக்கு

வேலிப்பருத்தியொருபிடி சுக்கு சடாமாஞ்சி விளா, வசம்பு, பூடு மிளகு ஆமையோடு ஓமம் சீரகம் ஓர்நிறையாயொருபடி தண்ணீரிற்போட்டு எட்டொன்றாய்க் காய்ச்சி ஒரு சங்கு கொடுக்கத்திரும்

மாந்தம் வயிற்றுப் பொருமலுக்கு

வேலிப்பருத்தியிலையை வதக்கிச் சாறுபிழிந்ததில் ஓமம் வசம்பு ஓர்நிறையாய் வெதுப்பிப் பொடித்துப் போட்டொரு சங்கு கொடுக்கத்திரும்.

வறுத்த ஓமம் விராகனிடை -1 குப்பைமேனி வேர்ப்பட்டை பலம் -2, அரைப்படி தண்ணீரிற்போட்டு வற்றக் காய்ச்சி யொருசங்கு கொடுக்கத்திரும்.

மாந்தம் பொருமல் வலிசெரியாமாந்தத்திற்கு

வேலிப் பருத்தியிலைச்சாறு படி அரைக்கால், வசம்பு திரிகடுகு கோரோசனை வகைக்கு விராகனிடை -2, வேலிப்பருத்திக் கொழுந்து விராகனிடை -4, இவைகளை யரைத்துச் சாற்றிற் கலக்கி முரித்துக் கொடுக்கத் தீரும்.

.பெருந்தும்பை வெதுப்படக்கி பொடுதலை பிரமி வேலிப்பரித்தி துளசி துத்தி அகத்தி இவைகளினிலைகளை யோர் நிறையாயிடித்துப் பிழிந்தசாறுபடி -1/4, பச்சமஞ்சட்சாறு படி மாகாணி, விளக்கெண்ணெய் படி -1/2, ஒன்றாய்விட்டு அதில் ஓமம் ஆமையோடு சுட்டசாம்பல் உள்ளி வசம்பு வகைக்குப் பலம் -1/2, இடித்துப்போட்டுப் பதமாய்க் காச்சியொரு துட்டிடை எண்ணையிற் பொரித்த வெங்காரம் பெருங்காயம் வகைக்கொரு பணவிடை மத்தித்து மூன்றுநாட் கொடுக்கத் தீரும்.

மாந்தங்களுக்குப் பொதுப்பிரையோகம்.

சிறுதேக்கு வாய்விளங்கம் வால்மிளகு கடுகுரோகணி சுக்கு ஏலம் திப்பிலி இலவங்கம் தான்றிதக்கோலம் போஸ்துக்காய் வகைக்குப் பலம் -1,4, இடித்து இரண்டுபடி தண்ணீர் விட்டு எட்டொன்றாய்க் காய்ச்சி மூன்றுதினங் கொடுக்க கிராணி மாந்தம் சுரக்கட்டி விஷதோஷங்கள் இசிவு மாந்தம் சோகை காமாலை சுரம் கோழை கொட்டாவி பொருமல் தும்மல் பித்தகணம் பாண்டுதிரும்.

அவித்தூத்தின விளக்கெண்ணெய் தகரைச்சாறு வகைக்குப்படி -1 நாயுருவி தைவேளை நாய்வேளை கொழுஞ்சி மூக்கரைச்சாரணை யிவைகளின்வேர் வகைக்கொரு யெலுமிச்சங்காய்ப் பிரமாணம், வசம்பு ஓமம் கஸ்தூரி மஞ்சள் வாய்விளங்கம் வகைக்குப்பலம் -1/2, வெள்ளுள்ளிபலம் -2, கருஞ்சீரகம் வெந்தயம் கடுகுரோகணி வகைக்குப்பலம் -1, இவையெல்லா மரைத்துக் கலந்து பதமாய்க் காய்ச்சி வடித்துக்கொண்டு பிள்ளையின் வயதுக்குத் தக்கதாய்க் கொடுக்கத் துட்டுமாந்தம் கிரிமி சுழிகணம் வாயுகாச்சல் நளிர்மாந்தம் பிரளிதிரும் தாய் உப்புப் புளி தள்ளிப் பத்தியமாயிருக்க வேணும்.

கோரோஜனை கோஷ்டம் அதிமதுரம் சீரகம் திப்பிலி தேவதாரம் சந்தனம் ஏலம் மாசிக்காய் வெந்தயம் சுக்கு வெள்ளுள்ளி கஸ்தூரி வசம்பு ரோகணி பச்சைமூங்கிற்றோல் வகைக்கு விராகனிடை -1 வெதுப்பிப் பொடித்துச் சங்கங் குப்பிச் சாற்றிலரைத்து ஒருபடி

விளக்கெண்ணெயிற் கலக்கி மெழுகுபதமாய்க் காய்ச்சிக்கொடுக்க மாந்தம் வயிற்றுப்பிசம் சுழிமாந்தம் நாவரட்சி கணம் குளிர்காச்சல் இரத்த தொந்தகரம் முக்குகணம் கிரிச்சினம் பட்சிதோஷம் பழங்காச்சல் முதலானதுகள் தீரும்.

பொடுதலைமா புளிவேம்பு நுணா வேலிப்பருத்தி நொச்சி இவைகளனீர்க்கு வகைக்குப்பிடி -1, வெள்ளுள்ளி திப்பிலி ஓமம் வகைக்குகழஞ்சு -1, இடித்தொருபடி தண்ணீரிற் போட்டுக் கியாழஞ்செய்து (3) நாட்கொடுக்க ஊதுமாந்தம் போர் மாந்தம் செரியாமந்தம் கட்டுமாந்தம் சத்திமாந்தம் நீங்கும்.

கணவகுப்பு

மாந்த முதிர்ந்து வாதகணம், பித்தகணம், சேஷ்மகணம் மாந்தகணம், நீர்க்கணம், பிரளிக்கணம், சூலைக்கணம், சுழிக்கணம். மகரகணம், ஊதுகணம், வரட்கணம், கொதிப்புக்கணம். வீக்ககணம், பிறக்கணம், ஆமகணம் தேரைக்கனம் முக்குக்கணம் மூலக்கணம் போர்க்கணம், இரத்தகணம், விஷமாந்தகணம், ஊதுமாந்தகணம் அந்தகக்கணம், மந்தாரகணம், யெரிகணம் என விருபத்துமூன்று கணங்கள் பன்னிரண்டாண்டு மட்டுங் குழந்தைகட்குவரும்.

வாதகணத்தின் குணம்

உடல்கனத்துக் குழந்தை புகைந்திருமும் இரைப்பு நாவரட்சி தாகம் சுரம் பசி மந்தம் நீர்சுருக்குக் காணும் மலங்கழியும்.

பித்தகணத்தின் குணம்

குழந்தை மஞ்சட்போற் கழியும் நாக்கும் கடைவாயும் புண்ணாகும் உடல்யெரிச்சல் சுரம் தலை கிறுகிறுப்பு மயக்கங் காணும்.

சேஷ்மகணத்தின் குணம்

உடம்பிற்றினவு சொரி கைகாலில் வீக்கம் வாய்நாற்றம் வெப்பு இருமல் கோழை ஆறாத்தவனங்காணும் கீழ்வாயும் மேல்வாயும் வெடித்துப் புண்ணாகும்.

இவைகட்கு நிவர்த்தி

சிறுபுள்ளடி கழற்கொழுந்து அவுரி சாணாக்கி பொடுதலை வகைக்கு ஒருபிடி நையநறுக்கி நல்லெண்ணெயிற் போட்டு வெயிலில்வைத்து உள்ளுக்குங் கொடுத்து மேலிலும் பூசத்தீரும்.

வில்வம் அவுரி ஈருள்ளி கடுக்காய் இவைகளைத் தட்டி விளக்கெண்ணெயிற் போட்டுக் காய்ச்சிக் கொடுக்கத்திரும்.

பொண்ணாங்காணிவேர் புளியீர்க்கு வேப்பீர்க்கு வகைக்கு ஒருபிடி கோழியவரைவேர் பலம் - 1/2, நறுக்கி விளக்கெண்ணையிற்போட்டு சூரியபுடம் வைத்துக் கொடுக்கத் தீரும்.

கடுக்காய் கருஞ்சீரகம் கடுகுரோகணி காட்டு மல்லிகை இண்டிலை ஈருள்ளி உசிலிலை யிவைக்ளைத் தட்டி விளக்கெண்ணையிற் போட்டு காய்ச்சி முலைப்பாலிற் கலந்து கொடுக்கத் தீரும்.

கோஷ்டம் சண்பகப்பூ வெண்காயம் அவுரி நிலக்குமிழ் கடுகுரோகணி விலாமிச்சு கிராம்பு இவைகளை ஓர் நிறையாய்த் தட்டி நல்லெண்ணையும் நெய்யும் ஒன்றாய்க்கலந்து அதிற் போட்டு பதமாய்க் காய்ச்சிக் கொடுக்கத்திரும்.

கணமாந்த குணம்

பாலன் தேகமிளைக்கும் பொருமல் வாந்தி வாய்நீர் தலை கழற்றல் சோபதாப மசதிகாணும் வயிறுயிறைந்து பாசிபோற் கழியும் விழிகழலும் நாவுலரும்.

நிவர்த்தி

நொச்சி துளசி மொசுமுசிக்கை வகைக்கு ஒருபிடி யிலையை பிட்டவித்துச் சாறுபிழிந்து ஒரு சங்கு கொடுக்கத் தீரும்.

புங்கு புளி நொச்சி மா வேம்பு வேலிப்பருத்தி பொடுதலை கருவேப்பிலை நாரத்தை சங்கு அவிரி பொன்னாவரை இவைகளின்யிலை ஈர்க்குவகைக்கு ஒருபிடி சட்டியிற்போட்டு கடுகு ரோகணி இந்துப்பு ஓமம் இவைகளைச் சீலையில் முடிந்துப் போட்டு ஒருபடி தண்ணீர்விட்டு வற்றக்காய்ச்சி வடித்து அதில் மேற்படி மருந்தை அரைத்துக் கலக்கிக் கொடுக்கத் தீரும்.

ஊதுமாந்தகணத்தின் குணம்

குழந்தையுடல் கண் கால் வீங்கும் நாவு புண்ணாகும் சுரங்காயும் அன்னந்தண்ணீர் செல்லாது கால் கை சோரும் சுவாசம் மிகும்.

நிவர்த்தி

குப்பைமுள்ளி நீர்முள்ளி கரிப்பான் கரந்தை மாதுளம் பழம் வல்லாரை வட்டத்திருப்பி பற்பாடகம் ஓரிலைத் தாமரை

தாமரைக்கிழங்கு செந்தாமரை கண்டங்கத்திரி செங்கழுநீர் கிழங்கு சூரத்தாவரை முருக்கு இவைகளின் சாறு தேங்காய்ப்பால் வகைக்குப்படி- 1/4, விளக்கெண்ணெய் படி -1, ஒன்றாய்க் கலந்ததில் இண்டவேர் காயம் வசம்பு ஏலம் வெப்பாலையரிசி முத்தக்காசு விளம்பிசின் வாகைப்பிசின் மதுக்காரைப்பிசின் இலவம்பிசின் செங்கத்தாரிப்பட்டை மாசிக்காய் கடுக்காய் அதிவிடையம் வால்மிளகு சாதிப்பத்திரி வகைக்குப் பலம் - 1/4, இடித்துப்போட்டுப் பதமாய்க் காச்சி வடித்துக்கொண்டு ஒரு துட்டிடையாய் மூன்றுவேளை உப்புப் புளி தள்ளிக்கொடுக்கத் தீரும்.

நாய்வேளைவேர் கரிப்பான்சாற்றி லரைத்து முலைப்பாலிற் கலக்கிக்கொடுத்து' நீர்முள்ளிச் சுட்டசாம்பலை கரிப்பான் சாற்றிற் கரைத்து மேலிற்பூசி வைத்திருந்து மாலையில் வெந்நீரில் ஸ்நானஞ் செய்விக்கத் தீரும்.

நீர்கணமாந்தம்

குழந்தையிருமும் மூக்கில் நீர்வடியும் இடையில் சுரங்காயும் வயிறு பொருமியிரைந்து பலவிதமாய்க் கழிச்சல் தலைப்புரட்டல் மயக்கங்காணும் உடம்பு முகம் கண்சோரும்.

நிவர்த்தி

அதிமதுரம் செண்பகப்பூ ஏலம் கோரோஜனை சாத்திரபேதி வெட்டிவேர் கோஷ்டம் மாசிப்பச்சை இலாமிச்சம் வேர் சமன்கூட்டி ஆதண்டைச்சாற்றால் ஒரு ஜாமமரைத்து குன்றிப் பிரமாணம் உண்டை செய்துக் கொண்டு ஒரு ருண்டையை முலைப்பாலில் கொடுக்க மாந்தமெட்டும் குடற்படுவன் நீர்ப்பாடு கெர்ப்பப்பாடு நாவரட்சிசுரம் குலையெரிவு வெப்பு தோஷந்தீரும்.

சிங்கிமாந்தகணத்தின் குணம்
தேவிஷ்மாந்த கணம்

உந்தியிற் கனலேறி யீரல்வெந்து புண்ணாய் உடலாதி யந்தமும் தீய்ப்போற்காயும் சுவாசம் மேல்நோக்கி இளைக்கும் குழந்தை திக்குமுக்காடி மயங்கும்.

நிவர்த்தி

அதிமதுரம் கோஷ்டம் ஏலம் கோரோசனை சாஸ்திர வேதி சண்பகப்பூ மாசிக்காய் இலவங்கப்பூ வகைக்குப்பலம் - 1/4,

கல்வத்திலிட்டு வெட்டிவேர் மாசிப்பத்திரி கருந்துளசி இலாமிச்சு இந்த நால்வகை மூலிகைச்சாற்றால் இரண்டு ஜாமம் அரைத்து குன்றிபோலுண்டை செய்து நிழலி லுலர்த்திக்கொண்டு மாசிப்பத்திரிக் கஷாயத்தில் ஒருருண்டைக் கொடுக்கத்தீரும் இலவங்கப்பூக் கஷாயத்திலிட மாந்தசுரம் வாந்திமாந்தந் தீரும் முலைப்பாலிலிட குடற்படுவன் நீர்ப்பாடு மாந்தம் கரப்பான் நாவரட்சி வயிற்றெறிவு அன்னவிடாய் சுரமாந்தம் உப்பிசம் யிருமல் தீரும்.

நீர்கணத்தின் குணம்

சுரம் விட்டுவிட்டுக்காயும் மிகுந்ததாகம் வியர்வைகாணும் கண்குழியும் நாக்கு வாய் வெடித்துப் புண்ணாகி வரளும் தண்ணீர் போறகழியும் தலைசுழலும் வயிறுநோகும் கைகால் சோர்ந்து குளிரும் முகங்கால் புறங்கை மினுமினுப்பாயிருக்கும்.

நிவர்த்தி

சாரணைக்காய் மூக்குரட்டைக்காய் பொடுதலைக்காய் திரிகடுகு துளசி சீரகம் ஓர்நிறையாய்த் தட்டிப்போட்டுக் கஷாயஞ்செய்து கொடுக்கத்தீரும்.

சுழிகணத்தின் குணம்

நளிர்சுரம் சுவாசங்காணும் கண்பஞ்சடையும் உச்சி குழியும் நெஞ்செரியும் உடல்நொந்து குழந்தையலரும் - வேறு சுவாசம் இருமல்காணும் முகம் மார்பு புடைத்துக் காணும் வயிறு ஈரல் நெஞ்சு தொண்டை நாவு வெந்து புண்ணாகும் குழந்தை முலையுண்ணாது அலறியழும் கால்கை குளிரும் வயிறு பொருமும் சுரங்காயும் கண்சொருகும் நாவுவரளும் நெஞ்சிற் கபங்கட்டி இருமல் யிளைப்பு மயக்கங்காணும் மார்புகழியாய் வாங்கும் வாயில் நுரைதள்ளும் வாந்தி பண்ணும் சுரங்காயும் சுழியும் முகம் மஞ்சட்போலிருக்கும் தலை நோகும்.

நிவர்த்தி

நுணா சங்கு இண்டு பூடு பொடுதலை செம்முள்ளி இவைகளின் சாறும் நெய்யும் ஒன்றாய்க் கலந்து பதமாய்க் காய்ச்சி வடித்துக் கொடுக்கத்தீரும்.

நந்தியாவட்டம் நாய்த்துளசி சிவதை காட்டுமல்லிகை துளசி தூதுளை இவைகளின் வேரரைத்து வகைக்குப் புன்னைக் காயளவு

கண்டங்கத்திரி தூதுளை சின்னி மணத்தக்காளி கொட்டாங்கரந்தை குப்பைமேனி கோழியவரை சமனாயிடித்துப் பிழிந்தசாறுபடி -1/2, ஒரு படி விளக்கெண்ணெயிற் கலந்து மெழுகுபதமாய் வடித்து ஒரு துட்டிடை பத்தியமாய்க் கொடுக்கத்திரும்.

கற்கடசிங்கி சீந்தி சீரகம் வில்வவோடு அதிவிடையம் கடுகுரோகணி கண்டங்கத்திரி மொசுமொசுக்கை முள்ளி தூதுவளை திப்பிலி ஓர்நிறையாய்த் தட்டி தண்ணீரிற் போட்டுக் கஷாயஞ்செய்து கொடுக்கத்திரும்.

சூலிக்கணத்தின் குணம்

நெஞ்சு வாய் தொண்டை நாவுவெந்து புண்ணாகி இருமல் சுவாசம் வயிற்றுப் பொருமல் கண்டு குழந்தை முலையுண்ணாது முகம் நாறும்.

நிவர்த்தி

துளசி நிலத்துளசி கஞ்சாங்கோரை மாசிப்பத்திரி வில்வம் உள்ளி இவைகளின்சாறு வகைக்குப்படி - அரைக்கால், விளக்கெண்ணெய்படி -1/4, திரிகடுகு விராகனிடை -2, வறுத்துப் பொடித்து ஒன்றாய்க் கலந்து அதில் தேன் விராகனிடை -2, விட்டுப்பதமாய்க் காய்ச்சி வடித்து இரண்டு விராகனிடையாய்க் கொடுக்கத்திரும்.

மகாகணத்தின்குணம்

முகம் புரங்கால் புரங்கை மினுக்கும் விழி வெளுக்கும் உடல்வெதும்பும் நாவு உதடுபுண்ணாகும் குழந்தைமயங்கும்.

நிவர்த்தி

சிறுகீரைவேர் விஷ்ணுகாந்தி கீழ்க்காய்நெல்லி சிறுபூளை வெதுப்படக்கி சீந்தி ஆடாதோடை இவைகளை ஓர் நிரையாய் நறுக்கிச் சட்டியிற்போட்டு இளம்வறுப்பாய் வறுத்துத் தண்ணீர்விட்டுக் கஷாயஞ்செய்துக் கொடுக்கத் திரும்.

பிரளிக்கணத்தின்குணம்

வயிறுபொருமி யேப்பமுண்டாகும் உடல்-புண் போல் நொந்து குழந்தை துடித்தேங்கியழுதலரும் மாப்போல் மலங்கழியும் வேறுமலங்கட்டி வயிறுபொறுமி யடிக்கடி முக்கும் குடலைப்புரட்டி வலிக்கும் முலை உண்ணாது வாயுலரும் மேல்மூச்சு இளைப்புக்காணும் முத்துப்போல் மூக்கில் நீர் வடியும் முகத்தில் மஞ்சள் மணக்கும்.

நிவர்த்தி

அவித்தூத்தின சிற்றாமணக் கெண்ணெய்படி -1-ல், 4, பேய்க்குமட்டிக்காயும், 2-படி, வெங்காயமும் அரிந்து போட்டுக் கருஞ்சீரகம் கஸ்தூரி மஞ்சள் வகைக்குப்பலம் - மாகாணி கடுகுரோகணி பலமரைக்கால் இவைகளைப் பொடித்துச் சேர்த்துப் பதமாய்க்காச்சி ஒரு துட்டிடை கொடுத்துப் பத்தியம் சுடுகஞ்சி கொள்ளத்தீரும்.

பிரக்கணத்தின்குணம்

வயிறுபொறுமி பசுமையாயும் தோய்ந்த தயிர்போலும் சுழியும் துக்கமிகும் பாலருந்தி வாந்தி பண்ணும் சுரங்காயும் விழிசொருகும் குழந்தைகைகால் சில்லென்றிருக்கும் தலையைப் புரட்டும்.

நிவர்த்தி

வல்லாரை கோழியவரை கஞ்சாங்கோரை ஜானகிப் பூடுவேளை ஒற்றைப் பேய்மிரட்டி இரட்டை பேய்மிரட்டி துடரி சிறுபுள்ளடி இவைகளை ஒரளவாய் இடித்துப் பிழிந்த சாறு படி-1 விளக்கெண்ணெய்படி -1, ஒன்றாய்க் கலந்ததிற் காயம் வெள்ளுள்ளி கருஞ்சீரகம் வசம்பு வகைக்கொரு கழஞ்சு பொடித்துப்போட்டுப் பதமாய்க்காய்ச்சி வடித்து மூன்று நாட் கொள்ளத் தீரும்.

வரட்கணத்தின் குணம்

சரீரமெல்லாம் வெதும்பும் நெஞ்சுதுடிக்கும் குழந்தை புகைந்திருமும் நாவுகருக்கும் வயிரிரையும் வேறுநாக்கில் மஞ்சளாயும் வெண்மையாயும் முட்களு மதினடுவில் மூன்று வெடிப்புந் தோன்றும் இருமல் சளியும் மிகுந்த துக்கம் மயக்கங்காணும் முகமஞ்சட் பூத்திருக்கும் உடல்வற்றும்.

நிவர்த்தி

ஆமணக்கெண்ணெய் ஆவின்பால் வகைக்குப்படி -1, கீழ்க்காய் நெல்லிச்சாறுபடி-அரைக்கால், அதிமதுரம் கடுக்காய் தான்றி சுக்கு விஷ்ணுகரந்தைவேர் துளசி தூதுளை வகைக்குப்பலம்-1/4, இளநீர் விட்டரைத்துச் சேர்த்துப் பதமாய்க் காய்ச்சி இரவிற் சோறுண்டதின்பின் ஒரு கரண்டி யெண்ணையை யுண்டுறங்கக் காலையில் வயிறுகழியும் அப்பால் மேற்படி எண்ணெயைக் காசிடையாய்ச் சாப்பிட்டு வரத் தீரும்.

முள்ளிவேர் செவ்வள்ளிக் கிழங்கு தண்ணீர் மிட்டான் மொகமுசுக்கை தூதுளை கண்டங்கத்திரி கம்பிப்பிசின் கருஞ்சீரகம் நற்சீரகம் திற்குகள்ளிவேர் மணித்தக்காளி பூடு வசம்பு வகைக்கு விராகநிடை -1, விளக்கெண்ணெயிற் போட்டுப் பதமாய்க் காச்சி உள்ளுக்குக் கொடுத்து மேலிலும் பூசத்தீரும்.

கொதிப்புக்கணத்தின்குணம்

நெஞ்சும் விலாவுங் கொதிக்கும் நெற்றி வியர்க்கும் பஞ்சுபோற் கண்வெளுக்கும் இருமல் தலைவலி காணும் குழந்தை குரல்கம்மும்..

நிவர்த்தி

ஆமணக்கெண்ணெய் எலுமிச்சம்பழம் இலந்தை ஈருள்ளி வகைக்கு சாறுபடி -1/4, கருஞ்சீரகம் பலம் -1/4, கற்றாழஞ் சோறு பலம் -1, ஒன்றாய்க்கலந்து காய்ச்சி கற்றாழஞ் சோறு சிவந்த பதத்தில் வடித்து அந்தி சந்தி காற்கரண்டி விதங் கொள்ள கணை-18, அஸ்திசுரம் அத்திவெட்டை மேகசுரம் பித்தவெட்டை தீரும் சிறியோருக்கும் பெரியோருக்கும் உபயோகப்படுத்தலாம்.

அந்தக்கணத்தின் குணம்

மூளையிற் கனலேறி யுடல்வெதும்பும் நாவுலரும் விழி வெளுக்கும் முகம் மஞ்சனிறமாய் மினுக்கும்.

நிவர்த்தி

சிறுகிரை காணி பூலா அவிரி இவைகளின் வேர், தேற்றாவிரை கடுக்காய் வகைக்குப் பலம் -1, அரைத்து ஆவின்வெண்ணெயில் வேகவைத்து வடித்து மூன்று நாட் கொடுத்து மேற்படி மருந்துகளை முலைப்பாலிலரைத்துத் தலையிற் பூசிவரத்தீரும்.

மந்தாரகணத்தின்குணம்

வயிறு ஊதி சுரம் மயக்கம் சுவாசங்காணும்.

நிவர்த்தி

நாயுருவி கரசலாங்கண்ணி வல்லாரை கவுதும்பை கண்டங்கத்திரி நொச்சி இவைகளின் சாறு வகைக்குப் படி -1/4, விளக்கெண்ணெய் படி -1, வெள்ளுள்ளி திரிகடுகு திரிபலை வகைக்குப்பலம் -1, இலவங்கப்பூ வசம்பு வகைக்கு விராகனிடை -2, பொடித்துப்போட்டு சிவந்தபதமாய் காய்ச்சி வடித்து கொடுக்கத்தீரும்.

எரிகணத்தின்குணம்

உடலாதியந்தமும் யெரியும் வாய்வழி சுவர்சம் போகும் வாய்நீர்வடியும் குழந்தையலறியழும் நித்திரை கொள்ளாது.

நிவர்த்தி

தென்னங்குரும்பை தகரை வகைக்குச் சாறுபடி -1/4, பழம்பாசி குமரி மஞ்சணத்தி ஈருள்ளி இவைகளின் சாறு விளக்கெண்ணெய் வகைக்குப்படி -1/2, ஏலம் இலவங்கப்பட்டை கோஷ்டம் நற்சீரகம் சந்தனம் அதிமதுரம் வகைக்குக் கழஞ்சு -1/2, பொடித்து ஒன்றாய்க் கலந்து பதமாய்க் காய்ச்சி ஒருகாசிடை கொள்ளத் தீரும், மற்றகணை களுந்தீரும்.

ஆமகணத்தின்குணம் இதுவேசீதகணம்

சாமந்தோறு முடல்வெதும்பி நாளுக்குநாள் தேகம் வற்றும் தாகமிகும் பசிமந்திக்கும் வயிறு பொருமியிரைந்து கழியும் சுவாசம் மிகும் கால்குளிரும் குழந்தை கண்விழியாது அயரும் திடுக்கிட்டெழுந்து சீறியழும் மூக்குயரும் புருவஞ்சுழிக்கும்.

நிவர்த்தி

இண்டம்வேர்த்தண்டு சாறு படி-1, குமிழ் மாசிப்பத்திரி புங்கு நிலத்துளசி உள்ளி முட்க்கொத்தான் தூதுளை நுணா வல்லாரை கஞ்சாங்கோரை இவைகளின் சாறு வகைக்குப் படி -1/4, விளக்கெண்ணெய் படி -1, ஒன்றாய்க் கலந்து அதிற் ஜாதிக்காய் ஏலம் கிராம்பு கடுகுரோகணி கடுக்காய் வால்மிளகு ஓமம் வசம்பு, சுக்கு வகைக்குப் பலம் -1, வறுத்துப் பொடித்துப் போட்டு பதமாய்க் காய்ச்சி வடித்து ஒரு கரண்டி வீதம் அஞ்சுநாட் கொடுக்கத்தீரும்.

வேலிப்பரித்தி கோழியவரை கிளுவை பொடுதலைக்கள்ளி சிவதை இவைகளின் வேர் வெளிச்சிப்பிசின் வசம்பு உள்ளி கடுகுரோகணி சீரகம் கரியசீரகம் வகைக்கொரு கழஞ்சு தட்டி ஆமணக்கெண்ணெயும் வெள்ளாட்டுப்பாலும் ஒன்றாய்க்கலந்து அதிற்போட்டுக் காய்ச்சி வடித்து முலைக்காம்பிற் றடவி குழந்தைக்கு முலைகொடுக்கத் தீரும்.

நீராமகணத்தின் குணம்

தண்ணீருஞ் சீதமாயும் பச்சை மஞ்சட்போலும் குழந்தை கழியும் கணணில் நீரும் பீளையும் வடியும் மயக்கம் கடுப்புங்காணும்.

முள்ளிவேர் செவ்வள்ளிக் கிழங்கு தண்ணீர் மிட்டான் மொகமுசுக்கை தூதுளை கண்டங்கத்திரி கம்பிப்பிசின் கருஞ்சீரகம் நற்சீரகம் திருகுகள்ளிவேர் மணித்தக்காளி பூடு வசம்பு வகைக்கு விராகநிடை *-1,* விளக்கெண்ணெயிற் போட்டுப் பதமாய்க் காச்சி உள்ளுக்குக் கொடுத்து மேலிலும் பூசத்தீரும்.

கொதிப்புக்கணத்தின்குணம்

நெஞ்சும் விலாவுங் கொதிக்கும் நெற்றி வியர்க்கும் பஞ்சுபோற் கண்வெளுக்கும் இருமல் தலைவலி காணும் குழந்தை குரல்கம்மும்..

நிவர்த்தி

ஆமணக்கெண்ணெய் எலுமிச்சம்பழம் இலந்தை ஈருள்ளி வகைக்கு சாறுபடி *-1/4,* கருஞ்சீரகம் பலம் *-1/4,* கற்றாழஞ் சோறு பலம் *-1,* ஒன்றாய்க்கலந்து காய்ச்சி கற்றாழஞ் சோறு சிவந்த பதத்தில் வடித்து அந்தி சந்தி காற்கரண்டி விதங் கொள்ள கணை*-18,* அஸ்திசுரம் அத்திவெட்டை மேகசுரம் பித்தவெட்டை தீரும் சிறியோருக்கும் பெரியோருக்கும் உபயோகப்படுத்தலாம்.

அந்தக்கணத்தின் குணம்

மூளையிற் கனலேறி யுடல்வெதும்பும் நாவுலரும் விழி வெளுக்கும் முகம் மஞ்சனிறமாய் மினுக்கும்.

நிவர்த்தி

சிறுகீரை காணி பூலா அவிரி இவைகளின் வேர், தேற்றாவிரை கடுக்காய் வகைக்குப் பலம் *-1,* அரைத்து ஆவின்வெண்ணெயில் வேகவைத்து வடித்து மூன்று நாட் கொடுத்து மேற்படி மருந்துகளை முலைப்பாலிலரைத்துத் தலையிற் பூசிவரத்தீரும்.

மந்தாரகணத்தின்குணம்

வயிறு ஊதி சுரம் மயக்கம் சுவாசங்காணும்.

நிவர்த்தி

நாயுருவி கரசலாங்கண்ணி வல்லாரை கவுதும்பை கண்டங்கத்திரி நொச்சி இவைகளின் சாறு வகைக்குப் படி *-1/4,* விளக்கெண்ணெய் படி *-1,* வெள்ளுள்ளி திரிகடுகு திரிபலை வகைக்குப்பலம் *-1,* இலவங்கப்பூ வசம்பு வகைக்கு விராகனிடை *-2,* பொடித்துப்போட்டு சிவந்தபதமாய் காய்ச்சி வடித்து கொடுக்கத்தீரும்.

எரிகணத்தின்குணம்

உடலாதியந்தமும் யெரியும் வாய்வழி சுவாசம் போகும் வாய்நீர்வடியும் குழந்தையலறியழும் நித்திரை கொள்ளாது.

நிவர்த்தி

தென்னங்குரும்பை தகரை வகைக்குச் சாறுபடி -1/4, பழம்பாசி குமரி மஞ்சணத்தி ஈருள்ளி இவைகளின் சாறு விளக்கெண்ணெய் வகைக்குப்படி -1/2, ஏலம் இலவங்கப்பட்டை கோஷ்டம் நற்சீரகம் சந்தனம் அதிமதுரம் வகைக்குக் கழஞ்சு -1/2, பொடித்து ஒன்றாய்க் கலந்து பதமாய்க் காய்ச்சி ஒருகாசிடை கொள்ளத் தீரும், மற்றகணை களுந்தீரும்.

ஆமகணத்தின்குணம் இதுவேசீதகணம்

சாமந்தோறு முடல்வெதும்பி நாளுக்குநாள் தேகம் வற்றும் தாகமிகும் பசிமந்திக்கும் வயிறு பொருமியிரைந்து கழியும் சுவாசம் மிகும் கால்குளிரும் குழந்தை கண்விழியாது அயரும் திடுக்கிட்டெழுந்து சீறியழும் மூக்குயரும் புருவஞ்சுழிக்கும்.

நிவர்த்தி

இண்டம்வேர்த்தண்டு சாறு படி-1, குமிழ் மாசிப்பத்திரி புங்கு நிலத்துளசி உள்ளி முட்க்கொத்தான் தூதுளை நுணா வல்லாரை கஞ்சாங்கோரை இவைகளின் சாறு வகைக்குப் படி -1/4, விளக்கெண்ணெய் படி -1, ஒன்றாய்க் கலந்து அதிற் ஜாதிக்காய் ஏலம் கிராம்பு கடுகுரோகணி கடுக்காய் வால்மிளகு ஓமம் வசம்பு, சுக்கு வகைக்குப் பலம் -1, வறுத்துப் பொடித்துப் போட்டு பதமாய்க் காய்ச்சி வடித்து ஒரு கரண்டி வீதம் அஞ்சுநாட் கொடுக்கத்தீரும்.

வேலிப்பரித்தி கோழியவரை கிளுவை பொடுதலைக்கள்ளி சிவதை இவைகளின் வேர் வெளிச்சிப்பிசின் வசம்பு உள்ளி கடுகுரோகணி சீரகம் கரியசீரகம் வகைக்கொரு கழஞ்சு தட்டி ஆமணக்கெண்ணெயும் வெள்ளாட்டுப்பாலும் ஒன்றாய்க்கலந்து அதிற்போட்டுக் காய்ச்சி வடித்து முலைக்காம்பிற் றடவி குழந்தைக்கு முலைகொடுக்கத் தீரும்.

நீராமகணத்தின் குணம்

தண்ணீருஞ் சீதமாயும் பச்சை மஞ்சட்போலும் குழந்தை கழியும் கணணில் நீரும் பீளையும் வடியும் மயக்கம் கடுப்புங்காணும்.

நிவர்த்தி

எலுமிச்சங்காய்ப் பிரமாணம் ஆவின் வெண்ணெயைச் சட்டியிலுருக்கி மணித்தக்காளி கொட்டைப் பாக்களவு அரைத்துப் போட்டெரித்துப் பதத்திலிறக்கி ஒரு காசளவு ஐந்துநாட் கொடுக்கத் தீரும் பெரிய பிள்ளைகட்கு ஒரு துட்டிடை கொடுக்கவும்.

பேராமகணத்தின் குணம்

கைகால் குளிரும் கண் வளையமாகும் சுரங்காயும் குழந்தை வாந்திபண்ணும் திடுக்கிட்டேங்கும் வயிறு பொருமிக் கழியும் சோரும் முலையுண்ணாது சீறி வெருவிப்பார்க்கும்.

நிவர்த்தி

தும்பை பொடுதலை கொழுஞ்சி இவைகளின் வேர் திப்பிலி சீரகம் ஓமம் இந்துப்பு ஓர் நிரையாய் நாழி ஆவின் மோரிலரைத்துக் கலக்கிக் காய்ச்சிக் கொடுக்க வாயு பேராமகணந்தீரும்.

முக்குக்கணத்தின் குணம்

குழந்தை யடிக்கடி வாந்திபண்ணும் முலையுண்ணாது சோரும் மலத்திலிரத்தம் விழும் நாக்கு வேகும் சுரம் தலைவலி நடுக்கம் வாந்தி நாவரட்சி தாகங்காணும் சந்துப்பொருத்துகள் உளையும் முக்கிச் சீதமும் மலமுமாய்க் கழியும் ஆசனவாய்க் கடுத்துத் தீப்போல் எரியும் அடித்தள்ளும் மேனி கருத்துவற்றும்.

நிவர்த்தி

குமரிச்சாறு முலைப்பால் வகைக்குப்படி -1/4, எலுமிச்சம் பழச்சாறு படி -3/4, விளக்கெண்ணெய் படி -1, வில்வம்வாமிச்சு விஷ்ணுகாந்தி முத்தக்காக ஓரிலைத்தாமரை முருங்கைவித்து துளசிவித்து கோங்கிலவம்பிசின் ஆவரைப்பிசின் கோஷ்டம் அதிமதுரம் அக்கிராகாரம் தாளிசப்பத்திரி வகைக்கு ஒரு பலம் வறுத்து இடித்துப் போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்து ஒரு துட்டிடை மூன்றுநாட் காலையிற் கொடுத்து மாலையில் இண்டந்தண்டைக் கண்டங் கண்டமாய் நறுக்கி ஊதிக் காற்படி தண்ணீர் வாங்கி அதிற் சீரகத்தைப் பொரித்துப் போட்டு வற்றவைத்து மூன்றுநாட் கொடுக்கத்தீரும்.

ஏழு தடவை கழுவின கற்றாழஞ்சோறு வெந்தயம் எலுமிச்சம் பழச்சாறு ஒன்றாய்க் கலந்து காய்ச்சிக் கொடுக்க தீரும்.

மூலகணத்தின் குணம்

வாதபித்தமதிகரித்து குழந்தை சீதம் இரத்தமாய் கழியும் ஆசனங்கடுத்துளையும் காச்சல் வயிற்றிரைச்சல் விடாத்தலைவலி காணும் முகங்கருக்குஞ் சிவக்கும் அடித்தள்ளும்.

நிவர்த்தி

சீரகம் அதிவிடையம் கடுக்காய் சுக்கு பரங்கிப்பட்டை கசகசா சந்தனத்தூள் சாதிப்பத்திரி நெல்லிவற்றல் சிற்றாமுட்டி செம்பரித்தி வில்வம் லாமிச்சு இவைகளின் வேர்வகைக்குப் பலம் -1, கற்கண்டு பலம் 2, பொடித்து ஐந்து பலம் ஆவினெய்யிற்போட்டு லேகியஞ்செய்து பாக்களவு ஏழுநாட் கொடுக்கத்தீரும்.

பழம்பாசி சமூலம் வெள்ளாட்டுப் பாலிற்போட்டுக் காய்ச்சி வெந்தபின் வடித்து அதிலொரு எலுமிச்சம்பழம் பிழிந்து கொடுக்கத்திரும.

அதிமதுரம் சீரகம் ஏலம் பெருமரத்துப்பட்டை இவைகளை யோர்நிறையாய்க் கருவேலம்பட்டை கஷாயத்தில் அரைத்து வெள்ளாட்டுப்பாலிற் கொடுக்கத்திரும்.

ஜனங்களுக்குப் பொதுப் பிரயோகம்

கல்நார் கிராம்பு லவங்கப்பத்திரி செவியம் திப்பிலி அதிவிடையம் தான்றி கருஞ்சீரகம் அக்கிராகாரம் கடுகுரோகணி ஜாதிக்காய் சாதிப்பத்திரி கற்கடகசிங்கி குராசானி கஸ்தூரி பூரம் சீரகம் கோரோசனை குங்குமப்பூ ஓர் நிறையாய்க் கல்வத்திலிட்டு இஞ்சி கையாந்தகரை இவைகளின் சாற்றால் வகைக்கொரு ஜாமமும். நாரத்தங்கனிச் சாற்றால் மூன்று ஜாமமும் அரைத்து பயரளவா யுண்டை செய்து முலைப்பாலிற் கொடுக்க யெட்சி நீர்ப்புள் பறவை தோஷம் நளிர்சுரம் கழிச்சல் இருமல் ஈளை காசமெட்டும் கணமாந்தம் நீங்கும்.

சாத்திரபேதி கோஷ்டம் ஏலம் இலவங்கம் சந்தணம் கடுகுரோகணி இலுப்பைப்பூ நன்னாரி லாமிச்சு வெட்டிவேர் திப்பிலி அதிமதுரம் முத்தக்காக முந்திரிப்பழம் பேரீச்சம்பழம் ஓர் நிரையாய் கரிப்பான் சாற்றாலரைத்து கடலைப் பிரமாணம் உண்டை செய்து முலைப்பாலிலாவது வெந்நீரிலாவது கொடுக்க அஷ்டகணங்கள் மாந்தசுரம் தாகந்திரும்.

ஏழுதரம் கழுவின கற்றாழஞ்சோறு ஒரு தேங்காய்ப் பிரமாணம், வெநதயமொரு துட்டிடை, ஈருள்ளி பலம் -1, இவைகளை ஒரு படி விளக்கெண்ணெயிற் போட்டுக் காய்ச்சி யொரு கரண்டி வீதங்கொடுக்க 18-வகைக்கணம் வெட்டை சுரந்தீரும்.

இண்டு தூதுளை சங்கங்குப்பி வேலிப்பருத்தி பூவரசு குப்பைமேனி ஆடாதோடை சாரணை பூலா நரிப்பயற்றங் கொடி பிரமி தைவேளை கற்றாழை இவைகளின் வேர்களை இடித்துப் பிழிந்தசாறு படி-1, விளக்கெண்ணெய் படி -2, கருஞ்சீரகம் ஓமம்பூடு கோரோசனை செண்பகப்பூ வசம்பு சாதிக்காய் தான்றிக்காய் வகைக்குப்படி -1/2, அரைத்துக் கலந்து பதமாய்க் காய்ச்சி ஒரு கரண்டி வீதங்கொடுக்க மாந்தம் தோஷம் கனைதெக்கத்துக் கணமுந்தீரும்.

மாதுளம் சமூலமரைத்து ஒரு யெலுமிச்சங்காய்ப் பிரமாணமும் சீந்திற்சர்க்கரை ஒரு எலுமிச்சங்காய்ப் பிரமாணம், ஆவின் வெண்ணெய் நாலெலுமிச்சங்காய்ப் பிரமாணம் ஜாதிக்காய் ஜாதிப்பத்திரி ஏலம் வகைக்கு விராகனிடை -1, பொடித்துப் போட்டு மெழுகு பதமாய்க் காய்ச்சி வடித்து ஒரு கரண்டி வீதங்கொடுக்க சகல கணம் தோஷம் வயிற்றிரைச்சல் கழிச்சல் தீரும்.

கணத்தினால் இரத்தம் விழுதலுக்கு

நிலக்குமிழ் எருக்கு விஷ்ணுகரந்தை ஆவரை கொன்றை இவைகளின் வேர்ப்பட்டை கணம்பூண்டு அம்மான் பச்சரிசி வகைக்குப் பலம் -1, மெழுகு போலரைத்து ஒரு படி விளக்கெண்ணெயிற் கலந்து பதமாய்க் காய்ச்சி வடித்ததில் ஏலம் அதிமதுரம் சீரகம் வகைக்குப்பலம் 1, வறுத்துப் பொடித்துப் போட்டு வேளைக்கு ஒரு காசிடை முலைப்பாலிற் கலந்து மூன்றுநாட் கொடுக்கத்தீரும்.

கணச்சூடுதணிய

சிற்றாமணக்கெண்ணெய் -1, வல்லாரைச்சாறுபடி -1/2, வெந்தயம் பலம்-2, பசுவின்பால் விட்டரைத்துக் கலந்து பதமாய்க் காய்ச்சி வடித்துச் சர்க்கரைக் கலந்து கொடுக்கத் தீரும்.

கணம் இருமல் வாய்நாற்றத்திற்கு

மணித்தக்காளி ஒரு படி, வெந்தயம் பலம் -1, ஈருள்ளி மூன்று ஏலம் ஒரு துட்டிடை, பொன்னிறமாய் வறுத்து இரண்டு படி தண்ணீர்விட் டொன்றாய்க் காய்ச்சி மூன்று நேரங் கொடுக்கத் தீரும்.

மாந்தகணம் பெருமல் இருமல் கபத்திற்கு

தூதுளை நாயுருவி கரிப்பான் வல்லாரை தும்பை நொச்சி கண்டங்கத்திரி வகைக்குச்சாறு படி -1/4, சிற்றாமணக்கெண்ணை படி -1, இவைகளை ஒன்றாய்க் கலந்து அதில் திரிகடுகு திரிபலை வெள்ளுள்ளி வசம்பு வகைக்கு விராகனிடை -3, வீதம் அரைத்துப்போட்டுக் காய்ச்சி ஒரு கரண்டி கொடுக்கத்தீரும்.

பொருமல் மாந்தகணத்திற்கு

துளசி செம்முள்ளி தும்பை கஞ்சாங்கோரை தைவேளை இவைகளினிலை நற்சீரகம் ஓர்நிரையாய் வெதுப்பிச் சாறு பிழிந்து கொடுக்கத் தீரும்.

சாரணைவேர்ப்பட்டை தேசாபுரம் ஓர் நிரையாய்க் கஷாயஞ் செய்து கொடுக்கத்தீரும்.

கணமாந்தம் வயிற்றுளவு பொருமலுக்குப் பால சஞ்சீவிமாத்திரை

வெள்ளைத் துத்தம் வெண்காரம் கோரோசனை கொழுஞ்சி கடுகுரோகணி வகைக்குக் கழஞ்சு-3, அகத்தியிலைச்சாறு விட்டு. ஒருஜாமமரைத்து சிறுபயறு போலுண்டைசெய்து வெந்நீரிலாவது முலைப்பாலிலாவது ஒருண்டை கொடுக்கத் தீரும்.

தெற்கத் துக்கணமாந்தம் போர்மாந்தத்திற்கு

வசம்பு ஓமம் வெள்ளுள்ளி காயம் வகைக்குப் பலம் -1/4, தூள் செய்து அரைப்படி வேப்பெண்ணெயிற் போட்டு ஒரு நாழிகை கொதிக்க வைத்து ஆறுநாள் ரவிபுடம் வைத்து குழந்தைகளின் நிதானங்கண்டு கொடுக்கத்தீரும்.

வேப்பெண்ணெய் படி -1/2, வேலிப்பருத்தி குப்பைமேனி வெள்ளெருக்கம்பழுப்பு இவைகளின் சாறு வகைக்குப் படி -1/4, வெள்ளெருக்கு நொச்சி முருங்கை இவைகளின் பட்டை வகைக்கொருபிடி, ஒருத்தலைப்பூடு பலம்-1, வசம்பு அரத்தை வகைக்கு விராகனிடை -1, இவைகளைத் தட்டி ஒன்றாய்க் கலந்து காய்ச்சிக் கரண்டி வீதம் மூன்று நாள் கொடுக்கத்தீரும்.

வீக்ககணத்துக்கு

உள்ளி வசம்பு ஓமம் அதிமதுரம் கோஷ்டம் கிராம்பு சுக்கு மிளகு ஏலம் கூத்தன் கொதம்பைவேர் வகைக்கு விராகனிடை -1, பொடித்து

விளக்கெண்ணெயிற் போட்டு சூரியபுடம் வைத்து சிறுகரண்டி வீதங் கொள்ளத்தீரும்.

கணக்கடுப்புக்கு

ஆமணக்கெண்ணெயும் நிம்பச்சாறுஞ் சமன்கலந்ததில் வெந்தயத்தை அரைத்துப் போட்டுக் காய்ச்சிக் கொடுக்கத் தீரும்.

இரத்தக்கடுப்பு அடிப்புறப்பட்டதற்கு

கச்சந்திறாய் வேர் பொன்னாங்காணி வேர் சாரணைத்திவேர் வகைக்கு விராகனிடை -1, பூடுத்தயிலம் விட்டரைத்துக் கொட்டைப் பாக்களவு கொடுக்கத்திரும்.

ஒரு படி ஆவின்பாலி லொருபல வெந்தயம் போட்டு வேகவைத்திறக்கி வெல்லமும் நெய்யும் விட்டுக் களிக்கிண்டி அந்திசந்தி கொடுக்கத்திரும்.

இரத்த சீதக்கடுப்பு பலவிதக் கழிச்சல் சுரத்திற்கு

விருசம்பட்டை ஈருள்ளி பரித்திப்பிஞ்சு இவைகளை யோரளவாய்ச் சாறு பிழிந்து அதில் அதிமதுரம் குப்பைக் கீரை வேர் வெள்ளைக் கெருடன் மாதுளம்பிஞ்சு சீரகம் இவைகளைச் சமனாயரைத்து வெள்ளாட்டுப்பாலிற் கலக்கிக் கொடுக்கத் திரும்.

இரத்தம் சீதம் கடுப்பு நீர்ச்சுருக்கிற்கு

இளந் தென்னம்பூவை யிடித்துப் பிழீந்தசாறு தயிர் வகைக்குப்படி அரைக்கால், எலுமிச்சம் பழச்சாறு ஒரு பலம், ஒன்றாய்க் கலந்து புளித்தள்ளி மூன்று நாள் அந்திசந்தி கொள்ளத் தீரும்.

கிராணி கடுப்புக்கு

எலுமிச்சம் பழச்சாற்றில் வெந்தயத்தை வேகவைத்துண்ணத் தீரும்.

கோரோசனை சண்பகப்பூ கோஷ்டம் வெட்டிவேர் ஏலம் அதிமதுரம் சாத்திரபேதி மாசிப்பச்சை தான்றிக்காய் வகைக்கு விராகனிடை -2, வெட்டிவேர்க் கஷாயத்திலும் முலைப்பாலிலுமறைத் துண்டை செய்து மேற்படி பாலிற் கொடுக்க மேற்படி கடுப்பு மாந்தம் ஜன்னி கழிச்சல் பிரளி குடற்புரட்டல் வாதபித்த சுரம் உஷ்ணந்தீரும் இதின்பேர் அமிர்தாதியுண்டை.

ஆமக்கடுப்பு

பருத்திவிரைப் பருப்பு ஜாதிக்காய் நன்னாரிவேர் வட்டத்திருப்பி சீரகம் கிராம்பு ஓர் நிரையாயுரைத்து சிறு. புள்ளடிச்சாற்றில் கலக்கிக் கொதிக்க வைத்துக் கொடுக்கத் தீரும்.

விளாம்பிசினும் உள்ளியும் அரைத்துத் தயிரிற்கொடுக்கத் தீரும்.

இரத்தக் கடுப்புக்கு

ஜாதிக்காய், சாதிப்பத்திரி, லவங்கப்பட்டை, கிராம்பு, மல்லி கோஷ்டம், கோரோசனை, சண்பகப்பூ, கார்கோலரிசி, மதுரம், சீரகம் லவங்கப்பத்திரி, செங்கழுநீர்க் கிழங்கு, ஏலம் வகைக்குப் பலம் *-1/4* விளக்கெண்ணெய் பலம் *-12* ஆவிநெய் பலம் *-4,* நல்லெண்ணெய் பலம் *3,* முருங்கையிலைச் சாறு பலம்*-16,* மேற்படி மருந்துகளை யரைத்து ஒன்றாய்க் கலந்து காய்ச்சி வடித்து ஒரு சங்குவீதம் மூன்று நாட் கொடுக்க உதிரக்கணம் இரத்தக் கடுப்புத் தீரும்.

சீமூலத்திற்கு

சென்னாயுருவியிலை யொருபிடி, நல்லெண்ணெய் படி *-1/4,* கற்றாழஞ்சோறு சர்க்கரை இவையெல்லா மொன்றாய்க் கலந்து காய்ச்சிக் கொடுக்கத் தீரும்.

இரத்தமூல வரட்கணம் ஊதுமாந்தத்திற்கு

ஜாதிக்காய் மாசிக்காய் கிராம்பு கோரோசனை சீரகம் பூதிக்காய் திப்பிலி ஓர்நிறையாய் முலைப்பால் விட்டரைத்து மிளகு பிரமாணம் உண்டை செய்து உலர்த்தி மேற்படி பாலிற் கொடுக்கத் தீரும்.

அடித்தள்ளினதற்கு

கரிசலாங்கண்ணியும் பழம்புளியு மோரிடையாயுரைத்து புன்னைக்காய்ப் பிரமாணம் எட்டுநாட் கொடுக்கத் தீரும்.

சுத்தி செய்த கஞ்சா ஒரு துட்டிடை, மிளகு *-21,* பூடு *-21,* அரைத்துக் குன்றிபோலுருட்டிப் பருத்தியிலைச் சாற்றிலாவது மாதுளம்பிஞ்சிச் சாற்றிலாவதிடத் தீரும்.

ஒருத்தலை வெள்ளைபூடு வசம்பு வகைக்கு விராகநிடை *-3,* வீழி பொடுதலை சிறுபுள்ளடி வகைக்கொரு பிடி தட்டிக் கால்படி விளக்கெணணெயிற் போட்டுக் காய்ச்சி மூன்று போது கொடுக்கத்தீரும்.

இஞ்சியை மேற்றோலைசீவி துவாரமிட்டு அதில் ஒரு விராகனிடை பெருங்காயத்தைப் பொதித்து மூடி நூலாற் கட்டித் தயிரில் வேகவைத்து எடுத்து அரைத்து வேறே தயிரிற் கொடுக்கத்தீரும்.

முக்கல்வயிற்றுக் கடுப்பின் குணம்

முக்கலுடன் அபானங்கடுத்து சீதரத்தம் விழும் தாதுவற்றும் தாகங்காணும் அன்னஞ்செல்லாது.

நிவர்த்தி

பரித்திப்பிஞ்சு ஜாதிக்காய் கிராம்பு அதிவிடையம் அரத்தை அசமதாகம் இலந்தைத்தம்பலம் ஓர்நிரையாய் யரைத்துக்கட்டித் தயிரிற் கலந்துண்ண தீரும்.

ஒருபடி விளக்கெண்ணெயில் வெந்தயம் நிலக்குமிழ் வேர்ப்பட்டை வகைக்குப்பலம் -10, அரைத்துப் போட்டுப் பதமாய்க் காய்ச்சிக் கொடுக்க உறுப்பு மூலக்கடுப்புத்தீரும்.

புழுங்கலரிசி வெல்லம் கவுதும்பை வகைக்கொரு நாரத்தங்காய்ப் பிரமாண மரைத்து நல்லெண்ணெயில் வேக வைத்து மூன்றுநாள் சாப்பிடக் கடுப்பு கிராணி முக்கல் தீரும்.

எருசிரங்கை எருமைத் தயிரில் ஒருகாசிடை ஒருவருஷஞ்சென்ற அவரையிலைச் சாறாவது அல்லது மிளகு தக்காளியிலைச் சாறாவது பிழிந்து கொடுக்கத்தீரும்.

மூலரத்தகணம் விஷகணம் மாந்தத்திற்கெண்ணை

விளக்கெண்ணெய் படி -1, கற்றாழை எலுமிச்சம்பழம் ஈருள்ளி இவைகளின் சாறு வகைக்குப்படி -1/4, ஆவினெய் படி -1/2, ஒன்றாய்க் கலந்ததில் கோஷ்டம் மதுரம் சண்பகப்பூ ஏலம் சன்னலவங்கம் வகைக்குப்பலம் -1/4, வெந்தயம் பலம் -1, பொடித்துப் போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்து ஒரு கரண்டினிரை கொடுக்கத்தீரும்.

இரத்தகணத்தின் குணம்

குழந்தை அடிக்கடியிருமும் கழிச்சல் இரத்தங் கடுப்புக் காணும் இடுப்புந் துடையு முளையும் சுரங்காயும் தாகிக்கும் நாடியுயரும் உடல்வாடும் அன்னஞ்செல்லாது.

நிவர்த்தி

ஜாதிக்காய் ஜாதிப்பத்திரி லவங்கம், லவங்கப்பட்டை, மல்லி கோஷ்டம், கோரோஜனை, செண்பகப்பூ, கார்கோலரிசி, மதுரம், லவங்கப்பத்திரி, சீரகம், செங்கழுநீர்க்கிழங்கு, ஏலம் வகைக்குப் பலம் -1/4, இவைகளைப் பொடித்து ஆமணக்கெண்ணெய் பலம் -12, பசுவின்வெண்ணெய் பலம் -6, நல்லெண்ணெய் பலம் -3, முருங்கையிலைச்சாறு பலம் -16, இவைகளை யொன்றாய்க் கலந்து மெழுகுபதமாய் வடித்து ஒருபலம் வீதம் மூன்றுநாட் கொள்ளத்தீரும்.

விளக்கெண்ணெய் படி -1/4, கழுவின கற்றாழஞ்சோறு ஒரு விளாங்காய்ப் பிரமாணம், பேய்க்குமட்டிக்காய் -2, ஈருள்ளி பலம் -2, இவைகளைத் தட்டிப்போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்து வாரத்திற்கு இரண்டுதபா ஒருதுட்டிடை கொடுக்கத்தீரும்.

சூழிகணம், வரட்கணம், ஊதுகணம், மாந்தகணம், இரத்தகண முதலானதற் கெண்ணெய்

செப்புநெரிஞ்சி தகரை பழம்பாசி ஓரிலைத் தாமரை நன்னாரி சங்கு நொச்சி சாரணை ஆடாதோடை சிறுவழுதலை இம்பூரல் பற்பாடகம் கற்றாழை நாயுருவி சங்கங்குப்பி வேலிப்பரித்தி சீராசெங்கழுநீர் மூக்குரண்டி சிற்றாமுட்டி தூதுளை கண்டங்கத்திரி மிளகு தக்காளி யிவைகளின்வேர் வகைக்குப்பலம் -1/4, மிளகு தக்காளி வல்லாரை கரிப்பான் துளசி செம்முள்ளி வில்வப்பத்திரி அகத்தி மொகமுகக்கை முடக்கொத்தான் சங்கு விஷ்ணுகரந்தை கருவேல் தகரை வெதுப்படக்கி பேய்மருட்டி இவைகளினிலைச்சாறு வகைக்குப்படி -1 மாகாணி, திப்பிலி கஸ்தூரிமஞ்சள் கடுகுரோகணி வசம்பு சீரகம் மாசிக்காய் அரத்தை வகைக்கு விராகனிடை -3, திப்பிலிமூலம் செவியம் சித்திரமூலம் தேசாபுரம் ஓமம் கருஞ்சீரகம் கடுக்காய் கிராம்பு சாதிக்காய் வகைக்கு விராகனிடை -1, பூடு விராகனிடை -5, ஈருள்ளிபலம் -2, இவைகளை யெல்லாமரைத்து ஒருபடி சிற்றாமணக்கெண்ணெயிற் போட்டு மேற்படி சாறுவகை களையுங் கலந்து பதமாய்க் காய்ச்சிக் கொண்டு மாசமூன்றுதபா கொடுத்து உப்பு புளி தள்ளி பத்தியமாயிருக்கத் தீரும்.

சகலகணம் பிரளிக்குச் சஞ்சீவியெண்ணெய்

விளக்கெண்ணெய் படி -1, அவிரி வேலிப்பரித்தி முடக்கொத்தான் தும்பை கவுதும்பை சடைச்சி பெருந்தும்பை

கிரந்திநாயகம் செம்முள்ளி இவைகளின்சாறு வகைக்குப் படி -1/4, புளியம் பிரண்டைக் கிழங்கு கொல்லங்கோவைக் கிழங்கு பலபிள்ளைக்கிழங்கு பூடு ஈருள்ளி கருஞ்சீரகம் கஸ்தூரி மஞ்சள் சீரகம் வசம்பு இவைகளை வகைக்கொரு யெலுமிச்சங்காய்ப் பிரமாண மரைத்துப்போட்டு எட்டொன்றாய்க் கலந்து காய்ச்சி வடித்து ஒருசங்குகொடுக்க பிரளி கரப்பன் தீரும்.

சுழிகணத்திற்குக் கஷாயம்

கற்கடகசிங்கி சீந்திற்கொடி நற்சீரகம் வில்வவேர் அதிவிடையம் கடுகுரோகணி கண்டங்கத்திரிவேர் மொகமுசுக்கை செம்முள்ளிவேர் தூதுளைவேர் திப்பிலி ஓர்நிறையா யிடித்துப் போட்டுக் கஷாயஞ்செய்து கொடுக்கத் தீரும்.

கரப்பன் வகுப்பு

வாதபித்த சிலேத்மகரப்பன், செங்கரப்பன், கருங்கரப்பன், மண்டைக்கரப்பன், அரிகரப்பன், பொரிகரப்பன், கிரந்தி, சூலைகரப்பன், வாலகரப்பன், ஊதுகரப்பன், செவ்வாப்பு, கொள்ளிக்காரப்பன், கட்டியொடு வீங்குகரப்பன், உதிர்கரப்பன், சட்டைதடி, வெடிகரப்பன், சிங்கமுக எரிகரப்பன் ஆக கரப்பன் -18

விஷவாத கரப்பன்குணம்

உடல்வெதும்பும் உளையும் பரபரென ஊறும் கைகால் அரை வயிறுவீங்கி வரண்டு வெடித்துப் புண்ணாகும்.

நிவர்த்தி

மிளகு பூடு வசம்பு வகைக்கு விராகனிடை -2, ஈருள்ளி பலம் -1/2, நெல்லிமுள்ளி பூவரசம் பூச்சாம்பல் வகைக்கொரு பிடி இவைகளையெல்லாம் ஆடுதீண்டாப்பாளைச் சாற்றிலாட்டி காற்படி நல்லெண்ணெயிற் . போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்துப் புண்ணிற்போட நீங்கும்.

வாதகரப்பன் குணம்

உடல்கனத்து வெளுத்துப் பிரண்டைபோற் றடித்துக் கட்டும் கண்சிவக்கும்.

நிவர்த்தி

பூதகரப்பன்பட்டை, பூவரசம்பட்டை, நுணாவேர்ப்பட்டை இலுப்பைக்கட்டி இவைகளை யோர்நிரையாய்ச் சுட்டுச்சாம்பலாக்கி நல்லெண்ணையிற் குழைத்துத் தடிப்புமேற்றடவமாறும் கொன்றைக்கொழுந்தை யரைத்துத் தடவமாறும்..

புங்கு ஆடாதோடை நாய்வேளை சங்கு இவைகளின் வேர் வகைக்கொருபிடி வசம்பு, உள்ளி, கருஞ்சீரகம், நற்சீரகம், வெளிச்சிப்பிசின், கடுக்காய், பொடுதலைக்காய், கஸ்தூரி மஞ்சள் வகைக்கு விராகநிடை -5, ஈருள்ளி பலம் -10, இவைகளைப் பொடித்து ஒருபடி விளக்கெண்ணெயிற் போட்டு சங்கங்குப்பிச்சாறு படி -1, கூடவிட்டுச் சூரியபுடம் வைத்து ஒரு காசளவாய்க் கொடுக்க கரப்பன் கர்ப்பத்திலெட்டிய கருங்கிரந்தி செங்கிரந்தி தீரும்.

பித்தகரப்பன்குணம்

உடம்பிற்றினவு காச்சல் தலைவலி வாந்திகாணும் நீர்ச்சிவந்திறங்கும மலஞ்சிக்கும்.

நிவர்த்தி

கொடுவேலி குருஞ்சா குளப்பாலை சிவனார்வேம்பு இவைகளின் வேர் பெருமரத்துப்பட்டை வெள்ளறுகு மிளகு கருவேப்பீர்க்கு செங்கத்தாரிப் பட்டை யிவைகளை ஓர் நிறையா யிடித்து தண்ணீரிற் போட்டு கஷாயஞ் செய்து கொடுக்கத்தீரும்.

மேற்படி மருந்துகளை யிடித்து வடிகட்டிச் சூரணஞ்செய்து திரிகடிப் பிரமாணம் வெந்நீரிற் கொடுக்கத்தீரும்.

கருநொச்சியிலை ஏரழிஞ்சிப்பட்டை விஷ்ணுகரந்தை சிறுசின்னியிலை சாணாக்கி சிற்றாமணக்கின்வேர் ஈருள்ளி சுட்ட வசம்பு கடுகுரோகணி இவைகளை ஓர் நிறையாய்த் தட்டிக் கஷாயஞ்செய்து கொடுக்கத்திரும்

செங்கத்தாரிப்பட்டை சின்னியிலை சிறுகுருஞ்சாவேர் மிளகு இவைகளை ஓர்நிறையாய் விளக்கெண்ணெயிற் காய்ச்சிக் கொடுக்கத் தீரும்.

வாதபித்த சிலேற்பன கரப்பன் -18-க்கும் எண்ணை

குமரி கண்டங்கத்திரி தூதுளை செந்தொட்டி செம்முள்ளி கருநொச்சி இண்டு குட்டித்தக்காளி நிலவாகை கழற்சி சங்கங்குப்பி

சங்கு வில்வம் ஈருள்ளி இவைகளின் சாறு வகைக்குப்படி -1/4, சிற்றாமணக்கெண்ணை படி -1, செங்கத்தாரிப்பட்டை வாதமடக்கி வேர் கடுக்காய் வகைக்குப் பலம் -2, கருஞ்சீரகம் விராகனிடை -2, இவைகளை யரைத்துப்போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்து ஒருகரண்டி வீதங் கொடுக்கத் தீரும்.

புங்கம்பூ புளியமடற்கிழங்கு நற்சீரகம் வசம்பு உள்ளி பாலை நன்னாரி இவைகளை ஓர்நிறையாய் ஆவின்பாலிலரைத்து விளக்கெண்ணெயிற்போட்டுப் பதமாய்க் காய்ச்சிக் கொடுக்கத் தீரும்.

செங்கரப்பன் குணம்

தேகமெலியும் சிவக்கும் வெடித்து நீரோடும் தலைவலி காணும் நீர்க்கட்டும் மரணக்குறிகள் காணும்.

நிவர்த்தி

பசுவினெய் படி -1/4, ஆதண்டை முதியார் கூந்தல் முருக்கிலை நெருஞ்சி முடக்கொத்தான் பூவரசின்பட்டை ஈருள்ளி யோர் நிறை யாய்த் தட்டிப்போட்டுக் காய்ச்சி சிவந்தபதத்தில் வடித்து ஒருகரண்டி வீதங் கொள்ளத்திரும்.

கருங்கரப்பன் குணம்

உடல்வெதும்பும் பசுநரம்பு தோன்றி நிறம் பேதப்படும். தேகம் பரபரத்து முறுக்கிக் குழந்தை துள்ளி அழும் முலையுண்ணாது முகங்காலூதும்.

நிவர்த்தி

மிளகு துருசு கடுக்காய் கோஷ்டம் திப்பிலி கரியசீரகம், ஓமம் கஞ்சாங்கோரை, நத்தைச்சூரி, சிறியஆவரை, பெரியஆவரை, சிவனார்வேம்பு, வேலிப்பரித்தி இவைகளின் வேரை யோர்நிறையாய்த் தட்டி விளக்கெண்ணெயிற் போட்டுப் பதமாய்க் காய்ச்சிக் கொடுக்க கரப்பன் 18-ம் நீங்கும்.

சூலை கரப்பன்குணம்

தேகமெல்லாம் வெடித்து முழங்கால் முழங்கையிற் சூலைகட்டும் முகம்வாடும்.

நிவர்த்தி

புங்கு சங்கு ஆதண்டை இவைகளின்வேர் அரைத்து வகைக்கொரு எலுமிச்சங்காய்ப் பிரமாணம், அரிந்த ஈருள்ளி, உழக்கு, கடுகுரோகணி பலம் -1/4, முடக்கொத்தான் பலமரைக்கால், இவைகளைத் தட்டி ஒருபடி விளக்கெண்ணெயிற் போட்டு சூரியபுடம் வைத்துண்ண முடக்குச்சூலை புண் கரப்பான் சொரி சிரங்கு தீரும்.

நிவர்த்தி

ஊதுகரப்பன்குணம்

குளிர்க்காச்சல் கழலைக்கட்டி காணும் நாடோறும் பூதம் போலுடல் வீங்கும் புண்ணாகும் மூக்கரிக்கும்.

நிவர்த்தி

அகத்தி கர்ப்பூரவல்லி அவிரி வெள்ளறுகு சங்கு ஆடாதோடை மணித்தக்காளி ஆவரை சங்கங்குப்பி நிலக்கடம்பு கிரந்திநாயகம் நொச்சி முருக்கு ஈருள்ளி வகைக்குச்சாறு படி -1/4, விளக்கெண்ணெய் படி -1, மஞ்சள் மரமஞ்சள் கஸ்தூரிமஞ்சள் சிவதை கடுகுரோகணி கருஞ்சீரகம், நற்சீரகம், திரிகடுகு, திரிபலை வகைக்கு விராகனிடை -1, அரைத்துக் கரைத்துப் பதமாய்க் காய்ச்சி ஒருகரண்டி வீதம் மூன்றுநாட் கொள்ள ஊதுகரப்பன் முதல் 18-கரப்பனுந்தீரும்.

பாலக்கரப்பன் குணம்

தேகமெலியும் சந்துகால் கடுக்கும் கண்டம் வெடித்துப் புண்ணாகிக் கடிவிஷம்போய் நீர்பாய்ந்து நாறும் வேறுதேகமெல்லாம் பரபரத்துச் சொரிபோலாகி சாரையுடற்போற் காணும் புண்ணில் விஷஜலம் உதிரம் போல் வடியும் சூலைவற்றித் திருவழியும்.

நிவர்த்தி

பூவரசம்பட்டைச்சாறு விளக்கெண்ணெய் ஆவின்பால் வகைக்குப்படி -1, ஒன்றாய்க் கலந்து காய்ச்சிக் கடுகுபதத்தில் கருஞ்சீரகம் கார்கோலரிசி யேலம் லவங்கம் மாஞ்சில் கரிசாலை நுணாவேர் வகைக்குப் பலம் -1/4, நிழலிலுலர்த்திப் பொடித்துப்போட்டுக் கிண்டி நெய்ப்பதமாக இறக்கிவடித்து ஒருகரண்டி வீதங் கொடுத்துக் கடுகைமேலிற் பூசத்தீரும்.

கரப்பான் பண்டந்தள்ளிப் பத்தியங்கொள்ளவும்,

அரிகரப்பன்குணம்

யோனிலிங்க முதலான ஸ்தானங்களிற் புற்றுண்டாகிப் புண்பட்டு ஆறாமற் றசையை அரித்து உருவையழிக்கும்.

நிவர்த்தி

ஆரைகொட்டைக் கரந்தை செருப்படை கரிசாலை பொன்னாங்காணி பேய்மிரட்டி சிறுகீரை வட்டத்திருப்பி தொடரி இவைகளின்வேர் நீலிகோடக சாலை மிளகரணை வேலிபெருங்கிளா இவைகளின் வேர்ப்பட்டை, வசம்பு பசரியிலை வகைக்குப்பலம் -1/2, இவைகளையிடித்துக் காற்படி விளக்கெண்ணெயிற்போட்டுக் காய்ச்சிவடித்து ஒருகரண்டி வீதம் யேழுநாட் கொள்ள அரிகரப்பன் சொரிகரப்பன், செங்கரப்பன், கருங்கரப்பன் முதலான 18-வகை கரப்பனுந்திரும்.

எருக்கு மருக்காரை வட்டக்கிலுப்பை வேலிப்பருத்தி இவைகளின் வேர்ப்பட்டை, கடுக்காய் உள்ளி ஓர் நிறையாய் நல்லெண்ணெயிற் போட்டுக் காய்ச்சி மூன்றுநாள் புண்ணின் மேற்பூசத்தீரும்.

வரட்சிகரப்பன்குணம்

உச்சிமுதல் உள்ளங்கால்வரை சிறுசிரங்கு மிகுந்து வெடித்துத் தினவுஞ் சொரியுங்காணும் நித்திரை வராது.

நிவர்த்தி

தூதுளை ஒரிலைத் தாமரை வெள்ளெருக்கு கொடிவேலி நீலி இவைகளின்வேர் கரியசீரகம், கெந்தகம், கார்கோலரிசி, ஓமம், சீரகம், வகைக்குக் காற்பலவீதங் காற்படி நல்லெண்ணெயிற்போட்டு வேகவைத்து உள்ளுக்குக் கொடுத்து மேலிலும் பூசத்தீரும்.

புங்கங்கொட்டை மரமஞ்சள் வேம்பாடம் பட்டை அவிரிவேர் துரிசி கெந்தகம் தாளகம் வகைக்குக் காற்பலமாகப் பொடித்து காற்படி நல்லெண்ணையிற் போட்டு காய்ச்சி உடம்பிற் காலையிற்பூசி மாலையில் அரப்பிட்டுக் குளிக்கத்தீரும்.

சிறுசின்னிச்சாறு விளக்கெண்ணெய் வகைக்குப்படி -1, ஒன்றாய்க் கலந்ததில் மிளகு செங்கத்தாரிப்பட்டை சிறு குருஞ்சாவேர்ப்பட்டை வகைக்கு விராகனிடை -5, அரைத்துப் போட்டுப் பதமாய்க் காய்ச்சிக் கொடுக்கத்தீரும்.

அவித்தூத்தின சிற்றாமணக்கெண்ணெய் படி -1, கர்ப்பூரவல்லி சிறுசெருப்படை நரிவிட்டி ஈருள்ளி வகைக்குச் சாறு படி -1, இவைகளை ஒன்றாய்க் கலந்து காய்ச்சி வடித்து ஒருசங்குவீதங் குழந்தைகளுக்கு உள்ளுக்குக் கொடுத்து மேலிலும் பூசிவரத்தீரும்.

சொரிசிரங்கிற்கு

பூவரசம் பட்டையில் நீராகாரத் தண்ணீர்விட்டு இடித்துச் சாறுபிழிந்து அரைக்காற்படி வீதம் மூன்றுநாள் உப்புப் புளி தள்ளிச்சாப்பிட்டு கெந்தகம் சித்திரமூலவேர்ப்பட்டை வகைக்குக் காற்பலம் வீதமரைத்து காற்படி நல்லெண்ணெயிற்போட்டு வேகவைத்துக் காலையில் உடம்பிற்பூசி மாலையில் அரப்புத் தேய்த்து ஸ்நானஞ் செய்யத் தீரும்.

ஏலம் மிளகு கார்கோலரிசி கெந்தகம் சூடன் பிராய்ப்பட்டை வகைக்கு ஒரு விராகனிடை வீதம் பொடித்து அரைக்கால் படி நல்லெண்ணெயிற் போட்டுக் காய்ச்சி உடம்பிற் பூசி மாலையில் அரப்பிட்டுக் குளிக்கத்தீரும்.

பேய்ச்சொரிக்கு

இந்துப்பை பொடித்து நெய்யிற்போட்டு ரவியில் வைத்து உடம்பிற்பூசி வைத்திருந்து மறுநாள் முழுகத்தீரும்.

சீற்திற்கொடி வேப்பம்பட்டை பேய்ப்புடல் வகைக்குப் பலம் -10, இடித்து தூணி நீரிற்போட்டு, எட்டொன்றாய்க் காய்ச்சி வடித்து அதில் ஆவிநெய் படி -1, கூடவிட்டு திரிபலை செஞ்சந்தனம் மரமஞ்சள் லாமிச்சம்வேர் தக்கோலம் கோஷ்டம் தேவதாரம் மஞ்சள் வகைக்கு விராகனிடை -2, அரைத்துப் போட்டு மூன்றுநாள் வரை உமிக்காந்தலில் வைத்திருந்து நாலாநாள் பதமாய்க் காய்ச்சி வடித்து ஒரு நேரத்துக் கிரண்டு காசிடை நெய்வீதங் கொள்ளத்தீரும்.

சிரங்கிற்கு

காட்டுச்சீரகம் கார்கோலரிசி, கஸ்தூரிமஞ்சள், ஏலம், கடுக்காய் நீர்வெடிமுத்து சமனிடையாய்ப் பொடித்து அதற்குச் சமன் மிளகுத்தூள் கூட்டி ஊமத்தங்காய்க் குளடைத்து ஒன்றரை எருமுட்டையிற் புடம்போட்டெடுத்து ஒருபடி தேங்காயெண்ணெயில் அரைத்துப் போட்டு மூன்று நாட் சூரியபுடம் வைத்துச் சிரங்கின்மேற்றடவத் தினவு நமைச்சல் தீரும்.

நீர் வெடிமுத்தும் சந்தணமும் ஓர்நிறையா யரைத்துச சிரங்கிற்குப்பூச உதிர்ந்துவிடும்.

வெந்தோன்றிக்கிழங்கு கெந்தகம் வகைக்குக் காற்பலம் வீதமரைத்துக் காற்படி நல்லெண்ணெயிற் போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்துக் காலையிற் சிரங்கிற்பூசி வைத்திருந்து மாலையில் இலுப்பையரப்பும் வேப்பிலையும் சமமாயரைத்து உடம்பிற்றேய்த்து ஸ்நானஞ் செய்யத்தீரும்.

காத்தட்டியிலைச்சாறும் நல்லெண்ணெயும் வகைக்குக் காற்படி வீதங் கலந்து அதிற் சுத்தி செய்த கெவுரி விராகனிடை-1 பொடித்துப் போட்டுச் சூரியபுடம் வைத்து உடம்பிற்றேய்த்து மாலையில் அரப்பிட்டு ஸ்நானஞ் செய்யத்தீரும்.

சகலகரப்பன் சிரங்கிற்கு மேற்பூசும் எண்ணெய்

விடத்திலை, இலைக்கள்ளி, திருக்கள்ளி, சதுரக்கள்ளி, மாவிலிங்கு, சங்குதாழை, கொம்மட்டி, குப்பைமேனி, அவிரிபொடுதலை நிலக்கடம்பு, ஆமணக்கு இரண்டு எருமை ஆட்டாங்கொடி நொச்சி இவைகளின் சாறு நல்லெண்ணெய் வகைக்குப்படி - 1/4, வீதங்கலந்து அதில் சீரகம் கடுகு கோரைக்கிழங்கு குந்திருக்கும் குக்கில் திரிகடுகு தேவதாரம் கருஞ்சீரகம் வகைக்குப்பலம் -1, வீதமரைத்துப் போட்டு காய்ச்சிவடித்து உடம்பிற்பூசத்தீரும்.

சிரங்குப் புண்ணுக்குக் களிம்பு

துருசு கெந்தகம் குங்கிலியம் இவைகளை யோர்நிரையாய் விளக்கெண்ணயி வரைத்துப் போடத்தீரும்.

வாதகரப்பன் வீக்கத்திற்கு

மூக்கரைச் சரணைவேர் இந்துப்பு கடுக்காய் மாச்சுக்கு ஓர்நிரையாய்த் தட்டிப் போட்டுக் கியாழஞ்செய்து குடிக்கத் தீரும்.

தூதுளை சங்கு சுரக்கொடி சிறுநெருஞ்சி நீர்முள்ளி ஈருள்ளி இவைகளை ஓர்நிரையாய் கஷாயஞ்செய்து அதில் வெண்காரத்தைப் பொரித்துப் பேட்டுக் கொடுக்கத் தீரும்.

ஈருள்ளியை யிடித்துச் சாறுபிழிந்து அதில் எவச்சாரம் இந்துப்பு சீரகம் வெங்காரம் இவைகளைப் பொடித்துப் போட்டு கொடுக்கத் தீரும் மலசலங் கழன்று வீக்கம் வற்றும் மேற்படி மூவகை யுப்பையும் பொடித்துக் கோசலத்திற கலக்கி வடிகட்டிக் கொடுக்கத் தீரும்.

மாந்தம் செவ்வாப்பு கரப்பானுக்கு

ஜாதிலிங்கம் பூரம் ஏலம் பூங்காவி வகைக்குப் பலம் - 1/4, கோதும்பைக் கஞ்சி வார்த்து இரண்டு சாமம் மைபோலாட்டிப் பயறுபோலுண்டை செய்துக்கொண்டு இரண்டு வயசுப் பிள்ளைக்குச் சோற்றிலும் அதற்குட்பட்ட குழந்தைகட்கு மாசிப்பத்திரிக் கியாழத்திலுங் கொடுக்கத் தீரும்.

சிறசிரங்கு சொரிசிரங்கிற்கு

கொடிக்கள்ளியை வாட்டிச் சாறுபிழிந்து வயதுக்கும் பலத்துக்குந் தக்கபடி கொடுக்கத் தீரும்.

ஒருபடி தேங்காய்ப் பாலில் துருசு அரிதாரம் கெந்தி வகைக்கு இருகழஞ்சு அரைத்துப் போட்டுக் காய்ச்சி நெய்வடித்துக் காலையில் உடம்பிற் பூசி மாலையில் அரப்பிட்டுக் குளிக்கத் தீரும்.

காற்கடுவன் மண்டைக் கடுவனுக்கு

மேற்படி வியாதி காலிலுந் தலையிலுங் கண்டிருந்தால் ஆமணக்கிலையை இரவிற் கட்டிக் காலையில் அவிழ்த்துச் சலத்தாற் கழுவியபின் அப்புண்ணில் தேங்காயெண்ணையைத் தடவி யதன் மேற் சங்கிலையைச் சுருக்கிப் பொடித்து தூவியிடத்திரும்.

இலுப்பைப்பட்டை பாவட்டை சதுரக்கள்ளிப்பட்டை ஈருள்ளி வசம்பு நறுக்கி விளக்கெண்ணெயிற் போட்டுக் காய்ச்சி உட்கொள்ளத் தீரும்.

சிரங்கு சொரிகரப்பன் ஆறாப்புண்ணுக்கு

அரிதர்ரம் பலம் - 1/4, சேங்கொட்டை -20, இவைகளை நறுக்கி ஒருபடி நல்லெண்ணையிற் போட்டுக் காய்ச்சிச் சேங்கொட்டை வெடிக்கும் பதத்திலிறக்கி வடித்து உடம்பிற் றேய்த்து மாலையில் அரப்பிட்டுக் குளிக்கத் தீரும்.

கல்லுப்பு மரமஞ்சள் மிளகு கருஞ்சீரகம் வகைக்குப் பலம் -1/4, வீதம் பொடித்து இரண்டு படி தேங்காய்ப் பாலிற் போட்டுக் காய்ச்சி நெய்வடித்து உடம்பிற்பூசி மாலையில் அரப்பிட்டு ஸ்நானஞ் செய்யத் தீரும்.

கரப்பானுக்கெண்ணெய்

செங்கத்தாரி கருநொச்சி முடக்கொத்தான் கழஞ்சி பங்கு சங்கங்குப்பி கிரந்திநாயகம் சிறுசெருப்படை சிறுசின்னி முதியார் கூந்தல் உத்தாமணி கொடுவேலி வெள்ளறுகு வேம்பாடம்பட்டை சிவனார்வேம்பு சிவதை கண்டங்கத்திரி பூதகரப்பன்பட்டை சீரகம் கருஞ்சீரகம் இவையெல்லாம் ஓர்நிரையாய் விளக்கெண்ணெயிற் போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்துக்கொடுக்க புடைகரப்பன் கொள்ளிக்கரப்பன் வீங்குகரப்பன் அரிகரப்பன் செங்கரப்பனுந் தீரும்.

கபாலகரப்பனுக்குத் தைலம்

முத்தக்காசு தூதுளை காணி சீராசெங்கழுநீர் ஓரிலைத்தாமரை சிவனார்வேம்பு நிலவேம்பு குப்பைமேனி சங்குமலை தாங்கி கொன்றை இவைகளின்வேர் வகைக்குப் பலம்-1, சுக்கு மிளகு திப்பிலி கடுக்காய் இந்துப்பு கருஞ்சீரகம் வசம்பு பூடு சென்னகரப்பழம் கடுகுரோகணி வெளிச்சிப்பிசின் அதிமதுரம் வகைக்கு களஞ்சு-1, இவைகளை ஆவின் பாலிலரைத்து ஒருபடி நல்லெண்ணெயிற்போட்டு பதமாய்க் காய்ச்சி வடித்து உள்ளுக்குச் சாப்பிட்டு தலையிற் பதமிட்டு முழுகிவரத் தீரும்.

தண்ணீர்விட்டான் கிழங்குச்சாறு படி -4, குமரிச்சாறு படி -1, தூதுவளைவேர் பலம் -4, இடித்து 2-படி தண்ணீரிற் போட்டுக் காய்ச்சி வடித்தகஷாயம் படி -1/4, நல்லெண்ணெய் படி -1, இவைகளைக் கலந்ததிற் கொடுவேலி வேர்ப்பட்டை கருஞ்சீரகம் வேம்பாடம்பட்டை வகைக்குக் கழஞ்சு -1, வீத மரைத்துப்போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்து உள்ளுக்குச் சாப்பிட்டு முழுகிவரத் தீரும்.

கரப்பனுக்கு மேற்பூசும் எண்ணெய்

வெற்றிலை மிளகு தக்காளி வகைக்குச் சாறு படி -1, எருக்கிலம்பழுப்பு வேளை வகைக்குச் சாறு படி -1/2 நல்லெண்ணை படி-1, இவைகளைக் கலந்ததில் சுக்கு மிளகு வசம்பு திப்பிலி வகைக்குப் பலம் -1, அரைத்துப் போட்டுக் காய்ச்சிக் கரப்பான் பேரிற் பூசிவரத் தீரும்.

முருங்கைப்பூ, எருக்கம்பூ முத்தெருக்கஞ்செவி கார்த்திகைக்கிழங்கு வகைக்கு இரண்டு கழஞ்சி அரைத்து அரைபடி ஆவினெய்யிற்போட்டுச் சிவந்தபதத்தில் காய்ச்சி வடித்துக் கண்டத்திற்கு கீழ்ப்பூசி மாலையில் அரப்பிட்டு ஸ்நானஞ் செய்யத் தீரும்.

கொள்ளி கரப்பனுக் கெண்ணெய்

வெள்ளருகு சிவனார்வேம்பு சங்கங்குப்பி பொடுதலை வீழி கோழியவரை கரிப்பான் கருநொச்சி கழற்சி மஞ்சணாத்தி சிறுசெந்தட்டி சாரடை தூதுளை இவைகளின் சாறு வகைக்கு படி -6, விளக்கெண்ணெய் படி-1, ஒன்றாய்க் கலந்ததில் கருஞ்சீரகம் பலம் -½

2, ஈருள்ளி பலம்-1, அரைத்துப் போட்டுக் காய்ச்சிப் பத்தியமாய் கரண்டிவீதங் கொள்ளத் தீரும்.

சுரவகுப்பு

கணக்காச்சலின் குணம்

உந்திமுதல் ஈரல்வரை புண்ணாகிச் சுரங்காயும் திகைத்து மயங்கும்

நிவர்த்தி

பூசணி தண்ணீர்மிட்டான் இவைகளின் சாறு இளநீர் ஆவிநெய் பால் வகைக்குப்படி -1, கடுகுரோகணி சண்பகப்பூ வெட்டிவேர் பச்சை அதிமதுரம் லவங்கம் சிற்றாமுட்டி பேராமுட்டி திப்பிலி சந்தணம் ஏலம் லாமிச்சம்வேர் மாம்பருப்பு கோஷ்டம் விளாம்பிசின் இலவம்பிசின் வில்வப்பிசின் பொன்முசுட்டை வகைக்கொரு காசிடைவீத மரைத்துக் கலந்து பதமாய்க் காய்ச்சிக் கொடுக்க கணக்காய்ச்சல் உட்சுரம் தடுமல் இருமல் தீரும் உடல் பூரிக்கும்.

புள்ளடி செப்புநெரிஞ்சி வல்லாரை வாட்பூலா கோழியவரை இவைகளின் சாறு வகைக்குப் படி -1/4, ஆமணக்கெண்ணெய் படி -1, குராசாணி கடுகுரோகணி வெளிச்சிப்பிசின் மாவின் புல்லூரி சடாமாஞ்சில் வகைக்கிரண்டு பணவிடை பொடித்துக் கலந்துக் காய்ச்சி யொருதுட்டளவாய் கொடுக்கத் தீரும்.

மாசிக்காய் திப்பிலி ஏலம் கோரோசனை கோஷ்டம் மாஞ்சில் இருசீரகம் அக்கிராகாரம் வகைக்குப் பலம் -1/4, முலைப்பாலாலிரு சாமமரைத்து மேற்படி பாலிற்கொடுக்கத் தீரும்.

சங்கு செருப்படை துளசி வரட்பூலா கழற்சி நரிப்பயறு இவைகளின் சாறு ஆவினெய் வகைக்குப் படி -1, அப்பை கொவ்வை நெரிஞ்சி துதுளை யிவைகளின் வேர் கிராம்பு திப்பிலி ஜாதிக்காய் இம்பூரல் வசம்பு உள்ளி சுக்கு கடுக்காய் சிறுதேக்கு வகைக்குப் பலம் - ¾, தட்டிப்போட்டுக் கொடுத்து மேலிலும்பூசத் தீரும்.

நாய்த்துளசி பழம்பாசி கணப்பூடு பேய்மிரட்டி வல்லாரை தக்கரை

ஓரளவாய்க்கூட்டி கியாழஞ் செய்து வடித்து அதில் கருஞ்சீரகம் நற்சீரகம் கோரோசனை பொடித்துப் போட்டுக் கொடுக்க கணவெப்புத் தீரும்.

உடம்புநோய்க் காச்சலின் குணம்

உடம்பு நொந்து காயும் குழந்தை யுதட்டைக் கடிக்கும் கைமுஷ்டியை யுறக்கப்பிடிக்கும் நட்டகண்ணாய் விழிக்கும் பதட்டமுடன் கொங்கையைக் கடித்திழுக்கும்.

நிவர்த்தி

சீதேவிப்பூண்டை யிடித்துப் பிட்டாயவித்துச் சாறு பிழிந்ததிற் கடுகுரோகணி யரைத்துக் கலக்கி வெள்ளாட்டுப் பாலிற் கலந்து கொடுக்கத் தீரும்.

உட்காய்ச்சலின் குணம்

உட்சுரங் காயும் வயிறு அபானமெரியும் மயக்கங் காணும் மலசலந் தீயும்.

நிவர்த்தி

இளநீரிலவித்து ஊற்றின சிற்றாமணக் கெண்ணெய் படி-1, ஆவின்பால் படி-2, குமரிச்சாறு படி-1/2, ஒன்றாய்க் கலந்து மெழுகு பதமாய்க் காய்ச்சி வடித்ததிற் சீரகம் மாசிக்காய் கோஷ்டம் அதிமதுரம் கிராம்பு ஏலம் சுக்கு வகைக்கு விராகனிடை -1, வெந்தயம் பலம்-1, இவைகளை வறுத்திடித்துக் கலந்து சூரியபுடம் வைத்துக் கொடுக்கக் காச்சல் உட்காச்சல் மாந்தம் உடம்பு வற்றல் நாவறட்சி நடுக்கல் இருமல் தீரும்.

கற்றாழஞ்சாறு இளநீர் ஆவின்பால் வகைக்குப்படி -1, சிற்றாமணக்கெண்ணெய்படி -3, கலந்துகாய்ச்சி கணப்பூண்டு மான்கொம்பு சந்தனம் ஆமையோடு வகைக்குப்பலம்-1, இளநீராலரைத்து செண்பகப்பூ ஜாதிக்காய் நற்சீரகம் வகைக்குப்பலம் -1/4, சாதிப்பத்திரி பலம் -¾, கொத்தமல்லிபலம் -1/2, இவைகளை பசுவின் பாலிலரைத்து ஒன்றாய்க்கலந்து மெழுகு பதமாய்க் காய்ச்சி அந்தசந்தி யொருதுட்டிடை ஏழுநாட் கொடுக்க மாந்தகுணம் தோஷம் வரட்கணம் உடம்பு மெலிவு அட்சரத்தின் காய்ச்சல் உட்சுரம் நீங்கும்.

ஆமசுரத்தின் குணம்

சாமந்தோறு மட்டாய்ச் சுரங்காயும் குழந்தை சீறியழும் பாலுண்ணாது உடல் கருக்கும் இளைக்கும் நடுங்கும் தண்ணீர்தாகம் தலைவலிகாணும் கைகால் குளிர்ந்திருக்கும்.

நிவர்த்தி

உத்தாமணி பாவட்டை சங்கு காவட்டை முருங்கு நுணாபொடுதலை இவைகளின் ஈர்க்கு ஒருபிடி, நறுக்கிச் சட்டியிற் போட்டு ஒரு படி தண்ணீர் விட்டு ஓமம் திப்பிலி வசம்பு ஆமையோடு கருஞ்சீரகம் ஓர்நிரையா யரைத்துத் துணியில் முடிந்து கூடப்போட்டு வற்றக்காய்ச்சி யதில் மேற்படி மருந்துகளை யரைத்து மூன்றுவேளை கொடுக்கத்திரும்.

விளாக்காய்ப் பிரமாணம் ஆவின் வெண்ணெயில் உத்தாமணிக் கொழுந்து வசம்பு உள்ளி வினாவோடு ஓமம் ஆமையோடு வகைக்கிருகழஞ்சு வறுத்துப் பொடித்துப் போட்டுக் காய்ச்சிக் கொடுக்கத் தீரும்.

உத்தமாணி சங்கு தூதுவளை கொடுப்பை இவைகளின் வேர் வகைக்கு ஒருபிடி நறுக்கி ஒருபிடி நீரிற்போட்டு பொடுதலை ஓமம் திப்பிலி மிளகு வசம்பு பூடு ஆமையோடு ஓர்நிரையாய்ச் சீலையில் முடிந்துப்போட்டு வற்றக்காய்ச்சி யதில் மேற்படி மருந்தை யரைத்துக் கலக்கிக் கொடுக்கத் தீரும்.

பாவட்டை கொன்றை சிற்றாமுட்டி வேலிப்பருத்தி இவைகளின் வேரும் மிளகும் தட்டிப்போட்டுக் கியாழஞ் செய்து கொடுக்கத் தீரும்.

இரத்தசுரத்தின் குணம்

வயிற்றுவலி தாகம் கழிச்சல் தலைச்சுற்றல் காணும் சுரம் விட்டுவிட்டுக் காயும் கண்தாழும் நாவுலரும் கைகால் சோர்ந்து தண்ணீர் போலிருக்கும்.

நிவர்த்தி

நாவிக்கிழக்கு திப்பிலி வெண்காரம் விராகனிடை மூவைந்து சாதிலிங்கம் விராகனிடை -10, நிம்பப்பழத்தின் சாற்றால் இருசாமமரைத்து கடலைநிரை யுண்டைசெய்து சுக்குக்கியாழத்திற் கொள்ள வெதுப்புத்தீரும்.

சீரகம் கிராம்புக் கஷாயத்தி லிடத்திரும்.

ஆலவிழுதின் கஷாயத்திற்கொள்ளப் பழஞ்சுரந்தீரும்.

அன்பனாதிசுரத்தின் குணம்

வேர்க்கும் வெதும்பும் கண்சிவக்கும் பல்காலும் வெந்நீர் வேண்டும் பா,ர்க்கப் பயமாயிருக்குதெனப் பதறி அலறிக் குழந்தையழும் வயிறுசிக்கிவிடும் தெருவிற் புறப்பட்டோடும்.

நிவர்த்தி

கோரோசனை அதிமதுரம் கோஷ்டம் லாமிச்சம் வேர் வெட்டிவேர் ஏலம் சண்பகப்பூ மாசிப்பச்சை சாத்திரவேதி இவைகளை ஓர்நிறையாய் முலைப்பாலிலாவது வெட்டி வேர்த்தண்டுச் சாற்றிலாவது மைப்போலரைத்துக் குன்றிபோலுண்டை செய்து மேற்படி பாலிலுரைத்துக் கொடுக்கத்தீரும்.

கற்றாழஞ்சோறு கடுக்காய் களிப்பாக்கு கருவேல் பிரமிசுக்கு ஒருபடி தண்ணீர்விட்டு நாலிலொன்றாய்க் காய்ச்சி அதை விளக்கெண்ணெயிற் கலந்து கொடுக்கச் சீதம் குன்மம் இருமல் சுரம் சீதபேதி முதலான சுரங்கள் தீரும்.

மாங்கிஷ சுரத்தின் குணம்

அதிகமாய்ச் சுரங்காயும் உடல்நடுங்கும் மூச்சு மெத்த ஓடும் உதிரம்வற்றி யுடல்வெளுத்துருகிக் கருகும் மூர்ச்சை காணும் உரோமங்கள் சிலிர்க்கும்.

நிவர்த்தி

பச்சைக்கற்பூரம் கெந்தி இந்துப்பு லவங்கம் சாதிக்காய் சாதிப்பத்திரி வகைக்கொரு கழஞ்சு, தேசிப்பழச்சாற்றில் ஒரு ஜாமமரைத்து உளுந்தளவு உண்டைசெய்து இஞ்சி சர்க்கரை சுக்கிலூட்ட எந்தச் சுரமும் மூன்றேமுக்கால் நாழிகையிலோடும்.

அஸ்திசுரத்தின் குணம்

அனற்போல் வெதும்பும் முலையுண்ணாது புத்தி கலங்கும் உள்ளுளையும் வெள்ளோக்காளமிகும் சத்திக்கும் நீர் சிவக்கும் காமத்திற் சுரங்காயும் உடல்வற்றி நீங்கும் இருமல் சோகை கடுப்புக்காணும்.

நிவர்த்தி

சாஸ்திரபேதி கோஷ்டம் மதுரம் சந்தணம் ஏலம் சீரகம் கொன்றைப்பிசின் ருத்திராட்சம் கலங்கொம்பு நெல்லி சண்பகம்

கொத்தமல்லி லாமிச்சை வகைக்கொரு காசளவரைத்து ஒருபடி ஆவினெய்யிற்போட்டுப் பரித்திக்காய் காணி வகைக்குச்சாறு படி 1/4, விட்டுப் பதமாய்க் காய்ச்சி அதிற் காற்பலச் சர்க்கரை சேர்த்து கொடுக்கத்தீரும்.

வாதபித்த சிலேற்பன சுரத்திற்கு

கோரோசனை விராகனிடை -2, கடுகுரோகணி நேர்வாளம் வகைக்கு விராகனிடை -1, முலைப்பாலில் மைப்போலரைத்துப் பயறு போலுண்டைசெய்து வாதசுரத்திற்கு இஞ்சிசாற்றில், பித்தசுரத்திற்கு முலைப்பாலில், சிலேற்பன சுரத்திற்கு ஆடாதோடை கண்டங்கத்திரி தூதுளை இடித்துப் பிட்டவித்துப் பிழிந்தசாற்றி லிடத்தீரும் மூவகைச் சன்னியுந்தீரும்.

மாந்தசுரத்திற்கு

சீந்திற்றண்டு களிப்பாக்கு பாலில் பத்துத்தபாச் சுத்தி செய்த சிவதைவேர் கடுக்காய் சுக்கு கடுகுரோகணி ஓர்நிறையாய்த்தட்டி ஒருபடி நீரிற்போட்டு அரைக்காற்படியாய் வற்றவைத்துக் கொடுக்கத்தீரும்.

விரைநீக்கிய கடுக்காய் -16, அந்தயிடை கஸ்தூரிமஞ்சள் கருடக் கிழங்கு இவைகளைப் பொடித்து ஒருபடி ஆமணக் கெண்ணெயிற்போட்டுச் சூரியபுடம்வைத்து உள்ளுக்குக் கொடுத்து உச்சியிலுந் தடவத்தீரும்.

சீரகம் கிராம்பு திப்பிலி நெல்லி வேம்பு புளி விஷ்ணுகரந்தை பேராமுட்டி சிற்றாமுட்டி ஓரிலைத் தாமரை ஓர் நிறையாய்க் கூட்டிக் கஷாயஞ்செய்து கொடுக்கத்தீரும்.

உள்ளி அவுரி குட்டிவிளா இவைகளை ஓர் நிறையாய் சிவக்க வறுத்துக் கஷாயஞ்செய்து கொடுக்கத்தீரும்.

புளி நுணா நெல்லி வேம்பு உதி தகரை பொடுதலை அம்மான் பச்சரிசி இவைகளின் ஈர்க்கு வில்வம் சிறுபுள்ளடி கோழியவரை நிலவிளா பழம்பாசி இவைகளினிலை நரிபயற்றங்கொடி விஷ்ணுகரந்தை நன்னாரி கோரைக்கிழங்கு செருப்படை மணித்தக்காளி வல்லாரை சீந்தி பேய்ப்புடல் வில்வவோடு வகைக் கொருபிடி அரிந்து பொன்னிறமாய் வறுத்து ஒருபடி தண்ணீரிற்போட்டுக் காற்படியாய் வற்றவைத்து அதிற் கோஷ்டம் விளாம்பிசின் வில்வப்பிசின் இலவம் பிசின் மாசிக்காய் சாதிக்காய் வெந்தயம் வகைக்கு விராகனிடை

வெதுப்பிப் பொடித்துப்போட்டு மூன்று நாளிரண்டுவேளையும் கொடுக்க நாட்பட்ட மாந்தசுரம் வாதபித்த சிலேற்பன சுரந்தீரும்.

பச்சைக்கர்ப்பூரம் இலவங்கம் வால்மிளகு சிறுநாகப்பூ கடுகுரோகணி ஏலம் சடாமாஞ்சி சுக்கு சீரகம் வகைக்கு விராகனிடை-¼, நேர்வாளம் விராகனிடை -2¼, பொற்றலைக் கரிப்பான் சாற்றால் ஒன்பதுநாள் ஆட்டி மிளகுப்பிரமாணம் உண்டைசெய்து இஞ்சி தேன் முலைப்பால் இவைகளிற் கொடுக்க மாந்தசுர முதலான சகலசுரமுந்தீரும்.

அட்சரமாந்த சுரத்திற்கு

பூவரசிலைகாய் பூ சமனாயரைத்த பலம் -1, அடைபோற்றட்டி சிற்றாமணக் கெண்ணெயிற்போட்டுக் காய்ச்சி சிவந்த பதத்திலடையை யெடுத்துப்போட்டு ஏலம் சாதிக்காய் சாதிப்பத்திரி வகைக்கு விராகனிடை - 1/2, பொடிசெய்து எண்ணையிற் கலந்து ஒருதுட்டிடை கொடுக்கத்தீரும்.

மாந்தகணசுரம் வயிற்றுப் பொருமல் வாந்திக்கு

இரசசிந்தூரம் திரிபலாதி குங்குமப்பூ கஸ்தூரி ஏலம் திரிகடுகு கோரோசனை வக்கக்குப் பலம் -1/4, கிராம்பு விராகனிடை -1, கருநொச்சிச்சாற்றால் சிறுபயருபோ லுண்டை செய்து துளசிச்சாற்றி லிடத்தீரும்.

மாந்தசுரதோஷத்திற்கு

ஆமணக்கெண்ணெய் படி -1, நுணாச்சாறு படி -1/2, ஈருள்ளிச்சாறு படி -1/4, வெந்தயம் பலம் -1/4, அரைத்துப்போட்டுப் பதமாய்க் காய்ச்சிக் கொடுக்கத்தீரும்.

கணசுரம் தோஷம் வயிற்றுக்கழிச்சல் பித்தம் இருமல் வாந்திக்கு

திரிகடுகு வெண்காரம் சாதிலிங்கம் ஓர்நிறையா எலுமிச்சம் பழச்சாற்றா லொருசாமமரைத்துச் சிறுபயருபோல் உண்டைசெய்து துளசி செம்முள்ளி ஆடாதோடை தூதுளை விஷ்ணுகரந்தி கண்டங்கத்திரி வெதுப்படக்கி பேய்ப்புடல் சங்கு நொச்சி இவைகளினிலைகளை யிடித்துப் பிட்டவித்துச் சாறுபிழிந்ததில் மேற்படி உண்டையுங் கோரோசனையும் உரைத்து திரிகடுகு வெதுப்பி பொடித்த தூளுங் கலந்து கொடுக்கத் தீரும்.

இரத்தகணமூலத்திற்கு

சாதிக்காயும் புளியவித்தின் மேற்றோடும் மேற்படி உண்டையு. மோர்நிரையாய்ப் பொடித்து வில்வப்பழச் சதைக்குள் வைத்து மூன்றுநாட் கொடுக்கத்திரும்.

கணக்காய்ச்சலுக்கு

தூதுளை கண்டங்கத்திரி ஆடாதோடை செம்முள்ளி விஷ்ணுகாந்தி சங்கு இண்டு சடைச்சி துளசி இவைகளினிலைகளை வகைக்கு ஒருபிடி வீதம் இடித்து அதற்குள் ஒருவிராகனிடை ஓமத்தை முடிந்துவைத்து பிட்டவியலாய விழ்த்துச் சாறு பிழிந்ததில் ஓமத்தை யரைத்துக் கலக்கிக் கொடுக்கத் தீரும்.

குளிர்சுரத்திற்கு

புரசிலையும் அதின்பட்டையும் கற்றாழஞ்சோறுந் தட்டிச் சாறுபிழிந்து ஒருகரண்டிவீதங் கொடுக்கத்திரும்.

கணக்காச்சல் மாறலுக்கு

அதிமதுரம் லவங்கம் ஏலம் சண்பகமொக்கு கோஷ்டம் சுக்கு சீரகம் முத்தக்காசு வறுத்திடித்து வடிகட்டிச் சர்க்கரை கலந்து அருந்த கணச்சுரம் மாறற்சுரந் தீரும்.

கணக்காச்சல் மயக்கத்திற்கு

புளி, வேம்பு, 'மா, நெல்லி, நாரத்தை, நுணா தகரை, நிம்பம் இவைகளினீர்க்கு வல்லாரை, பழம்பாசி, சிறுபுள்ளடி, முத்தம், ஈருள்ளி, அத்தி, சிற்றாமுட்டி, பேராமுட்டி, மிளகு, தக்காளி, முசுமுசுக்கை விஷ்ணுகாந்தி, நரி பயற்றங்கொடி, பற்பாடகம், மூக்கொற்றி அம்மான் பச்சரிசி சீந்தில், சுருஞ்சீரகம், நற்சீரகம், சுக்கு, வெந்தயம் வகைக்குப்பலம் 1/4, வறுத்துக் கஷாயஞ்செய்து கலங்கொம்பு கோஷ்டம் வகைக்கொரு பணவிடையா யரைத்துக் கலக்கி கொடுக்கத்திரும்.

கணபாண்டு, கணசுரம், அஸ்திவெட்டை, இருமல், இரத்தம் இவைகட்கு

ஆவரை, சரக்கொன்றை, விஷ்ணுகரந்தை, நிலக்குமிழ் இவைகளின்வேர் சிறு அம்மான் பச்சரிசி, ஏலம், நற்சீரகம், நெரிஞ்சி வகைக்குப்பலம் -1/4, இடித்தரைத்து ஒருபிடி விளக்கெண்ணெயிற் போட்டுப் பதமாய்க் காய்ச்சிக் கொடுக்கத் தீரும்.

காழிச்சல் தோஷத்திற்கு

உப்பிலிப்பூடை நறுக்கி ஆவிநெய்யிற்போட்டு வெயிலில் நாலுசாமம் வைத்துபின் குழந்தைகட்குக் கொடுக்கத் தீரும்.

காச்சல் அதிசாரம் சுவாசகாசத்திற்கு

அவுரிவேர், நெற்பொரி, சடாமாஞ்சி, அதிமதுரம், சமனாய்ப்பொடித்துச் சர்க்கரை தேன்விட்டு மத்தித்துக் கொடுக்கக் காச்சல்தீரும். அதிவிடையம் பொடித்துத் தேனில் கொடுக்க அதிசார சுவாசந் தீரும்.

ஆமசுரமாறலுக்கு

வேம்பு, இலுப்பை, மாவிலிங்கு, பாவட்டை, முருங்கை, நுணா இவைகளினீர்க்கு, வேலிப்பருத்தி தைவேளை சாரணை இவைகளின் வேர் பேய்ப்பாச்சோற்றி வகைக்கொருபிடி வறுத்து இருநாழிநீரிற் போட்டு திப்பிலி, மிளகு, ஆமையோடு, சுக்கு, வசம்பு, ஓமம், ஓர்நிறையாய் முடிந்துப் போட்டு வற்றக் காய்ச்சி அதில் மேற்படி மருந்தை வைத்துக் கொடுக்கத் தீரும்.

ஆமங்குளிர் சுரங்கடுப்புக்கு

கச்சந்தராய், பொன்னாங்காணி, சாரணை யிவைகளின் வேர்களை யோர்நிரையாய் உள்ளித்தயிலத்தா லரைத்து ஒரு கழஞ்சுவீதங் கொடுக்கத் தீரும்.

விக்கல் வாந்தி சுரம் இருமலுக்கு

கண்டங்கத்திரி வித்து அமுக்குறா திப்பிலி இவை சமன் பொடித்துக் கொடுக்கத் தீரும்.

சீதசுரத்திற்கு

கண்டங்கத்திரி சீந்தி தாமரை வளையம் இவைகளை கஷாயம் செய்து அதில் சுக்கு முத்தக்காசு ஓர் நிரையாய்ப் பொடித்து தூவிக் கொடுக்கத் தீரும்.

சுரம் இருமல் சீதசுரத்திற்கு

சித்திரமூலம், தூதுளை, கண்டங்கத்திரிவேர். கோஷ்டம், சிங்கி, முசுமுசுக்கை, முள்ளி, அரத்தை, திரிகடுகு, கஷாயம் வைத்து ஆறுபோதருந்தத் தீரும்.

சீதம் விஷசுரத்திற்கு

சுக்கு, மிளகு, திப்பிலி, வசம்பு தட்டி யொருபடி நீரிற் போட்டு எட்டொன்றாய் வற்றவைத்து தேன்விட்டுக் கொள்ளத் தீரும்.

சுரத்திற்கு ஏலாதிமாத்திரை

கோரோசனை விராகனிடை -3, அதிமதுரம், கோஷ்டம், இந்துப்பு, இலுப்பைக் கொட்டை, சாஸ்திரவேதி, பெருஞ்சீரகம், கருஞ்சீரகம் வகைக்கு விராகனிடை -1, குமரிச்சாற்றிலும, முலைப்பாலிலும் மைப்போலாட்டிக் குன்றிபோல் உண்டைசெய்து முபைப்பாலிற் கொடுக்கத்திரும்.

சுரம் வரட்கணம் இரத்தகணம் குழித்தோஷம் சவலைக்கு

கற்றாழைச்சாறு, விஷ்ணுகாந்திச்சாறு, இளநீர், ஆவின் பால்வகைக்குப்படி -1, நிம்பச்சாறு படி -1/2, சிற்றாமணக்கெண்ணெய் படி -3, ஒன்றாய்க் கலந்து சந்தனம் கணப்பூடு சிங்கி வகைக்குப்பலம்-1, சண்பகப்பூ பலம் -1/2, பச்சை பூலாங்கிழங்கு ஏலம் லாமிச்சு வெட்டிவேர் நன்னாரி சாதிக்காய்பத்திரி, கொத்தமல்லி, மதுரம், கோஷ்டம், கடுகுரோகணி, கிராம்பு, முத்தக்காசு, சன்னலவங்கம், கருஞ்சீரகம், நற்சீரகம், சிறுநாகப்பூ வகைக்கு விராகனிடை -1, அரைத்து எண்ணெயிற்கலந்து பதமாய்க் காய்ச்சி காசிடை இருவேளை கொடுத்து வரத்திரும்.

பழஞ்சுரத்திற்கு

தூதுளை, காஞ்சொரிவேர், சீந்தில், பற்பாடகம், நொச்சி, பேராமுட்டி, சிற்றாமுட்டி, கடுக்காய் நறுக்கிப்போட்டு கஷாயம் வைத்துத் திப்பிலிபொடித்துத் தூவிக் கொடுக்கத்திரும்.

பழஞ்சுரம் விடாச்சுரம் விஷதோஷம் சன்னிக்கு

ஏலம், கிராம்பு, முத்தக்காசு, மதுரம், வெட்டிவேர், லாமிச்சம்வேர், கடுகு, சுக்கு கொடிமுந்திரிப்பழம், கோரோசனை, நன்னாரி, நிலப்பனங்கிழங்கு, தாளிசப்பத்திரி, சடாமாஞ்சி, சந்தனம், இலுப்பைப்பூ, தேவதாரம், திப்பிலி, கடுகுரோகணி வகைக்குக் கழஞ்சு -1/4, கல்வத்திற் பொடித்துச் செவ்விள நீரிலும் முலைப்பாலிலும் நாலுசாமமாட்டிக் குன்றிபோல் உண்டைசெய்து நிழலில் உலர்த்தி

முலைப்பாலிற் கொடுக்கப் பழஞ்சுரம் விடாச்சுரம் நீங்கும் முதியார் கூந்தற் கஷாயத்திலிட சன்னி விஷதோஷம் ஆமசுரம் கணச்சுரந்தீரும்.

அதிசாரசுரம் காச்சல் சுவாசம் வாந்தி சுரதாபம் விக்கல் தாகத்திற்கு

மான்கொம்பு, திப்பிலி, அதிவிடையம், சமனாய் பொடித்துத் தேனிற்கொடுக்கச் சுரம் காசம் வாந்திதீரும்.

ஆல் மா நாவல் இவைகளின் தளிரை நறுக்கிக் கஷாயம் வைத்துக் கொடுக்கச் சுரம், தாகம், விக்கல், அதிசாரந்தீரும்.

பித்தசுரம், தாபசுரம், ப்ழவெதுப்புக்கு மேற்பூசும் எண்ணெய்

பசுவினெய் படி -1, மேற்படி பால் -2, நல்லெண்ணெய்படி -6, பெருங்குரும்பை, மதுரம், நன்னாரி, கருவேலிலை, கடுகு ரோகணி, செவ்வள்ளிக் கொடி, அமுக்குறாவேர், மரமஞ்சள், சந்தனம், சுக்கு, காசுக்கட்டி, அரக்கு, கோஷ்டம் வகைக்குக் கழஞ்சு -1, அரைத்து ஒன்றாய்க் கலந்து காய்ச்சி சிரசிலும் உடம்பிலும் பூச சூரியனைக் கண்ட பனிபோற் பறந்திடும்.

கணக்காச்சலுக்குக் கஷாயம்

வெப்பூலா வில்வம் சிற்றாமுட்டி விஷ்ணுகரந்தி, நன்னாரி இவைகளின்வேர் வகைக்குப்பலம் -5, மிளகு பலம் -1/2. இருபங்குசெய்து இரண்டுபடி தண்ணீரில் ஒருபங்கு தூட்போட்டு வற்றவைத்து ஐந்துபோது கொடுக்கத்தீரும்.

சகலசுரங்களுக்குப் பச்சைகற்பூர மாத்திரை

பச்சைகற்பூரம் லவங்கப்பட்டை, சாதிக்காய் வகைக்குக் கழஞ்சு -2, வாளம் ஆறுகளஞ்சு, குமரிச்சாறா லரைத்து உளுந்துப்பிரமாணம் உண்டைசெய்து உலர்த்தி சர்க்கரையில் ஒருகுளிகையில் மூன்றேமுக்கால் நாழிகையில் விரோசனமாகி சுரந்தீரும்.

குளிர்சுரத்திற்கு

மேற்படி மாத்திரையை முன்னாடிக்கொடுத்து அப்பால் குப்பைமேனியிலை, கொடுவேலியிலை, மிளகு சமனாய் நிறுத்து விழுதுபட அரைத்துக் கொடுக்கத்தீரும்.

சகலசுரத்திற்கு மாத்திரை

ஆடுதின்னாப்பாளை, வேர்ப்பட்டையை நிழலிலுலர்த்தி கருவாப்பட்டையைச் சமன்கூட்டிப் பொடித்து வஸ்திரகாயஞ்செய்து எலுமிச்சம் பழச்சாறு விட்டாட்டிப் பருத்திக் கொட்டைப் பிரமாணம் உண்டைசெய்து அனுபானத்திற் கொடுக்கச் சகலசுரமும் விஷமுந்தீரும்

விஷ்ணுகரந்தி, சுக்கு, கடுக்காய், இரண்டு, வாலுழுவை ஓர்நிரையாய்க் கஷர்யஞ்செய்து சூரணித்தாவது அதிலிந்த மாத்திரையை கொடுக்கச் சகலசுரமுந்தீரும்.

சுரத்திற்கு ஆகாப்பதார்த்தங்கள்

பால், நெய், இளநீர், தயிர், புளிப்பு, கடுகு, பச்சைமீன், இறச்சி கோழி, தேங்காய், மாங்காய், பருப்பு, முட்டை, சந்தனம், புணுகு, பயறு அவல், பொரிகடலை, மஞ்சள்வாடை, பழங்கரி, பழஞ்சோறு, புணர்ச்சி இவைகளை யனுசரித்தால் சன்னிதோன்றி மரணஞ்சம்பவிக்கும்.

சன்னிவகுப்பு - மாந்தசன்னிகுணம்.

மாந்தத்தின் பேரிற் சன்னிதோன்றிடிற் சுரம் மயக்கம் தாகங்காணும் நாவு முள்ளுப்போலிருக்கும் கண்தாழும் புத்தி கலங்கும்.

வேறு

குழந்தை ஓயாதலறும் வாயாற் பிதற்றும் ஒரு கண் திறந்து ஒருகண்ணை உருட்டி விழித்துப் பார்த்தழும் ஊசிபோற் கழுத்து நேர்ந்து உடம்பெல்லாம் நரம்பு தோன்றும் பாசிபோல் விழி பசக்கும்.

நிவர்த்தி

கஞ்சா ஊமத்தை கச்சந்தறாய் இவைகளின்வேர் கோரக்கிழங்கு சமனாய் வேப்பெண்ணைவிட்டு வறுத்துப் பொடித்து நெருப்பில் போட்டுப் புகைகாட்டத்தீரும் வெள்ளை வேர் உததாமணியின்வேர் மாவிலிங்கம்பட்டை முருங்கைப்பட்டை வகைக்கொருபலம் ஒன்றாயிடித்துச் சாறுபிழிந்து முறித்துச் சூடாற்றி அதில் திப்பிலி மிளகு சுக்கு பொடித்துப் போட்டு நவலோக பூபதிமாத்திரை இழைத்துக் கொடுககத் தீரும் இச்சாபத்தியம்.

ஆமஜன்னியின்குணம்

குழந்தை முலையுண்ணாதழும் கண்விழயாது மயங்கும் முகம்வேறுபடும் பற்பல வலியுண்டாகும் குரல்கம்மும் மலங்கட்டி சுரங்காயும் தாகிக்கும் வயிறூதும் நெற்றி விழிக்கும் மயக்கம் காணும்.

நிவர்த்தி

கடுக்காய், கடுகுரோகணி, சிவதை திரிகடுகு ஓர் நிரையாயிடித்துக் கியாழஞ்செய்து கொடுக்கத்தீரும்.

கன்னிக்கோழி முட்டைத் தயிலம் வேப்பெண்ணெய் சமன்கலந்து உள்ளுக்குக் கொடுத்து மேலிலும் பூசத்தீரும்.

சாரணை, மூக்குரட்டை, பொடுதலை, திரிகடுகு, நாய்துளசி, சீரகம சமனாய் நறுக்கிப்போட்டுக் கியாழஞ்செய்து கொடுக்கத் தீரும்.

ஆமணக்கெண்ணெய், இலுப்பையெண்ணெய், நல்லெண்ணெய், வேப்பெண்ணெய் சமனாய்க்கலந்து அதிற் கொடுவேலி சங்கு எருக்கு முடக்கொத்தான் இவைகளின் வேர்ப்பட்டைகளை ஓர்நிறையாய் நறுக்கிப்போட்டுக் காய்ச்சி அதற்கு நிகர் வெள்ளுள்ளித்தயிலமும் அண்டத்தயிலமும் கலந்து மேலிற் றுவாலைவிடத் தீரும்.

கோராம ஜன்னிக்குணம்

வாயுமிகும் உடம்பு தீப்போறகாயும் சதைகுலுங்கி வலிக்கும் விழி கால்கைகள் பதைக்கும் வாதநீர் தாளிலிறங்கும்.

நிவர்த்தி

கும்மட்டிக்காய்ச்சாறு நூறாண்டு சென்ற வேப்பம் பட்டைக் கியாழம் விளக்கெண்ணெய் வகைக்குப்படி -1, ஒன்றாய்க் கலந்து அதில் வெந்தோன்றிக்கிழங்கு, கருடக்கிழங்கு நீர்முள்ளி, சிவனார்வேம்பு தவசிமுருங்கை, வெள்ளைசாரணை, முடக்கொத்தான் இவைகளின் வேர் ஏலம், சீரகம், கருஞ்சீரகம், கடுகுரோகணி, பெருங்காயம் வகைக்குப் பலம -2, தட்டிப்போட்டுக் கோழிமுட்டைத் தயிலம் முசுறுமுட்டை வகைக்குப்பலம் -2, கூடச்சேர்த்து மெழுகுபதமாய்க்காய்ச்சி வடித்து காசிடை மூன்றுநாள் பத்தியமாய்க் கொடுக்கத் தீரும்.

தாந்திரிக ஜன்னிக்குணம்

குழந்தை முலையுண்ணாது சுரங்காயும் தாகங்காணும் மேனிபதைக்கும் அரைகுளிர்ந்திருக்கும் மூர்ச்சைகாணும்.

நிவர்த்தி

வேளை ஊமத்தை கஞ்சா முருங்கை சிந்தி இவைகளின் வேர் வெள்ளுள்ளி வசம்பு மயிலிறகு ஓர் நிறையாய்த் தட்டிக் கம்பிளியிற்சுத்தி வேப்பெண்ணெயிற் றுவைத்துத் தீயிற் கொளுத்தி அவித்துப் புகைகாட்டத்தீரும்.

தீராஜன்னிக்குணம்

உடல் மஞ்சணிக்கும் குழந்தை முலையுண்ணாது பெருமூச்சிடும் கண் நாக்கு புருவம் கைகால் கோணவலக்கும் விழி மேல் நோக்கும்

சகலமாந்தஜன்னிக்கு

சிறுகிளாவிலை, வெள்ளைப்பூண்டு, வசம்பு, ஓமம், சமனாயிடித்துச் சாறுவாங்கி மூன்றுநாள் உள்ளுக்குக் கொடுத்து மேலிலும் பூசத் தீரும்.

நல்லெண்ணெய்படி -1/2, முருங்கைப்பட்டைச் சாறுபடி -1, இவைகளைக் கலந்ததில் வெள்ளைப்பூடு பலம் -1, வசம்பு சுட்டகரி பலம் -1/4, கூடப்போட்டுக் காய்ச்சிக் கொடுக்கத் தீரும்.

தோஷஜன்னி, மாந்தஜன்னி, பித்தசுரம் வாந்திக்கு •

கஸ்தூரி விராகனிடை -1, குங்குமப்பூ விராகனிடை -2, கோரோசனை விராகனிடை -2, முலைப்பால்விட்டு அரைத்துக் குன்றியிடை யுண்டைசெய்து கொடுக்கத்தீரும்.

மாந்தகணஜன்னிக்கு

மாசிக்காய் திப்பிலி கோரோசனம் கோஷ்டம் கருஞ்சீரகம் அக்கிராகாரம் சமனாய் முலைப்பால்விட்டு அரைத்துக் குன்றிபோலுண்டை செய்து மேற்படி பாலிற் கொடுக்கத் தீரும்.

மாந்தகணஜன்னி பலஜன்னிக்கு

ஏலம், லவங்கம், அதிமதுரம், வெட்டிவேர், சுக்கு, நன்னாரி, முந்திரிப்பழம், பேரீந்தின்பழம், லாமிச்சம்வேர், கோரோசனை, தாளிசப்பத்தரி, நிலைப்பனங்கிழங்கு, சடாமாஞ்சி, சந்தனம், தேவதாரம், திப்பிலி, இலுப்பைப்பூ, கடுகு ரோகணி வகைக்கு விராகனிடை -1, தண்ணீர்விட்டு நன்றாயரைத்துக் குன்றிப் பிரமாணம் உண்டைசெய்து நிழலில் உலர்த்தி முலைப்பாலிற் கொடுக்க மாந்தகணந்தீரும் முதியார் கூந்தற் கியாழத்திற் சகல சன்னியுந் தீரும்.

ஜன்னிசுரம் கபத்திற்கு

வேப்பெண்ணெய் படி -1/2, சங்கிலைச்சாறு, பாவட்டைச்சாறு, முசுறுமுட்டை வகைக்குப்படி -3/4, ஒன்றாய்க் கலந்து அதில் சுக்கு, திப்பிலி வசம்பு, மிளகு, நற்சீரகம், கருஞ்சீரகம், கஸ்தூரிமஞ்சள், வெள்ளைப்பூண்டு, வகைக்கு விராகனிடை -1, பொடித்துக் கலந்து மெழுகுபதமாய்ச் காய்ச்சி வடித்து ஒரு துட்டிடை கொடுத்து வரத்தீரும் பத்தியம் வெந்நீர் சாதம் சாப்பிடவும்.

வேப்பெண்ணெய் படி - 1/2, குட்டிவிளா, துதுவளை, நாய்வேளை இவைகளின்வேர் சீரகம் கஸ்தூரி மஞ்சள், வெண்காயம், சித்தரத்தை மரமஞ்சள் வகைக்கு விராகனிடை -2, நறுக்கிப்போட்டுக் காய்ச்சி யொருகரண்டி வீதங் கொள்ளத் தீரும்.

விஷஜன்னி, குளிர்ஜன்னி, சுரம் விக்கலுக்கு

மஞ்சள், சாதிக்காய், திரிகடுகு, வசம்பு, கடுகுரோகணி, ஏலம், நாபிக்கிழங்கு வகைக்கு விராகனிடை -1, எலுமிச்சம் பழச்சாற்றா லொருநாளரைத்துப் பயறுபோ லுண்டை செய்து மாசிப்பத்திரிக் கியாழத்திலிடத் தீரும்.

விஷதோஷஜன்னி மாந்தம் பித்தசுரம் வாந்திக்கு

கஸ்தூரி கழஞ்சு -1, குங்குமப்பூ கழஞ்சு -2, கோரோசனை கழஞ்சு-3, முலைப்பாலில் ஒரு சாமமரைத்துக் குன்றி போலுண்டை செய்து நிழலிலுலர்த்தி ஒரு உண்டை முலைப் பாலிலிடத்தீரும்.

வலிப்பின்வகுப்பு

மாந்தவலிப்பின்குணம்

தின்பண்டங்களினால் மாந்தம்பற்றிப் பலவித வலிப்பு மயக்கம் இசிப்பு பற்கடி பற்கிட்டல்காணும் அன்னம் தண்ணீர் செல்லாது.

நிவர்த்தி

குதிரைநகம், மயிலிறகு, மிளகு, வசம்பு, சுக்கு, கடுகு, பேயத்தி, அழிஞ்சில், செம்மறி யாட்டுக்கொம்பு ஓர்நிறையாய் பொடித்துக் கமபிளியாற் சுற்றி வேப்பெண்ணையிற் றுவைத்துப் புகைக்கத்தீரும்.

குதிரை வாலிசமூலம், சிறுபுள்ளடி சமூலம், தைவேளை சமூலம், வெள்வேல் விடத்திலை முருங்கை இவைகளின் பட்டை வகைக்குப் பலம-2, ஆமையோடு பூடு, வசம்பு வகைக்குப்பலம் -1, இவைகளை

நறுக்கி ஒருபடி விளக்கெண்ணெயிற் போட்டுக் காய்ச்சி ஒருதுட்டிடை உள்ளுக்குக் கொடுத்து மேலிலும் பூசத்தீரும்.

மாந்தவலிப்பு காக்கைவலிப்புக்கு

கொடுவேலி சங்கு எருக்கு இவைகளின் வேர்ப்படை குங்குமப்பூ வகைக்கு விராகனிடை -1, மை போலரைத்து வெந்நீரிற் கலக்கி வடிகட்டிக் கொடுக்கத்தீரும்.

காக்கை வலிப்புக்கு

கொழுஞ்சி, தழுதாழை, நிலவேம்பு, மிளகரணை இவைகளின்வேர், வசம்பு,. திப்பிலி, மூலம், காக்கையின் வித்து, கொழுப்பு, முட்டை, இவைகளைப் பொடித்து விளக்கெண்ணெயிற் போட்டுக் காய்ச்சி வறுத்துப் பொடித்த ஓமம் வெண்காரம், உள்ளி நறுக்கிச் சேர்த்திறக்கி ஒருகரண்டி வீதம் ஆறுவேளை கொடுக்கத்தீரும்.

சளி, இருமல், கக்கல், காச்சல், விஷசுரம், விச்சுழி, வலிப்பு, ஜன்னி தோஷம், வயிற்றுப் பொருமலுக்கு

ஜாதிக்காய், கிராம்பு, ஓமம், கரியசீரகம், சுக்கு, திப்பிலி, கஸ்தூரிமஞ்சள், வசம்பு, காயம், வெள்ளைக் காக்கணான் வேர்ப்பட்டை, சமன்கூட்டி வெந்நீராலரைத்துச் சுண்டைக்காய்ப் பிரமாணம் உண்டைசெய்து உலர்த்தி மேற்படி நீரிற் குழந்தைகட்கு மூன்றுநாட் கொடுக்கத் தீரும்.

பேதிய திகப்பட்டால் வசம்பைச்சுட்டு நீரிற் கலக்கிக் கொடுக்கத் தீரும்.

பிறஇசிவுக்கு

தும்பை, துளசி, இஞ்சி இவைகளினிலைகளைச் சரியிடையா நிறுத்தி அரைத்துச் சிற்றாமணக்கிலையில் வைத்துச் சுருட்டி இளகவெதுப்பிச் சாறுபிழிந்து காசளவாய் மூன்றுவேளை கொடுக்கத் தீரும்.

கழிச்சல்வகுப்பு

கழிச்சல் தோஷத்திற்கு

உப்பிலியின் பூண்டை நறுக்கி ஆவின்நெய்யிற் போட்டு நாலுஜாமம் வெயிலில் வைத்துக் கொடுக்கத் தீரும்.

மாந்தக்கழிச்சல் மாந்தஜன்னிக்கு

கனலிற் சட்டியைக் காயவைத்து ஒருசிரங்கை உப்பைப் போட்டு சாம்பலாக்கிக் கொட்டித் துடைத்துப்போட்டு வசம்பைப் போட்டு கருகித் தீப்பற்றி வரும்போது ஒருபிடி வேளையை மூன்று அறுப்பாய்ச் செய்துப்போட்டுப் பொன்னிறமாய் வறுத்துப் பின்பு அரைசெரங்கை நீர்தெளித்துச் சுண்டமட்டும் வறுத்தப் பின்னும் இந்தப்படி இரண்டு தபா நீர்தெளித்துச் சுண்டவறுத்ததின்பேரில் ஒருபடி நீர்விட்டு எட்டொன்றாய் வற்றக்காய்ச்சி இறக்கி ஒருசங்கு கொடுக்கத்தீரும்.

கழிச்சலுக்கு

கோரோசனை, களிப்பாக்கு, சீரகம், காசுக்கட்டி இவைகளைச் சமமாய் எலுமிச்சம் பழச்சாறு விட்டரைத்துப் பாக்குப் பிரமாணம் முலைப்பாலிற் கரைத்துக் கொடுக்க கழிச்சல் உடனே நிற்கும்.

தைவேளையிலை வசம்பு பூடு இவைகளைத்தட்டி வெதுப்பி சாறுபிழிந்து கொடுக்கத் தீரும்.

ஈருள்ளி வேலிப்பருத்தியிலை முடக்கொத்தானிலை இவைகளைச் சமமாய் வெதுப்பிச்சாறுபிழிந்து ஒருதுட்டிடை கொடுக்கத்தீரும்.

மாவிலிங்கு, சங்கு, செம்முள்ளி, வேலிப்பருத்தி, பொடுதலை வேளை இவைகளை ஓர் நிறையாய் எலுமிச்சங்காய்ப் பிரமாணம் எருமை வெண்ணெயில் வேகவைத்துக் கொடுக்க நிற்கும் கீழ்க்காய் நெல்லிவேரை ஒரு கொட்டைப் பாக்கு பிரமாணம் அரைத்து முலைப்பாலிற் கொடுக்கத் தீரும்.

பால்போற்கழிவதற்கு

பிரண்டையிலை -5, பெருந்தும்பையிலை -5, இவைகளை கரண்டியில் வெதுப்பி முலைப்பால்விட்டுத் தட்டிச்சாறு பிழிந்து அதில் கோரோசனை கருஞ்சீரகம் கஸ்தூரிமஞ்சள் வகைக்கிரண்டு நெல்லிடை பொடித்துப்போட்டு மூன்று போது கொடுக்கத்தீரும்.

கழிச்சல் சுரத்திற்கு

அதிவிடையம் சாதிக்காய் சாதிப்பத்திரி அபின் கடுக்காய் தான்றிக்காய் மிளகு நற்சீரகம் வகைக்கு விராகனிடை -1/2, ஏலம் விராகனிடை -1, மாதுளந் துளிரும் அத்திப்பட்டையும் கியாழஞ்செய்து அதனால் மேற்படி மருந்துகளை அரைத்து அடைபோற்றட்டி அரசிலையிற்கட்டி சட்டியில் வைத்து மேற்படி கியாழத்தை கொஞ்சங்

கொஞ்சமாய் வார்த்து வேகவைத்து அப்பால் இந்தப்படியே பத்துதபா மேற்படி மருந்தை மைப்போலரைத்துக் குன்றிப்பிரமாணம் உண்டைசெய்து வடிகட்டின எருமைத்தயிரிற் கொடுக்க கழிச்சல் தீரும் வெந்நீரிற்கொடுக்கச் சுரம்நீங்கும்.

கழிகணம் சுரம்வரட்சிக்கு

இலந்தை நாரத்தை புளிகணப்பூண்டு நெல்லி இவைகளி னீர்க்குகளைச் சமனாய்க் கியாழஞ்செய்து கொடுக்கத் தீரும்.

கழிச்சல் இருமலுக்கு

ஆடுதின்னாப்பாளை சமூலம், சிறுதேக்கு, அதிமதுரம், வசம்பு, சுக்கு, மிளகு, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், அதிவிடையம், கோஷ்டம், முத்தக்காசு வகைக்குக் கழஞ்சு *-1* நறுக்கி இம்பூரற்சாறு ஆவிநெய் வகைக்குப் படி *-1*, ஒன்றாய்க் கலந்து காய்ச்சிக் கொடுக்கத்தீரும.

கழிச்சல் வாந்திக்கு

நெல்லி, மா, அத்தி, அரசு இவைகளின் பட்டை பருத்திப்பருப்பு மேற்படி பிஞ்சு அத்தித்தளிர் வகைக்கு விராகனிடை *-1*, நறுக்கிக் கஷாயஞ்செய்து கொடுக்கத்தீரும்.

கழிச்சல் இருமல் வாந்திக்கு

வேலிப்பருத்திச்சாறு, எருமைவெண்ணெய் வகைக்குப் படி *-1/4*, கருஞ்சீரகம், கழஞ்சு *-1*, அரைத்துப் போட்டுக் கலந்து காய்ச்சிக் கொடுக்கத் தீரும்.

மாந்தக் கழிச்சலின் குணம்

வாந்தி, பிராந்தி, மூர்ச்சை, மேனியில் வெதுப்பு கால்கையிற் குளிர்ச்சி வலிகாணும் பலவிதமாய் மலங்கழியும் வாயுலரும் குரல்கம்மும்.

நிவர்த்தி

வேளை, நாய்வேளை, வேலிப்பருத்தி, குப்பைமேனி இவைகளினிலை அக்த்திப்பழுப்பு, வசம்பு, வெள்ளுள்ளி இவைகளைத் தட்டிச்சாறு வாங்கி உள்ளுக்குங் கொடுத்து மேலிற் றுவாலையிடத்தீரும்.

கணக்கழிச்சலின் குணம்

சீதமாயும் மலமாயுங் கெட்டபாலும் கரித்தண்ணீர் போலும் பிரவிர்த்தியாகும் கைகால்குளிரும் காதடைக்கும் உடல் வெதும்பும்.

நிவர்த்தி

ஈருள்ளி -10; கருவேலீர்க்கு ஒருபிடி, சீரகம் விராகனிடை -1, வெந்தயம் விராகனிடை -2, இவைகளை வறுத்துக் கஷாயம் வைத்துக் கொடுக்கத்தீரும்.

மூக்குரட்டை, சாரணை, முடக்கொத்தான், முத்தெருக்கஞ்செவி, ஓரிதழ்தாமரை இவைகளின் சாறுபடி -1, செப்பு நெரிஞ்சிச்சாறு, விளக்கெண்ணெய் வகைக்குபடி -1, மயிலிறகு பலம் -1, இவைகளை ஒன்றாய்க்கலந்து காய்ச்சிக் கொடுக்கத்தீரும்.

ஆமக்கழிச்சலின்குணம்

பாலெதிரெடுக்கும் வயிறிரையும் இரத்தம்விழும் சுரங்காயும் குரல்கம்மும் கால் கை குளிர்ந்திருக்கும்.

நிவர்த்தி

சோற்றிலவித்துச் சுத்திசெய்து சாதிக்காய் -1, பூரம் விராகன் -1, இவைகளை ஒருபலச் சிற்றாமணக்கெண்ணெயில் அரைத்துக் கலக்கிக்கொண்டு வேளைக்கு ஒருகரண்டி விதங் கொடுக்கத்தீரும்.

சலக்கழிச்சலுக்கு

வெண்குன்றிப்பருப்பு, புளியவிரைத்தோல், அத்திப்பால் எருமைவெண்ணெய் வகைக்குக் கழஞ்சு -1, மைப்போலரைத்துக் கொடுக்கத்தீரும்.

வெப்புக் கழிச்சலுக்கு

அதிமதுரம், அதிவிடையம், சாதிக்காய், மாதுளம்பூ, சீரகஞ் சமன்கூட்டிப் புளியாரைச் சாற்றிலரைத்துத் தூதுளங் காய்ப்போல் உண்டைசெய்து மாதுளம் பழச்சாற்றில் கரைத்துக் கொடுக்கத்தீரும்.

ஐந்தாங்காண்டம்

முற்றிற்று

இனி ஆறாம்பாகம்.

உ

தேவிசகாயம்

அனுபோகவயித்திய
பிரம்மரகசியம்

ஆறாவது காண்டம்

விநாயகர் துதி

அகரமென வறிவாகி யுலகமெங்கு
மமர்ந்தகா வுகரமக ரங்கடம்மாற்
பகரமொரு முதலாகி வேறுமாகிப்
பல்வேறு திருமேனி தரித்துக்கொண்டு
புகரில்பொரு ணான்தினையு மிடர்தீர்ந்தெய்தப்
போற்றுநறுக் கருட்கணை புரிந்தல்லார்க்கு
நிகரின்மறக் கருணைபுரிந் தாண்டுகொள்ளு
நிருமலனைக் கணபதியை நினைந்து வாழ்வாம்.

கண்டகாசமாத்திரை

சுத்திசெய்த ரசம்	பலம் 1	சுத்திசெய்த கந்தகம்	பலம் 1
சுத்திசெய்த வசநாவி	பலம் 1	மிளகு	பலம் 3

இவைகளைக் கல்வத்திலிட்டு கண்டங்கத்திரிப் பழச்சாற்றால் அரைத்து உலர்த்தவும் இவ்விதமாக மேற்படி சாற்றால் 2-தடவை அரைத்து உலர்த்தி -3 குன்றிமணி அளவாக மாத்திரைகளாக்கி ஒரு மாத்திரை வீதம் கொடுத்துவர அஜீர்ண ரோகங்கள் -6 பேதி இவைகள் அதிசீக்கிரத்தில் குணமாகும்.

மகாபயிரவமாத்திரை

சுத்திசெய்த மனோசிலை	விராகனிடை	5
” கல்நார்		5
சுத்திசெய்த தாளகம்	விராகனிடை	5
” பூரம்	விராகனிடை	5

இவைகளைச் சேர்த்துக் கல்வத்திலிட்டுக் கொடிக்கள்ளிப் பாலால் 3-சாமம் அரைத்து உலர்த்தி ஒருகுகையில் போட்டு மூடி 9

சீலைமண்செய்து குக்குட புடம்போட்டு எடுத்து பசும்பால், கொடிக்கள்ளிப்பால், எலுமிச்சம்பழச்சாறு, கற்றாழைச்சாறு, கரிப்பான்சாறு இவைகளில் முறையே ஒவ்வொரு ஜாம மரைத்து குன்றிமணி அளவாக மாத்திரைகளாக்கி ஒரு மாத்திரை வீதம் சர்க்கரையில் தினம் காலை மாலை ஒருமண்டலங் கொடுக்க மூலமுளை அற்றுப்போகும் மூலரோகம் (8)ம் குணமாகும்.

ரக்ஷாமணிமாத்திரை

சுத்திசெய்த	லிங்கம்	பலம்	2
சுத்திசெய்த	தாளகம்	பலம்	2
சுத்திசெய்த	மனோசிலை	பலம்	2
சுத்திசெய்த	வெங்காரம்	பலம்	2
சுத்திசெய்த	கருநாபி	பலம்	2
சுக்கு		பலம்	2
மிளகு		பலம்	2
திப்பிலி		பலம்	2

இவைகளைச் சேர்த்து கல்வத்திலிட்டு இஞ்சிச் சாற்றால் 4 ஜாமமரைத்து குன்றிமணி அளவாக மாத்திரைகளாக்கி உலர்த்தி தினம் 2-தடவை ஒரு மாத்திரை வீதம் சித்தரத்தைசாறு, இஞ்சிச்சாறு, முலைப்பால் இவைகளில் யெதிலாகிலும் கொடுக்க க்ஷயம் -4, சுவாசம் -5, காசம் -5, ஈளை, மந்தாரகாசம் சுரம் (64) முதலிய கடூரரோகங்கள் குணமாகும்.

மேகராஜாங்கமாத்திரை

சுத்திசெய்த	ரசம்	பலம்	2
சுத்திசெய்த	அரிதாரம்	பலம்	2
சுத்திசெய்த	மனோசிலை	பலம்	2
தேற்றான்விதை		பலம்	2
வெள்ளைக்குங்கிலியம்		பலம்	2
விளாம்பிசின்		பலம்	2

இவைகளைச் சேர்த்து சூரணித்து ஒரு துணியில் போட்டு முடித்து பச்சரிசிக் கழுநீரில் 3-நாள் ஊறவைத்தெடுத்து கல்வத்தில்போட்டு காடியைவிட்டு ஒரு சாமமரைத்து உளுந்தளவாக மாத்திரைகளாக்கி தினம் 1-2-மாத்திரை காலை மாலை மோரிலாவது தேனிலாவது 48-நாள் கொடுக்க மேகம்(20)ம், நீர்முள்ளிவிதை, முள்ளிவிதை முதலிய

அனுபானத்திலிட பிரமேகம் (21)ம், மேகஊரல், மேகத்தடிப்பு மேககாங்கை, மேகரணம் முதலிய மேகசம்பந்தமான சகல ரோகங்களும் குணமாகும்.

குலாந்தகமாத்திரை

சுத்திசெய்த அப்பிரேகப்பொடி	பலம்	3
சுத்திசெய்த காரீயம்	பலம்	1
சுத்திசெய்த வெள்ளீயம்	பலம்	1

இவைகளைச் சேர்த்து உருக்கி எடுத்து அதற்கு கால்பங்கு சுத்தி செய்தரசமும், ரசத்துக்கு இரட்டிப்பு கந்தகமும் சேர்த்து தைவேளைச் சாற்றால், ஒருஜாமம் அரைத்து உலர்த்தி காசிகுப்பியில் போட்டு வாய்மூடி 9-சீலைமண்செய்து ஒரு சட்டியில் மூன்று விரற்கடை மணலைக் கொட்டி அதின் மேல் குப்பியை வைத்து , பிறகு மணலால்மூடி ஒருஜாமம் கமலாக்கினியாய் எரித்தெடுத்து அதற்குச் சமமாய்க் கந்தகத்தைச் சேர்த்து கரிசாலைச் சாற்றால் ஒரு ஜாமம் அரைத்து பில்லைதட்டி வரராகல் புடம்போட்டு சிவக்காவிட்டால் அதைச் சிவப்பாகிறவரையில் கந்தகத்தைச் சேர்த்து மேற்படி சாற்றாலரைத்து மேற்புடம் போடவும். சிவந்தபிறகு அதற்கு பாதியிடை கட்டின லிங்கத்தைச் சேர்த்து முலைப்பாலால் அரைத்து சிறுபயறு அளவாக மாத்திரைகளாக்கி ஒரு மாத்திரை வீதம் தினம் 2-தடவை கொடுக்க பிரமேகம் -21, நீரிழிவு, பிரமியம் 20 மேகஊறல், மேகம் -26-ம் குணமாகும்.

சூடாமணிமாத்திரை

சுத்திசெய்த கெவுரிபாஷாணம்	விராகனிடை	7
சுத்திசெய்த ரசகற்பூரம்	விராகனிடை	7
,, கஞ்சா	விராகனிடை	7
கோரைக்கிழங்கு	விராகனிடை	7
வெடியுப்பு	விராகனிடை	7
கற்கடகசிங்கி	விராகனிடை	7
அதிமதுரம்	விராகனிடை	7
அக்கிராகாரம்	விராகனிடை	7

இவைகளைச் சேர்த்து எலுமிச்சம் பழச்சாற்றால் ஒரு ஜாமமும் இஞ்சிச் சாற்றில் 4-ஜாமமும், முலைப்பாலால் 2-ஜாமமும், அரைத்து சிறுபயறு அளவாக மாத்திரைகளாக்கி உலர்த்தி 1/2 முதல் 1-மாத்திரை தேனிலிட ஜன்னி-13, விஷ ஜன்னி தோஷம் வாதம் -80, முதலிய சகல கடூரரோகங்கள் தீரும்.

கஜகேசரிமாத்திரை

சுத்திசெய்த கெந்தகம்	பலம்	2
சுத்திசெய்த ரசம்	பலம்	1

இவ்விரண்டும் கல்வத்தில் இட்டு ஒருஜாமம் அரைத்து 3-பலம் சுத்திசெய்த தாம்பிரத்தால் குடுக்கை செய்து அதில் நிரப்பி குடுக்கின் வாயை தாம்பிரத்தால் மூடி ஒரு கலயத்தில் பாதிக்கு உப்பைக்கொட்டி அதின்மேல் இந்த குடுக்கை வைத்து அதில் உப்பை நிரையப் போட்டு மேல்கலயம் மூடி ஏழு சீலைமண் வலுவாய்செய்து கஜபுடம்போட்டு எடுத்து சூரணித்து வெற்றிலைச்சாற்றால் அரைத்து மாத்திரைகளாக்கி 1-2-குன்றுமணியிடை வீதம் கொடுத்து உடனே சுக்கு, காயம் மிளகு, திப்பிலி, வசம்பு இவைகளின் சூரணத்தில் ஒரு விராகனிடை ஜலத்தில் கரைத்துக் கொடுக்க மஹா உபத்திரவத்தைத் தருகின்ற சகல சூலைரோகங்கள் அதி சீக்கிரத்தில் குணமாகும்.

சந்திரோதயக்குளிகை

சுத்திசெய்த வெள்ளைப்பாஷாணம்	பலம்	1
சுத்திசெய்த ரசம்	பலம்	1

இவ்விரண்டும் கல்வத்திலிட்டு கொடிவேலிவேர் கஷாயத்தால் 5-ஜாமம் அரைத்து பில்லைதட்டி உலர்த்தி வச்சிரக்குகையில் போட்டு வாய்மூடி, 9-சீலைமண் செய்து உலர்ந்த தரையில் ஒருகுழியாக்கி அதில் பாதி மணலைப்போட்டு குகையை வைத்து மணலால் குழியைமூடி அதின் மேல் வாராகல் புடம் போட்டு எடுத்து அத்துடன் கால்பங்கு சுத்திசெய்த கருநாவியும், சுக்கு, மிளகு, திப்பிலி வகைக்கு 2-பலஞ்சேர்த்து நெருஞ்சி சின்னியிலை, முள்ளியிலை இவைகளின் சாற்றால் தனித்தனியே ஒரு ஜாம மரைத்து சிறுபயறு அளவாக மாத்திரைகளாக்கி நிழலில் உலர்த்தி ஒருமாத்திரை அனுபானத்திலிட சன்னி பாதசுரம் -13, விஷசுரம், தோஷம், வாதம் -80 முதலிய கடூரரோகங்கள் குணமாகும்.

அர்த்தனாரீஸ்வரக்குளிகை

சுத்திசெய்த தாளகம்	விராகனிடை	10
சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு	விராகனிடை	10
வாவிக்கல்	விராகனிடை	10

இவைகளைச் சேர்த்து கல்வத்திலிட்டு கவுதும்பை, நல்லதும்பை, பெருந்தும்பை இவைகளின் சாற்றால் வகைக்கு ஒருஜாம மரைத்து குன்றிமணி அளவாக மாத்திரைகளாக்கி ஒருமாத்திரை குளிர்சுரத்துக்கு மோரைமுரித்துத் தண்ணீரிலும், அதிசாரசுரத்துக்கு சுக்குக் கஷாயத்திலும, பழய சுரத்துக்கு பேய்ப்புடலிலும், சுக்கு சேர்ந்த கஷாயத்திலும், சிலேஷ்ம சுரத்துக்கும் இருமலுக்கும் தேன்கலந்த திப்பிலித் தூளிலும் தாபகரத்துக்கு வில்வவேரும், சுக்கும் சேர்ந்த கஷாயத்திலும், அஸ்திசுரத்துக்கு பசும்நெய்யிலும் வாதசுரத்துக்கு வாதமடக்கிக் கஷாயத்திலும், கொடுக்கக் குணமாகும், பத்தியம் புளி உப்பு தள்ளவும், பேதி அதிகமானால் மா, ஆல், இலுப்பை இவைகளின் கொழுந்தை ஜலத்திலிட்டுக் காய்ச்சிக் கொடுக்க பேதிநிற்கும்.

பயிரவமாத்திரை

சாபத்திரி	கிராம்பு
சன்னலவங்கப்பட்டை	சுக்கு
அக்கிராகாரம்	கட்டினலிங்கம்
திப்பிலி	சுத்தித்தகருநாவி

இவைகளைச் சமமாகச்சேர்த்து கல்வத்திலிட்டு வெற்றிலைச்சாறு, இஞ்சிச்சாறு இவைகளால் வகைக்கு ஒரு ஜாமமரைத்து குன்றிமணி அளவாக மாத்திரைகளாக்கி ஒருமாத்திரை வீதம் அனுபானத்திலிட இருமல் வாயு அதிசாரம் குன்மம் முதலியவைகள் குணமாகும்.

சங்குவடிமாத்திரை

திருகுகள்ளி	வாழை
எருக்கன்	ஆமணக்கு
புளி	புரசன்
நாயுருவி	

இவைகளின் சமூலத்தை தனித்தனி உலர்த்தி எரித்து சாம்பலாக்கி ஜலத்தில் கரைத்து வடித்து எரிக்க உப்பைக் கட்டும் அந்த உப்புகள்

வகைக்குப்பலம் -4, கல்லுப்பு, இந்துப்பு, சவுட்டுப்பு, வளையலுப்பு, வெடியுப்பு, வகைக்குப் பலம் -4, எவா க்ஷாரம், வெங்காரம், சத்திசாரம், சவுக்காரம் வகைக்குப்பலம் -1 1/4 .இவைகளை 4-பலம் வெள்ளை சங்குத் துண்டுகளை நெருப்பில் காய்ச்சி 8-சேர் எலுமிச்சம்பழச் சாற்றில் தேய்த்து இவ்விதமாய் சங்குத்துண்டுகள் பஸ்பமாகிக் கரைந்துவிடும் வரையில் காய்ச்சித் தேய்த்து அதில் மேற்படி உப்புகளையெல்லாம் சேர்த்து அத்துடன். சுக்கு பலம் -12, மிளகு பலம்-8, திப்பிலி பலம்-4, வறுத்த பெருங்காயம், கண்டத்திப்பிலி, சித்திரமூலம், ஓமம், சீரகம், சாதிக்காய், கிராம்பு, வகைக்குப் பலம்-2, ரசம், கந்தகம், கருநாவி, வெங்காரம், மனோசிலை வகைக்குப் பலம் -1, இவைகளில் சுத்திசெய்ய வேண்டியவைகளைச் சுத்திசெய்து சூரணித்துச் சேர்த்து அரைத்துப் பிறகு புளியாரைச்சாறு சேர் 2-விட்டு அரைத்து உளுந்து அளவாக மாத்திரைகளாக்கி தினம் 2-தடவை ஒரு மாத்திரை வீதம் கொடுக்க அஜீர்ணம் குன்மம் அக்கினிமந்தம் மகோதரம் உதரரோகங்கள் குணமாகும்.

காலாக்கினி மாத்திரை

ரசபஸ்பம்	விராகனிடை	9
கால்மல்	விராகனிடை	9
சுத்திசெய்தவெங்காரம்	விராகனிடை	9
சுத்திசெய்த மனோசிலை	விராகனிடை	9
சுத்திசெய்த அரிதாரம்	விராகனிடை	9
சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு	விராகனிடை	9
பெருங்காயம்	விராகனிடை	9
கடுகு	விராகனிடை	9
இந்துப்பு	விராகனிடை	9
திப்பிலி	விராகனிடை	9
கருஞ்சீரகம்	விராகனிடை	9

இவைகளைச் சேர்த்து கல்வத்தில் போட்டு எலுமிச்சம் பழச்சாற்றால் 2-ஜாமமரைத்து மிளகு அளவாக மாத்திரைகளாக்கி ஒரு மாத்திரை வீதம் சுக்குக் கியாழத்திற் கொடுக்க சுரம் 64-ம், சுக்கு, மிளகு கியாழத்திற் கொடுக்க குளிர்சுரமும், வெள்ளை வெங்காயச்சாற்றிற் கொடுக்க பாண்டு மகோதரம் சோகையும் இஞ்சிச்சாற்றில் கொடுக்க ஜன்னி 13-ம் கடுக்காய் கியாழத்திற் கொடுக்க இருமலும், எருமை நெய்யிற் கொடுக்க ரத்தமூலமும் தீரும்.

பிரகாசமாத்திரை

ரசபஸ்பம்	சுக்கு
ரசச்செந்தூரம்	கடுகுரோகணி
வெங்காரம்	குராசாணிஓமம்
லிங்கம்	கோஷ்டம்

வகைக்குப்பலம் *-1*, நேர்வாளப்பருப்பு பலம்*-16*, இவைகளை சுத்திசெய்து கல்வத்திலிட்டு விளாம்பிசின் ஜலத்தால் அரைத்துக் குன்றிமணி அளவாக மாத்திரைகளாக்கி *1-2*-மாத்திரை கொடுக்க வாத பித்த சிலேஷ்ம ரோகங்களைக் கண்டித்து செவ்வையாய் பேதியாகும் பேதி அதிகமானால் புளித்தமோரும் அன்னமும் சாப்பிடவும் அன்றியும் சுரம்*-64*, சன்னி*-10*, வாதம்*-10*, பித்தம்*-40*, கபசம்பந்தமான ரோகங்கள் முதலிய அனேக கடூரரோகங்களுக்கு குறைந்த அளவில் கொடுக்க ரோகங்கள் குணமாகும்.

பயிரவமாத்திரை

சுத்திசெய்த	கருநாவி	விராகனிடை	*9*
சுத்திசெய்த	லிங்கம்	விராகனிடை	*9*
சுத்திசெய்த	அரிதாரம்	விராகனிடை	*9*
சுத்திசெய்த	ரசகற்பூரம்	விராகனிடை	*9*
சுத்திசெய்த	கந்தகம்	விராகனிடை	*9*
சுத்திசெய்த	நேர்வாளப்பருப்பு	விராகனிடை	*9*

இவைகளைக் கல்வத்திலிட்டு சூரணித்து அத்துடன் ரசபஸ்பம் ரசச்செந்தூரம், சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தானிக்காய் நெல்லிமுள்ளி, கிராம்பு, ஏலம், சாதிப்பத்திரி, வகைக்குப்பலம்*-1*, சேர்த்து முலைப்பாலால் *2*-ஜாமமும் வேப்பங்கொட்டை, கற்றாழை கொன்றைப்பூ இவைகளின் சாற்றால் முறையே *3*-ஜாமம் அரைத்து உளுந்து அளவாக மாத்திரைகளாக்கி ஒரு மாத்திரை முலைப்பாலிலாவது தேனிலாவது கொடுக்கச் சன்னிபாதசுரம்*-13*, சுரம்*-64*, தோஷம், வாதம் *60*, பித்தம்*-40*, சிலேஷ்மம்*-20*, முதலிய அநேக பலமான,ரோகங்கள் குணமாகும்.

சூர்யரசாயனமாத்திரை

சுத்திசெய்த	ரசம்	பலம்	*1*
சுத்திசெய்த	கந்தகம்	பலம்	*1/2*

வகைக்குப்பலம் -4, கல்லுப்பு, இந்துப்பு, சவுட்டுப்பு, வளையலுப்பு, வெடியுப்பு, வகைக்குப் பலம் -4, எவா க்ஷாரம், வெங்காரம், சத்திசாரம், சவுக்காரம் வகைக்குப்பலம் -1 1/4 .இவைகளை 4-பலம் வெள்ளை சங்குத் துண்டுகளை நெருப்பில் காய்ச்சி 8-சேர் எலுமிச்சம்பழச் சாற்றில் தேய்த்து இவ்விதமாய் சங்குத்துண்டுகள் பஸ்பமாகிக் கரைந்துவிடும் வரையில் காய்ச்சித் தேய்த்து அதில் மேற்படி உப்புகளையெல்லாம் சேர்த்து அத்துடன். சுக்கு பலம் -12, மிளகு பலம்-8, திப்பிலி பலம்-4, வறுத்த பெருங்காயம், கண்டத்திப்பிலி, சித்திரமூலம், ஓமம், சீரகம், சாதிக்காய், கிராம்பு, வகைக்குப் பலம்-2, ரசம், கந்தகம், கருநாவி, வெங்காரம், மனோசிலை வகைக்குப் பலம் -1, இவைகளில் சுத்திசெய்ய வேண்டியவைகளைச் சுத்திசெய்து சூரணித்துச் சேர்த்து அரைத்துப் பிறகு புளியாரைச்சாறு சேர் 2-விட்டு அரைத்து உளுந்து அளவாக மாத்திரைகளாக்கி தினம் 2-தடவை ஒரு மாத்திரை வீதம் கொடுக்க அஜீர்ணம் குன்மம் அக்கினிமந்தம் மகோதரம் உதரரோகங்கள் குணமாகும்.

காலாக்கினி மாத்திரை

ரசபஸ்பம்	விராகனிடை	9
கால்மல்	விராகனிடை	9
சுத்திசெய்தவெங்காரம்	விராகனிடை	9
சுத்திசெய்த மனோசிலை	விராகனிடை	9
சுத்திசெய்த அரிதாரம்	விராகனிடை	9
சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு	விராகனிடை	9
பெருங்காயம்	விராகனிடை	9
கடுகு	விராகனிடை	9
இந்துப்பு	விராகனிடை	9
திப்பிலி	விராகனிடை	9
கருஞ்சீரகம்	விராகனிடை	9

இவைகளைச் சேர்த்து கல்வத்தில் போட்டு எலுமிச்சம் பழச்சாற்றால் 2-ஜாமமரைத்து மிளகு அளவாக மாத்திரைகளாக்கி ஒரு மாத்திரை வீதம் சுக்குக் கியாழத்திற் கொடுக்க சுரம் 64-ம், சுக்கு, மிளகு கியாழத்திற் கொடுக்க குளிர்சுரமும், வெள்ளை வெங்காயச்சாற்றிற் கொடுக்க பாண்டு மகோதரம் சோகையும் இஞ்சிச்சாற்றில் கொடுக்க ஜன்னி 13-ம் கடுக்காய் கியாழத்திற் கொடுக்க இருமலும், எருமை நெய்யிற் கொடுக்க ரத்தமூலமும் தீரும்.

பிரகாசமாத்திரை

ரசபஸ்பம்	சுக்கு
ரசச்செந்தூரம்	கடுகுரோகணி
வெங்காரம்	குராசாணிஓமம்
லிங்கம்	கோஷ்டம்

வகைக்குப்பலம் *-1,* நேர்வாளப்பருப்பு பலம்*-16,* இவைகளை சுத்திசெய்து கல்வத்திலிட்டு விளாம்பிசின் ஜலத்தால் அரைத்துக் குன்றிமணி அளவாக மாத்திரைகளாக்கி *1-2-*மாத்திரை கொடுக்க வாத பித்த சிலேஷ்ம ரோகங்களைக் கண்டித்து செவ்வையாய் பேதியாகும் பேதி அதிகமானால் புளித்தமோரும் அன்னமும் சாப்பிடவும் அன்றியும் சுரம்*-64,* சன்னி*-10,* வாதம்*-10,* பித்தம்*-40,* கபசம்பந்தமான ரோகங்கள் முதலிய அனேக கடூரரோகங்களுக்கு குறைந்த அளவில் கொடுக்க ரோகங்கள் குணமாகும்.

பயிரவமாத்திரை

சுத்திசெய்த	கருநாவி	விராகனிடை	*9*
சுத்திசெய்த	லிங்கம்	விராகனிடை	*9*
சுத்திசெய்த	அரிதாரம்	விராகனிடை	*9*
சுத்திசெய்த	ரசகற்பூரம்	விராகனிடை	*9*
சுத்திசெய்த	கந்தகம்	விராகனிடை	*9*
சுத்திசெய்த	நேர்வாளப்பருப்பு	விராகனிடை	*9*

இவைகளைக் கல்வத்திலிட்டு சூரணித்து அத்துடன் ரசபஸ்பம் ரசச்செந்தூரம், சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தானிக்காய் நெல்லிமுள்ளி, கிராம்பு, ஏலம், சாதிப்பத்திரி, வகைக்குப்பலம்*-1,* சேர்த்து முலைப்பாலால் *2-*ஜாமமும் வேப்பங்கொட்டை, கற்றாழை கொன்றைப்பூ இவைகளின் சாற்றால் முறையே *3-*ஜாமம் அரைத்து உளுந்து அளவாக மாத்திரைகளாக்கி ஒரு மாத்திரை முலைப்பாலிலாவது தேனிலாவது கொடுக்கச் சன்னிபாதசுரம்*-13,* சுரம்*-64,* தோஷம், வாதம் *60,* பித்தம்*-40,* சிலேஷ்மம்*-20,* முதலிய அநேக பலமான ரோகங்கள் குணமாகும்.

சூர்யரசாயனமாத்திரை

சுத்திசெய்த	ரசம்	பலம்	*1*
சுத்திசெய்த	கந்தகம்	பலம்	*1/2*

இவ்விரண்டும் கற்றாழைச்சாற்றால் 1-ஜாமமரைத்து 1 1/2-பலம் சுத்தசெய்த தாம்பிர தகடுகளுக்கு கவசமிட்டு ஓட்டில் வைத்து மேல் ஓட்டால் மூடி சீலைமண் வலுவாகச் செய்து காடாக்கினியாய் ஒருநாள் எரித்து எடுத்து சூரணித்து அத்துடன் சுக்குத்தூளும் பெருங்காயமும் வகைக்கு விராகனிடை 2-சேர்த்து மாத்திரைகளாக்கி 2-குன்றிமணியிடை கொடுக்க சுவாசம் 5-ம் குணமாகும்.

பயிரவமாத்திரை

மனோசிலை	கருநாவி
ரசம்	லிங்கம்
கந்தகம்	வெங்காரம்

இவைகளைச் சுத்திசெய்து வகைக்குப் பலம் 1, வீதமெடுத்து கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாற்றால் ஒரு ஜாமமரைத்து உளுந்தளவாக மாத்திரைகளாக்கி ஒருமாத்திரை முலைப்பாலில் கொடுக்க சந்நிபாதம் -13, சுரம்-64, வாதம்-80, கபரோகங்கள் முதலிய பலமான ரோகங்கள் குணமாகும்.

பூபதிமாத்திரை

சுத்திசெய்த	மனோசிலை	விராகனிடை	2
சுத்திசெய்த	தாளகம்	விராகனிடை	2
சுத்திசெய்த	லிங்கம்	விராகனிடை	2

இவைகளுடன் கறிக்கருணை அல்லது காட்டுக்கருணைக் கிழங்கை நோண்டி அதில் வைத்து மூடி சீலைமண்செய்து உலர்த்தி 2-படி உமிக்குள் வைத்து புடம்போட்டு எடுத்து வேலிப்பருத்திச் சாற்றால் 8-ஜாமமரைத்து சிறுபயறு அளவாக மாத்திரைகளாக்கி ஒருமாத்திரை வீதம் கொடுத்து வரசுரம்-64, வாதம்-80, சுபரோகங்கள் குணமாகும் பத்தியம் புளி, உப்பு தள்ளவும்.

அற்புதமாத்திரை

சீரகம்	வெள்ளைப்பூண்டு
மிளகு	பெருங்காயம்
சுக்கு	இந்துப்பு
திப்பிலி	சுத்திசெய்தகெந்தகம்

இவைகள் வகைக்குப் பலம்-2, கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாற்றால் 4-ஜாமமரைத்து சுண்டக்காய் அளவாக மாத்திரைகளாக்கி

தினம் 2-தடவை ஒருமாத்திரை வீதம் சாப்பிட்டு வர அக்கினி மந்தம் பித்தவாயு, சூதவாயு, உஷ்ணவாயு, கிராகணி, குன்மம், உதரரோகம் வாந்திபேதி குணமாகும்.

பஞ்சபாணமாத்திரை

பெருங்காயம்	பலம்	5	சீரகம்	பலம்	2
இந்துப்பு	பலம்	5	கருஞ்சீரகம்	பலம்	6
திப்பிலி	பலம்	5	மிளகு	பலம்	9
ஓமம்	பலம்	2	சுக்கு	பலம்	7

இவைகளை உலர்த்தி சூரணித்து எலுமிச்சம் பழச்சாற்றால் ஒரு ஜாமமரைத்து சுண்டக்காய் அளவாக மாத்திரைகளாக்கி தினம் காலையில் ஒரு மாத்திரைவீதம் சாப்பிட்டுவா அக்கினி மந்தம் குன்மம் வாயு பித்தம் கிரகணி குணமாகும்.

போஜனகுடாரிமாத்திரை

சுக்கு	பலம்	1	இந்துப்பு	பலம்	2
பெருங்காயம்	பலம்	1	சீரகம்	பலம்	3
இஞ்சி	பலம்	2	மிளகு	பலம்	3

இவைகளை எலுமிச்சம் பழச்சாற்றால் 2-ஜாமம் அரைத்து சுண்டக்காய் அளவாக மாத்திரைகளாக்கி தினம் காலையில் ஒருமாத்திரை சாப்பிட்டுவர அக்கினிமந்தம் குன்மம் வயிற்றுவலி வாயு பித்தவாயு சூதகவாயு கிரகணி முதலியவைகள் குணமாகும்

ரோக நிவாரணமாத்திரை

வேப்பம்பூ	விராகனிடை	10
பெருங்காயம்	விராகனிடை	1
மிளகு	விராகனிடை	2
சுக்கு	விராகனிடை	2
கொத்தமல்லிவிதை	விராகனிடை	2
கரிப்பிலை	விராகனிடை	2
இந்துப்பு	விராகனிடை	2 1/2
போனவருடத்தியபுளி	விராகனிடை	4

இவைகளில் வேப்பம்பூவை நெய்யால் வறுத்து சூரணித்து பிறகு எல்லாம் ஒன்றாக்கி தேவையான சலத்தைவிட்டு மைபோல் அரைத்து கழற்சிக்காய் அளவாக மாத்திரைகளாக்கி தினம் 2 - தடவை ஒரு

மாத்திரை வீதஞ் சாப்பிட்டுவர பித்தம் வாயு அரோசிகம் அசீர்ணம் மலபந்தம் குணமாகும்.

சுவர்ணமாத்திரை

புரசம்பிசின்	நீர்முள்ளிவிதை
ஜாதிக்காய்	கோஷ்டம்
சிறுபூனைக்காலிவிதை	அமுக்கிராக்கிழங்கு
சாலாமிசிரி	வாதுமைப்பருப்பு
நிலைக்கடம்பு	

இவைகள் வகைக்குப்பலம் -3, எடுத்து சூரணித்து 8-படி ஜலத்திற்போட்டுக் காய்ச்சி 2-படியாக்கி அதை மறுபடியும் எரித்து இளகிய பதத்திலிறக்கி கல்வத்திலிட்டு முத்து, அப்பிரக செந்தூரம், ரஜதபஸ்பம், பவளபஸ்பம், மண்டூர செந்தூரம், வகைக்கு விராகனிடை-1, சேர்த்து மைபோலரைத்து குன்றிமணி அளவாக மாத்திரைகளாக்கி கொஞ்சம் ஈரமிருக்கையில் மாத்திரை ஒன்றுக்கு அரைக்கால் சுவர்ணரேக்கை கவசமிட்டுச் சுவர்ணமணிபோல் மாத்திரைகளுருட்டி உலர்த்தி 1-2-மாத்திரை சாப்பிட்டு உடனே 2-சேர் பசும்பாலைக் காய்ச்சி ஒரு சேராக்கிச் சாப்பிட்டு வர ரத்தம் ஊறும், விந்துகட்டும், தாதுபுஷ்டியுண்டாகும். பத்தியம் அதிகபுளிப்பு, காரம், புகை இவைகள் நீக்கவும்.

ராஜமாத்திரை

சங்குபஸ்பம் செய்வதுபோல் பலகறைகளை பஸ்பமாக்கி ஒருபலம் தூக்கி அத்துடன் சுக்கு மிளகு திப்பிலி சுத்திசெய்த நாவி சுத்தி செய்த கெந்தகம் சுத்திசெய்த ரசம் பொரித்த வெங்காரம் வகைக்குப்பலம் -1, சேர்த்து எலுமிச்சம் பழச்சாற்றாலரைத்து மாத்திரைகளாக்கி 1-2, குன்றி மணியிடை வீதம் மிளகுதூளும் நெய்யும் சேர்த்து அதில் வைத்துக் கொடுக்க கிரகணி (11) குணமாகும்.

அஜமோதாஷ்டக மாத்திரை

ஓமம்	வசம்பு
பெருங்காயம்	சிறுதேக்கு
சித்திரமூலம்	இந்துப்பு
கோஷ்டம்	ஏலரிசி

இவைகள் வகைக்கு விராகனிடை -5, வீதம் சூரணித்து ஜலத்தால் மைபோலரைத்து கழற்சிக்காய் அளவாக மாத்திரைகளாக்கி தினம்

2-தடவை ஒரு மாத்திரை வீதம் ஜலத்தில் கொடுத்து வர வயிற்றுப்பல் குன்மக்கட்டி குன்மம்-8, வாந்தி அஜீர்ணம் முதலிய பலமான ரோகங்கள் குணமாகும்.

இரசமாத்திரை

சுத்திசெய்த	ரசம்	விராகனிடை	5
சுத்திசெய்த	கந்தகம்	விராகனிடை	5
சுத்திசெய்த	வெங்காரம்	விராகனிடை	5
சுத்திசெய்த	சுக்கு	விராகனிடை	5
சுத்திசெய்த	நேர்வாளப்பருப்பு	விராகனிடை	15

இவைகளில் ரசமும் கந்தகமும் கல்வத்திலிட்டு அரைத்து பிறகு மற்ற சரக்குகளைப் போட்டு மைபோல் ஜலத்தால் அரைத்து கடுகு அளவாக மாத்திரைகளாக்கி ஒரு மாத்திரை ஜலத்திலிட ஊதுமாந்தம் வாதம் பொருமல் முதலிய பல ரோகங்கள் குணமாகும் பெரியவர்களுக்கு 5-10 மாத்திரைகள் கொடுக்க வாதம் சுரம் வாயு முதலியவைகள் குணமாகும்.

சித்தாநந்தபயிரவமாத்திரை

கட்டினலிங்கம்	மிளகு
சுத்திசெய்தகருநாவி	திப்பிலி
சுத்தித்தவெங்காரம்	பெருங்காயம்
சுக்கு	

இவைகள் வகைக்குப்பலம் -1, கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச் சாற்றாலரைத்து குன்றிமணி அளவாக மாத்திரைகளாக்கி உலர்த்தி ஒரு மாத்திரை "இஞ்சிச்சாறு" முலைப்பால் எதிலாகிலும் கொடுக்க சன்னி-13, வாதம்-80, குணமாகும் தேனிலிட தோஷம் தீரும்.

வேதாந்த பயிரவமாத்திரை

கட்டினலிங்கம்	பலம்	4
சுத்தித்தவெங்காரம்	"	8
சுத்தித்தகருநாவி	"	12
திப்பிலி	"	12

இவைகளை கல்வத்திலிட்டு இஞ்சிச்சாற்றால் நாலு ஜாமம் அரைத்து குன்றிமணி அளவாக மாத்திரைகளாக்கி நிழலில் உலர்த்தி

ஒருமாத்திரை அனுபானத்திலிட சந்நிபாதரோகம் 13, வாதம்-80, முதலிய கொடிய ரோகங்கள் குணமாகும்.

ராட்சச மாத்திரை

சுத்திசெய்த	ரசம்	சுத்திசெய்த	காந்தம்
சுத்திசெய்த	கந்தகம்	சுத்திசெய்த	அப்பிரேகம்

இவைகளுடன் தாம்பிரபஸ்பம் பலம்-1, சேர்த்து கல்வத்திலிட்டு வெள்ளைச் சாரணைச் சாற்றால் 4-ஜாமமரைத்துப் பிறகு சீந்திற்கொடி கஷாயத்தில் 4-ஜாமமும் கொடிவேலிவேர்க் கஷாயம் துளசிச்சாறு, கடுக்காய், தானிக்காய், நெல்லிமுள்ளி இவைகள் சேர்ந்த கஷாயம் இவைகளால் தனித் தனி 2-ஜாமமும் அரைத்துப் பில்லை செய்து வெள்ளைச் சாரணையிலையை அரைத்து அதற்கு (3) விரற்கடை கனமாய் கவசமிட்டு அந்த கவசம் கருகும்படி புடம்போட்டு எடுத்து சித்திரமூல கஷாயத்தால் 4-ஜாமமரைத்து குன்றிமணி அளவாக மாத்திரைகளாக்கி ஒரு மாத்திரை அனுபானத்திலிட சன்னி-13, தோஷம் வாதம்-80, முதலிய கடுரரோகங்கள் குணமாகும்.

சங்குவடி மாத்திரை

புளிசமூலம் (இலை-பட்டை-வேர்) முதலியவைகள் உலர்த்தி எரித்த சாம்பலை ஜலத்தில் கரைத்து வடித்து எரித்து எடுத்த உப்புபலம்-5, கல்லப்பு, இந்துப்பு, சௌட்டுப்பு, வளையலுப்பு, வெடியுப்பு வகைக்குப்பலம்-1, ஐந்துபலம் ள்ளைச்சங்கு துண்டுகளை எலுமிச்சம் பழச்சாற்றில் போட்டு செங்குகையால் தூளாகிறவரையில் காய்ச்சி பிறகு ரசம் ப்லம்-2, கந்தகம் பலம்-2, லிங்கம் பலம்-5, இவைகளைச் சுத்தி செய்து சேர்த்து எல்லாம் கல்வத்திலிட்டு மேற்படி சற்றால் அரைத்து குன்றிமணி அளவாக மாத்திரைகளாக்கி ஒருமாத்திரை அனுபானத்தில் கொடுக்க கிரகணி-11, குன்மம்-8, அக்கினிமந்தம், அஜீர்ணம் வாயு உதரரோகம் குணமாகும்.

சுவர்ணமாத்திரை

தங்கரேக்கு	கோரோஜனை
முத்து	குங்குமப்பூ
பவளபஸ்பம்	ஏலம்
ரசசெந்தூரம்	கிராம்பு
சுத்தித்தரசகர்ப்பூரம்	ஜாதிக்காய்
பச்சைகர்ப்பூரம்	கோஷ்டம்
அப்பிரகசெந்தூரம்	அக்கிராகாரம்

இவைகள் வகைக்கு விராகனிடை -1, சேர்த்து கல்வத்திலிட்டு வெற்றிலைச்சாறு சந்தனக்கஷாயம் சண்பகப்பூகஷாயம் இவைகளால் தனித்தனியே 3-ஜாமம் அரைத்து உளுந்து அளவாக மாத்திரைகளாக்கி நிழலில் உலர்த்தி ஒருமாத்திரை வீதம் தகுந்த அனுபானத்தில் கொடுக்க சுரம் -64, சன்னி-13, காசம்-5, வலிப்பு-5, இசிவு, இருமல், ஜலுப்பு முதலிய பற்பல கடூரரோகங்கள் குணமாகும் இதை குழந்தைகளுக்கு - 1/2, மாத்திரை வீதம் கொடுக்கவும்.

அப்பிரகமாத்திரை

அப்பிரகசெந்தூரம்	ஏலம்
ரசசெந்தூரம்	கிராம்பு
ரசகர்ப்பூரம்	ஜாதிக்காய்
கோரோஜனை	கோஷ்டம்
பச்சைகர்ப்பூரம்	அக்கிராகாரம்
குங்குமப்பூ	

இவைகள் வகைக்குப்பலம் -1, கல்வத்திலிட்டு வெற்றிலைச்சாறு, சந்தனகஷாயம், சண்பகப்பூகஷாயம், இவைகளால் தனித்தனியே 3-ஜாமம் அரைத்து சிறுபயறு அளவாக மாத்திரைகளாக்கி ஒரு மாத்திரை வீதம் குழந்தைகளுக்கு அனுபானத்திலிட சுரம், கபம், சன்னி, வாதம் இசிவு, ஜலுப்பு முதலிய பற்பலமான ரோகங்கள் குணமாகும்.

கோரோஜனைமாத்திரை

கோரோஜனை	கிராம்பு
குங்குமப்பூ	கோஷ்டம்
சுத்தித்தகர்ப்பூரம்	அக்கிராகாரம்
பச்சைக்கர்ப்பூரம்	ரசபஸ்பம்
ஏலம்	

இவைகள் வகைக்கு விராகனிடை-1, கல்வத்திலிட்டு சந்தனக்கஷாயத்தால் மைபோலரைத்து உளுந்தளவாக மாத்திரைகளாக்கி ஒரு மாத்திரை வீதம் அனுபானத்தில் கொடுக்க குழந்தையின் சுரம், ஜலுப்பு, மாந்தம் முதலியவைகள் தீரும்.

கஸ்தூரிமாத்திரை

கஸ்தூரி	விராகனிடை	1
குங்குமப்பூ	விராகனிடை	3

சுக்கு	விராகனிடை	4
கிராம்பு	விராகனிடை	2
ஜாதிக்காய்	விராகனிடை	2
கோஷ்டம்	விராகனிடை	2
அக்கிராகாரம்	விராகனிடை	2

இவைகளை கல்வத்திலிட்டு முலைப்பாலால் மைபோலரைத்துக் கடுகு அளவாக மாத்திரைகளாக்கி நிழலில் உலர்த்தி 1-மாத்திரை முலைப்பாலில் கொடுக்க குழந்தையின் மாந்தம், சுரம், ஜன்னி, வலிப்பு, இசிவு, கபரோகங்கள் முதலிய கடுரரோகங்கள் குணமாகும். பெரியவர்களுக்கு 4-6-மாத்திரை கொடுக்கலாம்.

லிங்கமாத்திரை

கட்டினலிங்கம்	விராகனிடை	8
மிளகு	விராகனிடை	2
திப்பிலி	விராகனிடை	2

கல்வத்தில்போட்டு முலைப்பாலாலரைத்து உளுந்து அளவாக மாத்திரைகள் செய்து ஒரு மாத்திரை அனுபானத்திலிட சுரம் வாதம் குடல்வாயு, அபானவாயு குணமாகும்.

லிங்கபேதிமாத்திரை

சுத்தித்த	ரசபஸ்பம்	பலம்	2
சுத்தித்த	லிங்கம்	பலம்	2
சுத்தித்த	வெங்காரம்	பலம்	2
சுத்தித்த	நேர்வாளப்பருப்பு	பலம்	8
சுத்தித்த	ஆமணக்குபருப்பு	பலம்	4

இவைகளை கல்வத்திலிட்டு விளாம்பிசின் ஜலத்தால் அரைத்து உளுந்து அளவாக மாத்திரைகளாக்கி 1-2-மாத்திரைகொடுக்க சுரம் வாதம் குடல்வாயு முதலியவைகள் குணமாகும்.

கற்பூரமாத்திரை

சுத்திசெய்தரசகற்பூரம்	விராகனிடை	5
அழிஞ்சிவேர்ப்பட்டை	விராகனிடை	5
கொடிவேலிவேர்ப்பட்டை	விராகனிடை	5
சுத்தித்தநேர்வாளப்பருப்பு	விராகனிடை	20

இவைகளைக் கல்வத்தில் போட்டு முலைப்பால் கையாந்த கரைச்சாறு இவைகளால் வகைக்கு ஒரு ஜாமமரைத்து உளுந்து அளவாக மாத்திரைகள் ஆக்கி ஒரு மாத்திரை தேனிலிட சகலசுரமும் வாதம் 80-ம் தீரும்.

தாளகமாத்திரை

சுத்திசெய்த	தாளகம்	விராகனிடை	1
சுத்திசெய்த	ரசம்	விராகனிடை	1
சுத்திசெய்த	கந்தகம்	விராகனிடை	1
சுத்திசெய்த	கருநாலி	விராகனிடை	1

இவைகளுடன் கடுகுரோகணி, சுக்கு, திப்பிலி வகைக்கு விராகனிடை 5-சேர்த்து கல்வத்தில் இட்டு எலுமிச்சம்பழச்சாற்றால் மைபோலரைத்து சிறுபயறு அளவாக மாத்திரைகளாக்கி 1-2-மாத்திரை தினம் 2-தடவை கொடுக்க சகல சுரமும் குணமாகும்.

லிங்கமாத்திரை

ரசபஸ்பம்	விராகனிடை	1
கட்டினலிங்கம்	விராகனிடை	1
பச்சைகர்ப்பூரம்	விராகனிடை	1
ஜாதிக்காய்	விராகனிடை	1
சுத்தித்தநேர்வாளப்பருப்பு	விராகனிடை	1

இவைகளைச் சேர்த்து கல்வத்திட்டு கற்றாழைச்சாற்றால் அரைத்து உளுந்து அளவாக மாத்திரைகளாக்கி 2-3-மாத்திரை அனுபானத்தில் கொடுக்க ரகல சுரங்கள் உடனே குணமாகும்.

மனோசிலை மாத்திரை

சுத்தித்தமனோசிலை	திப்பிலி
சுக்கு	திப்பிலிமூலம்
மிளகு	

இவைகள் வகைக்கு விராகனிடை-1, சேர்த்து கல்வத்தில்பேட்டு துளசிச்சாறு வெள்ளாட்டு மூத்திரம் இவைகளால் வகைக்கு ஒருஜாமம் அரைத்து குன்றிமணி அளவாக மாத்திரைகளாக்கி ஒருமாத்திரை வெந்நீரில் மூன்றாம் நான்காம் முறை சுரத்திற்கும் குப்பைமேனிச் சாற்றால் ஜன்னிக்கும் ஜலத்தில் வாயுவுக்கும் கொடுக்க குணமாகும்.

பாஷாணமாத்திரை

சுத்திசெய்த வெள்ளைபாஷாணம்	விராகனிடை	1/2
சுத்திசெய்த கௌரிப்பாஷாணம்	விராகனிடை	1/2
சுத்திசெய்த ரசம்	விராகனிடை	1/2
சுத்திசெய்த மிளகு	விராகனிடை	10

இவைகளைச் சேர்த்து கல்வத்திலிட்டு மிளகு கஷாயம், கரு ஊமத்தையிலைச்சாறு, கொம்புப்பாகல் இலைச்சாறு இவைகளால் வகைக்கு ஒரு சாமமரைத்து சிறுபயறு அளவு மாத்திரைகளாக்கி மோர் காடி இவைகளில் எதிலாகிலும் ஒரு மாத்திரை கொடுக்க சுரம்-64-ம் குணமாகும் பத்தியம் புளி, உப்பு தள்ளவும்.

சுரகுடாரி மாத்திரை

கழற்சிப்பருப்பு	கிறேன்ஸ்	200
மிளகு	கிறேன்ஸ்	80
பெருங்காயம்	கிறேன்ஸ்	40

இவைகளைக் கல்வத்திலிட்டு தேன் சேர்த்து அரைத்து 30-மாத்திரைகளாக்கி ஒரு மாத்திரை வீதம் தினம் 2-தடவை கொடுக்க குளிர்சுரம் குணமாகும்.

கட்டுவாங்க மாத்திரை

கொடிகுறுஞ்சாயிலைதூள்	விராகனிடை	4
விளாம்பிசின்	விராகனிடை	20
அபினி	விராகனிடை	12

இவைகளைக் கல்வத்திலிட்டு அரைத்து 50- மாத்திரைகளாக்கி ஒரு மாத்திரை வீதம் கொடுத்துவர பேதி சீதபேதி இருமல் கக்குவான் அதிசாரபேதி குணமாகும்.

பேதிமாத்திரை

கட்டினலிங்கம், கடுகுரோகணி, ஏலம், கோஷ்டம், சண்பகப்பூ

வகைக்கு விராகனிடை 3, சுத்திசெய்த நேர்வாளப் பருப்பு விராகனிடை - 15, இவைகளைக் கல்வத்திலிட்டு விளாம்பிசின் ஜலத்தில் அரைத்து குன்றிமணி அளவாக மாத்திரைகளாக்கி உலர்த்தி ஒரு மாத்திரை கொடுத்து புளித்தமோரும் அன்னமும் சாப்பிட பேதிநிற்கும்.

சுரஹர மாத்திரை

கிராம்பு, திப்பிலி, ஏலம், கடுக்காய், ஜாதிக்காய், தாளிக்காய், சந்தனம், நெல்லிவற்றல், சுக்கு, கடுகுரோகணி, மிளகு தேவதாரம்:

வகைக்கு விராகனிட்ட -5, குங்குமப்பூ விராகனிடை 10 இவைகளை கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாற்றாலும் கண்டங்கத்திரிப் பழச்சாற்றாலும் வகைக்கு 2 - ஜாமம் அரைத்து உளுந்து அளவாக மாத்திரைகளாக்கி ஒரு மாத்திரை வீதம் அனுபானத்தில் கொடுக்க குளிர்சுரம் குணமாகும்.

பாலசஞ்சீவி மாத்திரை

கோ்ரோஜனை	விராகனிடை	7
கடுகுரோகணி	விராகனிடை	7
வெங்காரம்	விராகனிடை	7
சுக்கு	விராகனிடை	7
சுத்தித்த நேர்வாளப்பருப்பு	விராகனிடை	7

இவைகளைச் சேர்த்து கல்வத்திட்டு முலைப்பாலாலரைத்து கடுகு அளவாக மாத்திரைகளாக்கி 1-2- மாத்திரை அனுபானத்தில் கொடுக்க சகல மாந்தம் முதலிய பற்பலரோகங்கள் குணமாகும்.

பாலசுரமாத்திரை

பெருஞ்சீரகம்	இந்துப்பு
கருஞ்சீரகம்	இலுப்பைப்பருப்பு
அதிமதுரம்	சாஸ்திரபேதி
கோஷ்டம்	

வகைக்குப் பலம்-2, கோரோசனை பலம் -6, இவைகளைக் கல்வத்திலிட்டு குமரிச்சாறு முலைப்பால் இவைகளால் வகைக்கு -2, ஜாமமரைத்து உளுந்து அளவாக மாத்திரைகளாக்கி ஒருமாத்திரை வீதம் முலைப்பாலில் கொடுத்துவர சகல சுரங்கள் குணமாகும்.

வினோதசஞ்சீவி மாத்திரை

சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு	பலம்	1
பச்சைகற்பூரம்	பலம்	1
சுக்கு	பலம்	1

சாதிக்காய்	பலம்	1
கருவாப்பட்டை	பலம்	2

இவைகளைக் கல்வத்திலிட்டு கற்றாழைச்சாற்றால் மைபோலரைத்து கடுகு அளவாக மாத்திரைகளாக்கி 1-2 - மாத்திரை அனுபானத்திலிட குழந்தைகளுக்குக் காணும் சுரம் மாந்தம் முதலியவைகள் குணமாகும்.

பேதிமாத்திரை

வெள்ளைக்காக்கணான்வேர்	விராகனிடை	2
திப்பிலி	விராகனிடை	2
சுக்கு	விராகனிடை	3
மிளகு	விராகனிடை	3
விளாம்பிசின்	விராகனிடை	2

இவைகளைக் கல்வத்திலிட்டு ஜலத்தால் அரைத்து குன்றிமணி அளவாக மாத்திரைகளாக்கி ஒரு மாத்திரை ஜலத்தில் கொடுக்க பேதி நன்றாய் ஆகும் குழந்தைகளுக்கு 1/2 - மாத்திரை கொடுக்கவும்.

பாலசுரஹரமாத்திரை

கருவாப்பட்டை நிழலில் உலர்த்தினது	விராகனிடை	10
ஆடுதீண்டாப்பாளை வேர்ப்பட்டை	விராகனிடை	10

இவைகளைச் சேர்த்து கல்வத்திட்டு எலுமிச்சம்பழச்சாற்றால் ஒரு ஜாமமரைத்து கடுகு அளவாக மாத்திரைகளாக்கி ஒருமாத்திரை அனுபானத்தில் கொடுக்க குழந்தையின் சுரம் விஷம் முதலியவைகள் குணமாகும்.

ஆதிசேஷ விஷஹரமாத்திரை

கோடகசாலையிலை	பிடி	2
எருக்கம்பழுப்பு	பிடி	2
மிளகு	பலம்	1

இவைகளைக் கல்வத்திட்டு மைபோல் அரைத்து சுண்டக்காய் அளவாக மாத்திரைகளாக்கி நிழலில் உலர்த்தி ஒரு மாத்திரை **1-2**-மணிக்கு ஒருதடவைகொடுக்க நல்லபாம்பு விஷக்கடி பூறான் ஜலமண்டலி முதலியவைகளின் விஷக்கடிகள் தீரும் எலி, தேள் இவைகளின் விஷக்கடிகளுக்கு இதைக் கொடுக்கக்கூடாது.

உதயாதித்திய மாத்திரை

சுத்திசெய்த ரசம் பலம் 1, சுத்திசெய்த கந்தகம் பலம் 2

இவைகளைக் கல்வத்திலிட்டு கற்றாழைச்சாற்றால் ஒரு நாளரைத்து ஒருகலயத்தில் வைத்து அந்த மொத்தையின் பேரில் 2-பலம் சுத்திசெய்த தாம்பிரத்தைக் கிண்ணியாக்கி கவிழ்த்து கிண்ணியின் சந்துவாயில் எருவின் சாம்பலைப்போட்டு அதின்மேல் சாணியும் ஜலமுஞ் சேர்த்துப்போட்டு கிண்ணத்தை மறைத்து பிறகு அந்த கலயத்தை அடுப்பின் மேல்வைத்து காடாக்கினியாய் -2-ஜாமம் யெரித்து எடுத்து கல்வத்திலிட்டுக் கரு அத்தி சித்திரமூலம் கடுக்காய் தானிக்காய் நெல்லிமுள்ளி முருங்கக்காயின் உள்பசை வாய்விளங்கம் சிவதைவேர் இவைகளின் கஷாயங்களால் தனித்தனியே ஒவ்வொருநாள் அரைத்து குன்றிமணி அளவாக் மாத்திரை களாக்கி ஒரு மாத்திரை வீதம் பசும்பாலிலாவது அல்லது கடுக்காய் தானிக்காய் நெல்லிவற்றல் இவைகளைச்சேர்த்து காய்ச்சின கஷாயத்திலாவது கொடுத்துவர வெண்குஷ்டம் விசர்சிகாரோகம் குணமாகும். வெண்குஷ்டரோகி இதைச் சாப்பிட்டால் 4-வது அல்லது 7-வது நாளில் தேகத்தில் சிரங்குகள் காணும் அப்போது குன்றிமணிவிதையும் சித்திர மூலமும் சூரணித்து ஜலத்தில் கரைத்து உடம்பில் பூசிக் கொள்வதாலும் அல்லது மனோசிலை நாயுருவியின் சாம்பல் இவைகளை ஜலத்தில் உரைத்து உடம்பில் பூசிக்கொள்வதாலும் குணமாகும்.

மாத்திரை வகைபரணி

முற்றிற்று

இவ்வளவு வெள்ளிய நடையாய் அச்சிட்டு பயிரங்கப்படுத்திய அனுபோக வயித்தியத்திற்கு சரக்கு சுத்திகள் சொல்லவில்லையென கவலைப்படவேண்டாம் இதற்கு முதற்பாகத்திலும் எட்டாம்பாகத்திலும் சுத்திகள் விவரமாக தெரிந்துக்கொள்ளலாம்.

இனி ஏழாம்பாகத்தில்
அற்புதமுறைகள் சொல்லப்படும்.

உ

தேவிசகாயம்

; இரண்டாவது

சூரணவகைபரணி

ஆனந்தவினோதச்சூரணம்

வறுத்தசேங்கொட்டை	பலம்	5
எட்டிவிதை	ப்லம்	1
கொடிவேலிவேர்பட்டை	பலம்	1 ½
பரங்கிப்பட்டை	பலம்	4
ரசம்	பலம்	1
கந்தகம்	பலம்	1
அரிதாரம்	பலம்	2

இவைகளைச் சுத்திசெய்து சேர்த்து சூரணித்து இரண்டு குன்றிமணியிடை சூரணத்தில் ஒருதுளி குஷ்டகுடாரி தயிலத்தைச் சேர்த்துக் கொடுக்க வெங்குஷ்டம், கருங்குஷ்டம், கிரந்தி புண், அரையாப்பு மூலம் முதலிய அனேக கொடிய ரோகங்கள் குணமாகும்.

லவணச்சூரணம்

பூநீர் படி 3, கறிஉப்பு படி 2, வெடியுப்பு படி 1,

இவைகளைத் தனித்தனியாய் ஜலத்தில் கரைத்து வைத்து மறுநாள் தெளிவையெடுத்து ஒன்றாக்கி அதில் -3 - விராகனிடை பெருங்காயத்தைச் சேர்த்து உப்பைக் கட்டும் வரையில் எரித்து சூரணித்து கற்கார்க்கு சீசாவில் போட்டு வைத்துக்கொண்டு தினம் காலையில் நீராகாரத்தில் விராகனிடை - 1 போட்டுச் சாப்பிட்டு வர வயிறுபொருமல் குன்மம் வயிற்று வலி வயிற்றுக்குத்தல் உப்பிசம் முதலிய பலமான ரோகங்கள் குணமாகும்.

கலிங்காதிச்சூரணம்

வரிக்குமட்டிச்சாறு படி 2, எருமைவேர் படி 2, கறிஉப்பு படி 2

இவைகளைச் சேர்த்து இதில் சுக்கு குரோசாணி ஓமம், வெடியுப்பு, இந்துப்பு, வளையலுப்பு, சவுட்டுப்பு வகைக்கு விராகனிடை -2 போட்டு சுண்டக்காய்ச்சி எடுத்து சூரணித்து கற்கார்க்கு சீசாவில்போட்டு வைத்துக்கொண்டு தினம் விராகனிடை 1-வீதம் நீராகாரத்தில் காலையில் சாப்பிட்டு வர குன்மம், வயிற்றுவலி, அஜீரணம், பொருமல், விக்கல் முதலிய பற்பல கடுரரோகங்கள் குணமாகும்.

இராஜகேசரிச்சூரணம்

அதிமதுரம்	லவங்கப்பட்டை
ஏலம்	தும்பராஷ்டகம்
கிறாம்பு	மாசிக்காய்
சுக்கு	வால்மிளகு
திப்பிலி	

இவைகள் வகைக்குப்பலம் -1/4 ஜாதிக்காய்த்தூள் பலம் -1/4, கஸ்தூரி விராகனிடை -1, இவைகளை வெவ்வேறாகச் சூரணித்து ஒன்றாகச்சேர்த்து அதில் 1/2 விராகனிடை வீதம் தினம் 2-3- தடவை வெற்றிலைச் சாற்றிலாவது தேனிலாவது கொடுக்க காசம் -5, சுவாசம் -5, க்ஷயம்-4, சிலேஷ்மம்-2-3, இருமல், சகல கபரோகங்கள் குணமாகும்.

சாமுதரச்சூரணம்

இந்துப்பு	ஓமம்
எவக்ஷாரம்	கடுக்காய்
திப்பிலி	வாய்விளங்கம்
இஞ்சி	கல்லுப்பு
பெருங்காயம்	

இவைகளைச் சமமாகச் சேர்த்துச் சூரணித்து போஜனஞ் செய்யும்போது முதல் அன்னத்தில் 3-விராகனிடை சூரணத்தையும், 5-விராகனிடை பசுவின் நெய்யும் சேர்த்துச் சாப்பிட்டு வர வயிற்றுப்பல் வாயு குன்மம் -8, வயிற்றுவலி, அஜீர்ணம் வாதம் -80, கிரகணி-11, மூலம்-3, பாண்டு-5, மகோதரம்-8, முதலிய பயங்கரமான ரோகங்கள் குணமாகும்.

அமிர்தவல்லிச்சூரணம்

லவங்கப்பட்டை	கிராம்பு
சுக்கு	சித்தரத்தை

மிளகு	அதிமதுரம்
திப்பிலி	அதிவிடையம்
ஏலம்	அக்கிராகாரம்

இவைகள் வகைக்கு விராகனிடை -5, உலர்த்திச் சூரணித்து வஸ்திரகாயஞ் செய்து கற்கார்க்கு சீசாவில் போட்டு வைத்துக்கொண்டு அதில் கொஞ்சம் எடுத்து தேனில் கலந்து நாக்கில் தடவிவர நாக்கில் ஜலம் ஊறும் இத்துடன் வெங்காரம் சேர்த்துக் கொடுக்க நீர்இறங்கும் விரோசனக்காரிகள் சேர்த்துக் கொடுக்க மலம் உதைக்கும், கண்டா அவுஷதத்தில் இதைச் சேர்த்துக் கொடுக்க அதின் குணம் விசேஷிக்கும், கஸ்தூரி, குங்குமப்பூ, ரசபஸ்பம் இம்மூன்றும் சேர்த்துச் சூரணித்து அத்துடன் இதைச் சேர்த்துக் கொடுக்க சன்னி சயித்தியம் தீரும்.

குன்மகுடாரிச்சூரணம்

வரிக்குமட்டிக்காய்ச்சாறு	படி	2
எருமைமோர்	படி	2
கறிவுப்பு	படி	2

இவைகளைச் சேர்த்து அதில் வெடியுப்பு, இந்துப்பு வளையலுப்பு, சவுட்டுப்பு வகைக்கு விராகனிடை 2, போட்டு சுண்டக்காய்ச்சி சூரணித்து 5-துளி பெம்பரமிட்டு தையிலத்தைவிட்டு மிஸ்ரித்து ஒருகல்கார்க்கு சீசாவில்போட்டு தினம் ஒரு விராகனிடை வீதம் நீராகாரத்தில் கொடுக்க குன்மம் 8-ம் தீரும்.

அமிர்தசஞ்சீவிச்சூரணம்

ஏலம்	வால்மிளகு
கிராம்பு	கசகசா
ஜாதிக்காய்	மாசிக்காய்
ஜாதிப்பத்திரி	தாளிசபத்திரி

இவைகள் வகைக்கு பலம் -1, சூரணித்து சீனி சீந்திற் சர்க்கரை வகைக்குப்பலம்-6, அத்துடன் சேர்த்து திரிகடிசூரணத்தில் ரசபஸ்மம்வைத்து பசும்நெய்யில் தினம் 2-தடவை சாப்பிட்டு வர மேகநீர் மூலச்சூடு பிரமேகம் பிரமியம் வெட்டை அஸ்திசுரம் மேகஊரல் கைகால்எரிவு பித்தம் தீரும்.

ராஜஏலாதிச்சூரணம்

ஏலம்	விராகனிடை	64	சிறுநாகப்பூ	விராகனிடை	4
சுக்கு	விராகனிடை	32	மிளகு	விராகனிடை	2

கூகைநீர் விராகனிடை 16 கிராம்பு விராகனிடை 1 தாளிசப்பத்திரி விராகனிடை 8

இவைகளை உலர்த்திச் சூரணித்து அத்துடன் சீனிசேர் 1 1/2 சேர்த்து தினம் திரிகடிவீதம் அந்திசந்தி சாப்பிட்டு வர ரணம்மேகஊறல் அரிகிரந்தி வாயுகிரந்தி பித்தம் -40, வாதம் 80, பெரும்பாடு எலும்புருக்கி சொரிசிரங்கு முதலிய பயங்கரமான ரோகங்கள் குணமாகும்.

தாளிசப்பத்திரிச்சூரணம்

ஏலம்	ஜாதிக்காய்
கிராம்பு	ஜாதிப்பத்திரி
வால்மிளகு	அக்கிராகாரம்
வாய்விளங்கம்	தானிக்காய்
மல்லி	நெல்லிவற்றல்
சீரகம்	சடாமாஞ்சில்
திப்பிலி	சோம்பு
கோஷ்டம்	

இவைகள் வகைக்கு பலம் - 1/2, தாளிசபத்திரி பலம்-5, இளவறுப்பாய் வறுத்து சூரணித்து அத்துடன் 10-பலம் சீனியைச்சேர்த்து தினம் 2-தடவை திரிகடிவீதம் சாப்பிட்டுவர காசம்-5, க்ஷயம்-4, பித்தபாண்டு பித்தவெட்டை அஸ்திசுரம், அஸ்திவெட்டை, தாகம், கைகால் எரிவு, கிரகணி, விக்கல், பொருமல், சுரம் முதலிய அனேக பலமான ரோகங்கள் குணமாகும்.

மஹா அசுவகந்திச்சூரணம்

லவங்கம்	பலம்	1
சிறுநாகப்பூ	பலம்	2
காசாஏலம்	பலம்	4
நற்சீரகம்	பலம்	8
திப்பிலி	பலம்	16
சுக்கு	பலம்	32

இவைகளைச் சுத்திசெய்து அமுக்கிறாங்கிழங்கு பலம் -64, இவைகளை இளவறுப்பாக வறுத்துச் சூரணித்து சீனாகற்கண்டு பொடி சேர் -7, சேர்த்து திரிகடிவீதம் பசும்பாலிலாவது நெய்யிலாவது சாப்பிட்டு வர மேகம் -18, சுவாசம்-5, காசம்-5, பாண்டு-5, குன்மம்-8,

அஸ்திசுரம் முதலிய கொடிய ரோகங்கள் குணமாகும் ரத்தவிர்த்தியாகும்.

திரிநேத்திரச்சூரணம்

சுக்கு	பலம்	1
திப்பிலி	பலம்	1
மிளகு	பலம்	1

இவைகளை இளவறுப்பாய் வறுத்துச் சூரணித்து பொற்றலைகையாந்தகரையை ஆவிநீரில்போட்டு 2-நிமிஷம் மூடிவைத்து பிறகு எடுத்து அரைத்து ஒருபடி சாறுயெடுத்து அதில் மேற்படி சூரணத்தைக் கரைத்து அரைத்து பில்லை தட்டி உலர்த்தி சூரணித்து அதற்கு இரட்டிப்பு கற்கண்டு பொடியைச்சேர்த்து திரிகடிவீதம் தினம் காலை மாலை சாப்பிட்டு வர பித்தம் -40, பித்தவாயு உஷ்ணவாயு அக்கினிமந்தம் முதலிய கொடியரோகங்களெல்லாம் குணமாகும். தாதுபுஷ்டியும் ரத்தவிர்த்தியும் உண்டாகும்.

மஹா தூதுளைச்சூரணம்

தூதுளைப்பழம்	பலம்	5
சிவகரந்தைப்பழம்	பலம்	5
கண்டங்கத்திரிப்பழம்	பலம்	5
கோரோசனை	விராகனிடை	1

இவைகளை உலர்த்திச் சூரணித்து அத்துடன் தாளிசப்பத்திரி பலம் -3, சிற்றரத்தை பலம் -1, மிளகுபலம்-1, இவைகளை இளவறுப்பாய் வறுத்து சூரணித்துச் சேர்த்து திரிகடி வீதம் நெய்யிலாவது சர்க்கரையிலாவது கொடுக்க மகா பயங்கரமான சகலவித கபரோகங்கள் குணமாகும்.

லகுதூதுளைச்சூரணம்

தூதுளை	முருங்கப்பட்டை
திப்பிலி	சீனி

இவைகள் வகைக்குப் பலம் -2, உலர்த்திச் சூரணித்து தினம் -2, தடவை 3-விராகனிடை வீதம் பசும்வெண்ணெயில் கொடுக்க ஈளை இருமல் சகலமான கபரோகங்கள் குணமாகும்.

சொர்ணானந்தச் சூரணம்

நறுக்கி உலர்த்தின இஞ்சி	பலம்	4
அதிமதுரம்	பலம்	3
திப்பிலி	பலம்	2 1/2

இவைகளைச் சூரணித்து வஸ்திரகாயஞ்செய்து அத்துடன் ஒருசேர் கற்கண்டுபொடியைச் சேர்த்து தினம் திரிகடி வீதம் சாப்பிட்டு வர வயிற்றுவலி பொருமல் அக்கினிமந்தம் முதலிய மகா உபத்திரலத்தை உண்டாக்குகின்ற ரோகங்களெல்லாம் குணமாகும்.

பயிரவச்சூரணம்

இந்துப்பு	பலம்	1	சுக்கு	பலம்	4
சீரகம்	பலம்	2	திப்பிலி	பலம்	5
ஓமம்	பலம்	3	மிளகு	பலம்	6

இவைகளுடன் விதைநீக்கின கடுக்காய் பலம் - 20, இவைகளைச் சூரணித்து வஸ்திரகாயஞ்செய்து சீனி பலம்-40, சேர்த்து தினம் அந்திசந்தி திரிகடிவீதம் சாப்பிட்டு வர அக்கினி மந்தரோகம், வயிற்றுவலி வயிறுஉப்பல், குன்மம், அஜீர்ணம், மலக்கட்டு முதலிய கொடிய ரேரகங்கள் குணமாகும்.

சண்முகச்சூரணம்

மிளகு	சீரகம்
திப்பிலி	இந்துப்பு

இவைகளின் தூள் வகைக்குப்பலம் -1, பெருங்காயம் பலம் -1/4, கரிப்பிலைத்தூள் பலம் -1/2, இவைகளைச் சேர்த்து ஒரு விராகனிடை வீதம் முதல் அன்னத்தின் மேல் போட்டு நெய்யைக் காய்ச்சிவிட்டுச் சாப்பிட அஜீர்ணம் வயிற்றுக் கடுப்பு அக்கினிமந்தம். குன்மம் வாயு முதலிய கடுரரோகங்கள் குணமாகும்.

அக்கினிச்சூரணம்

சுக்கு	சீரகம்
திப்பிலி	லவங்கம்

இவைகள் வகைக்குப்பலம் -1, இளவறுப்பாய் வறுத்து சூரணித்து ஒருவிராகனிடை வீதம் தினம் 2-தடவை நெய்யிலாவது சீனியிலாவது கொடுத்து வர அக்கினிமந்தம், வயிற்று வலி, குன்மம், வாதம் முதலிய கொடிய ரோகங்கள் குணமாகும்.

ராஜலவணச்சூரணம்

காந்தம்	வளையலுப்பு
கறிஉப்பு	பெருங்காயம்
வெடியுப்பு	

இவைகள் வகைக்குப்பலம் -2, சூரணித்து 3-படி பசும் பாலில்போட்டு சுண்டக்காய்ச்சி சூரணித்து தினம் திரிகடி வீதம் வெந்நீரில்கொடுக்க குன்மம் -8, வாயு, அஜீர்ணம், வயிற்றுவலி முதலிய பலமான ரோகங்கள் குணமாகும்.

லவணச்சூரணம்

பூநீர்	படி	2
கறிஉப்பு	படி	2
வெடியுப்பு	படி	1

இவைகளைத் தணித்தனியாய் ஜலத்தில் கரைத்து வைத்து மறுநாள் தெளிவை யெடுத்து ஒன்றாய்ச் சேர்த்து அதில் 8-விராகனிடை பெருங்காயத்தைச் சேர்த்து சுண்ட யெரித்துச் சூரணித்து கற்கார்க்கு சீசாவில்போட்டு வைத்துக் கொண்டு தினம் காலையில் நீராகாரத்தில் ஒருவிராகனிடைப் போட்டுச் சாப்பிட்டுவர வயிறுபொருமல், குன்மம், உதரரோகம், மலக்கட்டு, வயிற்றுவலி, அஜீர்ணம் முதலிய அனேக கடூரரோகங்கள் குணமாகும்.

பஞ்சமுகச்சூரணம்

சுக்கு	நிலவாகைசமூலம்
மிளகு	வாய்விளங்கம்
ஓமம்	

இவைகள் வகைக்குச்சேர் -1, ரவியிலுலர்த்திச் சூரணித்து அத்துடன் சீனி ஒருவீசை சேர்த்து திரிகடிவீதம் சாப்பிட்டுவர பொருமல், வாயு, உஷ்ணம், பித்தம், கபம், வாந்தி முதலிய மகா உபத்திரவத்தைத் தருகின்ற ரோகங்களெல்லாம் குணமாகும்.

கட்டுவாதிச்சூரணம்

மாம்பருப்பு	கறிவேப்பிலை
நெல்லிக்காய்	சுண்டக்காய்
மாதுளம்பழத்தேல்	வெந்தயம்

இவைகளை உலர்த்தி சூரணித்து ஒருவிராகனிடை வீதம் எருமைத் தயிரில் கொடுக்க அதிசாரம் -6, சீதபேதி கிரகணி-11, குணமாகும்.

பித்தராஜாங்கச்சூரணம்

கொத்தமல்லிவிதை	பலம் 6	கிராம்பு	பலம் 1
சதகுப்பை	பலம் 1	கருஞ்சீரகம்	பலம் 1
சீரகம்	பலம் 1	கருவாப்பட்டை	பலம் 1
அதிமதுரம்	பலம் 1		

இவைகளை இளவறுப்பாய் வறுத்துச் சூரணித்து அத்துடன் கற்கண்டு பலம்-6, பொடித்துச் சேர்த்துத் திரிகடிவீதம் தினம் காலையில் கொடுக்க பித்தவாயு, பித்தவெட்டை, பித்தவாந்தி, அஜீர்ணம், வாய்ஊறல் முதலிய பித்தரோகங்களெல்லாம் குணமாகும்.

பரங்கிப்பட்டைச்சூரணம்

நீர்வெடிமுத்து	நெல்லிமுள்ளி
பரங்கிப்பட்டை	திப்பிலி
கடுக்காய்	ஓமம்
தானிக்காய்	திப்பிலிமூலம்

இவைகள் வகைக்குப்பலம் -1, அமுக்கிராவேர்பலம்-4, கிராம்பு, ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி வகைக்கு விராகனிடை -1, இவைகளை இளவறுப்பாய் வறுத்துச் சூரணித்து சீனி பலம்-6, சேர்த்து திரிகடிவீதம் தேனில் கொள்ள மேகசூலை, மேகஊறல், மேககாங்கை, மேகத்தடிப்பு, மேகவாயு முதலிய கடூரரோகங்கள் குணமாகும். பத்தியம் புளி, உப்பு தள்ளவும்.

திப்பிலிச்சூரணம்

திப்பிலி	பலம்	4
உலர்ந்தகுப்பைமேனி	பலம்	4

இவைகளின் சூரணம் வகைக்குசேர் -1, சேர்த்து திரிகடிவீதம் பசுநெய்யில் கொடுக்க பவுத்திரம்-15, குணமாகும்.

பலகாரிச்சூரணம்

கலம்பாவேர் சூரணம்	பலம்	2
அயச்செந்தூரம்	பலம்	2

சுக்குத்தூள்	பலம்	2
ரேவல்சின்னித்தூள்	பலம்	1

இவைகளைச் சேர்த்து 1/2 - விராகனிடை வீதம் தினம் 2-3, தடவை கொடுக்க ரத்தம் ஊறும் பலம் வரும் பாண்டு(5)ங் குணமாகும்.

பித்தஹரச்சூரணம்

இஞ்சி	ஏலம்
வில்வவேர்	நெல்லிவற்றல்
சுக்கு	அதிமதுரம்

இவைகள் வகைக்கு பலம்-1, உலர்த்திச் சூரணித்து அத்துடன் சீரகத்தூள் நெற்பொரித்தூள் வகைக்குப் பலம் -6, சீனிபலம்-3, இவைகளைச் சேர்த்து தினம் 2-தடவை 3-விராகனிடை வீதம் பசும் நெய்யில் சாப்பிட பித்தஞ் சமனமாகும்.

இஞ்சிச்சூரணம்

தோலை நீக்கி நறுக்கின இஞ்சிசேர்-4, சீரகம்சேர்-1, இவைகளை யெலுமிச்சம்பழச்சாறு, கரிப்பான்சாறு, புளியாரைச்சாறு, கரும்புச்சாறு இவைகளில் ஒவ்வொன்றிலும் ஊற வைத்து நிழலில் உலர்த்தி அத்துடன் 1/2-பலம் மிளகையும் கால் கலம் கிராம்பையும் சேர்த்து சூரணித்து தேவையான சீனியும் நெய்யும் சேர்த்து தினம் 2-தடவை பாக்களவு சாப்பிட்டு வர பித்தவாயு, பித்தகாங்கை, அரோசிகம், அன்னத்துவேஷம், குன்மம் முதலிய பலமான ரோகங்கள் குணமாகும்.

தாதுபுஷ்டிச்சூரணம்

சுத்திசெய்த ஜாதிக்காய்	சேர்	1
நீர்முள்ளிவிதை	சேர்	2
இஸ்கோல்விதை	சேர்	2
சீனாகற்கண்டு	சேர்	6

இவைகள்யெல்லாம் சூரணித்துச் சேர்த்து திரிகடி வீதம் தினம் 2-தடவைச் சாப்பிட்டு வர தாதுபுஷ்டி உண்டாகும் பலம் வரும்.

சூரணவகைபரணி

முற்றிற்று.

உ

தேவிசகாயம்

மூன்றாவது லேகியவகைபரணி

ராஜமார்த்தாண்டலேகியம்

ஏலம்	திப்பிலிமூலம்
கிராம்பு	ஜாதிக்காய்
பெருங்காயம்	சிறுதேக்கு
திப்பிலி	முத்தக்காக

இவைகள் வகைக்கு விராகனிடை -2, சீரகம், கருஞ்சீரகம் சிறுநாகப்பூ வகைக்கு விராகனிடை-3, கூகைநீர் விராகனிடை -4, இவைகளை உலர்த்திச் சூரணித்து, சங்கம்வேர் சேர் -1¼ , கண்டங்கத்திரிவேர் செவியம் வகைக்குப்பலம் -5, சிற்றாமுட்டி இருவேலி, கொடிவேலி, சீந்தில், வில்வம், நிலப்பனை, இவைகளின்வேர், திப்பிலி மூலம் வகைக்குப்பலம் -2½ இவைகளை இடித்து ஒருமரக்கால் கலத்தில் போட்டுக் காய்ச்சி (¾) மரக்காலாக்கின கஷாயத்தில் சீனிசேர் (1½) சேர்த்து பாகுசெய்து அதில் மேற்படி சூரணத்தையும், 2 பலம் சுக்குச் சூரணத்தையும், 2-பலம் மிளகு சூரணத்தையும் போட்டு நெய் பலம்-4, தேன்பலம் 4, சேர்த்துக்கிண்டி லேகியமாக்கி தினம் 2-தடவை பாக்களவு (48) நாள் சாப்பிட, கபரோகம் 96, வாதரோகம்-80, குன்மம்-8, விக்கல்-5, பீநிசம்-18, சன்னி-13, சுரம்-64, உப்பிசம், செரியாமை, நெஞ்சி எரிவு, பித்தம்-40, வாந்தி-5, அக்கினி மந்தம் முதலிய மகா கொடிய ரோகங்கள் குணமாகும்.

வில்வாதிலேகியம்

பட்டை நீக்கின வில்வவேர் சேர்-3, இடித்து 4-மரக்கால் ஜலத்தில் போட்டு யெரித்து ஒருமரக்காலாக்கின கஷாயத்தில் நாலுபலம் சீனியைக் கரைத்து பாகுசெய்து, அதில் ஏலம், கிராம்பு, சுக்கு, தாளிசப்பத்திரி சிறுநாகப்பூ வகைக்கு விராகனிடை-5, ஜாதிக்காய், லவங்கப்பட்டை வகைக்கு விராகனிடை -2½, திப்பிலி, செவ்வியம், மிளகு வகைக்குப் பலம்-4 இவைகளை உலர்த்திச் சூரணித்துப்போட்டு, தேன்பலம்-2½ நெய் பலம்-2½ விட்டு லேகியமாக்கி தினம் 2-தடவை பாக்களவு சாப்பிட்டுவர குன்மம்-8, காசம்-5, கிரகணி-11, அதிசாரம்,

வாந்தி-5, பித்தம்-40, இருமல், ஈளை, விக்கல்-5, நெஞ்செரிவு, தேகளரிவு, நீர்க்கட்டு, விஷபாண்டு, உப்பிசம், மலக்கட்டு முதலிய மஹா பயங்கரமான ரோகங்கள் குணமாகும்.

கூழ்பாண்டலேகியம்

பெரும்பூசினிக்காய்ச்சாறு	படி	6
எலுமிச்சம்பழச்சாறு	படி	1½
தாழைவிழுதுச்சாறு	படி	1½
தென்னம்பூச்சாறு	படி	1½
பசும்பால்	படி	13

இவைகளைச் சேர்த்து அதில் 2-சேர் சீனியைப் போட்டுப் பாகுசெய்து அதில் அதிமதுரம், தாளிசப்பத்திரி, சீரகம், கோஷ்டம், மல்லி மாசிக்காய், மிளகு, ஏலம், சாதிக்காய், சாதிப்பத்திரி வகைக்கு விராகனிடை-15, உலர்த்திச் சூரணித்துப்போட்டு நெய்படி -¾ தேன்படி ¾ விட்டு லேகியமாக்கி தினம் 2-தடவை, 5-விராகனிடை வீதம் சாப்பிட்டு வர அஸ்திசுரம், அஸ்திவெட்டை சோகை-9, காமாலை, -13, பிரமியம்-20, நீர்சுருக்கு, உஷ்ணரோகங்கள், வெள்ளைவிழுதல் முதலிய மஹா பலமான ரோகங்கள் தீரும், விந்தூறும், தேகம்புஷ்டிக்கும். பத்தியம், புளி, புகையிலை ஸ்திரிபோகம் நீக்கவும்.

ராஜசிந்தாதிலேகியம்

புளித்தமோர்	படி	3
நாலுமாதத்தியகாடி	படி	3

இவைகளைச்சேர்த்து அதில் 2-சேர் இடித்த புளியிலை, 1½ சேர் துரும்பிடித்த இரும்பு இவைகளைப் போட்டு எரித்து எட்டில் ஒரு பாகமாகும்படி காய்ச்சி வடித்து, அத்துடன் தென்னம்பூ, இஞ்சி, எலுமிச்சம்பழம், சிறுகீரை, சிறுசெருப்படை நெரிஞ்சி, கீழ்க்காய்நெல்லி இவைகளின் சாறு வகைக்குப்படி ¼ , கையாந்தகரைச்சாறு படி ½ பசும்பால் படி-1, இவைகளைச் சேர்த்து, அதில் 3-பலம் சீனியைக் கரைத்து பாகுசெய்து அதில் ஏலம் கிராம்பு, லவங்கப்பட்டை, தாளிசப்பத்திரி, சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தானிக்காய் நெல்லிவற்றல், ஓமம், கோஷ்டம், சடாமாஞ்சில், சீரகம், வால்மிளகு, ஆனைத்திப்பிலி வகைக்குப் பலம்-¼ இவைகளை இளவறுப்பாய் வறுத்துச் சூரணித்துச் சேர்த்து தேன்படி -¼, நெய்படி -¼, விட்டுக்கிண்டி லேகியமாக்கி தினம் பாக்களவு அந்திசந்திச்

சாப்பிட்டுவர பித்தவெட்டை பாண்டு (5) அக்கினி மந்தம், பொருமல், வாயு, கிரகணி (11) சோகை (9), தேக இளைப்பு, தேக வெளுப்பு முதலிய கடூரமான ரோகங்கள் குணமாகும்.

தூதுளைலேகியம்

தூதுளம்பூ	பலம்	6	நன்னரி	பலம்	3
முருங்கைப்பூ	பலம்	6	நெரிஞ்சிமுள்ளி	பலம்	1½
சதாவேரிக்கிழங்கு	பலம்	4½	நிலப்பனங்கிழங்கு	பலம்	1½

இவைகளைச் சூரணித்து ஒருபடி ஆவின்பாலில் 2-சேர் சீனியைப்போட்டுக் காய்ச்சி பாகுசெய்து அதில் மேற்படி சூரணத்தைப்போட்டு நெய்படி -¾, தேன்படி -¼ விட்டுக் கிண்டி லேகியமாக்கி தினம் 2-தடவை பாக்களவு கொடுக்க, மேகம்-20, பிரமியம்-20, பிரமேகம்-21, எலும்புருக்கி முதலிய மஹாபயங்கரமான ரோகங்கள் குணமாகும்.

அமிர்த சஞ்சீவிலேகியம்

பசும்பால்	படி	5	கொடுப்பை	சேர்	1¼,
இளநீர்ஜலம்	படி	5	சிற்றாமுட்டி	சேர்	1¼,
தாழைவிழுது	படி	1¼	சிறுபுள்ளடி	சேர்	1¼
வல்லாரை		1¼			

இவைகளை இடித்து 20-மரக்கா ஜலத்தில் போட்டு எரித்து ஒரு படியாக்கின கஷாயமும் ஒன்றாகச் சேர்த்து அதில் மேல்தோல் நீக்கின (2¼) சேர் இஞ்சியை மைபோலரைத்துக் கரைத்து மறுபடியும் எரித்து ஒருபடியாக வற்றவைத்து அத்துடன் சீனிசேர் -2, கற்கண்டு சேர் -2, சேர்த்து பாகுசெய்து அதில் கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல், ஏலம், கிராம்பு, ஜாதிக்காய், வால்மிளகு, கோஷ்டம், சீரகம், கருஞ்சீரகம், அக்கிராகாரம், சிவதைவேர், ஓமம், நறுக்குமூலம், சுக்கு, மிளகு, திப்பிலி, அறத்தை, ஜாதிப்பத்திரி, தாளிசப்பத்திரி, அதிவிடையம் வகைக்கு விராகனிடை -10, இவைகளை இளவறுப்பாய் வறுத்துச் சூரணித்து, வில்வப்பூ சுத்திசெய்த பறங்கிப்பட்டை வகைக்குப் பலம் -4, பேரீச்சம்பழம், அன்னபேதி, பெருங்காயம், திராட்சப்பழம், கூகைநீர் வகைக்குப்பலம்-1, பச்சைகற்பூரம் கோரோசனை, குங்குமப்பூ, கஸ்தூரி, அபினி வகைக்கு விராகனிடை-1, இவைகளின் சூரணத்தையும், தேற்றாவிதை பலம் -1, பசும்பாலில் ஊறவைத்து அரைத்து அதையும், சீந்திற் சர்க்கரை பலம்-8, நெய்சேர்-2, இவைகளையும் போட்டுக் கிண்டி

பதத்திலிறக்கி தேன்சேர்-2, விட்டுப் பிசைந்து ஒரு தகரடப்பாவில் வைத்துக் கொண்டு தினம் பாக்கு அளவு சாப்பிட்டுவர மேகம்-20, அஸ்தசுரம், அஸ்திகாங்கை, சீதரத்தம் விழுதல், காமாலை-13, வாயு பாண்டு-5, சோகை-9, கிரகணி-11, முதலிய சகல கடூரரோகங்கள் குணமாகும்.

தட்சிணாமூர்த்திலேகியம்

ஒருபலம் சேங்கொட்டை நெறுக்கி ஒருபடி பசும் நெய்யில்போட்டுக் காய்ச்சிவடித்து அதில் அமுக்கிறாவேர், சங்கம்வேர், மூக்கரட்டிவேர், கொடிவேலிவேர் இவைகளின் சூரணம் வகைக்குப் பலம்-2, கோதுமைமாவு படி -¼ சீனிபலம் -5, சேர்த்து செவ்வையாய் மிஸ்ரித்து தினம் காலையில் பாக்களவு பத்துநாள் சாப்பிட சூலை (18)ம் குணமாகும் பத்தியம் உப்பில்லாமை.

வச்சிரவல்லிலேகியம்

சித்தரத்தை	தாளிசப்பத்திரி
திப்பிலி	அக்கிராகாரம்

இவைகள் வகைக்குப் பலம்-2, கண்டங்கத்திரிவேர் பலம்-8, இவைகளை இளவறுப்பாய் வறுத்துச் சூரணித்து (1½) சேர் சீனியை கால்படி பாலில் இட்டுப் பாகுசெய்து அதில் மேற்படி சூரணத்தைப்போட்டு நெய், தேன் வகைக்குப் படி -¼, விட்டு லேகியமாக்கி பாக்களவு தினம்-2-தடவைச் சாப்பிட்டு வர ஈளை, இருமல் சகல கபரோகங்கள் தீரும்.

அருணாசலலேகியம்

பறங்கிப்பட்டை	அமுக்கிறாக்கிழங்கு
சங்கம்வேர்	சித்திரமூலம்வேர்ப்பட்டை

இவைகள் வகைக்குப்பலம்-6, ஏலம், சீரகம், சுக்கு, மிளகு, திப்பிலி வகைக்குப் பலம்-1, இவைகளைச் சூரணித்து 16 பலம் சீனியுடன் தேவையான பசும்பாலைச் சேர்த்து பாகுசெய்து அதில் மேற்படி சூரணத்தையும், தேன் பலம் -5-ம், நெய்பலம்-15-சேர்த்து லேகியமாக்கி தினம் 2-தடவை பாக்கு அளவு சாப்பிட்டு வர மேகவாயு, மேகசூலை, மேகஊறல், மேகத்தடிப்பு, மேககாங்கை முதலிய சகல மேகரோகங்கள் தீரும்.

தாதுபுஷ்டிலேகியம்

நீர்முள்ளிவிதை	பலம்	4
எள்ளு	பலம்	1
கடலைமாவு	பலம்	2
ஜாதிக்காய்	விராகனிடை	1
ஜாதிப்பத்திரி	விராகனிடை	1
கிராம்பு	விராகனிடை	1
புரசம்பிசின்	விராகனிடை	3
நிலைக்கடம்பு	விராகனிடை	2

இவைகளைச் சூரணித்து ஒரு முற்றின தேங்காயில் செலுத்தி வாயைமூடி 3-விரற்கடை கனத்தில் அதற்கு சாணியால் கவசஞ்செய்து புடம்போட்டு தேங்காய் வெடித்தவுடனே யெடுத்து அதிலுள்ள மருந்தையும் 5 பலம் வெல்லமும் சேர்த்து லேகியமாக்கி தினம் 2-தடவை பாக்களவுச் சாப்பிட்டுவர வீரியவிர்த்தியுண்டாகும். இடுப்புவலி திரும் இதுவெகு நல்லமருந்து.

கந்தகலேகியம்

சுத்திசெய்த ஒருபலம் கெந்தகத்தை உருக்கி வெள்ளை அம்மான் பச்சையரிசிச்சாற்றில் வார்த்து எடுத்துச் சூரணித்து அத்துடன் சமமாக கற்கண்டுப் பொடியைச் சேர்த்து பிறகு 20-ரஸ்தாளிபழச்சாறு தேன் சேர்-¼, நெய்சேர்-¼, இவைகளில் சேர்த்து லேகியபதமாக வரும்வரையில் சூரியபுடம் வைத்து கழற்சிக் காயளவு தினம் 2-தடவைச் சாப்பிட்டுவர மேகவாயு, மேகரணம், மேகஊறல், மேகக்கரப்பான், மேககிரந்தி முதலிய பயங்கரமான ரோகங்கள் குணமாகும். இச்சாபத்தியம்.

பூர்ணாதிலேகியம்

சுத்தித்தகஞ்சா	சிறுநாகப்பூ
லவங்கப்பத்திரி	சீரகம்
சிறுலவங்கப்பட்டை	அதிமதுரம்
கசகசா	சுக்கு
சோம்பு	திப்பிலி
ஏலம்	தாளிசப்பத்திரி
தும்பராஷ்டகம்	கிராம்பு

இவைகள் வகைக்குப்பலம்-5, சாதிக்காய், சாதிபத்திரி வகைக்குப்பலம் -2½, மிளகு, தேன் வகைக்குப் பலம்-10, நெய்பலம்-20, சர்க்கரை சேர்-15, எலுமிச்சம் பழம் அல்லது புளிப்பு நாரத்தம்பழரசம் படி-¼, சூரணிக்கிற பதார்த்தங்களை இளவறுப்பாய் வறுத்துச் சூரணித்துப் பழச்சாற்றில் சர்க்கரைசேர்த்து பாகுசெய்து அதில் மேற்படி சூரணத்தைப் போட்டுக் கிளறி தேனையும் நெய்யையும் விட்டு மறுபடியும் கிளறி ஒருவாயகன்ற ஜாடியில் போட்டு மூடி வைத்துக் கொண்டு பெரியவர்களுக்கு பாக்களவும் சிறியவர்களுக்கு குன்றிமணி அளவும் கொடுக்க மாந்தம், அஜீரணம், உஷ்ணபேதி, வயிறிரைச்சல், மந்தம், பசியில்லாமை முதலிய பற்பல ரோகங்கள் குணமாகும்.

குழந்தைகளுக்கு கொடுப்பதரிது

பூர்ணசந்திரோதயலேகியம்

ஒருசேர் மேல்தோல் நீக்கின இஞ்சியைக் கத்தியால் பில்லைகளாக்கி பசும்நெய்யில் பொன்னிறமாய் வறுத்துச் சூரணித்து அத்துடன் சுக்கு, மிளகு, திப்பிலி, கோஷ்டம், அதிமதுரம், சீரகம், மல்லி ஏலம், சாதிக்காய், சாதிப்பத்திரி, வால்மிளகு, கிராம்பு வகைக்கு விராகனிடை-5, இவைகளை இளவறுப்பாய் வறுத்து சூரணித்து சேர்த்து வைத்துக் கொண்டு ஒருசேர் சீனாகற்கண்டை பசும்பாலில் போட்டு பாகுசெய்து அதில் மேற்படி சூரணத்தைப்போட்டு தேன் சேர்-¼, நெய் சேர்-1, விட்டுக்கிண்டி செவ்வையாய் மிஸ்ரித்து பதத்தில் இறக்கி ஒருபீங்கா னல்லது தகரடப்பாவில் போட்டு வைத்துக் கொண்டு தினம் 2-தடவை பாக்களவு சாப்பிட்டு வர உஷ்ணவாயு, அஜிரணம் அக்கினிமந்தம், வயிற்றுவலி, குன்மம், காசம் முதலிய பற்பல பலமான ரோகங்கள் குணமாகும்.

கதலிலேகியம்

100-ரஸ்தாளிப்பழத்துடன் பெரும் உமியைச் சேர்த்துப் பிசைந்து இளநீர் ஜலம்போல் வருவதையெடுத்து அத்துடன் சீரகம் பலம்-1, கசகசா பலம்-1, இவைகளை இளவறுப்பாய் வறுத்துச் சூரணித்துப் பொடியையும் சீனிசேர்-1, சாதிக்காய்தூள், சாதிப்பத்திரிதூள் வகைக்குப் பலம்-½, இவைகளையும் சேர்த்து 15-நாள் சூரியபுடம் போட்டு லேகிய பதத்தில் எடுத்து வைத்துக் கொண்டு 5-விராகனிடை வீதம் தினம் 2-தடவைச் சாப்பிட்டு வர உஷ்ணவாயு, பித்தவாயு, அரோசிகம், அன்னத்துவேஷம் குணமாகும்.

கண்டத்திப்பிலி லேகியம்

சுக்கு, கண்டத்திப்பிலி வகைக்குப்பலம் -1, ஓமம் பலம்-2, இவைகளைச் சூரணித்து 4-பலம் பனைவெல்லத்தை ஜலத்தில் போட்டு பாகுசெய்து அதில் சேர்த்து நெய்பலம்-1, விட்டு லேகியமாக்கி தினம் பாக்களவு 2-தடவை சாப்பிட்டு வர வாயு, அஜீர்ணம், மந்தாக்கினி, மலபந்தம் குணமாகும்.

இஞ்சிலேகியம்

இஞ்சி	முள்ளங்கிழங்கு
கண்டங்கத்திரி	எலுமிச்சம்பழம்
நெரிஞ்சி	

இவைகளின் சாறு வகைக்குப்படி -½, பசும்பால்படி -¼, இவைகளைச் சேர்த்து அத்துடன் 4-பலம் சீனியைக் கரைத்து பாகுசெய்து அதில் சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலம், கிராம்பு, சீரகம், வாய்விளங்கம், தாளிசப்பத்திரி வகைக்கு விராகனிடை -5, சூரணித்துப்போட்டு தேன்படி -¼, நெய்படி -¼, விட்டு லேகியமாக்கி தினம் 2-தடவை பாக்களவு 48-நாள் சாப்பிட்டு வர வாந்தி-5, சூலை-18 வாதம்-80, பித்தம்-40, இசிவு கன்மம்-8, அரோசிகம் பொருமல் கடுப்பு மயக்கம், கபாலக்குத்து, பித்தயெரிவு, அன்னத்துவேஷம் தீரும் இச்சாபத்தியம்.

லேகியவகைபரணி

முற்றிற்று.

அனுபோகவயித்திய பிரம்மரகசியம் 1,2,3,4,5,6, 7,8 பாகம்வரை அச்சிட்டு விற்பனைசெய்து வருகிறோம் 5-ம் பாகம், 6-ம் பாகம், 7-ம் பாகங்களில் அநேக அற்புத முறைகளும் கடைசி 8-ம் பாகம் முழுமையும் ஒவ்வொரு. மருந்துகள் சுத்திசெய்யும் பாகமும் இன்னயின்ன நோயைக் கண்டிக்குமென்றும் விவரமாக சொல்லப்பட்டிருக்கிறது.

உ

தேவிசகாயம்

நாலாவது

கிருதவகைபரணி

மாணிக்கக்கிருதம்

தேங்காய்ப்பால்	படி	2
பொடுதலைச்சாறு	படி	2

இவைகளில் 16-படி ஆற்றுஜலத்தை எட்டிலொன்றாகும்படி காய்ச்சி சேர்த்து எரித்து நெய்யைவடித்து ஒரு விராகனிடை வீதம் தினம் காலைமாலை கொடுத்துவர கருநாக்குச் சூலை மேல்வாப்புண் உண்ணாக்கை அரிக்கும் கிரந்தி பல்லீறை அரித்துத்திண்ணும் கிரந்தி நாக்கு அரிப்பு, நாக்குப்புண் முதலிய மகா கொடியரோகங்கள் குணமாகும்.

புளியாரைகிருதம்

புளியாரைச்சாறு	படி	2	தயிர் தண்ணீர்	படி	½
பசும்நெய்	படி	½	வெள்ளாட்டுப்பால்	படி	½

இவைகளைச் சேர்த்து அதில் சுக்கு, மிளகு, திப்பிலி வில்வப்பிஞ்சு, வாலுமுவை அரிசி, காட்டாத்திப்பூ, கோரைக்கிழங்கு, சீரகம், அதிவிடையம், இலவம்பிசின், மல்லி, நெய்தற் கிழங்கு, விலாமிச்சுவேர், சிற்றாமுட்டி, ஓமம் இஞ்சி, பொன்முசுட்டை கண்டத்திப்பிலி, மாதுளமபிஞ்சி வகைக்கு விராகனிடை 2½ ஜலத்தால் அரைத்துக் கரைத்து யெரித்து பதத்தில் இறக்கி தினம் 2-தடவை ஒரு விராகனிடை வீதம் கொடுத்து வர குன்மம்-8, கிராணி-11, வயிற்றுவலி, கரம், நாபம் அரோசிகம், சோகை-9, பிலீசும்-4 லிவர்வியாதி மூலம்-8 ஆமக்கட்டிகள் கிருமிரோகம் முதலிய கடூரரோகங்கள் குணமாகும் பலம் தேஜகதீபனம் இவைகள் உண்டாகும்.

கூழ்ப்பாண்டகிருதம்

பெரும்பூசினிக்காய்ச்சாறு	படி	1
செவ்விளநீர்ஜலம்	படி	½
குமரிச்சாறு	படி	½

தென்னம்பூச்சாறு	படி	½
தாழைவிழுதுச்சாறு	படி	½
பசும்பால்	படி	1
நெய்	படி	1

இவைகளைச்சேர்த்து அதில் குரோசாணி ஓமம், மல்லி, கற்கடகசிங்கி, காட்டாத்திப்பூ, சாதிக்காய், சாதிப்பத்திரி, மாசிக்காய், கடுக்காய், தாணிக்காய், நெல்லிவற்றல், வால்மிளகு, சீரகம், ஏலம் வகைக்கு விராகனிடை -1½ , பசும்பாலாலரைத்துக் கரைத்து எரித்து வடித்து ஒருபலம் கற்கண்டைப் பொடித்துப் போட்டு வைத்துக்கொண்டு 3-விராகனிடை கிருதத்தில் கொஞ்சம் அப்பிரேக செந்தூரத்தை வைத்துக் கொடுக்க மேகம்-20, பிரமேகம்-21, காமாலை-13, கிரகணி-11, பித்தம்-40, உஷ்ணம், கைகால் எரிவு, நீர்க்குத்து, அஸ்திவெட்டை, அஸ்திகாங்கை, எலும்புருக்கி முதலிய பயங்கரமான ரோகங்ள் அதிசீக்கிரத்தில் குணமாகும்.

திரிலோககிருதம்

பெரும்பூசினிக்காய்ச்சாறு	படி	½
நெல்லிக்காய்ச்சாறு	படி	½
குழிமிட்டான்கிழங்குச்சாறு	படி	½
கரும்புச்சாறு	படி	½
சதாவேரிக்கிழங்குச்சாறு	குருணி	5
நெய்	படி	2

இவைகளைச் சேர்த்து அதில் இந்துப்பு, ஓமம், சிறுதேக்கு, கோரைக்கிழங்கு, கோஷ்டம், சந்தணம், சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல், வெட்பாலையரிசி, மல்லி, ஏலம், கிராம்பு, லவங்கப்பத்திரி, சிறுநாகப்பூ, சீரகம், விலாமிச்சுவேர், கூகைநீர், அதிமதுரம், திராக்ஷை, பேரீச்சங்காய் வகைக்கு விராகனிடை -1½, அரைத்துக் கரைத்து யெரித்து வடித்து ஒருகரண்டிவீதம் தினம் 2-தடவை சாப்பிட்டு வ்ர கிரிச்சரம், நீர்க்கடுப்பு, எலும்புருக்கி, மேகசுரம், கைகால் எரிவு தீரும். தாதுவிருத்தி தேகபுஷ்டி உண்டாகும்.

வல்லாரைகிருதம்

வல்லாரைச்சாறு	படி	2
பொடுதலைச்சாறு	படி	2
பொன்னாங்காணிச்சாறு	படி	2
எலுமிச்சம்பழச்சாறு	படி	2

ஆவின்பால்	படி	4
நெய்	படி	4

இவைகளைச் சேர்த்து அதில் அதிமதுரம், ஏலம், கிராம்பு, வால்மிளகு, சாதிக்காய், சாதிப்பத்திரி, மாசிக்காய், கடுக்காய்ப்பூ வகைக்கு விராகனிடை-4, மேற்படி பாலால் அரைத்துக் கரைத்து எரித்து வடித்து அதில் 4-பலம் கற்கண்டுப் பொடியைச் சேர்த்து தினம் 3-வராகனிடை கிருதத்தில் கொஞ்சம் ரசபஸ்பம் சேர்த்துக் கொடுக்க மேகம்-20, கிரந்தி-9, பிரமியம்-20, குஷ்டம்-18, மேகசூலை, சொறி, சிரங்கு, நாபிநோய், யோனிப்புற்று, நீர்க்கடுப்பு முதலிய மஹா கொடிய ரோகங்கள் குணமாகும்.

தூதுளைகிருதம்

தூதுளைசமூலம்	பலம்	100
கண்டங்கத்திரி	பலம்	50
கறிமுள்ளிவேர்	பலம்	50

இவைகளை இடித்து 80-படி ஜலத்தில்போட்டு எரித்து 10 படியாக்கின கஷாயத்தில் பசு நெய், பால் வகைக்குப்படி -5, இஞ்சிச்சாறு படி -1¼ சேர்த்து அதில் சிறுநாகப்பூ, நன்னாரிவேர், கொடிவேலிவேர், சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல், கோஷ்டம், தாளிசப்பத்திரி வகைக்கு விராகனிடை -5, செவ்வல்லிக்கோடி சடாமாஞ்சில் சிறுகாஞ்சொரிவேர், ஆடாதோடைவேர், அதிமதூரம், சீரகம், தேற்றாவிதை வகைக்குப் பலம்-1¼, கண்டங்கத்திரிவேர் முசுமுசுக்கைவேர் வகைக்குப் பலம் -2½ மேற்படி பாலாலரைத்துக் கரைத்து எரித்து வடித்து அதில் தேன்படி-½, கற்கண்டு பலம் -5, சேர்த்து தினம் 2-தடவை 2-விராகனிடை வீதம் கொடுக்க ஈளை, இருமல், சுவாசம்-5, காசம்-5, பொருமல், இரைப்பு முதலிய கடூரரோகங்களெல்லாந் தீரும்.

மரத்துவெள்ளை நவநீதம்

நல்லெண்ணெய்	சேர்	¼
கருநொச்சிச்சாறு	சேர்	¼
பசும்பால்	சேர்	¼
எலுமிச்சம்பழச்சாறு	சேர்	¼

இவைகளைச் சேர்த்துக் காய்ச்சி வடித்து அதில் மரத்து வெள்ளை பலம்-1½, கல்நார் பலம் -1, கற்பூரசிலாசத்து பலம்-1, இவைகளைச்

சூரணித்துச் சேர்த்து மறுபடியும் யெரித்து ஜலத்தில் ஒரு துளிபோட அது முழுகிப்போகும்பதத்தில் இறக்கி ஒரு சட்டியில் ஜலத்தை வைத்துக்கொண்டு அதில் ஊற்றிக் கசக்கி ஜலத்தை நீக்கவும், இவ்விதமாய 4,5-தடவை செய்து அத்துடன் எருமைவெண்ணெய் சேர்-½, சேர்த்து ஜலத்தில் போட்டுக் கசக்கி ஜலத்தை நீக்கி மறுபடியும் புது ஜலத்தைச் சேர்த்துக் கசக்கவும், இவ்விதமாய் 24 தடவைக் கசக்கி எடுத்து தினம் 2-தடவை பாக்களவு கற்கண்டுப் பொடியில் சாப்பிட உஷ்ணம் வயிற்றிலுள்ளரணம் நீர் எரிவு நீர் அடைப்பு நீர்த்தாரைப்புண் முதலியவைகள் குணமாகும், இதை தினம் புதுஜலத்தில் போட்டு வைக்க வேண்டியது.

பேரீச்சங்காய் கிருதம்

கிராம்பு	பலம்	½	திப்பிலி	பலம்	½
சீரகம்	பலம்	½	ஜாதிக்காய்	பலம்	¼
மிளகு	பலம்	½	கசகசா	பலம்	¼

இவைகளைச் சூரணித்து ஒருபலம் கொட்டை நீக்கின பேரீச்சங்காயில் செலுத்தி அவைகளை ஒருசேர் பசும்நெய்யில் போட்டு தேன்சேர்-ஆழாக்கு விட்டுக்காய்ச்சி எடுத்து தினம் ஒரு பேரீச்சங்காய் வீதம் சாப்பிட்டு வர உஷ்ணவாயு, பித்தவாயு, அக்கினிமந்தம், அன்னத்துவேஷம், பாண்டு சோகை முதலியவைகள் குணமாகும் ரத்தத்தை விருத்திக்கும்.

பொன்னாங்காணிகிருதம்

பொன்னாங்காணிச்சாறு	படி	2
பொற்றலைக்கையாந்தகரைச்சாறு	படி	2
எலுமிச்சம்பழச்சாறு	படி	2
பசும்நெய்	படி	2
பசும்பால்	படி	2

இவைகளைச் சேர்த்து அதில் அதிமதுரம் பலம்-4, பசும் பாலால் அரைத்துக் கரைத்து எரித்து வடித்து ஒரு சீசாவில் போட்டு அதில் சாதிக்காய், சாதிப்பத்திரி, கோரோசனை, கற்கண்டு வகைக்கு விராகனிடை-2, சூரணித்துப் போட்டு தினம் காலை மாலை 2-விராகனிடை வீதம் கொடுக்க மூலச்சூடு, உஷ்ணரோகங்கள், கைகால்எரிவு, தேகயெரிவு தேகம் வாய் நாற்றம், பிரமியங்கள் 20-ம் குணாகும் கண்கள் குளிர்ச்சியாகும்.

புளியாரைக்கிருதம்

புளியாரைச்சாறு	படி	2
வள்ளிக்கிழங்குச்சாறு	படி	2
பொன்னாங்காணிச்சாறு	படி	2
செவ்விளநீர்ஜலம்	படி	4
ஆவின்நெய்	படி	10
ஆவின்பால்	படி	10

இவைகளைச் சேர்த்து அதில் சீரகம், மாசிக்காய், அதிமதுரம் வகைக்கு விராகனிட-8, பசும்பாலால் அரைத்துக் கரைத்து யெரித்து வடித்து ஒரு சீசாவில் போட்டு அதில் ஏலம், ஜாதிக்காய், ஜாதிப்பத்தரி வகைக்கு விராகனிடை-4 கற்கண்டு பலம்-2, இவைகளைச் சூரணித்துப் போட்டு தினம் 2-தடவை 3-விராகனிடை வீதம் கொடுக்க பித்தவாயு, பித்தவெட்டை, பித்தயெரிவு, பித்தமயக்கம், நீர்ச்சுருக்கு, வாந்தி, அரோசகம் குணமாகும்.

கிருதவகைபரணி

முற்றிற்று.

இவ்வளவு வெள்ளிய நடையாய் அச்சிட்டு பயிரங்கப் படுத்திய அனுபோக வயித்தியத்திற்கு சரக்கு சுத்திகள் சொல்லவில்லையென கவலைப்படவேண்டாம் இதற்கு முதற் பாகத்திலும் எட்டாம் பாகத்திலும், சுத்திகள் விவரமாக தெரிந்துக் கொள்ளவும்.

இனி ஏழாம்பாகத்தில்

அற்புதமுறைகள் சொல்லப்படும்.

உ

தேவிசகாயம்

ஐந்தாவது

பஸ்மவகைபரணி

ரஜதபஸ்மம்

அரிதாளம் பலம்-1, கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாற்றால் ஒரு சாமம் அரைத்து சுத்தி செய்த வெள்ளித்தகடு பலம்-3-க்கு கவசமிட்டு சீலைமண்செய்து 30-எருவில் புடம் போடவும் இவ்விதமாகவே 14-புடம்போட்டு எடுத்துப் பார்க்க மகா வெண்மையான ட்ஸ்மமாயிருக்கும் இதை அனுபானத்திலிடமேகம் பிரமேகம் மூத்திரரோகம் அஸ்திசுரம் முதலிய அநேக பயங்கரமான ரோகங்கள் குணமாகும்.

சுத்திசெய்த வெள்ளியைத் தகடுகட்டி ரசபஸ்மம் வங்கபஸ்மம், நாகபஸ்மம் இம்மூன்றையுங்கூட்டி உமிழ் நீர்விட்டு மைபோலரைத்து ெள்ளிக்குச் சமயிடைசேர்த்து ரவியில் உலர்த்தி சீலைமண்செய்து சுண்ணாம்புக்குள் வைத்து வராகப் புடம்போட்டு எடுத்துப் பார்க்க பஸ்மமாயிருக்கும் அதில் ஒரு குன்றிமணியிடை, தேனிலிட, கல்லடைப்பு, சதையடைப்பு, கிரிச்சுரம், காசம், இரைப்பு லிங்கப்புற்று, யோனிப்புற்று, கிரந்தி மேகம் முதலிய பயங்கரமான ரோகங்களும் குணமாகும்.

தாம்பிரபஸ்மம்

அண்டத்தோல்	பலம்	2	வெங்காரம்	பலம்	2
வீரம்	பலம்	2	நவக்ஷாரம்	பலம்	2
பூநீர்	பலம்	2	பூரம்	பலம்	2
சீனாகாரம்	பலம்	2	வெடியுப்பு	பலம்	2

இவைகளை ஒருபடியெலுமிச்சம் பழச்சாற்றால் அரைத்து பில்லைத்தட்டி உலர்த்தி, பத்துபலம் நாகூர்செல்லியை குகையில் போட்டு உருக்கி அதின்முகத்தில் ஒவ்வொரு பில்லைக் கொடுத்து மறுபடியும் உருக்கி 2-படி எலுமிச்சம்பழச்சாறும் ½ படி முலைப்பாலும் சேர்த்து ஒவ்வொரு துளியாக விட்டு சுருக்குக் கொடுத்து தாளகம்பலம்-2, வெங்காரம், நவாக்ஷாரம் வகைக்குப்பலம்-5, இவைகள்

மூன்றும் கல்வத்தில் இட்டு திருகுக்கள்ளிப்பால் படி -2, பூநீர், பூரம், வெடியுப்பு, சீனாகாரம், நவக்ஷாரம், வீரம், கல்லுப்பு வகைக்கு விராகனிடை -2, இவைகள் எட்டும் மூன்றுநாள் சேர்த்து வைத்து அதின் ஜலத்தால் 8-நாள் அரைத்து பில்லைத்தட்டி உலர்த்தி முதலில் கொடுத்தபடி ஒவ்வொரு பில்லையாக உருக்கின முகத்தில் கொடுக்க வெங்கலம் போலாகும் இந்த தாம்பிரம் ரசம், வீரம், கற்பூரம், வெள்ளூரம் வகைக்குப்பலம்-4, வெள்ளைப் பாஷாணம் பலம்-1, இவைகள் ஆறும் வெள்ளெருக்கம்பாலால் 8-ஜாமம் அரைத்து பில்லைத்தட்டி உலர்த்தி ஒரு சிறு கலயத்தில் போட்டு ஒரு ஓட்டால் வாயைமூடி ஏழுசீலைமண் வலுவாய்ச் செய்து சுஜபுடம்போட பஸ்மமாகும், அதில் ஒரு குன்றிமணியிடை தகுந்த அனுபானத்திலிட மேகம்-20, குஷ்டம்-18, பிரமேகம்-21, க்ஷயம்-4, சூலை-18, பவுத்திரம்-15, குன்மம்-8, வாதம்-30, பித்தம்-40, சிலேஷ்மம்-20, கபரோகங்கள் -96, முதலிய மகாபயங்கரமான ரோகங்கள் குணமாகும். பத்தியம் அன்னமும் பசும்பாலும் சாப்பிடவும்.

வங்கபஸ்பம்

மனோசிலையை வெற்றிலைச்சாற்றால் அரைத்து அதற்கு சமமாக சுத்திசெய்த ஈயத்தகடுகளுக்கு சுவசமிட்டு ஓட்டிலிடடு மேல்ஓட்டால்மூடி சீலைமண்செய்து கஜபுடம்போடவும் இவ்விதமாகவே 32-புடங்கள்போட்டு எடுத்துப் பார்க்க வெகுவெண்மையான பஸ்மமாயிருக்கும் இதை அனுபானத்திலிட மூர்ச்சை அபஸ்மாரம், கபரோகம், அதிசாரம், கிரகணி, பேதி முதலிய அநேக பலமான ரோகங்கள் குணமாகும்.

கருவங்கபஸ்பம்

சுத்திசெய்த 3-சேர் காரீயத்தை உருக்கி 8-சேர் சங்கயிலைச்சாற்றில் 21-தடவை வார்த்து பிறகு அதை ஒரு கம்பியாக்கி கத்தியால் சீவினபொடியை தாமரையிலைச்சாற்றால் 4-ஜாமம் அரைத்து கல்வத்தோடு ரவியில்வைத்து உலர்த்தி பிறகு அதை ஒரு சட்டியில்போட்டு ஆகாச தாமரையிலையை கொஞ்சங் கொஞ்சமாகப் போட்டு வறுக்க ஈயத்தைபொடியாக்கிவிடும், அந்தப் பொடியும் அதற்குச் சரியானயிடை கோழிக்குஞ்சுபொரித்த முட்டையின் உள்தோலை நீக்கி மேலோட்டைச் சேர்த்துச் சூரணித்து ஒருகுகையில் போட்டு ஓட்டால் வாயைமூடி 7-சீலைமண் வலுவாய்ச்செய்து உலர்த்தி உலையில் வைத்து துருத்தியால் 3-4 மூட்டம் போட்டு குகையை

உருகுஞ்சமயத்தில் எடுத்து ஆற்றி குகையை உடைத்துப்பார்க்க பஸ்மமாயிருக்கும் அதில் ½ குன்றிமணியிடை நெய்யில் தினம் காலை மாலை 3-4-நாள் கொடுத்து பிறகு 10-நாள் பொறுத்து 3-4 நாள் கொடுக்க மூர்ச்சை-4, அபஸ்மாரம்-4, பயித்தியம்-6, முதலிய மகாகொடிய ரோகங்கள் குணமாகும்.

ரசபஸ்மம்

ஒருமண்பாண்டத்தில் ஒருபலம் கந்தகத்தைப் போட்டு காடாக்கியாய் யெரித்து கந்தகம் உருகும் சமயத்தில் 7-பலம் ரசத்தைவிட்டு துளாவிக் கொண்டிருந்தால் ரசம் கந்தகத்துடன் கலந்து கறுத்துத் தூளாகிவிடும் பிறகு வேறொரு பாண்டத்தில் பாதிக்குச் செங்கல்பொடியைப் போட்டு அதின்மேல் 8-ஆழாக்கு கறி உப்பைக்கொட்டி அதின்மேல் ரசகந்தியை வைத்து வேறொரு பாண்டத்தால் மூடி பொருந்துவாய்க்குக் களிமண் தடவி ஏழுசீலைமண் வலுவாய்ச் செய்து காடாக்கினியாய் நாலுஜாமம் எரித்துக் குளிரவைத்து உடைத்துப் பாரத்தால் மேல்பாண்டத்தில் ரசபஸ்மம் பதங்கித்திருக்கும் அதை எடுத்து ½ பணவிடைவீதம் அனுபானத்திலிட சுரம்-64, மாந்தம்-8, காசம்-5, சன்னி-3, நேத்திரரோகம் -94, அதிசாரம்-6, மேகம்-21, முதலிய பற்பல கடூரரோகங்கள் குணமாகும்.

வேறு ரசபஸ்மம்

காட்டுக்கள்ளியும், கெந்தகமும் ஓர்நிறையாய் அரைத்து பில்லைதட்டி கலசத்திலிட்டுத் தயிலமிறக்கி வாலைரசத்தில் விட்டு ரவியில் வைக்க நீறும் அதை அந்தத் தயிலத்தாலாட்டி பில்லை செய்து கொண்டு நன்றாய்வெந்த செங்கல்லைப் பாக்கு போலுடைத்து ஒரு குண்டுசட்டியில் அரைவாசி போட்டு அதின்மேலொருபடி உப்புக்கொட்டி பரப்பி அதில் மேற்படி பில்லையை வைத்து மூடி ஏழுசீலைமண்செய்து அடுப்பேற்றிக் காடாக்கினியாய் மூன்று ஜாமம் எரித்து ஆற்றி எடுக்கப் பதங்கித்திருக்கும் அதையெடுத்து பணவிடை பனைவெல்லம் முதலான அனுபானங்களில் 7-நாட்கொள்ள குஷ்டம், குரைநோய், பவுத்திரம், கழலை, காமாலைவிப்புருதி, வீக்கம், வெள்ளைபடருதல், சூலை, அரையாப்பு, யோனிப்புற்று, மூலமுளை, கண்டமாலை, கிரந்தித்தடிப்பு, வெள்ளை கருங்கரப்பன் வண்டுகடி, மேகம், வாயுகுன்மம் தீரும் வாய்வேகாது.

ஒருபலஞ் சூதத்தை முந்திரிக்கொட்டைத் தயிலத்தாலும் விடந்தீஞ்சான் மூலிச்சாற்றாலும் வால்தேவிக் கிழங்குச் சாற்றாலும்

வெள்ளெருக்கம் பாலாலும் வகைக்கொரு ஜாமமாட்டி பில்லைசெய்து முன்போலெரித்து பதங்கித்து பணவிடை வெல்லம் முதலான அனுபானங்களிலிட மேற்காட்டிய வியாதிகள் தீரும் வாய்வேகாது.

பள்ளிரண்டு விராகனிடை சுத்திசெய்த கெந்தகத்தையும் 80-விராகனிடை இரசத்தையும் இரசசெந்தூரத்திற் சொல்லியபடி ஒன்றாய்த்தொந்திப் பொடித்து முன்போற் பதங்கித்துக் கொண்டு நாலுவராகனிடை ஓமத்தைப்பொரித்து அதற்கு நிகர் கருப்புக்கட்டியும் 8-விராகன் மேற்படி பற்பமும் இதனடியிற் சொல்லியிருக்கிற கெந்தகபற்பமுஞ் சேர்த்து மெழுகுபோலாட்டி 16-மாத்திரைசெய்து 8-நாள் அந்தி சந்தி கொள்ள மேற்சொல்லிய வியாதிகள் தீரும்.

கெந்தக பஸ்மம்

பூநீரும் வெடியுப்பும் ஓர்நிறையாய்ச் சுத்தஜெலம் விட்டு அரைத்து பில்லைசெய்து காயவைத்து ஓட்டிலிட்டு அதற்குக் கீழும்மேலும் இரண்டு விரற்கடை உவர்மண்போட்டு இரண்டு ஜாமமெரிக்கச் சுண்ணமாகும் அதற்குப்பாதி சாரஞ்சேர்த்து மெல்லிய சீலையால் முடிந்து ஒரு பீங்கானில் தொங்கவிட்டு மூடி பூமியிற்புதைத்து ஒருமண்டலஞ் சென்றெடுக்கச் செயநீரிறங்கும் அதைச் சீசாவில் அடைத்துக் கொண்டு கெந்தகமுஞ்சீனமும் ஓர்நிறையாய்க் கல்வத்திலிட்டு மேற்படி செயநீரால் அரைத்து பில்லைசெய்து காயவைத்து சிறுசின்னியிலையை யரைத்து குகைசெய்து அதில் பில்லையை வைத்து மூடிக் காயவைத்து அதற்குமேல் ஏழுசீலைமண் செய்து காய வைத்து அஞ்செருவிற் புடம்போட நீறும் இந்தப்படி தாளகத்தையும் நீற்றி மேற்படி பஸ்மமும் ரசபஸ்மமும் வகைக்குப் பணவிடை தேனிலாவது மற்ற அனுபானத்திலாவது கொள்ள ரசபஸ்மத்திற் சொல்லிய வியாதிகள் தீரும்.

கெந்தகமும், சீனிக்காரமும் ஓர்நிறையாய்ப் பொடித்துக் கவசத்தில் இட்டு சிறுசின்னிச் சாறுவிட்டுப் பிசறி ரவியிலுலர்த்தி மேலோடுமூடி மூன்றெருவிற் புடம்போட நீறும் அனுபானங்களிலிட மேற்படி வியாதிகள் தீரும்.

சுத்திசெய்த கந்தகத்திடை காளானைச் சேர்த்தரைத்து பில்லைசெய்து காயவைத்து ஓட்டிலிட்டுச் சீலைசெய்து காடைப்புடம் போட தீரும்.

வீரபஸ்மம்

ஒருபடி பூநீரை நாலுபடி அமுரியிற் கரைத்துத் தெளிவிறுத்து ஒரு பாண்டத்தில்விட்டு அதில் வாயிற் சீலையால் ஏடுகட்டி அதின்மேல் அஞ்சுவிராகனிடை வீரக்கட்டியை வைத்துமூடி நீர்வற்றும்வரை தீயெரிக்கப் பஸ்மமாகும் அதை கிரந்தி நாயகச்சாற்றால் 12-ஜாமமெரித்து பில்லைசெய்து காயவைத்து மேற்படி யிலையை அரைத்துக் குகைசெய்து அதற்குள் மேற்படி பில்லையை வைத்துமூடி ஒருசட்டியில் நாலு விறற்கடை மணற்போட்டு அதின்மேல் வைத்து நாலுநாழிகையெரிக்கச் சிவந்த நிறமான பஸ்மமாயிருக்கும் அதிற் பணவிடை திரிகடிச்சூரணத்தில் வைத்து தேன்விட்டு மத்தித்து மூன்றுவேளை கொடுக்கச் சன்னிதோஷம் கபக்கட்டு வாயு வாதந்தீரும்.

தாளகபஸ்மம்

ஒரு பலத்தாளகத்தை பெரும்பூசினிக்காயை யிடித்துப் பிழிந்த சாற்றில் இரண்டு ஜாமம் வேகவைத்தெடுத்துச் சுண்ணாம்புக் கல்லுக்குள் வைத்து நூறுதபா நீற்றியெடுத்து நல்லெண்ணெயி லிரண்டு ஜாமமெரித்து சாரம், பூநீர் சவுட்டுப்பு, சுண்ணாம்பு, கல்லுப்பு, சூடன். சீனம் வெடியுப்பு, இந்துப்பு வகைக்குப்படி-1, நாலுபடி சிறுநீரிற்கரைத்துத் தெளிவிறுத்து கட்டிக்குச் சுருக்குக்கொடுக்க சுத்தியாகும். மூக்கரைச்சாரணை சமூலம் ஒருதேங்காய்ப் பிரமாணமரைத்து அதற்கு நடுவில் கட்டியைப்பொதித்து சட்டிக்குள் வைத்து மேற்சட்டிமூடி சீலைசெய்து தீபம்போல்நாலுஜாமம் யெரிக்கப் பஸ்மமாகும் அதில் பணவிடை தேனிற்கொடுக்க க்ஷயம் கபாலசூலை பெரும்பூசினிக்காய்ச் சாற்றில் மேகமும் மற்ற அனுபானங்களில் கிரந்தி, சூலையும். சுரம் குஷ்டமுந்தீரும்.

சுத்திசெய்த ஒருபலத்தாளகத்தை வாழைக்கிழங்குக்குள் வைத்துமூடி ஏழு சீலைமண் செய்துகாயவைத்து அன்பதெருவிற்புடம் போட நீறும் அனுபானத்திலிட சிலேத்ம நோய் 96-ம் சுரம், அரையாப்பு கிரந்திசூலை குட்டமுந்தீரும்.

சுத்திசெய்த ஒருபலத்தாளகத்திற்கு ஈருள்ளிச்சாறு, சிவகரந்தைச்சாறு வகைக்குப்படி-1, சுருக்குக் கொடுத்து சிற்றண்டம், பேரண்டம், பூநீர் இவைகளின் சுண்ணத்தை ஓர் நிறையாய் எருக்கம்பாலாலாட்டி கட்டிக்குக் கவசஞ்செய்து காயவைத்து புரசம்பட்டை, புளியம்பரணை, நாயுருவி இவைகளின் சாம்பல் வகைக்குப்படி-2, ஒரு சட்டியிற்போட்டு அதற்கு நடுவில் வைத்து,

மேற்சட்டிமூடிச் சீலைமண்செய்து நாலுஜாமம் கமலாக்கினியாய் தென்னமட்டையாலெரிக்கப் பஸ்மமாகும் அதில் பணவிடையும் ரசபஸ்மம் பணவிடையுஞ் சேர்த்து அனுபானத்திலிட மேற்படி வியாதிகள் தீரும்.

துருசுபஸ்மம்

துருசுக்கட்டியைக் கவுதும்பைச் சாற்றில் ஆறுஜாமம் ஊரவைத்து ரவியிலுலர்த்தி அப்பாலந்தச் சாற்றால் ஒரு ஜாமமாட்டி பில்லைசெய்து காயவைத்து மேற்படி இலையை யரைத்து அதற்கு அங்கிபூட்டி ஏழுசீலைசெய்து கதுவாலிப்புடம் போட்டு கருஊமத்தஞ் சாற்றாலாட்டி பில்லைசெய்து காயவைத்து மேற்படி இலையை யரைத்து அங்கிபூட்டி ஏழு சீலை செய்து முன்போற் புடம்போட நீறும் அதையனுபானத்திலிட கரம்கெண்டை ஜன்னிதோஷம் கட்டி அஷ்டகுன்மம் பக்கவாயு, ஈளை, இளைப்பு, காசம், வயிற்றுப்பொருமல், பெருவயிறு, வீக்கம், காமாலை, பித்தம், சோகை பாண்டு, விஷநீர்க்கோர்வை தீரும் மேற்படி பஸ்மத்தை சாறுவராத்தளை களிலிடச் சாறு வரும்.

தாம்பிரபஸ்மம்

தாம்பிர செந்தூரத்திற் சொல்லியபடி சுத்திசெய்த தாம்பிரம் வீரம் இரசம், சூடன், வெள்ளூரம் வகைக்குப் பலம்-1, பாஷாணம் பலம் ¼ . இவைகளை வெள்ளெருக்கம் பால்விட்டு ஒருநாளாட்டி பில்லைசெய்து காயவைத்து ஓட்டிலிட்டுச் சீலை செய்து கெஜபுடம்போட பஸ்மமாகும். அதிற் பணவிடை அனுபானங்களிலிட பிரமேகம், மேகம், க்ஷயம், பவுத்திரம், சூலை-18, குன்மம், வாயுவகை, பித்தமுதலான வியாதிகள் தீரும் பத்தியம் ஆவின்பாலும் அன்னமும் கொள்ளவும்.

சுத்திசெய்த தாம்பிரம் விராகினிடை-12, சூதம், கெந்தி, தாளகம் வகைக்கு விராகனிடை-8, இவைகளை வெள்ளெருக்கம் பாலாலாட்டி பில்லைசெய்து காயவைத்து ஓட்டிலிட்டுச் சீலைசெய்து கெஜபுடம் போட்டு அப்பால் சத்திச்சாரணைச் சாற்றால் ஒருநாளாட்டி முன்போற் புடம்போட பஸ்மமாகும் அதில் பணவிடை தேனிற்கொள்ள குன்மம். வாயு கவுசி, கெண்டை சூலை மூலந்தீரும்.

வெள்ளி பஸ்மசெந்தூரம்

சரிகைவெள்ளியை லேசாய்த்தட்டி பழுக்கக் காய்ச்சிப் பளுபாகற்கிழங்குச் சாற்றில் ஏழு தபா தோய்த்துக் குகையில் வைத்து

உருக்கிக் கண்விட்டாடும்போது மகிழம்பூச்சாற்றை சிறுகச் சிறுகவிட்டு ஊதப் பொடியாய்ப்போகும் அதை மேற்படி சாற்றாலாட்டி பில்லைதட்டிக் காயவைத்து முக்காவேளைவேரை மேற்படி சாற்றாலாட்டிக் குகைசெய்து வைத்துமூடி ஏழுசீலைமண் செய்து நூறெருவிற் புடம்போட நீறும் அதில் பணவிடை திப்பிலி லேகியத்தில் கொள்ள சிலேத்துமம் 96-ம் சூலையும் தீரும் மேற்படி வெள்ளிப் பொடிக்குச் சமம் லிங்கம் சேர்த்து எருக்கம்பாலாலும் அரசம்பட்டை தாமரைக்கிழங்கு, எலுமிச்சம்பழம் இவைகளின் சாற்றிலும் தனித்தனியே அரைத்து வகைக்கொருபுடம் முப்பது யெருவில்போடச் செந்தூரமாகும் இதை மேற்படி வியாதிகட்கு உபயோகப்படுத்திக் கொள்ளவும்.

பவளபஸ்மம்

முயலெலும்பைச் சுட்டசாம்பல் பலம்-1, குமரிச்சாற்றலாட்டி குகையும் மூடியுஞ்சேர்த்து பவளம் பலம்-1, கிராம்பு, சடமாஞ்சில், வீரம் வகைக்குக் கழஞ்சு-¼, இவைகளை மேற்படி இரத்தத்தாலாட்டிக் காயவைத்து மேற்படி குகைக்குள் வைத்து ஏழுசீலைசெய்து ஐம்பதெருவில் புடம்போட நீறும் மேற்படி பற்பத்தைச் சீந்தில் சர்க்கரையில் கொள்ள சகல மேகமுந்தீரும்.

எலுமிச்சம் பழச்சாற்றில் பவளத்தை ஒருநாள் ஊற வைத்துக் கழுவிப்போட்டு எருக்கம்பாலால் மூன்று நாள் அரைத்து பில்லைசெய்து காயவைத்து முன்போல் புடம் போட நீறும்.

கீழ்க்காய் நெல்லியிலையை அரைத்துக் குகைசெய்து அதற்குள் பவளத்தைவைத்து ஏழு சீலைசெய்து முன்போல் புடம்போட பஸ்மமாகும் அதை யனுபானங்களிலிட சுரம், குளிர் ஜன்னி, வயிற்றினாச்சல், பித்தம், கண்புகைச்சல், விக்கல், வயிற்றுளைச்சல், ஈளை, இருமல் தீரும்.

ஒருபாகம் பவளத்தை ஒருநாள் தண்ணீரி லூரவைத்துக் கழுவிப் போட்டு தேட்கொடுக்கிலையை யரைத்துக் குகை பிடித்து அதற்குள் மேல்படி பவளத்தை வைத்து மூடி ஏழு சீலைசெய்து காயவைத்து முன்போல் புடம்போட்டெடுத்து பீங்கானிலிட்டு அதில் ஆவின்பால்விட்டு ரவியிற்காயவைத்து அப்பாலதை ஆலம்பழுப்பிற்கட்டி நெற்குழியில் மூன்று நாட் புதைத்தெடுத்து அனுபானங்களிலிட க்ஷயம், ஈளை, மந்தார காசம், சிரங்கு, சொறி முதலான மேற்காட்டிய ரோகங்களெல்லாம் தீரும்.

ஒருபலம் பவளத்தை எலுமிச்சம் பழச்சாற்றிலிட்டு ஒருநாள் ரவியில்வைத்துக் கழுவிப்போட்டு இலந்தையிலையையாவது தைவேளையிலையையாவது அரைத்துக் குகைசெய்து அதற்குள் வைத்து மூடி ஏழுசீலைசெய்து காயவைத்து முன்போற் புடமிட்டெடுத்து ஒரு பீங்கானில் இட்டு ஆவின்பால் விட்டு ரவியிற் காயவைத்து தேன் ஆவிநெய்யிற் கொள்ள மேகச்சூடு காங்கை, க்ஷயம், ஈளை, இருமல், நீர்க்கடுப்பு நீங்கும்.

நாகபஸ்பம்

இலுப்பை நெய்யில் இருபதுதபா உருக்கிச் சாய்த்துச் சுத்திசெய்த ½ -பலம் நாகத்தைக் குகையிலுருக்கிக் கண்விட்டாடும்போது சிற்றாமணக்கிலையைக் கசக்கி 5-6- சொட்டுப் பிழிய சத்தமிடும், மறுபடியும் 5-6 சொட்டுப் பிழிய சத்தமடங்கும். துருத்திப்பை விசையால் ஊதி மறுபடி 5-6 சொட்டுப்பிழிந்து மேற்படி வேறாற்கிண்ட மல்லிகைப்பூப் போல் நீரும் அதையனுபானங்களிலிட வெள்ளை வெட்டை சிலேத்மம், குன்மம், மூலம் நீங்கும் தாதுவிர்த்தியுண்டாகும்.

சுத்திசெய்த நாகத்திடைக்குப் பாதி இருதஞ் சேர்த்துருக்கி வேலிப்பருத்திச் சாற்றால் அரைத்து பில்லைதட்டிக் காயவைத்து அதற்குமேல் துத்தியிலையை யரைத்துக் கவசஞ்செய்து 7-சீலைமண்செய்து முழப்புடம்போட நீறும் இப்படி 3-புடம் போட்டு வெண்ணெயில் பத்தியமாகக் கொள்ள மேல்படி வியாதிகள் தீரும்.

கெருடபஸ்மம்

கற்றாழஞ் சோற்றில் கடுக்காயைப் பொடித்துப் போட்டுப் பிசைந்து வைக்கத் தண்ணீராகும் அதில் கெருடக்கல்லைப் போட்டுக் கொதிக்க வைத்துக் கழுவிஓட்டிலிட்டு அதற்குக் கீழுமேலும் ஆணையறுகங் கிழங்கை யிடித்த தூளைப்போட்டு மூடிச் சீலைசெய்து கெஜபுடம்போட நீறும் வெண்ணையிற் கொள்ள கடுப்பு எலும்புருக்கி அஸ்திசுரம் அஸ்திவெட்டை மேகவெட்டை தீரும் தேகங்குளிரும் விந்திறுகும்.

வெள்வங்கபஸ்மம்

புளியமடற்கிழங்கை அரைத்து எருமைத்தயிரிற் கலக்கிவங்கத்தை 10- தபா உருக்கிச் சாய்த்துச் சுத்திசெய்தது வீராகனிடை-1 வாலைரசம் விராகனிடை-3, இவைகளை யொன்றாய்த் தொந்தித்து கற்பூரசிலாசத்து

விராகனிடை-3 கூட்டிச் சுண்ண நீராலிரண்டு சாமமாட்டி பில்லைதட்டிக் காய வைத்து ஓட்டிலிட்டுச் சீலைசெய்து 30-எருவிற்புடம் போட்டு மறுபடியும் மேற்படி நீராலாட்டி 3-4 புடம் போட நீறும். மாதுளம்பூ விதழை நிழலில் உலர்த்தி அதினிடை சீரகஞ் சேர்த்துச் சூரணித்துத் திரிகடிப்பிரமாணத்தில் பணவிடை பஸ்மம்வைத்து நாளொன்றுக் கிருநேரமாக மண்டலங் கொள்ள நவமூலம மெய்நோய்மேகம் யெலும்புருக்கி தீரும் நாடி வலுத்துத் தாதுண்டாகும் கரப்பன் பதார்த்தம் நீக்கவும்.

சுத்திசெய்த வெள்வங்கத்திற்குப்பாதி ரசஞ்சேர்த்துருக்கி கஞ்சாவிலைச்சாற்றாலாட்டி பில்லைசெய்து காயவைத்து அதற்கு மேற்படி இலையையரைத்து கவசஞ்செய்து ஓட்டிலிட்டு மூடி முன்போற் புடம்போட பஸ்மமாகும் அதை யனுபானங்களிலிட மேற்படி வியாதிகள் தீரும்.

கருவங்கபஸ்மம்

கருவங்கத்தைப் பிரண்டைச்சாற்றில் 10-தபா உருக்கிச் சாய்த்துச் சுத்திசெய்தது பலம் -3 சட்டியிலிட்டு உருக்கி ஆடுதீண்டாப் பாளைவேரால பஸ்மமாகும்வரை கிண்டி நிறுத்து அதற்குப் பாதிரசஞ் சேர்த்து மூக்கரை சாரணைச் சாற்றால்-4, ஜாமமரைத்து 2-புடம் போட நீறும் அனுபானங்களிவிட மேகவியாதிகள் தீரும்.

கருவங்கத்திற்குப் பாதிரசஞ்சேர்த்துருக்கி ஆலம்பாலால் மெழுகுபோலரைத்து பில்லைதட்டிக் காயவைத்து மறுதம்பட்டையும் உப்புஞ்சேர்த்து இடித்து பில்லைக்குக் கீழும் மேலும் போட்டுமூடிச் சீமைண்செய்து 30-எருவில் புடம்போட்டு மூக்கரைச்சாரணைச் சாற்றாலரைத்து 3-புடம் போடத் தவளம்போல்நீறும் அனுபானங்களிலிட மேக முதலான வியாதிகள்தீரும்.

கற்புரசலாசத்துப்பஸ்மம்

கர்ப்பூரசலாசத்தை ஆவின்பாலிற் போட்டுக் காய்ச்சிக் கழுவிச் சுத்திசெய்து சிறுசெருப்படைச் சாற்றால் 4-ஜாமமாட்டி லேசாய் பில்லைதட்டிக் காயவைத்து ஓட்டிலிட்டுச் சீலைசெய்து 50-எருவிற் பும்போடவும் இந்தப்படி மேற்படி சாற்றாலாட்டி 3-புடம்போட்டு ஆவின்வெணணெ்யிற் கொள்ள மேலெரிவு பித்தவெட்டை நீர்க்கடுப்பு நீங்கும், மேற்படி பற்பத்திடை சுத்திசெய்த வெங்காரஞ் சேர்த்து சிறுநீராலாட்டி பில்லைசெய்து காயவைத்து ஓட்டிலிட்டுச் சீலைசெய்து

1-எருவிற் புடம்போட்டு வெண்ணெயிற் கொடுக்க நீர்க்கட்டு நீர்க்கடுப்புத்தீரும்.

வெள்ளரிவிரை விராற்றலைக்கல் மேற்படி பற்பம் இவைகளை யரைத்து ¼ -படி வெள்ளரிக்காய்ச் சாற்றிலொரு வேளையும் முள்ளங்கியையிடித்து பிழிந்தசாற்றி லொருவேளையும் கொடுக்க கல்லடைப்புத்திரும்.

சொர்னபஸ்மம்

தங்கரேக்கை முள்ளிக்கீரைச் சாற்றில் 3-நாளூறவைத்து ரவியிற்காயவைத்துக் கல்வத்திலிட்டு சித்திரைப் பாலடைச் சாற்றில் மைப்போல அறைத்து பில்லைதட்டிக் காயவைத்த அதற்கு கடம்பிலையை யரைத்துக் கவசஞ்செய்து அகலில் வைத்துமூடி 7-சீலைமண் செய்து 100-எருவிற் புடம்போடப் பஸ்பமாகும், சவுரியிலைச்சாறுபடி 8 சிறுகச் சிறுக ஒரு சட்டியில் இட்டுக்காய வைத்துத் திரட்டி நிறுத்து அந்த விடை ஆடாதோடை இலையும் 1-பலம் புனுகும், 2-கழஞ்சு மேற்படி பஸ்மமும் சேர்த்து மெழுகுபோல் அரைத்து நெல்லிக்காய் போல் உருட்டி எள்ளெண்ணெயிற்போட்டு அந்தி சந்தி ஒவ்வொரு உருண்டைவீதம் 6-மாதஞ் சாப்பிட்டு மேற்படி எண்ணெயை வாரத்துக்கிரண்டுமுறை ஸ்நானஞ்செய்துசையோகமும் கரப்பன்பதார்த்தமுந் தள்ளிவைக்க வெண் குஷ்டமுதலான சகலகுஷ்டமுந்தீரும், கிராம்பை மயனமாய்ப் பொடித்து ஆவின் வெண்ணெயில் மத்தித்து அதில் பணவிடை தங்கபஸ்மம் வைத்துச் சாப்பிட்டு பாலும் அன்னமும் பொசித்துவர விந்தூறும் தாதுகட்டும் தேகம் பலக்கும்.

முத்து பஸ்மம்

முத்தைச் சங்கம் பழச்சாற்றில 2-நாள் ஊறவைத்து முள்ளிப் பழச்சாற்றால் மெழுகுபோல் அரைத்து பில்லை செய்து காயவைத்து ஓட்டிலிட்டுச் சீலைசெய்து 30-எருவிற் புடம்போட்டு தங்க பஸ்மத்துடன் சேர்த்துச் சாப்பிட தாது கட்டும் மேகவியாதிகள் தீரும்.

அயபஸ்மசெந்தூரம்

4-பலம் சுத்திசெய்த அயத்தில் மாஞ்செவிக்கள்ளிப் பால்விட்டு ரவியில்வைக்க நீரும் அதை ஒதியம்பட்டைச் சாற்றால் 4-ஜாமமாட்டி 10-புடம் போட செந்தூரமாகும் அனுபானத்திலிட தேகம் இறுகும் விந்தூறும் தாதுகட்டும்

சிங்கிபஸ்மம்

மான்கொம்பை நாலாய்ப்பிளந்து சிறுதுண்டுகளாய் நறுக்கி ஒருநாள் குப்பைமேனிச்சாற்றால் ஊறவைத்து மேற்படி யிலையை யரைத்துக் கவசஞ்செய்து காயவைத்து ஓட்டிற் பரப்பி மேலோடுமூடிச் சந்துவாய் சீலைமண்செய்து 50-எருவிற் புடம் போட்டெடுத்து ஆவின்பால் விட்டரைத்து பில்லை தட்டிக் காயவைத்து முன்போற்புடம்போட பஸ்மமாகும். அனுபானங்களில் மேற்படி பஸ்மத்துடன் பவளபஸ்மஞ் சேர்த்துக் கொடுக்க நீரடைப்பு, கல்லடைப்பு, சதையடைப்பு, நீரெரிவு, க்ஷயம், ஈளை, இருமல், உஷ்ணம். மேககாங்கை தீரும்.

மான்கொம்பை இழைத்து கோவைச்சாற்றில் ஒருநாளூறவைத்து மறுநாள் நன்றாய்க் காயவைத்து ஓட்டிலிட்டுச் சீலைசெய்து முன்போற் புடம்போட நீறும் அதையனுபானங்களிலிட மேற்காட்டிய வியாதிகள் தீரும்.

கல்நார் பஸ்பம்

கல்நாரைச் சிறுதுண்டாய்ப் பிளந்து ஓட்டிலிட்டு அதற்குக் கீழுமேலும் கோங்கிலவம்பட்டையை இடித்துப்போட்டப்பால் மேற்படி பட்டையைக் கஷாயம் விட்டரைத்து 3-புடம் போடத் தவளம்போல் நீறும் தேனிலாவது தூதுளை லேகியத்திலாவது கொள்ள சிலேத்மநோய் 96-ம் நீங்கும் மேககாங்கை தீரும். மேற்படி பற்பத்தைப் பல்துலக்கத் தந்தம் இறுகும்.

கல்நாரைச் சிறுதுண்டுகளாய் வெட்டி ஓட்டில் வைத்து அதற்குக் கீழுமேலும் எருக்கம்வேரை யிடித்த தூளைபோட்டு மூடி கெஜபுடம்போட்டு மேற்படி பாலிலரைத்து 4-புடம் போட்டு அனுபானத்திலிட மேற்படி வியாதிகள் தீரும். தந்தம் இறுகும்.

பஞ்சலவணபஸ்மம்

பஞ்சலவணம் வகைக்குப்பலம்-¼, கல்வத்தில் இட்டு பிரண்டை, முருங்கைப்பட்டை, குப்பைமேனி, நொச்சி, குமரி இவைகளின் சாற்றால் வகைக்கு ஒரு ஜாமமரைத்து பில்லை தட்டிக் காயவைத்து ஓட்டிலிட்டுச் சீலைசெய்து 10-எருவிற் புடம் போடப் பஸ்மமாகும். அதற்கு நாலிலொன்று பெருங்காயஞ் சேர்த்து தேன்விட்டு மெழுகுபோல் அரைத்துச் சிமிளில் வைத்துக் கொண்டு வேளை யொன்றுக்கொரு கழஞ்சி வீதம் வியாதியின் பலத்துக்குத் தகுந்தபடி

கால்மண்டலம் அல்லது 1/2 மண்டலங்கொள்ள வாதம், வாயு, குற்றல், குடைதல், வலிகடுப்பு, குன்மம், அண்டவாரி, கிரகணி, பவுத்திரம், ருத்திரவாயு, குடற்புரட்டல், வயிற்றுப்பொருமல், செரியாமை, மந்தம், மகோதரம் நீங்கும்.

பஸ்மவகைபரணி

முற்றிற்று.

உ

தேவிசகாயம்

ஆறாவது

கண்டாவிழ்தபரணி

வியாதிகட்கு மூலிகைப்பிரயோகம்

கொடிவேலிவேர்ப்பட்டையை அரைத்து ஒரு கொட்டைப் பாக்களவு அரைக்காற்படி ஆவின்பாலிலாவது வெள்ளாட்டுப் பாலிலாவது வியாதியின் வலிமைக்குத் தக்கதாய் ஒருமண்டலம் அரைமண்டலங்கொள்ள சுரம் வெட்டை அரையாப்பு, வாயு, சூலைக்கட்டு, சூலைபிடிப்பு, வெடிசூலை, மேனியிற்கரடு முரடாய்க் கட்டுஞ்சூலை உள்மூலம் கருப்பத்தை அழிக்குங்கிரந்தி யோனியைத்தின்னுங் கிரந்தி, செங்கிரந்தி, கருங்கிரந்தி, அரிகிரந்தி, கருவாப்பு வாயுதீரும் மேனி பொன்போலாகும், புளிதள்ளவும் பாலும் அன்னமுமாய்ப் பத்தியங்கொள்ளவும்.

ஒருபடி ஆவின்பாலில் ஒருபலக் கொடிவேலிவேரை நையத்தட்டிப் போட்டு பாலைச்சிவக்கக் காய்ச்சி புரைகுத்தி வைத்திருந்து மறுநாட் கடைந்து வெண்ணெய் எடுத்து அந்த வெண்ணெயையும் மோரையும் அன்னத்துடன் புசித்து அந்தமோரைத்தானே தாகத்துக்குக் குடிக்கவும் மூலமுளை வேரோடே அழுகி விழுந்துவிடும் இந்தப்படி மூன்றுமுறை செய்யவும் நோயாளியினுடைய தேகஸ்திதிக்குத் தக்கபடி மேற்படி வேரின் அளவைக் குறைத்துக் கொள்ளலாம். மேற்படி வேரை வெள்ளாட்டின் பாலிற்கொள்ள சிலவிஷங்கள், விஷத்தாலுண்டாகும் வியாதிகள் தீரும்.

சஞ்சீவி மூலியென்ற நீலிவேர்ப்பட்டையை அரைத்துக் கொட்டைப்பாக்களவு ஆவின் பாலில்லாவது வெள்ளாட்டுப் பாலிலாவது கொள்ள விஷசெந்துக்களின் கடிவிஷமும், நஞ்சுப்பொருள் விஷமும். கரப்பன் வகைகளும் தீரும் நரைதிரைமாறும்.

மேற்படி வேருடன் மிளகுசித்தரத்தை சேர்த்துக் கஷாயஞ் செய்து 3-நாள் கொள்ள யெண்ணை சீக்கலாலுண்டாகும் நீர்த்தோஷம் சுரம் வெப்பசெஞ்சிக்களி நீங்கும் புளிதள்ளவும்.

மேற்படி இலையை அரைத்து கொட்டைப் பாக்களவு அரைக்காற்படி வெள்ளாட்டுப் பாலில் 3-நாட்கொள்ள மஞ்சட் காமாலை தீரும் புளிதள்ளவும்.

மேற்படி இலையை அரைத்து சிரங்கிற்பூசி வைத்திருந்து மாலையில் ஸ்நானஞ் செய்து வரத்தீரும்.

மகாமூலி என்ற ஆகாசக்கருடன் கிழங்கை அரைத்து கொட்டைப் பாக்களவு ஆவின்பாலிற் கொள்ள நரை திரைமாறும் மேனி பொன்போல ஒளியுண்டாகும் காலன் ஓடி ஒளிப்பன் சருவநோய்களும் நீங்காத விஷகடி நோய்களும் விஷமும் நீங்கும் புளிதள்ளி பாலும் அன்னமுமாய் ஆகாரங் கொள்ளவும்.

அப்பைக்கிழங்கை கொட்டைப்பாக்களவாய் ஆவின் பாலிற்கொள்ள மூலைக்குத்து கடிவிஷம் கரப்பன் வியாதிகள் தீரும். புளி, கரப்பன் பதார்த்தம் தள்ளவும்.

வராகிமூலமென்ற நிலப்பனங்கிழங்கை ஆவின் பாலிற் கொள்ள விந்துகட்டும் தாதுண்டாகும் ஆண்மை மீறும் தேகம் இறுகும் தேகம் பொன்போற் பிரகாசிக்கும் சகல வியாதியுந் தீரும் சித்தர் தரிசினமுண்டாகும்.

மேற்படி கிழங்கை மேனிச்சாற்றால் அரைத்து நல்லெண்ணெயிற் காய்ச்சி பல்வலிக்கும் பாகத்திற்றடவ பல்வலிநீங்கும் அதிலிருக்கும் புழுக்கள் சாகும்.

மேற்படி கிழங்கும் பூமிசக்கரைக்கிழங்கும் பூனைக்காலிவித்தும் சமன்தூக்கி ஆவின் பாலிற் கொள்ள கோசம்பூரித்து விம்மும்.

பங்கம்பாளை என்ற ஆடுதீண்டா மூலிவேரை யரைத்துக் கொட்டைப் பாக்களவு வெள்ளாட்டுப்பாலிற் கலக்கிக் கொள்ள

சகலவிஷங்களும் புண்பிளவை சிரங்குவங்கு பல கரப்பன், குஷ்டம் தீரும சித்தர் தரிசனமுண்டாம்.

மேற்படி மூலிகை சமூலத்தையும் கருங்குருவை நெல்லுடன் அவித்து அவல் இடித்து வேளை ஒன்றுக்கு அரைக்காற்படி அவல் வீதம் ஒரு மண்டலங்கொள்ள சிரங்கு, சொறி, குஷ்டம், தழுதணை, வங்கு வண்டு கடி, அரணைகடி செய்யான்கடி, பூரான்கடி, விஷங்களும் பதகிரி வெள்ளைப் புள்ளிக் கரப்பன் தீரும் பாலும் மிளகுந் தேய்த்து ஸ்நானஞ் செய்து வரவும் 3-மாதம் நல்லெண்ணெய் புணர்ச்சியை நீக்கவும்.

மேற்படி மூலிகை சமூலம் இடித்துப் பிழிந்தசாறு வெள்ளாட்டுப்பால், வெள்ளாட்டுநெய் வகைக்குப்படி-1, ஒன்றாய்க் கலந்து அதில் ¼ -பலம் மிளகை அரைத்துப் போட்டுக்காய்ச்சி தேய்த்து ஸ்நானஞ் செய்து வரவும் மேற்படி வியாதிகள் தீரும் வேப்பம்விந்து எண்ணெயில் மேற்படி மூலிகைசமூலமும் அரைத்துப் போட்டுக் காய்ச்சித் தேய்த்து ஸ்நானஞ் செய்து வர மேற்படி வியாதிகள் தீரும்.

தாமரைக்கிழங்கை ஆவின்பாலிற் கொள்ள மேகம் வெட்டை கிரிச்சிரம் தீரும் தேககாந்தியும் கண் ஒளியும் குளிர்ச்சியுண்டாம்.

மேற்படி மணிப்பருப்பை பொடித்து முலைப்பாலிற் கலந்துக் கொடுக்க விக்கல் நாவரட்சி தீரும்.

மேற்படி கிழங்கை ஆவின்பால் விட்டரைத்து நல்லெண்ணையிற் போட்டுக் காய்ச்சித் தேய்த்து ஸ்நானஞ்செய்து வர கண்ணுக்குக் குளிர்ச்சியும் ஒளிவுமுண்டாம்.

குண்டலாதி மூலமென்ற சங்கம்வேரை பாலிற் கொள்ள வண்டுகடி, குஷ்டம், தழுதணை, சொறி, தேமல், கிரந்தி, வெட்டைசூலை செங்கரப்பன், கருங்கரப்பன், சிறுசிரங்கு, பெருஞ்சிரங்கு தீரும் தேககாந்தியுண்டாம்.

மேற்படி வேர்ப்பட்டை பலம்-1, மிளகுத்தூள் பலம் 1, ஆவின்பால்விட்டு அரைத்து உடம்பிற்றேய்ந்து ஸ்நானஞ் செய்து வா மேற்படி வியாதிகள் தீரும்,

மேற்படி வேர்ப்படைத்தூள் பலம் 1 மிளகுதூள் பலம்-12, சர்க்கரை பலம்-1, கூட்டி திரிகடிப்பிரமாணம் சாப்பிட்டு வர மேற்படி வியாதிகள் தீரும்.

நன்னாரிவேரை யரைத்து கொட்டைப்பாக்கு பிரமாணம் ஆவின்பாலில் இருபது நாட்கொள்ள மூலக்கொதிப்பு அஸ்திகாங்கை கேச்சூடு மேகவெட்டை நீர்கடுப்பு நீர்இத்து விழுதல் மூத்திரக் கிரிச்சரம் பதினெட்டும் சில்லரை விஷஜெந்துக்களின் கடிவிஷங்கள் உள்வரட்சியினாற் காணும் இருமல தாபசோபம நீங்கும் இந்த மூலியை நாட்படச் சாப்பிட்டு வந்தால் நரைதிரைமாறும்.

மேற்படி வேர், சீரகம், மல்லி, சமன் சூரணித்து சர்க்கரை கலந்து சப்பிட்டுவர மேற்படி வியாதிகள் தீரும்.

அமுதவல்லி ஆகாசக்கருடன்யென்ற பொற்சீந்தி வேரை அரைத்து கொட்டைப்பாக்கு அளவாய் ஆவின் பாலிற் சாப்பிட்டுவர சகல மேகங்களும், சகலவிஷகடிகளும், சுரம், தோஷம் கபாலச்சூடு, வெட்டை நீங்கும் இந்த மூலத்தை நாட்படச் சாப்பிட்டு வந்தால் அவமிருத்து வீலகும் தேகம் பொன்போல் ஆகும்.

மேற்படி தண்டின்மாவும் வில்வப்பூவும் கோரோசனையும் சமன் கலந்து திரிகடிப்பிரமாணம் எருமைமோரில் கொண்டு வரமேக நீரழிவு நீங்கும்.

மாவீழி என்ற பூமிசக்கரைக்கிழங்கை பாலிற் கொள்ள பாண்டு, விஷபாகவீக்கம், மூத்திரக்கிரிச்சரம், மேகம், வெட்டைதீரும், காமம்மிகும். நாதங்கட்டும், நாவில் அமுதம் ஊரும்.

மேற்படி கிழங்கை பாலில் அவித்துக் காயவைத்து தூட் செய்து உளுந்துவறுத்துப் பொடித்தமாவும் யெள்ளும் பொரியும் சமன்கலந்து திரிகடிப்பிரமாணம் சாப்பிட்டு வர தேகபலமுண்டாம் நாதங்கட்டும்.

பனங்கோவை பெருங்கோவை என்ற குரட்டை மூலத்தை பாலிற் கொள்ள நரைதிரைமாறும் சரசுபதி கடாக்ஷமுண்டாம்.

நல்லெண்ணெய் மேற்படி பழச்சாறு வகைக்குப்படி-14, மிளகு, கருஞ்சீரகம், சித்தரத்தை, சாம்பிராணி வகைக்கு விராகனிடை-1, பொடித்துப் போட்டுப் பதமாய்க் காய்ச்சி தலைமுழுகிவர பீனிசம்திரும் செம்பட்டைமயிர் கருக்கும்.

முத்தக்காசு என்ற கோரைக்கிழங்கைப் பாலிற் கொள்ள கற்றாழைநாற்றம் பித்தத்தாலுண்டாகும் வீக்கம் சத்திசுரம் நாவரட்சி தாபசோபம் நீங்கும்.

மேற்படி கிழங்கு, மல்லி, பேய்ப்புடல், சுக்கு, சிற்றரத்தை ஓர்அளவாய் சிதைத்துக் கஷாயஞ்செய்து சாப்பிட பித்த சுர நீங்கும்.

பழுபாகல் மூலத்தைப் பாலிற்கொள்ள பலவிஷங்கள, குஷ்டம் தழுதணை, தொழுதணை, கிருமி நீங்கும் அந்தக்கிழங்கை நாட்படி பத்தியமாய்ச் சாப்பிட்டு வந்தால் தேகம் பலக்கும்.

தலைசூடி என்ற தலைசுருளி மூலத்தைப் பாலிற்கொள்ள அரவுகடி விஷம் சில்லரை விஷங்கள் விஷகரப்பான் குஷ்டம், சூலை சொரி, சிரங்கு தீரும், தேகபலமுண்டாகும் விஷம் அமுதமாகும்.

திசைகருடன் என்ற கட்டுக்கொடி மூலத்தை பாலிற் கொள்ள விஷகுஷ்டம் தீரும், விந்து கட்டும் உடல் இருகும். ஆனைப்பலமுண்டாம் பேதிகட்டும். மேற்படியிலை தண்ணீரைக் கட்டும் நீரிழிவைப்போக்கும்

மலைதாங்கி என்ற பொன்முசுட்டை மூலத்தை பாலிற்கொள்ள விந்துகட்டும் குஷ்டம் வாயு கடி விஷம் மலக்கழிச்சல் நீங்கும் மேற்படியிலை தண்ணீரைக்கட்டும் அதிக மூத்திரத்தைச் சுருக்கும்.

இந்தயிலை மேற்படி கட்டுக்கொடியிலை ஆவரைக்கொழுந்து இம்மூன்றையும் அரைத்துக் கொட்டைப்பாக்களவாகச் சாப்பிட்டுவர நீரிழிவு பெருநீராய் அடிக்கடி இறங்குவதைச் சுருக்கும் மேற்படி இலையைத் தண்ணீரில் ஊறவைத்து அந்தத் தண்ணீரைச் சாப்பிட்டு வர அதிதாகம் நீங்கும் நாய்க் கொட்டான் மூலத்தைப் பாலிற் கொள்ள வண்டுகடி சிலந்திப் பூச்சிக்கடி மற்ற சில்லரை விஷஜெந்துக்களின் கடிவிஷம், பெருவிஷக்கடி, கிரந்தி பலவகைக் கருப்பன் வங்கு சொறி கருங்குஷ்டம் புண்புரைவீக்கம் தீரும்.

பிராய்மூலத்தைப் பாலிற்கொள்ள பதினெட்டுவகை வண்டுகடி, வெண்குஷ்டம், கருங்குஷ்டம், விரியன்கடி, விஷத்தாலுண்டாகும் குஷ்டம் நீங்கும் சிராய்போல் உடலில் எழும்பும் சரசரப்பு நீங்கும்.

மேற்படி மரத்தின்பாலை பச்சைக்கடலைமாவில் பிரட்டிக் கடலைப்பிரமாண முண்டைசெய்து சாப்பிட்டுவர நாதங்கட்டும்.

ஆதியில் மூலத்தைப் பாலிற்கொள்ள அண்டவாதசூலை பலவகைகிரந்தி குஷ்டம்பிளவை அரையாப்பு வாதத்தில் எழுந்தநோய்கள் சில்லரைவிஷம் நீங்கும்.

புங்குமூலத்தைப் பாலிற்கொள்ள புண், புரைகள், சூலை, அரையாப்பு கிரந்தி, பலகரப்பன், குஷ்டம் சிலவிஷம் தீரும்.

வெள்ளெருக்கின் மூலத்தைப் பாலிற்கொள்ள கிரந்தி குஷ்டம் விஷங்கள் வண்டுகடி செய்யான்கடி அறுபுள்ளி வண்டுகடி மரவட்டைகடி குரைநோய் தீரும்.

வேலிப்பருத்தி சமூலத்தைப் பாலிற்கொள்ள கடிவிஷம் கரப்பன்வெட்டை பலவகைக்கிரந்தி சூலை மருந்திடு கை கால்பிடிப்பு வாயுதீரும்.

வெள்ளறுகு சமூலத்தைப் பாலிற்கொள்ள சில்லரைவிஷம், சிரங்கு சொறி, குஷ்டம், கிரந்தி வெட்டை வெடிசூலை, காமாலை விஷகரப்பன் வீக்கம் தீரும்.

மேற்படி மூலிகை சமூலத்தையும் தண்ணீரில் வேக வைத்து வெதுப்பத்துடன் வாயில்விட்டுக் கொப்பளிக்கப் பல்வலி தீரும்.

சிவன்வேம்பு மூலத்தைப் பாலிற்கொள்ள தீராத சிலவிஷம் காலிற்காணும் பிளப்புகுஷ்டம் கரப்பன் வகைகள் வாயுதீரும்.

சிவன்வேம்பு மூலத்தைப் பாலிற்கொள்ள தீராத சிலவிஷம் காலிற்காணும் பிளப்புகுஷ்டம் கரப்பன் வகைகள் வாயுதீரும்.

மேற்படி மூலிகை மூலத்தையும் உலர்த்திச் சூரணஞ்செய்து சர்க்கரைக்கலந்து திரிகடிப்பிரமாணம் மண்டலங்கொள்ள குஷ்டம் 18, பாதத்திலுண்டாகும் விரிவு மேல்தடிப்பு படர்தாமரை அரிப்பு தேகத்தில் முள்ளுகொண்டு குத்துவது போல் குத்துதல் திமிர் தலைநோய் தீரும்.

60-வருடம் சென்ற வேம்பின் வேர்ப்பட்டை, கொழுந்து, பூ, பிஞ்சு, இவைகளை ஓர்நிறையாய் உலர்த்தியிடித்து திரிகடிப்பிரமாணம் ஒருமண்டலம் ஆவின்பால் நெய் தேனிற் கொள்ள சகலநோய்களும் தீரும். தேகம் இறுகும், நரைதிரை மாறும்.

மேற்படிதூளில் வாழைப்பழத்தைப் புதைத்து நாற்பதாம் நாளெடுக்க காயாயிருக்கும் அதைத்தின்ன தேகம் கற்றூணாகும் கிழவன் வாலிபனாவான் தேகம் ஒருபோதும் தளராது.

செங்கத்தாரி, கருஞ்சூரை, செஞ்சூரை மூலத்தைப் பாலிற்கொள்ள கரப்பன் கிரந்தி செவ்வாப்புக்கட்டி செங்கரப்பன் கொள்ளிக்கரப்பன் முதலான கரப்பன்களும், பல விஷங்களும் தீரும். மேற்படி மட்டையை அரைத்து உடம்பிற்பூச மேற்படி வியாதிகள் தீரும்.

தூதுவளையை ஆதித்தவாரத்தில் பிடித்துக்கொண்டு சோடசகணபதி மூலமந்திரத்தை 100-உரு ஜெபித்து சமூலம் பிடுங்கி உலர்த்தித் தூட்செய்து திரிகடிப்பிரமாணம் ஆவின்பாலிற் கொள்ள பித்தம்-40-ம் தீரும், வெள்ளாட்டு நெய்யிற்கொள்ள கபந் தீரும் சிற்றாமணக் கெண்ணையில் கொள்ள சீரவரட்சி தீரும்.

மேற்படி இலையைச் சமைத்துத்தின்ன பசியுண்டாம், மேற்படி பூவை நெய்யில் வதக்கியுண்ண தாதுபுஷ்டியுண்டாம். மேற்படி காயை இந்தப்படி சாப்பிட வாதபித்த சிலேத்மம் நீங்கும், மேற்படி வேரை வெத்திலைப்பாக்குடன் தின்றுவர திரிதோஷம் நீங்கும், தூதுவளைசமூலம், பேய்ப்புடல், கரிப்பான், மிளகு, சீரகம், ஜாதிக்காய் கிராம்பு, வால்மிளகு, இவைகளைச் சூரணித்துப்பிட்டவித்து நெல்லிக் குச்சியாற்கிண்டி ஆற்றி சர்க்கரையிற் கொள்ள காந்தல் வீக்கம் சோகைதீரும்.

சித்தாமணக்கிலைச்சாறு, வேப்பெண்ணெய், சமன் கலந்து பதமாய்க் காய்ச்சி வடித்து ஒருமண்டலம் புளித்தள்ளிச் சாப்பிட கருங்குஷ்டம், வெண்குஷ்டம், சொரிகுஷ்டம், கிரந்தி, தழுதணை, குறைநோய், பெருவியாதி, திமிர், கிரந்திப்புண் தீரும் ஆமணக்கெண்ணெய் பல அவுஷதங்களுக்கு ஆவதுமன்றி உடலிலுள்ள வெப்பையும் மூலச்சூட்டையும் நீக்கி உடலைவளர்க்கும், மேற்படி எண்ணெய் கற்றாழைச் சோற்றின் நீர், ஈருள்ளிச்சாறு, எலுமிச்சம் பழச்சாறு வகைக்குப்படி மாகாணி ஒன்றாய்க்கலந்து அதில் ஒரு விராகனிடை வெந்தயத்தைப் பொடித்துப்போட்டு சாப்பிட விரேசனமாகும் மலக்கட்டுத்தீரும்.

மேற்படி எண்ணெயில் கதலிவாழைப்பழம், பேரீச்சம்பழம், முந்திரிப்பழம், ஏலம், கிராம்பு, ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி, குங்குமப்பூ கோரோசனை, கற்கண்டு இவைகளைப் பொடித்துப் போட்டு ரவியில் வைத்துக்கொண்டு குழந்தைகளுக்குக் கொடுத்துவர கணை, பிரளி, மாந்தம், கரப்பன் தீரும் மேனி பருக்கும் பளபளப்பாகும்.

மூக்கரைச்சாரணைவேரை ஆவின்பாலிற் கொள்ள ஒரு மண்டலத்தில் நரைதிரைமாறும் உடல் இருகும் பகலில் நட்சத்திரம் கண்ணுக்குத்தோன்றும் குன்மம் 8-ம் தீரும்.

நிலவாகைச் சமூலத்தை இடித்துத் தூட்செய்து பேய்ச்சுரைக் குடுக்கையில் அடைத்துக் கொண்டு திரிகடிப் பிரமாணம் ஆவின் நெய்யிற்கொள்ள உடம்பு பூரிக்கும், தேனில் கொள்ள உடம்புவற்றும,

சிற்றாமணக்கெண்ணையிற் கொள்ள எலிகடிவிஷம் சில்லரை விஷகடியும, ஏப்பமும், வெந்நீரில் கொள்ள கிரிமியும், பசுவின்மோரில் கொள்ள செறியாமையும், எருமைமோரில் எலிகடி விஷமும், எருமைச்சாணிப் பாலில் பாண்டும் எருமைப் பாலில் பெண்கள் கைமசக்கும் தீரும்.

பாகலிலைச்சாற்றில் கொள்ள உடலில் தடிக்கும் செய்யான் விஷமும், மேனிற்சாற்றில் தேள்விஷமும், ஆலம்பழுப்புச் சாற்றில் பெருச்சாளி கடிவிஷமும், வேம்பாடம் பட்டைச் சாற்றில் செவ்வெட்டை கடியும், செம்மறி ஆட்டுநீரில் அரணைக்கடியும், வீழிச்சாற்றில் விரியன்கடியும், தேசிப்பழச்சாற்றில் சர்வவிஷமும், பாகலிலைச்சாற்றில் நட்டுவக்காலி விஷமும், அவிரியிலைச்சாற்றில் அரணை, வண்டுகடி, புடையன், குத்துதவளை, குரங்குநாய், பிள்ளை, பேய்நாய், பேய்நரி, இவைகளின் விஷமும், கையாந்தகரை கண்டங்கத்திரிச்சாற்றில ஈளை, க்ஷயமும், கொடிக்கள்ளிச் சாற்றில் மாரல்சுரமும், குளிர்சுரமும், நல்லெண்ணெயில் விக்கலும், வெள்ளாட்டு நீரில் குஷ்டம் சோகை காமாலையும், பசுவின் நீரில்கொள்ள சொறி, சிரங்கு, உளைவு, பெருவயிறு, மகோதரம் நீராமையும் நீங்கும், புளிபுகை யிலைதள்ளவும்.

வெப்பாலைமூலத்தைப் பாலிற்கொள்ள குஷ்டம் சில விஷம் கரப்பன் வண்டுகடி முதலிய வியாதிகள் தீரும்.

குளப்பாலைமூலத்தைப் பாலிற்கொள்ள எலிகடிவிஷம் விஷகரப்பன், உடல்சுரப்பு, கால்சுரப்பு, சருவ விஷக்கடி வீக்கம் பருபடுவன் தீரும்.

முத்துருக்கஞ்செவி மூலத்தைப் பாலிற்கொள்ள முகவசியமுண்டாம் சிரியமுலை பருத்துவிம்மும் கரப்பன் சில விஷம் சிலந்தி பருபிளவை புண்தீரும்.

ஆதளைமூலத்தை ஆவின்பாலிற் கொள்ள பதினெட்டு வகை எலிகடிவிஷம் நீங்கும் பாலைக் கொப்புளிக்க வாய் வேக்காடு வெட்டைதீரும்.

பூவரசமூலத்தை பாலிற்கொள்ள சொறிகிரந்தி கரப்பன் விஷகரப்பன் வீக்கம் சிலவிஷம்தீரும்.

அறுகுமூலத்தைப் பாலிற் கொள்ள சகல விஷமும் தீரும் தேகபலமுண்டாகும், நரைதிரைமாறும், நரம்புகள் இறுகும், மூலச்சூடு வெட்டை நீர்க்கடுப்பு நீங்கும்

மேற்படி மூலத்துடன் மிளகு, சீரகம், அதிமதுரம், மாதுளம்பூ இவைகளைக் கஷாயம் செய்து அதில் ஆவின் வெண்ணெய் போட்டுக் குடிக்க மேற்படி வியாதிகள் தீரும்.

அமுக்கிராக்கிழங்கை பாலிற்கொள்ள விந்துகட்டும், மேனிகாந்தியாகும், தேகத்திலுள்ள துர்நீர், கபம், சூலை, கரப்பன்பாண்டு, வெப்பு வெட்டை, வீக்கம், கட்டி பித்தக் கிருகிருப்பு நீங்கும்.

மேற்படிவேரைப் பாலில் அவித்துச் சுத்திசெய்து இடித்ததூள் விராகினிடை -64, இலவங்கம் விராகனிடை-1, சிறுநாகப்பூ, விராகனிடை-2, மிளகு, விராகனிடை-8, திப்பிலி விராகனடை-11, இவைகளைச் சூரணித்து ஒன்றாய்க் கலந்து சரியிடை சர்க்கரை சேர்த்து திரிகடிப்பிரமாணம் சாப்பிட்டு வரக்ஷயம் இருமல், புகைச்சல், அரோசிகம், தாதுநஷ்டம தீரும்.

மரள்கிழங்கை பாலிற்கொள்ள மூலம், கரப்பன், புண், சிலந்தி, வண்டுகடி, எரிகுஷ்டம் தீரும்.

மேற்படி மரளை வாட்டிப்பிழிந்து சிசுக்களுக்குக் கொடுக்க நெஞ்சிற்கபக்கட்டு கரப்பன் செங்கிரந்தி கருங்கிரந்தி தீரும்.

சரக்கெண்ணை மூலத்தைப் பாலிற்கொள்ள வண்டுகடி, குஷ்டம், சொறி, தேமல், விஷநீர், வாதசூலை, வாதகரப்பன் தீரும்.

மேற்படி பூவையும் கொழுந்தையும் அரைத்துப் பாலிற் கொள்ள பிரமியம் வெட்டை, காமாலை, பாண்டு, பித்தம், விஷபாகவீக்கம் தீரும்.

மேற்படி பூவை எலுமிச்சம் பழச்சாறாலரைத்து உடம்பிற்றேய்த்துக் குளித்துவர சொறி, கரப்பன், தேமல், பத்துத் தீரும்.

ஆவரைப் பஞ்சாங்கத்தைப் பாலில் ஒருமண்டலம் கொள்ள நீரிழிவு, பிரமேகம், ஆண்குறியெரிவு நீங்கும்.

மேற்படி பஞ்சாங்கத்தையும், வெந்தயத்தையும், சிவக்க வதக்கி கஷாயஞ்செய்து அதிற் கோரோசனையை உரைத்துக் கொடுக்க இரத்தக்கடுப்புத் தீரும்.

மேற்படி வேர்ப்பட்டை, கல்வத்திப்பட்டை, மருதம்பட்டை, சரக்கொண்ணைப்பட்டை இவைகளைக் கஷாயம் செய்து அதிற் கல்மதத்தை உரைத்துச்சாப்பிட நீரழிவுதீரும்.

காட்டாமணக்கு மூலத்தைப் பாலிற்கொள்ள குஷ்டம், பாண்டு, சோகை, காமாலை, வீக்கம், வயிற்றுக்கட்டி, பெறுவயிறு தீரும், மேற்படி முத்தப்பருப்பை பாலிற்கொள்ள, சோகைபாண்டு, எலிபாகவீக்கம், கெண்டை, மகோதரம், வயிற்றுச்சூலை, கரப்பன், எலிகடிவிஷம் தீரும் மேற்படி இளங்கொழுந்தை பிட்டவித்து பிழிந்தசார் படி அரைக்காலில் கொஞ்சம் மிளகுத்தூள் போட்டுக் கொடுக்க மேற்படி வியாதிகள் தீரும் பத்தியம் மோர், அன்னம் சாப்பிடவும் விரோசனமாகும்.

மிளகு மேற்படி கொழுந்து, வெள்ளெருக்கம்பூ இம்மூன்றையும் வகைக்கு ஒருவிராகனிடை வீதம் சிதைத்துக் கொடுக்க குளிர்சுரம் சுரம்தீரும், மேற்படி மருந்துகளுடன் ஒரு களச்சிப் பருப்புச் சேர்த்துக் கொடுக்க அண்டவாயு தீரும்.

மாவிலிங்க மூலத்தைப் பாலிற்கொள்ள சுரம், வெட்டை, சூலை, சுரோணிதக்கட்டு, மந்தவாயு, குன்மம், அரையாப்பு, கண்டமாலை, புண், புரைகள், பிளவை வீக்கம், வாதம், ஜன்னி, ரூச்சை, கல்லடைப்பு, விஷக்கடி தீரும்.

மேற்படி பட்டை மூங்கியிலை, சித்தரத்தை, சுக்கு, அரிசித்திப்பிலி, சதகுப்பை, கொடிவேலிவேர் இவைகளை ஓர்நிறையாய்ச் சிதைத்து ஒருபடி தண்ணீரில்போட்டு அரைக்கால்படியாய் வற்றவைத்து வேளையொன்றுக்கு மாகாணிப்படி வீதம் பனங்கருப்புக் கட்டிக்கூட்டி மூன்று நாள் கொடுக்க பிரசவகாலத்தில் தடைப்பட்டு இருக்கும் சூதகத்தை யுடைத்துவிடும்.

உகாய்மூலத்தைப் பாலிற்கொள்ள பலவகை வாயுக்கள், சூலைவாதம், குன்மம், கழலைகட்டி, கண்டமாலை, அரையாப்பு, பிளவை தொடைவாழை, விப்புருதிவெட்டை, ஜன்னிதோஷம் தீரும். மேற்படி இலை கழற்சிப்பருப்புக்கு அண்டவாயு தீரும்.

புரசுமூலத்தைப் பாலிற்கொள்ள எலிவிஷம் குன்மம் வாயு, வாதம் நீங்கும்.

மேற்படி விரையை எருமைச்சாணிக்குள், புதைத்துக் காலையில் 2 விரையை தோல்நீக்கி அறைத்து ஆவின்பாலிற் கொடுக்க வயிற்றிலுள்ள பெருங்கிருமிகள் விழும் அவைகளினாலுண்டாகும் வயிற்றுவலி தீரும்.

மேற்படி விரையை யெலுமிச்சம் பழச்சாற்றி லுரசிப்போடப்பத்து நீங்கும்.

சுடுதுரட்டி மூலத்தைப் பாலிற்கொள்ள புடைகிரந்தி சூலை, அரையாப்பு, கண்டமாலை, கரப்பான், வாயு, சில்லரைவிஷம் நீங்கும்.

மேற்படி இலைச்சாறும் நல்லெண்ணெயும் கலந்து வேளை யொன்றுக்கு மாகாணிப்படி வீதம் 3-நாள் புளிதள்ளிச் சாப்பிட இரத்தவெட்டை தீரும்.

கடுக்காய் மூலத்தைப் பாலிற்கொள்ள கரப்பன் குஷ்டம் சிலவிஷம் கிரந்தி வங்கு தீரும்.

பெருவாகை மூலத்தைப் பாலிற்கொள்ள சூலைப்பிடிப்பு, வீக்கம், சில்லரைவிஷம், கிரந்தி, கரப்பன் தீரும்.

உசிலமூலத்தைப் பாலிற்கொள்ள சிலவிஷங்கள், மேகம், புண், கிரந்தி வண்டுகடி, குஷ்டம், கைகால்பிடிப்பு, சூலை தீரும்.

வக்கணத்தி மூலத்தைப் பாலிற்கொள்ள கிரந்தி, மேகம், கரப்பன், சிலவிஷம் வண்டுகடி தீரும்.

அளிசமூலத்தைப் பாலிற்கொள்ள சகலவிஷம் சுவாசகாசம் மந்தாரகாசம் வயிற்றுக் கிருமிகள் கரப்பன் கிரந்திதீரும்.

நெய்க்கொட்டான் மூலத்தைப் பாலிற்கொள்ள சகல விஷகடிகள் கரப்பன் கிரந்தி மேகம் சூலைப்புண் தீரும்.

நவ்வல்மூலத்தைப் பாலிற்கொள்ள பெரும்பாடு வெட்டை மேகம் கழிச்சல் கிராணி தீரும், மேற்படி பழரசம் மேகநீரழிவைக் கேட்கும்.

அரசுமூலத்தைப் பாலிற் கொண்டாலும் அந்த மரப்பட்டையை, அரிசியுடன் இடித்து மாவு செய்து களிக்கிண்டித் தின்ன பெரும்பாடு தீரும்.

ஆவின் விழுதையும் மேற்படி விரையையும் பாலிற் கொள்ள பாலில்லாத பெண்களுக்குப் பாலுண்டாகும் வெட்டை மேகம் உடல்எரிவு காந்தல்தீரும்.

ஆலவிரையையும் அரசவிரையையும் பாலிற் கொள்ள இரத்தங்கக்கல் நீங்கும்.

சந்தனமூலத்தைப் பாலிற்கொள்ள மேகம் பிரமியந்தீரும் அழகுண்டாகும், மேற்படி வேரைக் கஷாயஞ்செய்து கற்கண்டு போட்டுச் சாப்பிட மேற்படி வியாதிகள்தீரும்.

தேவதாரமூலத்தைப் பாலிற்கொள்ள பீனிசம் பழஞ்சுரம் நீரேற்றம் தீரும்.

அகில்மூலத்தைப் பாலிற்கொள்ள வாந்தி, அரோசிகம், சுரம்தீரும், இதன் புகையால் மேற்படி வியாதிகள் தீரும்.

சிறுகொண்ணை மூலத்தைப் பாலிற் கொள்ள கண்ணோய் உஷ்ணம் உள்மூலம் தீரும், தேகபலமும் அழகுமுண்டாம்.

நரிக்கொண்ணைமூலத்தைப் பாலிற்கொள்ள ஆனைச்சொறி கிரிமிப்புடை அரிப்புப்புடை தீரும்.

மைக்கொண்ணைமூலத்தைப் பாலிற்கொள்ள குடல்வாதம் சூலை மேகந்தீரும்.

பிரமிசமூலத்தைப் பாலிற்கொள்ள கிரந்தி, சூலை, மேகம், வெட்டை, குஷ்டம், வீக்கம், க்ஷயம் நீங்கும் பாடவல்லவ முண்டாம் நரை திரைமாறும்.

வல்லாரைசமூலத்தைப் பாலிற்கொள்ள மருந்திடு க்ஷயம், காசம், இருமல், ஈளை, கைகாலில் உண்டாகும் ஊறல் நீங்கும் நெடுநாட்கொள்ள நரைதிரைமாறும்.

பொன்னாங்காணி என்ற கொடுப்பை சமூலத்தைப் பாலிற்கொள்ள உடல்குளிரும் பகலில் நக்ஷத்திரம் கண்ணுக்குத் தோன்றும்.

கீழ்க்காய் நெல்லிசமூலத்தைப் பாலிற்கொள்ள சோகை, காமாலை, பாண்டு உடல்வெளுப்பு வாதபித்தரோகம் நீங்கும் இரத்தம் மிகும் கண்குளிரும் காயசித்தியாம்.

கருங்குருவைக்காடியில் மேற்படி சமூலச்சூரணத்தை நாட்பட பத்தியமாய்ச் சாப்பிட்டு வந்தால் நரைதிரை நீங்கி வாலிப வயதுண்டாம் உடலழியாது.

பொற்றலைக் கரிப்பான் சமூலத்தை பாலிற் கொள்ள இருமல் காசம், பாண்டு, சோகை காமாலை, கரப்பன் தீரும், மேற்படி மூலிகையை நாட்பட உண்டுவந்தால் நரைதிரைமாறும்.

மேற்படி சமூலம் அயக்கிட்டம் கடுக்காய் மிளகு சமனிடையாய்க் கஷாயஞ் செய்து சாப்பிட பாண்டு சோகை, காமாலை தீரும்.

செங்கழுநீர்க் கிழங்கைப் பாலிற்கொள்ள உடல் குளிரும் விந்தூறும் நாட்படச் சாப்பிட்டால் எப்போதும் தேகத்தில் நோய் உண்டாகாது.

பற்பாடக சமூலத்தைப் பாலிற்கொள்ள வெட்டை மேகம், எரிவு காந்தல், அஸ்திகாங்கை, வாயு, பித்தம் தீரும்.

சதைஒட்டியிலையைப் பாலிற்கொள்ள மேற்படி வியாதிகள் தீரும் சீராசெங்கழுநீர் மூலத்துக்கும் மேற்படி வியாதிகள் தீரும்.

விஷ்ணுகரந்தை சமூலம் பாலிற்கொள்ள சுரம், மேகம், க்ஷயம், காசம், இருமல், ஈளை, விஷங்கள், வாதபித்தம் தீரும் கண்ணுக்கு ஒளிவுண்டாம்.

மேற்படி சமூலச்சாற்றில் சித்தரத்தையை அரைத்துக் கலக்கி கடவைத்துச் சாப்பிட மேற்படி வியாதிகள் தீரும்.

தண்ணீர்விட்டான் கிழங்கைப் பாலிற்கொள்ள விந்தூறும் சுக்கிலப்பிரமியம் நீர்எரிவு காந்தல் கரப்பன் வரட்சி தீரும்.

ஊமத்தின்வேறும் அதின்வித்தும் வகைக்கு விராகனிடை 1, வீதமாக அரைத்து ஆவின் பாலிற்கலக்கி காலையில் மூன்றுநாள் கொடுக்க எலிகடிவிஷமும் பேய்நாய் பேய்நரி கடிவிஷமும் குளிர் சுரமுந்தீரும்.

கற்றாழைச்சோறும் ஆவின் பாலும் கலந்து உண்ண விந்துகட்டும் சொறி குஷ்டம், சோகை, காமாலை, தீரும், மூலச்சூடு தணியும் கண்குளிரும்.

மருதமூலத்தைப் பாலிற்கொள்ள நீரழிவு பிரமேகம், மயக்கம், தாகம், சுரதாபம் குஷ்டம், கிருமி, வயிற்றுவலி வரட்சூலை தீரும்.

வேங்கை மூலத்தைப் பாலிற்கொள்ள குத்திருமல் இருமல், ஈளை, உளமாந்தை, புண், சீவடிதல், மலக்கட்டு நீங்கும் கண்ணுக்கு ஒளியுண்டாம்.

வன்னி மரமூலத்தைப் பாலிற் கொள்ள வாதம் சன்னிதோஷம், காணாக்கடி விஷம், கபம் சொறி நீங்கும்.

இருவாட்சி மூலத்தைப் பாலிற் கொள்ள கண்ணுக்கு ஒளியும் தேகத்துக்கு அழகுமுண்டாம் வலி மூர்ச்சை தீரும்.

காட்டாத்தி மூலத்தைப் பாலிற்கொள்ள அதிசாரம், மந்தம், காசம், விஷம் தீரும்.

பெருங்குமிள் மூலத்தைப் பாலிற்கொள்ள மேகயெரிவு, சுக்கிலக்கடுப்பு, பித்தசுரம், வாதசுரம், திரிதோஷம் நீங்கும்.

கடலிராஞ்சி மூலத்தைப் பாலிற்கொள்ள மதுமேகம், மேகவாயு, மேகவாதநீர், பித்தநீர், கபநீர், தொந்தநீர், மேகசுரம், பேதி, சீதக்கடுப்பு பிரமேகம் தீரும்.

பூதவிருக்ஷ மூலத்தைப் பாலிற் கொள்ள பலவிஷக்கடிகள் வாதநோய்கள் ஜன்னி தீரும்.

வாகைமூலத்தைப் பாலிற்கொள்ள பெருவிஷம் சிறுவிஷக்கடி அனல், விரணம், வாதரட்சி, தாகசுரம், நாக்கு அட்சரம் தீரும்.

கருவாகை மூலத்தைப் பாலிற் கொள்ள விரணம் சுரம் வாயு கிருவிகபம் தீரும்.

இலவமூலத்தைப் பாலிற் கொள்ள நீர்க்கடுப்பு, எரிவு, வெள்ளைவிழுதல், மேகந்திரும் விந்தூறும்.

விளாமூலத்தைப் பாலிற்கொள்ள காசசுவாசம், அரோசியம், தாகம், பித்தம் நீங்கும்.

கருநெல்லிமூலத்தைப் பாலிற்கொள்ள ஜன்னி, வாதம், மயக்கம், தேகக்கடுப்புத்திரும். நட்படக்கொள்ளக் காய சித்தியாகும்.

மலைவேம்பின் மூலத்தைப் பாலிற்கொள்ள மலட்டுக் கிருமி இரத்த குன்மம் உடலில் ஓடிஓடிக்குத்துகின்ற வாயு தீரும்.

சர்க்கரை வேம்பின் மூலத்தைப் பாலிற்கொள்ள காய சித்தியுண்டாகும் சுக்கலசுரோணித சித்தியுண்டாகும் கபரோகம் நீங்கும்

கோங்கிலவின் பூவைப் பாலிற்கொள்ள நரைதிரைமாறும் கொடிய வியாதிகள் தீரும் மேனி பொன் போலாகும்.

நெல்லிக்காயைப் பாலிற்கொள்ள பித்தம், அனல், கபம், பீனிசம், வாய் நீர்ஊறல், வாந்தி, மயக்கம், வெட்டை, பிரமேகம் மலக்கட்டு நீங்கும் நாட்படக்கொண்டால் நரைதிரைமாறும்.

மேற்படி இலையைக் காடிவிட்டிடித்துப் பிழிந்தசாறு அரைக்கால்படி கொள்ள நன்றாய் விரோசனமாகும் பித்தநீர் கீழ் நோக்கும்.

எட்டிவித்தைப் பாலிற்கொள்ள தேள் நட்டுவக்காலி விஷமும் மற்றவிஷங்களும் தீரும். குஷ்டம், கைகருப்பு, வாதம், தாதுநஷ்டம், நீங்கும். பித்தம் அதிகரிக்கும், சிலந்தி ரெத்தக்கட்டி, நீர்க்கட்டி, புண்புடைகளில் மேற்படி வித்தை அரைத்துப் பூசத்திரும்.

கடம்புவிரையைப் பாலிற்கொள்ள விஷகடி நோய் குஷ்டம் இருமல் இளைப்பு எலிகடிவிஷம் சிரசிலுள்ள நீர்வாதம் தீரும்.

மேற்படி விரையை வெந்நீரில் அரைத்துக் கொடுக்க மல ஜல அடைப்பு வயிற்றுப் பொருமல் நீங்கும்.

அரசம்வித்தைப் பாலிற்கொள்ள மேகம் நீர்க்கடுப்புத் தீரும். பெண்களுக்குக் கருப்பமுண்டாம்.

அத்திவிரையைப் பாலிற் கொள்ள நீர்க்கடுப்பு, மூத்திரக் கிருச்சரம், எலும்புருக்கி, தசையுருக்கி, மூலக்கொதிப்பு, விந்திலுள்ள தோஷம் நீங்கும்.

கல்லத்திவித்தைப் பாலிற்கொள்ள மேகம் வெட்டை விந்திலுள்ள தோஷம் இரத்தபித்த காசம் நீங்கும்.

தேத்தாவிதையைப் பாலிற்கொள்ள மேகம் வெட்டை விந்திலுள்ள தோஷம் இரத்தபித்த காசம் நீங்கும்.

தேத்தாவிதையைப் பாலிற்கொள்ள பித்தகாசம், க்ஷயம், ஈளை, இருமல், மேகம், பிரமியம், உந்திப்புண், கிருச்சரம், கண்ணெரிவு, தேகக்கடுப்பு நீங்கும் தீபனமுண்டாம்.

நத்தைச்சூரிவித்தைப் பாலிற்கொள்ள விந்துகட்டும் தேகபலமுண்டாம்.

மாங்கொட்டை பருப்பைப் பாலிற்கொள்ள சீதம், இரத்தக்கடுப்பு, மூலக்கொதிப்புத் தீரும்.

மேற்படி பருப்பு, கருவேப்பிலை, சுண்டைவத்தல் இவைகளைப் பொடித்து பசுவின் வெண்ணெயிலாவது தயிரிலாவது கொள்ள மேற்படி வியாதிகள் தீரும்.

புளியவித்தின் மேற்றொலியைப் பாலிற்கொள்ள சுக்குலமேகம் அதிசாரம், உந்திப்புண், நீர்க்கடுப்பு, வெட்டை தீரும்.

மகிளவித்தைப் பாலிற்கொள்ள தாதுவிர்த்தி யுண்டாம் வெப்பு விஷம் மலக்கட்டு நீங்கும்.

தில்லைவித்தைப் பாலிற்கொள்ள சிறுவிஷம், பெறுவிஷம், திமிர்வாயு, கபம், குஷ்டம் தீரும்.

ஆளிவித்தைப் பாலிற்கொள்ள வீக்கம், வாந்தி, வலிவாயு, நரம்புக்குத்தல், அழலை, அரோசியம், ஓக்காளம், விரைவாதம் நீங்கும், மேற்படி விரையை முலைப்பால் விட்டரைத்து வெண்ணெயில் மத்தித்து சிலந்தி வீக்கத்தில் பூச வற்றும்.

முருங்கைவித்தைப் பாலிற் கொள்ள விந்துகட்டும்.

பூனைக்காலி வித்தைப் பாலிற்கொள்ள விந்துகட்டும் இரத்தக் கழிச்சல் கரப்பன் தீரும்.

உருத்திராக்ஷத்தை முலைப்பாலிற் கொடுக்க தாகம் திரிதோஷம் விக்கல் பித்தந் தீரும்.

மாதுளம் வித்தைப் பாலிற்கொள்ள மேகக்கடுப்பு சுக்கில தோஷம் நீங்கும். விந்து கட்டும்.

கொட்டை முந்திரிபருப்பைப் பாலிற்கொள்ள இந்திரிய புஷ்டியுண்டாம் மேற்படி பருப்பு, வாதம் பருப்பு இருப்பவல் இம்மூன்றையும் சமமாய் பால்விட்டரைத்துக் கற்கண்டு, சீனி, நெய், தேன்விட்டு லேகியஞ்செய்து சாப்பிட்டுவர விந்தூறும் போகம்மிகும்.

வாதம் பருப்பைப் பாலிற்கொள்ள போகம்மிகும், மேற்படி தயிலத்தால் கண்படலம் தீரும்.

கழல்காய்வித்துப் பருப்பை பாலிற்கொள்ள அண்டவாதம், பக்கசூலை, குன்மவாயு தீரும். மேற்படி பருப்பும், தேங்காயுந்தின்ன மேற்படி வியாதிகள் தீரும். மேற்படி பருப்பும் வெள்ளுகாயிலையும் அரைத்துத் தின்ன மேற்படி வியாதிகள் தீரும். மேற்படி பருப்பை முட்டையில் பொரித்துத் தின்ன மேற்படி வியாதிகள் தீரும்.

நெருஞ்சிக்காயைப் பாலிற்கொள்ள வெட்டை யெலும்புருக்கி நீர்க்கட்டு சதையடைப்பு நீர்ச்சிறுப்பு நீங்கும்.

சவ்வரிசியைப் பாலிற்கொள்ள அஸ்திமேகம் சீழ்மேகம் இரத்தமேகம் தீரும் தாதுவிர்த்தியாகும்.

மூங்கில் வித்தைப் பாலிற்கொள்ள இரத்தபித்தம் சுரம் கண்ணோய் தீரும்.

திப்பிலி அரிசியைப் பாலிற் கொள்ள சிலேத்துமம், கபம், வயிற்றுப்பிசம், மேகம், வாதசுரம், கபசுரம் தீரும். தாதுவிருத்தி யுண்டாம்.

சாரப்பருப்பு ஜாலமிசறி இவைகளைத் தனித்தனி பாலிற்கொள்ள விந்துகட்டும் வெள்ளை விழுதல், நீர்க்கடுப்பு நீங்கும்.

துத்திவிரையைப் பாலிற்கொள்ள கைகாலிற் படருகிற கருமேகம், குஷ்டம், வெப்பு அகலும்.

நீர்முள்ளிவித்தைப் பாலிற்கொள்ள மேகம், அதிசாரம், நீர்வீக்கம், இளைப்பு இருமல், தீரும், விந்தூறும் இரத்த விருந்தியாகும்.

ஆறாங்காண்டம்

முற்றிற்று.

இனி ஏழாம் பாகம்.

உ

தேவிசகாயம்

அனுபோகவயித்திய

பிரம்மரகசியம்

ஏழாவது காண்டம்

விநாயகர் துதி

காப்பு

ஆதியெனும் பராபரமே சின்மயமே போற்றி
அண்டரண்டம் நிறைந்த நிற்குணமே போற்றி
சோதிமயமாய் நிறைந்த சுடரொளியே போற்றி
சூட்சசடாதாரபீடத் துருவே போற்றி
வேதியெனும் சுழிமுனையின் பொருளே போற்றி
வேதாந்த மாயிரத்தின் விதிநூல் போற்றி
நீதியெனுமாதிசரு வாணியம்மாள்
நிரஞ்சனமாய் நின்றகண பதியேபோற்றி.

ஆனைப்போல் முகத்தையுடைய ஓ விநாயகரே! உற்பத்தி, ஸ்திதி, சங்காரம், என்னும் முத்தொழில்கள் உன்னால் உண்டாகிறது உலோகோபகாரமாய் தன்வந்திரியை அவதரித்து உலோகத்தார்படும் வியாதிகளென்கிற துயரங்களைப் போக்கினாய் உலோகோப காரார்த்தமாய் நன்மை செய்த வுனக்கு நான் நமஸ்கரிக்கின்றேன்.

முகவுரை

நைமிசாரண்ணியத்தில் சநக சநந்தனாதிகள் சூதபௌ ராணிகரைப் பார்த்து ஓ முனிசிரேஷ்டரே! சொர்ணாதி சப்த தாதுக்களாலும் உபதாதுக்களாலும், ரஸ பாஷாணாதி வர்க்கங்களும் ஒஷதிகளும் முன்ஜென்மத்திசெய்த தீவினை இந்த ஜென்மத்தில் வியாதிகளாக வுருவங்கொண்டு மனிதர்களை வேதனை செய்துக்கொண்டிருப்பதைப் போக்கி விடுமென்று சொன்னீர்கள் அவ்விருத்தாந்தத்தை சாங்கோ பாங்கமாகச் சொல்ல வேண்டுமென்று கேழ்க்க, சூதபுராணிகர் நைமிசாரண்ணிய வாசிகளைப் பார்த்துச் சொல்லத் தொடங்கினார்.

ஓ முனிசிரேஷ்டர்களே! நீங்கள் வினவியவினா உலோகத்திற்கு மிகவும் நன்மை செய்யத்தக்கது இவ்விஷயங்களைப் பற்றி பூர்வத்தில் சர்வதயாபர மூர்த்தியாய் பஞ்சகிர்த்தியங்களுக்கும் ஆதாரபூதராய்ச் சச்சிதானந்தரூபராய் தேவர்களுக்கெல்லாந் தேவரான மகாதேவர் தமது பிராட்டியாராகிய பார்வதி தேவியாருக்கு அருளிச்செய்த இந்த ஆயுர்வேதத்தை சுகப்பிரம்மரிஷியால் நான் அனுக்கிரகம் பெற்றதை உலரோபகாரார்த்தமாய் உங்களுக்குச் சொல்லுகிறேன் சற்றே செவிகொடுத்துக் கேளுங்களென்று சொல்லத் தொடங்கினார்.

சிருஷ்டி, ஸ்திதி, சங்காரம், திரோதானம், அனுக்கிரகமென்னும் பஞ்சகிர்த்தியங்களுக்கும் ஆதாரபூதரான ஓ பிராணநாதா! சொர்ணாதிசப்ததாதுக்கள், உபதாதுக்கள், ரசபாஷாணாதிவர்க்கங்கள், மூலிகைகளென்னு மவைகளின் சுத்தி, மாரணம், பஸ்மம், அனுபானம், குணம், தோஷம் தோஷங்களுக்குப் பரிகாரமென்னு மிவைகளை சவிஸ்தாரமாய்ச் சொல்லவேண்டுமென்று பார்வதிதேவியார் கேட்டருள பரமேஸ்வரர், தாமரையிதழ்களைப் போல் கண்களும், பூர்ணசந்திரனைப்போ லொத்தமுகமும், சொர்னகும்பத்தைப்போ லொத்த ஸ்தனங்களும், சிங்கத்தைப் பழிக்கும் யிடையும், அன்னத்தைப்போல் நடையிலுமுடைய ஓ பூங்கொடியாளே! முன்பு உனக்கு தாரகரகசியத்தை உபதேசிக்கும்போது துயில்கொண்டது போல் அஜாக்கிறதையாயிராமற்படிக்கு ஜாக்கிறதையாய்க் கேழ்ப்பாயாக வென்று சொல்லத் தொடங்கினார்.

சப்ததாதுக்கள்

சொர்னத்தைப்போல சரீரகாந்தியுடைய ஓ பெண்களின் நாயகமே பொன், வெள்ளி, தாம்பிரம், நாகம், வங்கம், ஜஸதம், அல்லது சத்து, லோகம் என தாதுக்கள் ஏழு விதங்கள் ஓ இமயமலை அரசனுடைய புத்திரியே! சத்தும் தாம்பிரமும் சேர்ந்து பித்தளையாகும், ஈயமும் தாம்பிரமும் சேர்ந்து வெண்கலம் ஆகும்.

சப்ததாதுக்களின் சுத்தி

பொன், வெள்ளி, செம்பு, லோகம், பித்தளை, வெண்கலம் என்னு மிவைகளை சிறிய ரேக்குகளாய்த் தட்டிக் கொண்டு நெருப்பில் காய்ச்சி எள்ளெண்ணெய், மோர், கோமூத்திரம், கஞ்சி, கொள்ளுவேவித்த தண்ணி யிவைகளில் ஒவ்வொன்றிலும் ஏழுதகுதி காய்ச்சி துவைத்து யெடுத்தால் சுத்தியாகிறது நாகம், யீயம், சத்து, இவைகளைக் காய்ச்சி வுருக்கி மேற்கூறிய ஐந்து தினுசுகளிலும் எவ்வேழு தகுதிபோட்டு

யெடுத்துக்கொள்ளவும், அல்லது நாகம் வங்கம் என்னுமிரண்டு தாதுக்களைக் காய்ச்சிவுருக்கி எருக்கன் பாலில் வூத்தவேண்டியது இம்மாதிரியாய் மூன்று தகுதிசெய்தால் சுத்தியாகும். சொர்னாதி தாதுக்களின் மாரணக்கிரமங்களை சொல்லுகிறேன் சொர்னாதி தாதுக்களின் பஸ்மங்கள் சகலமான வியாதிகளைப் போக்கடிக்கும்.

சொர்னபரிட்சை

பொன்னை நெருப்பில் காய்ச்சினால் அதிசீதளமாயும், சிவப்பாயுமிருந்தால் மேலானதென்றும், வெண்மையாயிருந்தால் தாழ்ந்ததென்றும் அறியவேண்டியது.

சொர்னமாரணம்

சுத்திசெய்த பொன்னை ராவி பொடிசெய்து கல்வத்திலிட்டு அதற்கு சமயெடையாய் சுத்திசெய்த ரசத்தைச் சேர்த்து அரைத்து உருண்டைசெய்து இவ்விரண்டுக்கும் சமயெடையாய் சுத்திசெய்த கெந்தியை மேற்படி உருண்டைக்கு கவசஞ்செய்து அகலில்வைத்து மேல் அகல்மூடி சீலைமண் செய்து முப்பது காட்டு எரிமுட்டையில் புடம்போட வேண்டியது இம்மாதிரியாய் (14) தகுதிசெய்தால் பொன்யாதொரு களங்க மில்லாமல் பஸ்மமாகும்.

மற்றொருவிதம்

சுத்திசெய்த பொன்னை மூசையில் வைத்து அதுவுருகும் பொழுது அதற்கு வீசம்பாதம் யீயத்தைச்சேர்த்து நன்றாய் வுருகினபிறகு வெளியில் யெடுத்து அனலாத்திக் கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாற்றால் நன்றாயரைத்து உருண்டை செய்து அவ்வுருண்டைக்கு சமயெடையாய் சுத்திசெய்த கெந்தகத்தையெடுத்து அதிற்பாதியை ஒரு அகலில் போட்டு மேற்படி உருண்டையைவைத்து மற்றபாதியை அதின்மீது போட்டு மேல் அகல்மூடி சீலைமண் செய்து முப்பது காட்டு எரிமுட்டையில் புடம்வைக்க வேண்டியது இம்மாதிரியாய் யேழுபுடம் வைத்தால் களங்கபஸ்மமாகும்.

இதுவுமது

சுத்திசெய்த பொன்னை சிறியரேக்குகளாய்த் தட்டிக் கொண்டு கரசிலாகண்ணிச்சாற்றால் சவ்வீராஞ்சனத்தை யரைத்து ரேக்குகள் மீது தடவி அகலில்வைத்து மேல் அகல் மூடி சீலைமண் செய்து கெஜபுடம் போட்டால் பஸ்மமாகும்.

இதுவுமது

சுத்திசெய்த பொன்னை சிறியரேக்குகளாய்த் தட்டிக் கொண்டு ஹேமாட்சிகத்தை எலுமிச்சம், பழச்சாற்றால் அரைத்து ரேக்குகளுக்குத் தடவி வெய்யலில் வைத்து காய்ந்த பிறகு அகலில் வைத்து மேல் அகல்மூடி மூன்று சீலைமண்செய்து மூன்று தகுதி கெஜபுடம் வைத்தால் பஸ்மமாகும்.

சொர்னபஸ்மத்தின் குணம்

பொன் பஸ்மம் அருந்துவதால் வாதம், பித்தம், பிரமேகங்கள், காசசுவாசங்கள, க்ஷயங்கள், கிராணிகள், அதிசாரங்கள், சுரங்கள், குஷ்டங்கள என்னும் வியாதிகள் நீங்கும். தேககாந்தியும் வீரிய விர்த்தியும் உண்டாக்கும், யவ்வனத்தையும் நிருத்தும்.

அபக்குவ சொர்னபஸ்மத்தால் உண்டாகும் தோஷம்

அபக்குவமான சொர்னபஸ்மம் சாப்பிடுவதால் வலிமையும வீரியத்தையும் இந்திரிய விர்த்தியையும் நாசப்படுத்தி ரோகத்தை அதிகரிக்கச் செய்து அசௌக்கியத்தையும் மரணத்தையும் உண்டுபண்ணும்.

இதற்குப் பரிகாரம்

கடுக்காத்தூள் சர்க்கரை இரண்டையும் சமயெடையாய் சேர்த்து மூன்றுநாள் காலை மாலை மூன்று விர்றகடைப் பிரமாணம் உட்கொண்டல் அபக்குவமான சொர்னபஸ்மத்தை அருந்துவதால் உண்டான சகல தோஷங்களையும் சந்தேகமில்லாமல் நிவர்த்தி செய்யும்

சொர்னபஸ்ம அனுபானம்

சொர்ன பஸ்மத்தை யிரண்டு குன்றியிடை கரிசிலாங்கண்ணிச் சாற்றால் உட்கொண்டால் ஸ்திரீபோகத்தில் விசேஷ வலிவு உண்டாகும். பசும்பாலில் உட்கொண்டால் அதிக பலனுண்டாகும். வெள்ளைச்சாரணைச் சாற்றால் உட்கொண்டால் கண்களைப் பற்றிய வியாதிகளெல்லாம் பறந்தோடும் பசும் நெய்யால் உட்கொண்டால் கிழத்தனம் விட்டு விலகும். வசம்பால் உட்கொண்டால் புத்தி கூர்மை யுண்டாகும். கடுகு ரோகணியால் உட்கொண்டால் தாபத்தை யோட்டும் குங்குமப்பூவால் உட்கொண்டால் சரீரகாந்தியுண்டாகும் அப்பொழுது கரந்தபாலில் உட்கொண்டால் சரீரகாந்தியுண்டாகும்

அப்பொழுது கரந்தபாலில் உட்கொண்டால் மிகவும் குரூரமான க்ஷயரோகங்களை நாசப்படுத்தும் இலவங்கம், சுக்கு, மிளகு, யிவைகளால் உட்கொண்டால் உற்பாதரோகங்கள் அபஸ்மாரங்கள சந்நிபாதங்கள் இவைளை நாசப்படுத்தும், தேன் நெல்லிவற்றல் இவைகளால் உட்கொண்டால் குரூரமான கிராணிகள் விஷங்கள் நிவர்த்தியாகும் நிலைப்பூசினிக்கிழங்கால் உட்கொண்டால் புத்தி ரோற்பத்தியுண்டாகும் இச்சாபத்தியம்.

வெள்ளிபரிக்ஷை

வெள்ளியானது கனிஜம், வேதஜம், வங்கஜம் என மூன்று விதங்களாயிருக்கின்றது. இம்மூன்று விதங்களில் வங்கஜம், வேதஜம் என்கிற இரண்டும் மிருதுவாயும், வெண்மையாயு மிருப்பதால் இவைகளை பஸ்மம் செய்வதில் உபயோகிக்க வேண்டியது கனிஜம் என்கிற வெள்ளி வெண்மையாயிருந்தாலும் மிருதுவாயில்லாமையால் அதை அவுஷதங்களில் உபயோகப்படுத்தலாகாது.

வெள்ளிபஸ்மம்

சுத்திசெய்த வெள்ளியை சிறிய ரேக்குகளாய்த் தட்டிக் கொண்டு அதற்கு சமயெடையாய் சுத்திசெய்த ரசத்தையும் கெந்தியையும் கல்வத்திலிட்டரைத்து ரேக்குகளுக்குத் தடவி உலர்த்தி சிறிய குடுவையில் வைத்து மேலோடு மூடி ஒருநாள் காடாக்கினியில் எரித்தால் சுத்தபஸ்மமாகும்.

மற்றொரு விதம்

சுத்திசெய்த வெள்ளியை சிறிய ரேக்குகளாய்த் தட்டிக் கொண்டு அதற்கு கால்பாகம் சுத்திசெய்த அரிதாரத்தை பழச்சாற்றாலரைத்து ரேக்குகளுக்குத் தடவி வுலர்த்தி அகலில் வைத்து மேல் அகல்மூடி சீலைமண்செய்து (30) காட்டு எரிமுட்டையில் புடம்வைக்க வேண்டியது, இம்மாதிரியாய் மூன்று தகுதி புடம்வைத்தால் பரிசுத்தமான வெள்ளி பஸ்மமாகும்.

இதுவுமது

சுத்திசெய்த வெள்ளியை ராவி பொடிசெய்து அதற்கு சமயெடையாய் சுத்திசெய்த ரசத்தைக் கலந்து இவ்விரண்டிற்கு சமயெடையாய் சுத்திசெய்த அரிதாரத்தையும் சுத்தி செய்த கெந்தியையும் சேர்த்து பழச்சாற்றால் அரைத்து உருண்டை செய்து

உலர்த்தி அகலில் வைத்து மேல் அகல்மூடி சீலைமண் செய்து முப்பது காட்டு எரிமுட்டையில் புடம் வைக்க வேண்டியது இம்மாதிரியாய் மூன்று புடம் வைத்தால் சுத்தமான வெள்ளி பஸ்மமாகும்.

இதுவுமது

சுத்திசெய்த வெள்ளியை சிறிய ரேக்குகளாய்த் தட்டிக் கொண்டு அதற்கு நான்கு பாகங்கள் மாதுளம்பழம் சிறிய முள்ளங்கியிலை யிவைகளின் சுரசத்தில் அந்த ரேக்குகளை ஏழுநாள் வூரவைத்து உலர்த்தி அகலில் வைத்து மேல் அகல்மூடி சீலைமண் செய்து வராகபுடம் வைக்க வேண்டியது யிம்மாதிரியாய் மூன்று புடங்கள் வைத்தால் வெள்ளி பஸ்மமாகும்.

வெள்ளி பஸ்மத்தின் குணம்

வெள்ளி பஸ்மமானது சாதாரணமாய் சகல வியாதிகளையும் போக்கும், முக்கியமாய் பித்தம், வாதம், கபம், குன்மம், பிரமேகம், சுவாசம், காசம், க்ஷயம், மயிர்நறைத்தல், சோபை முதலியவைகளை நாசப்படுத்துவதில் இதற்கு சமானமான பஸ்மம் வேரொன்றும் கிடையாது. சரீரகாந்தி தேகபுஷ்டி வயது என்னுமிவைகளை விருத்திசெய்யும் பசிதீவினை யுண்டாகும்.

அபக்குவமான வெள்ளி பஸ்மத்தால் உண்டாகுந் தோஷம்

அபக்குவமான வெள்ளி பற்பம் அருந்துவதால் தேகத்தில் தாபம், மலபந்தம் வீரியநாசம், அலுப்பு, பலம் க்ஷீணித்தல் கோரமான வியாதிகள் உற்பத்தி முதலிய கெடுதிகளை உண்டாக்கும்.

இதற்கு பரிகாரம்

சர்க்கரையும், தேனையும் கலந்து மூன்று நாள் காலை மாலை ஒரு துலாம்யிடை உட்கொண்டால் அபக்குவ வெள்ளிபற்பத்தால் உண்டான சகல வியாதிகளும் சூரியனைக் கண்ட பனிபோல் விட்டகலும்.

வெள்ளிபஸ்ம அனுபானம்

வெள்ளி பஸ்மத்தை இரண்டு குன்றியெடை சர்க்கரையில் உட்கொண்டால் சகலதாபங்களும் நாசமாகும், திரிபல சூரணத்தால் உட்கொண்டால் வாதரோகங்கள் பித்தரோகங்கள் விட்டகலும், திரிசுகந்த சூரணத்தால் உட்கொண்டால் சகல பிரமேகங்கள்

சொஸ்தமாகும், சத்தியக்ஷார சூரணத்தால் உட்கொண்டால் எட்டுவித குன்மரோகங்கள் மறைந்துப் போகும், திரிகடுகு சூரணத்துடன் ஆடாதோடையிலை இரசத்தைக்கலந்து வெள்ளிபஸ்பம் உட்கொண்டால் இருமல், கபம் இவைகள் நீங்கும், கண்டுபாரங்கி, சுக்கு இவைகளுடன் உட்கொண்டால் சகல க்ஷயங்களும், க்ஷணத்தில் க்ஷீணமாகும், சூப்புடனாகிலும் அல்லது பசும்பாலிலாகிலும் உட்கொண்டால் மாந்தம் அபஸ்மாரம்போம், திப்பிலிச் சூரணத்தால் உட்கொண்டால் சோபைகள்போம், வெள்ளைச் சாரணை இரசத்தால் உட்கொண்டால் பாண்டு ரோகங்கள் போம், பசும்நெய்யால் உட்கொண்டால் மயிர்நரைத்தல் வலிகள் சொஷ்தமாகும் பசி தேககாந்தி யுண்டாம்.

தாமிரபரிக்ஷை அல்லது செம்புபரிக்ஷை

செம்பானது மிலேச்சம் நேபாளஜம் யென இரண்டுவிதங்ள், மிலேச்சம் துலக்கினாலும் கறுத்திருக்கும், நேபாளஜத்தை துலக்கினால் சிவப்பாயிருக்கும், ஆகையால் ஔஷதங்களுக்கு இரண்டாவதான நேபாளஜத்தை உபயோகப்படுத்த வேண்டியது.

தாமிரதோஷம்

தாமிரத்தில், வாந்தி, பிரமை, பேதி, அலுப்பு, தாபம் இந்திரியநாசம், தினவு, சூலையென எட்டுவிதங்களான தோஷங்களுண்டாயிருக்கின்றது.

செம்புசுத்தி

செம்பை, எள்ளெண்ணெய், பசுவின்மோர், பசுவின் மூத்திரம் இவைகளில் சுத்திசெய்தால் வாந்தியை நிருத்தும், புளித்தகழுநீர், கொள்ளு வேவித்தநீர் இவைகளில் சுத்திசெய்வதால் விடாதவாந்தியை நிருத்தும், கள்ளிப்பால் பசுவின்பால் இவைகளில் சுத்திசெய்வதால் அலுப்பைப் போக்குகிறது, புளி, எலுமிச்சம்பழம் இவைகளில் சுத்தி செய்வதால் தாபத்தைப் போக்குகிறது, காட்டுவாகைப்பட்டை கற்றாழை இவைகளின் இரசத்தால் சுத்தி செய்வதால் சூலைகள் சொஸ்தப்படுத்தும், பசுநெய், பசும்பால் இவைகளில் சுத்தி செய்வதால் தினவைப்போக்கும், திராக்ஷை, இரசம், தேன் இவைகளில் சுத்தி செய்வதால் இந்திரிய நாசத்தைச் சரிப்படுத்தும், தயிர்மீது யேடு காட்டுக்கரணைக்கிழங்கின் இரசம் இவைகளில் சுத்திசெய்தால் பேதியை நிருத்தும், ஆகையினால் செம்பை சிறிய ரேக்குகளாய்த் தட்டிக்கொண்டு மேற்கூறிய தினுசுகளில் ஒவ்வொன்றின் பிரத்தியேக

பிரத்தியேகமாய் ஏழு தகுதி காய்ச்சி துவைத்து எடுத்தால் களங்கமற்ற சுத்தியாகும்.

செம்புபஸ்மம்

சுத்திசெய்த செம்புரேக்குகளை கல்வத்தில் இட்டு அதற்கு பாதிபாகம் சுத்திசெய்த இரசத்தை ரேக்குகள் மீது வார்த்து செம்பு ரேக்குகள் வெள்ளையாகிற வரையிலும் பழச்சாற்றால் நன்றாய் அரைக்க வேண்டியது பிறகு அந்த ரேக்குகளுக்கு இரண்டு பாகங்கள் சுத்திசெய்த கந்தகத்தை கடலைப் புளிப்பாலரைத்து ரேக்குகளுக்குப்பூசி உலர்த்தி அகலில் வைத்து மேல் அகல்மூடி சீலைமண்செய்து ஒரு பெரியபானையில் சாம்பல்போட்டு அதின்மத்தியில் மேற்படி கலசத்தை வைத்து கமலாக்கினியாய் நாக்கு ஜாமங்கள் யெரித்தால் செம்பு பஸ்மமாகும் பிறகு அந்த பஸ்மமும் அதற்கு பாதி பாகம் சுத்திசெய்த கந்தகமும் கல்வத்திலிட்டு காட்டு கருணைக்கிழங்கு ரசத்தால் ஒருஜாமம் அரைத்து அகலில் வைத்து சீலைமண் கவசஞ் செய்து கெஜபுடம் வைக்க வேண்டியது பிறகு அந்த செம்பு பஸ்மமும் அதற்கு கால்பாகம் சுத்தி செய்த கந்தகமும் ஒன்றாய்க்கலந்து பசுவின் பாலாலும், மோராலும், நெய்யாலும், மூத்திரத்தாலும், சாணியாலும், பிரத்யேக பிரத்தியேகமாய் அரைத்து புடம் வைக்க வேண்டியது பிறகு சர்க்கரையாலும் தேனாலும் மேற்கூறியபடி புடம் வைக்க வேண்டியது சுத்தமான செம்பு பஸ்பம் மயிலின் கண்டத்தின் வர்ணத்தைப்போல் இருக்கும் அந்த பஸ்மத்தை பசுபம்பாலால் சுத்திசெய்ய வேண்டியது.

மற்றொருவிதம்

சுத்திசெய்த செம்பு ரேக்குகளுக்கு சமயெடையாய் சத்திசெய்தரசம், சுத்திசெய்த கெந்தகம் இவைகளைக் கலந்து கல்வத்தில் இட்டு புளியாலரைத்து மேற்படி ரேக்குகளுக்குத் தடவி உலர்த்தி அகலில் வைத்து மேல் அகல்மூடி சீலைமண் கவசஞ்செய்து கஜபுடம் இடவேண்டியது, இம்மாதிரியாய் மூன்று தகுதி செய்து கஜபுடங்களிட களங்கமற்ற தாம்பிர பஸ்மமாகும்.

இதுவுமது

சுத்திசெய்த செம்பு ரேக்குகளுக்கு கால்பாகம் சுத்தி செய்த பாதரசத்தைப்பூசி பிறகு புளிபால் சுத்திசெய்த கந்தகத்தை யரைத்து ரேக்குகளுக்குத் தளமாய்ப்பூசி உலர்த்தி ஒரு தோண்டியில் புளியைக் கரைத்து வார்த்து அதற்கு நடுவில் இந்த ரேக்குகளை வைத்து ஒருஜாமம்

எரித்தால் தாமிர பஸ்மமாகும் இந்த பஸ்மம் சகல வியாதிகளையும் தீர்க்கும்.

செம்புபஸ்ம குணம்

செம்புபஸ்மத்தை சாப்பிடுவதால் காசம், சுவாசம், கபம், வாதரோகம, உதரரோகம், கிருமிரோகம், குஷ்டங்கள், சூலைகள், சுரங்கள், தினவுகள், வாந்தி, வீக்கம், பாண்டு காமாலை, மூர்ச்சை, மூலங்கள, அதிசாரங்கள், க்ஷயங்கள் குன்மங்கள், தலைநோவு, விக்கல் பிரமேகங்கள், பிரமை முதலிய வியாதிகளை நாசப்படுத்தி பசிதீவினை யுண்டு பண்ணும்.

அபக்குவமான செம்பு பஸ்மத்தால் உண்டாகும் தோஷம்

அபக்குவமான செம்புபற்பம் அருந்துவதால் வாந்தி, பேதி, தாபம், பிரமை, மூர்ச்சை, பிரமேகம், பலஹீனம், இந்திரிய நாசம், க்ஷயரோகம் முதலிய துற்குணங்களுண்டாம்.

இதற்குப்பரிகாரம்

கற்கண்டு, கொத்துமல்லி, இவைகளை சமயெடையாய் எடுத்து சலம்விட்டரைத்து மூன்று நாளைக்கு காலை மாலை உட்கொண்டால் அபக்குவ செம்பு பஸ்மத்தால் உண்டான வியாதிகள் விட்டகலும்.

செம்புபஸ்ம அனுபானம்

செம்பு பஸ்மத்தை இரண்டு அல்லது மூன்று அரிசியெடை திப்பிலி சூரணம் தேன் இவைகளில் கொடுத்தால் சகலரோகங்களும் விட்டகலும் வைத்தியன் அந்தந்த ரோகக்குறிகளை செவ்வையா யறிந்து ரோகத்திற்குத் தகுந்த அனுபானங்களோடு இந்த பஸ்மத்தை உபயோகிக்க வேண்டியது.

நாகசுத்தி
நாகம் என்றால் காரீயம்

நாகத்தை நெருப்பில் வைத்து உருக்கி கற்றாழைச் சாற்றிலாகிலும், திரிபலாதி கஷாயத்திலாகிலும், தோய்க்க வேண்டியது. இம்மாதிரியாய் ஏழுதகுதி உருக்கி தோய்த்தால் நாகம் சுத்தியாகும்.

நாகபஸ்பம்

மேற்படி நாகத்தை சட்டியிலிட்டு அக்கினியில் வைக்க உருதியாயிருக்கும் எருக்கன் வேறால் மூன்று ஜாமங் கிளரிவர பஸ்மமாகும்.

இதுவுமது

நாகம் அதற்குச் சமயெடை சுத்திசெய்த மனோசிலை இவ்விரண்டையும் கல்வத்திலிட்டு ஆடாதோடை இலைச்சாற்றால் அரைத்து மூன்று கும்பபுடங்கள் போட்டால் மாசற்ற பஸ்மமாகும். இதை அனுபான விசேஷத்தால் சகல வியாதிகளுக்கும் கொடுக்கலாம்.

கும்பபுடமென்றால், பெரிய மண்பாத்திரத்திற் கடியில் ஒரு அங்குல பிரமாணமுள்ள நாற்பது துவாரங்கள் செய்து அப்பானைக்கு பாதிவரைக்கும் நாட்டுக்கரிபோட்டு அதின் மீது மருந்தை வைத்துப் பானையை ஒரு அகலால் மூடி மண்சீலையால் வாயிற்கு கவசஞ்செய்து நிழலில் உலர்த்தி அப்பானை மீதுள்ள அகலில் நெருப்பை வைத்து அடியில் தீயைமூட்டி தீபாக்கினியாய் மூன்று நாளெரித்து அனல் ஆறின பிறகு மருந்தை எடுத்துக் கொள்ளவும் இந்த முறைக்கு கும்பபுடமென்று பெயர்.

மற்றொரு விதம்

சுத்தி செய்த நாகம் அதற்கு இரண்டு பாகம் சுத்தி செய்த மனோசிலை இவ்விரண்டு தினுசுகளை உறுதியாயிருக்கும் பானையில் வைத்து அடுப்பேற்றி காடாக்கினியா யெறித்து உருதியான முருக்கன் கொம்பால் கிளரிக் கொண்டிருந்தால் பஸ்மமாகும் பிறகு அந்த பஸ்மத்திற்கு கால்பாகம் சுத்திசெய்த மனோசிலையைச் சேர்த்து வெற்றிலைச்சாற்றாலரைத்து பில்லை தட்டி உலர்த்தி அகலில் வைத்து மேல் அகல்மூடி சீலைமண் செய்து குக்குடபுடம் இடவேண்டியது இம்மாதிரி முப்பத்திரண்டு புடம் வைத்தால் காரீயம் களங்கமற்ற பஸ்மமாகும்.

இதுவுமது

சுத்திசெய்த நாகம் அதற்கு கால்பாகம் அபினி, இந்த தினுசுகளை ஒருபானையில் வைத்து அடுப்பேற்றி எலுமிச்சங் கொம்பால் கிளரிக்கொண்டு காடாக்கினியாய் எரித்தால் நாகம் வெண்மையான பஸ்மமாகும் இந்த பஸ்மம் இந்திரியத்தை விருத்தி செய்யும்.

நாகேஸ்வரஞ் செய்யுமுறை

ஓ இமயமலை இராஜனது தவச்செல்வமே! நாகபஸ்மம் (8) துலாம் சுத்திசெய்த லிங்கம் (8) துலாம், சுத்திசெய்த மனோசிலை (கால்பாகம்) இவைகளை ஒன்றாய்க்கலந்து இந்த யெடைக்கு சுத்திசெய்த கெந்தகத்தைச் சேர்த்து பழச்சாற்றில் (3) ஜாமங்களரைத்து பில்லைசெய்து நிழலிலுலர்த்தி அகலில் வைத்து மேல் அகல்மூடி சீலைமண் கவசஞ்செய்து கெஜபுடம் வைத்தால் பஸ்மமாகும இதற்கு நாகேஸ்வரம் என்று சொல்லுவார்கள்.

காரீயபஸ்மகுணம்

ஓ பெண்கள் நாயகமே! மேற்கூறிய சாஸ்திர விதியின் படி செய்த நாகபஸ்மமானது வாதரோகம், க்ஷயம், குன்ம ரோகங்கள், பாண்டு சூலை, பிரமை, கபம், அக்கினி, மாந்தம், சுக்கிலதோஷம், காசங்கள் மூர்ச்சை, கிறாணி, கிருமி ரோகங்கள், அபமிருத்தியு முதலிய ரோகங்களை விலக்கும். நூறு ஆனைகளுக்கு சமானமான பலத்தையும் ஆயுசுவிர்த்தியும் உண்டுபண்ணும்.

அபக்குவநாக பஸ்மத்தால் உண்டாகுந் தோஷம்

பக்குவமற்ற நாகபஸ்மம் உட்கொள்ளுவதால் இரத்த தோஷங்கள், கபம், பாண்டு, குஷ்டம், குன்மம், அரோசிகம், க்ஷயம், சுரம், மூலவியாதிகள், நீரடைப்பு, சூலைகள், பவுத்திரம், முதலிய கெட்ட வியாதிகள் உண்டாகும்.

இதற்குப் பரிகாரம்

வசம்பு, கடுக்காய் இவைகளைச் சூரணித்து வெள்ளை சர்க்கரையுடன் கலந்து மூன்று விரற்கடைப் பிரமாணம் காலை மாலை மூன்றுநாள் உட்கொண்டால் அபக்குவமான நாகபஸ்மத்தா லுண்டாகும் மேற்கூறிய வியாதிகள் இடிவிழுந்த செடியெப்படி வேறுடன் நாசமாகுமோ அப்படி நாசமாகும்.

நாகபஸ்ம அனுபானம்

நாகபஸ்மத்தை இரண்டு அரிசியெடை பிரமாணம் சர்க்கரையில் உட்கொண்டால் பித்தம், வாதம், தலைநோவு, நேத்திரரோகங்கள், சுக்கிலதோஷங்கள், பிதற்றல், தாபம் முதலயவைகள் பறந்தோடும,

அரோசகத்தைப் போக்கும், வீரிய விருத்தியாம், இம்மாதிரியாய் வயித்தியன் இதரரோகங்களை அனுசரித்து அந்தந்தரோகங்களுக்கு தக்கின அனுபானங்களால் இந்த பஸ்மத்தைக் கொடுக்க வேண்டியது.

நாகேஸ்வர அனுபானம்

சூரியோதயத்திற்கு முன்பாகத்தானே மனிதன் நாகேஸ்வரத்தை இரண்டு அரிசியெடை வெற்றிலையில் மடித்து உட்கொண்டால் நூறுமாதருடன் புணர்ச்சி செய்தாலும் தணியாமல விசேஷமாய் காமவிருத்தியுண்டாகும்.

வங்கபரீக்ஷை

வங்கம் என்றால் வெள்ளீயம் அல்லது தகரம்

ஓ உமா! வெண்மையாயும் உறுதியாயும் இருக்கிற வெள்ளீயத்தை ஔஷதங்களுக்கு உபயோகப் படுத்த வேண்டியது இதரமான தாதுக்களுடன் கலந்த ஈயத்தை யெப்பொழுதும் உபயோகிக்கக் கூடாது.

வங்கபஸ்மம்

சத்தி செய்த வங்கத்தை பாண்டத்திலிட்டு அதற்குச் சம எடையாய் திரிபலசூரணஞ் சேர்த்து அடுப்பின் மீது வைத்து தேரினவேப்பமரக் கொம்பால் கிளரி வந்தால் பஸ்மமாகும். இந்த பஸ்மத்தை சகல வியாதிகளுக்கும் உபயோகிக்கலாம்.

மற்றொரு விதம்

சுத்திசெய்த வங்கம் அதற்கு கால்பாகம் நாயுருவி ரசம் இவைகளை பாண்டத்திலிட்டு அடுப்பேற்றி யெறிய இரும்பு சுரண்டியால் சிவப்புவர்ணம் ஆகிறவரையிலும் மெள்ளமாய்க் கிளறி அதையெடுத்து அகலில் வைத்து மேல் அகல் மூடி சீலைமண் கவசஞ்செய்து காடாக்கினியாய் கஜபுடம் வைத்தால் மாசற்ற வெண்மையான பஸ்மமாகும்.

வங்கேசுவரம் செய்யுமுறை

வங்கபஸ்மம 4-துலாம், சங்குபஸ்மம் 1-துலாம், இரச பஸ்மம் 1-துலாம், அரிதாரபஸ்மம் 2-துலாம், இவைகளை கல்வத்திலிட்டு புளித்த நீரால் அரைத்து பில்லைசெய்து நிழலிலுலர்த்தி அகலில் வைத்து சீலைமண் கவசஞ்செய்து கெஜபுடம் வைத்தால் பஸ்மமாகும் இதற்கு வங்கேசுவரமென்று பெயர்.

வங்கபஸ்ம குணம்

வங்கபஸ்மம் அருந்துவதால் சுவாசம, பிரமேகம், வாதம் உதரரோகம், சூலை, கபம் பாண்டு, பிரமை, வாந்தி, க்ஷயங்கள் முதலிய சகல ரோகங்களும் நாசமாகி தேகத்திற்கு பலனுண்டாகும்.

வங்கேசுவரகுணம்

வங்கேசுவரம் அருந்துவதால் பிரமை, திமிர், கபம், பிரமேகம், காசசுவாசங்கள், வாதம், பித்தம், ரத்ததோஷம, கிறாணிகள், சூலைகள குஷ்டங்கள், பாண்டு சுரம் முதலியவைகள் சூரியனைக் கண்ட இருளைப்போல் உடனே மறைந்து விடும்.

அபக்குவ வங்கபஸ்ம தோஷம்

பக்குவமற்ற வங்கபஸ்மத்தை சாப்பிடுவதால் குன்மங்கள், குஷ்டங்கள், பிரமேகங்கள, வாதம், ரத்ததோஷம், அக்கினி மந்தம், பாண்டு, துற்பலன் முதலிய வியாதிகள் உண்டாகும்.

இதற்குப்பரிகாரம்

சர்க்கரை, வட்டத்திருப்பி, வேர்ப்பட்டை இவைகளை சமனிடையாய் சூரணித்து காலை மாலை மூன்றுநாள் உட்கொண்டால் அபக்குவ வங்கபஸ்மம் அருந்துவதால் உண்டான சகல வியாதிகளும் விட்டகலும்.

வங்கபஸ்ம அனுபானம்

வங்கபஸ்மத்தை பச்சை கற்பூரத்தால் உட்கொண்டால் வாயில் துர்நாற்றத்தைப் போக்கும், பசும்பாலிலாகிலும், ஜாதிக்காய், சூரணத்திலாகிலும் உட்கொண்டால் தேக புஷ்டி யுண்டாகும், துளசியிலைச்சாற்றால் உட்கொண்டால் பிரமேகங்கள் விட்டகலும், வெங்கார சுன்னத்துடன் உட்கொண்டால் குன்மரோகங்கள் சொஸ்தமாகும், பசும்நெய்யில் உட்கொண்டால் பாண்டுரோகம் விட்டகலும, மஞ்சள் சூரணத்தால் உட்கொண்டால் மேல்மூச்சு ரத்தபிததம் இவைகள் நீங்கும், சர்க்கரையில் உட்கொண்டால் பித்த ரோகங்கள்போம், தேனுடன் உட்கொண்டால் பலம் விருத்தியாகும். கஸ்தூரியிலாகிலும் வெத்திலையிலாகிலும் உட்கொண்டால் வீரியஸ்தம் பனமாகும், திப்பிலி சூரணம் கஸ்தூரி இவைகளில்

உட்கொண்டால் அக்கினி மாந்தம் போம், மருதம்பட்டை கஷாயத்தால் உட்கொண்டால் நேத்திர ரோகங்கள் சொஸ்தமாகும், நெல்லிவற்றல் சூரணத்தாலாகிலும் கொட்டைப்பாக்கு சூரணத்தாலாகிலும் உட்கொண்டால் அசீரணம் போம், வெள்ளுள்ளி இரசத்தால் உட்கொண்டால் எலும்பைப்பறறிய சுரங்கள் பறந்தோடும், நொச்சியிலை சொரசத்தால் உட்கொண்டால் குஷ்டரோகங்கள் விட்டகலும், வங்கபஸ்மம் இலவங்கம் கோரோஜனம் இவைகளை அரைத்து திலதமிட்டால் ஜனவசியமாகும், இலவங்கம் ஆமணக்குவேர் இவைகளை அரைத்து தேகத்திற்கு பூசிக்கொண்டால் அர்தாவ பேதகமென்கிற வாரோகம் சொஸ்தமாகும் நாயுருவிப்பட்டை சூரணத்தால் சேவித்தால் கூன்போகும, மேலும் வங்கபஸ்மம் இலவங்கம சிந்து பலம் இம்மூன்றை வெற்றிலைச்சாற்றால் அரைத்து ஆண்குறிக்கு லேபனம செய்தால நீண்டும், அமுக்கிறாகிழங்கு சூரணத்தால் உட்கொண்டால் வாதரோகம் ஹரிக்கும், ஆட்டுப்பாலால் உட்கொண்டால் புத்திரசந்தானம் உண்டாகும், கழுதைமோரில் உட்கொண்டால் வாதகுன்மங்கள் சொஸ்தமாகும், முள்வெள்ளரிக்கா இரசத்தில் உட்கொண்டால் நபும்ஸகனுக்கு பும்ஸகத்துவம் வுண்டாகும் நாயுருவியிலைச் சாற்றால் உட்கொண்டால் சிரரோகங்கள் விட்டகலும், ஜாதிக்காய், ஜாதிபத்திரி, இலவங்கம் இவைகள் கலந்த சூரணத்தால் உட்கொண்டால் தாதுதோஷங்கள் போம் ஜாதிக்கா, அமுக்கிறாக்கிழங்கு இவைகளது சூரணத்தால் உட்கொண்டால் இடுப்புவலிப்போம், வெள்ளுள்ளி தைலத்துடன் கலந்து நசியம் செய்தால் அபஸ்மாரரோகம் விட்டகலும் ஜாதிக்காய், இலவங்கம் இவைளைச் சூரணித்து மேற்படி பஸ்மத்தையம் தேனையும் கலந்து உட்கொண்டால் காசரோகங்கள் பேர்சொல்லாமல் ஓடும், துளசிரசத்தால் உட்கொண்டால் அதிக பலமுண்டாகும்.

ஜஸதபஸ்மம்

ஜஸதமென்றால சத்து அல்லது தரா

சத்தையும் வங்கத்திற்குச் சொன்ன மாதிரியாய் சுத்தி செய்துசிறிய ரேக்குகளாய்த் தட்டிக் கொண்டு அந்த ரேக்குகளுக்கு கால்பாகம் சுத்திசெய்த மனோசிலை, கால்பாகம் சுத்தி செய்த கந்தகம் இவைகளை எருக்கன் பாலால் அரைத்து ரேக்குகளுக்குப்பூசி வெய்யலில் உலர்த்தி அகலில் வைத்துச் சீலைமண் செய்து கஜபுடம் போட வேண்டியது இம்மாதிரியாய் (12) புடம் போட்டால் மாசற்ற பஸ்மமாகும்.

மற்றொரு விதம்

சுத்திசெய்த சத்தை சிறிய ரேக்குகளாய்த் தட்டிக் கொண்டு அதற்கு கால்பாகம் சுத்தி செய்த ரசம் சுத்திசெய்த கந்தகம் இவைகளைக் கற்றாழைச்சாற்றால் அரைத்து பிறகு பழச்சாற்றாலும் அரைத்து அந்த ரேக்குகளுக்குப்பூசி வெய்யலில் உலர்த்தி அகலில் வைத்து சீலைமண் கவசஞ்செய்து ஒரு கெஜபுடம் வைத்தால் களங்கமற்ற பஸ்மமாகும், வங்கபஸ்மத்திற்கு அல்லது நாகபஸ்மத்திற்குச் சொல்லிய பிரகாரம் சத்தையும் புடம்வைத்தால் பஸ்மமாகும், இந்த பஸ்மத்தை சகல ரோகங்களுக்கும் உபயோகிக்கலாம்.

தராபற்பத்தின்குணம்

சத்துபற்பத்தை உட்கொள்வதால் திரிதோஷங்கள், பிரமேகம், அக்கினிமாந்தம், நேத்திரரோகம், அதிசாரம், பித்தசுரம், அசீரணம், காசம் மலபந்தம், சீதபேதி, வாந்தி, சூலை, சீதசுரம் ரத்தாதிசாரங்கள் முதலிய வியாதிகள் விட்டகலும்.

அபக்குவசத்துபற்ப தோஷம்

பக்குவமற்ற சத்துபற்பத்தை உட்கொள்வதால் பிரமேகங்கள், அசீரணம், வாதரோகங்கள், வாந்தி, பிரமை இவைகள் உண்டாகும், ஆகையால் நாகத்திற்குச் சொல்லியிருக்கிற சுத்தியைப்போல் இதையுஞ் சுத்திசெய்து பஸ்பம் செய்து உபயோகிக்க வேண்டியது.

இதற்குப்பரிகாரம்

கடுக்காய் பிஞ்சுகைளச் சூரணித்து சர்க்கரையுடன் மூன்று நாள் காலைமாலை உட்கொண்டால் அபக்குவமான சத்து பற்பத்தால் உண்டாகும் ரோகங்கள் நிவர்த்தியாகும்.

சத்துபற்ப அனுபானம்

சத்துபற்பத்தை இலவங்கப்பட்டை, ஏலக்காய், ஜாதிபத்திரி இவைகள் சூரணத்தால் உட்கொண்டால் வாதாதி திரிதோஷ விகாரங்கள் விட்டகலும், நெல்லி இரசத்தால் உட்கொண்டால் அக்கினிமாந்தம்போம், பழய பசுநெய்யைக் கலந்து கண்ணுக்கு கலிக்கம் போட்டால் சகலவித நேத்திர ரோகங்கள் விட்டகலும், வெற்றிலைச்சாற்றால் உட்கொண்டால் பிரமேகங்கள் போம், கர்ஜூரம், கழுநீர் இவைகளில் உட்கொண்டால் வாந்தி இவைகளைப் போக்கும்,

ஓமம், இலவங்கம், சீரகம், சர்க்கரை இவைகளது சூரணத்தால் உட்கொண்டால் சூலை தோஷங்கள் போம். ஓமவெந்நீரில் கலந்து உட்கொண்டால் மலச்சிக்கல் விலகும், ஓமம், இலவங்கம், வெந்நீரில் கலந்து உட்கொண்டால சீதபேதி நிற்கும், எருமைவெண்ணெயில் உட்கொண்டால் பிரமேகங்கள்போம், தேன் திப்பிலி சூரணம் இவைகளால் உட்கொண்டால் காசரோகங்கள் நிவர்த்தியாகும், கோதுமைரொட்டியை நெய்யுடன் கலந்து சாப்பிடுவது பத்தியம்.

பேதாபேதங்கள்

ஓ பார்வதி லோகமானது காந்தம் எஃகு இரும்பு என மூன்று விதங்களாய் இருக்கிறது. இவைகளில் காந்தம் சிரேஷ்டமானது, எஃகு இரண்டாவது, இரும்பு பலவித தோஷங்கள் இருக்கிறபடியால் மூன்றாவதாரமாய் எடுக்கப்பட்டிருக்கிறது.

காந்தத்தின் பேதங்கள்

காந்தமானது ரோகம், பிராஜிகம், கம்பகம், திராவகம் என நான்கு விதங்களாய் இருக்கின்றது.

காந்தசுத்தி

காந்தத்தை, பழச்சாறு காடி, புளித்தமோர் இவைகளில் ஒவ்வொன்றிலும் எவ்வேழு தகுதி ஒவவொரு நாழி உலர்த்தி எடுக்க சுத்தியாகும், பிறக அதை திரிபல கஷாயத்திலும் அனேக தகுதி சுத்தி செய்யவேண்டியது, எஃகு இரும்பு இவைகளையும் மேற்கூறிய மாதிரி சுத்தி செய்ய வேண்டியது.

காந்தபற்பம்

சுத்திசெய்த காந்தத்தை அதற்கு கால்பாகம் கந்தகஞ்சேர்த்து எருக்கன்பால் கங்கணப்பூண்டுவேர், இரசம், முருக்கன்பட்டை இரசம் இம்மூன்றினால் வெவ்வேறாய் ஒவ்வொரு ஜாமமரைத்து மூன்று கஜபுடம் வைத்தால் காந்தம் பற்பமாகும்.

காந்தசிந்தூரம்

காந்த பற்பத்திற்கு பாதிபாகம் லிங்கத்தைச் சேர்த்து சிறுகாஞ் சோரிவேர், இரசத்தால் மூன்றுநாள் அரைத்து சிகப்பு மண்ணால் செய்யப்பட்ட மூசையில்வைத்து மூன்று கஜபுட மிட்டால் பால சூரியனைப்போல் காந்தம் சிந்தூரிக்கும்.

காந்ததுரிதி

நரி, ஆடு, ஆமை முதலியவைகளின் எலும்புகளையும் சிலாசத்தையும் சூரணித்து காந்தசூரணத்தைச் சட்டியில் போட்டு சிவந்த நிறமாகும் வரையில் காய்ச்சி காந்தம் பாத இரசத்தைப்போல் நிற்கிறவரையில் மேற்கூறிய சூரணத்தை கொஞ்சங் கொஞ்சமாய்த் தூவிக்கொண்டு இருக்க வேண்டியது, அப்படி இடைவிடாது தூவிக்கொண்டு காந்தசூரணத்தை எரித்தால தெளிவான பாத ரசததைப்போல ரூபமாகும்.

காந்தபஸ்மத்தின் குணம்

காந்தபற்பம் சரீரகாந்தி யுண்டுபண்ணும் வாதரோகம், அருசி, கபரோகம், க்ஷயரோகம், விஷங்கள், திரிதோஷம், குஷ்டரோகங்கள், மேகப்புத்துக்கள், சூலை, மூலம், குன்மம், பாண்டு முதலிய ரோகங்களைப் போக்கி வாழ்நாளை அதிகரிக்கச்செய்யும்.

காந்தசிந்தூரகுணம்

காந்த சிந்தூரத்தால் கபரோகம், வாதரோகம், பித்தத்தா லுண்டாகும் தேகமெலிவு, சுக்கிலதோஷம், எலும்புருக்கி நோவு இரத்தபித்த விகாரங்கள், வாந்தி மார்புநோவு, அருசி, மூர்ச்சை, தலைகற்றல், பாண்டு மேகத்தாலுண்டாகும் விகாரங்கள், யோனிரோகம், குன்மம், காசசுவாசம், அக்கினிமாந்தியம், சூலை அதிசாரம் விஷரோகங்ள், நானாவிதங்களான நேத்திரரோகங்கள், சரீரதாபம், கண்டரோகம், குஷ்டம், உன்மாதம், அபஸ்மாரம், இரணங்கள், திரிதோஷசுரங்கள், மூலரோகம் காமாலை கிராணி முதலிய ரோகங்கள் நிவர்த்தியாகும்.

அபக்குவ காந்தபற்ப சிந்தூரதோஷங்கள்

அபக்குவகாந்த பற்ப சிந்தூரங்கள் உட்கொள்வதால் விஷங்கள், தாபங்கள், உதரரோகங்கள் முதலியவைகளை யுண்டுபணணி சுக்கில நஷ்டத்தையும் காந்தி. ஹீனத்தையும் உண்டாக்கி வாழ்நாட்களை சீக்கிரத்தில் முடியச்செய்யும்.

இதற்குப்பரிகாரம்

இந்துப்பு வெண்சிவதைவேர் சூரணம், இவைகள் இரண்டையும் வெந்நீரில் கலந்து உட்கொண்டால் அபக்குவபற்ப பிரயோகத்தாலுண்டாகும் ரோகங்கள் நிவர்த்தியாகும்.

(கவனிப்பு) இரும்பு, எஃகு, காந்தம் என்கிற மூன்று தாதுக்களுக்கும் லோஹம் என்று பெயர், சரகம், மாதவகல்பம், பைரவகல்பம், பாஹாட்டம், சித்தசாரணவம் பேஷஜகல்பம், ஜாதுக்கரணம், ஸூஸ்ருகம், அசுவனீயம், ஆயுர்வேதம், சிந்தூரமணிதற் பணம், பூஜ்யபாதீயம், தேவீசாஸ்திரம், சந்திரகல்ப:ம் பிரம்மகாருடம் நித்தயநாதீயம், ரேவண, சித்தகல்பம் முதலிய கிரந்தங்களில் காந்தத்தையே சிந்தூரிக்கவும் பற்பிக்கவும் உபயோகப்படுத்தவும், சொல்லியிருக்கிறது அப்படி காந்தம் அகப்படாதபட்சத்தில், தீக்ஷுணம் அதாவது எஃகை உபயோகப்படுத்தவும், எஃகு அகப்படாத பட்சத்தில் இரும்பை உபயோகப்படுத்தவும் இதுவும் அகப்படாத பட்சத்தில் மண்டூரம் உபயோகப்படுத்தவும்.

லோஹபாக பேதங்கள்

லோஹமானது, மிருது, மத்திமம், சுரம் என மூன்று பாகங்களுடையது, ரசத்துடன் கூடியிருக்கிறது மிருதுபாகமென்றும், காய்ந்து இருக்கிறது. மத்தியபாகமென்றும் மணலைப் போலிருக்கிறது சுரபாகமென்றும் அறிந்து கொள்ளவும்.

லோஹசுத்தி

லோஹத்தை சிறுரேக்குகளாய்த் தட்டிக்கொண்டு எண்ணெயில் வேகவைத்து யெண்ணை போகும்படி வேலன்பட்டை இரசத்தில் ஒருஜாமம் வேகவைத்து எடுத்து வெய்யலில் உலரவைத்தால் சுத்தியாகும், லோஹத்தை செம்புக்கு சொல்லியிருக்கிற சுத்திபிரகாரஞ் சுத்தி செய்யலாம். ஆனால் திரிபலகஷாயத்தால் அதிகமாய் சுத்திசெய்தல் வேண்டும். சுத்திசெய்யும் பொழுது லோஹமானது பதின்மூன்றுபலத்துக்கு அதிகரிக்காமல் ஐந்து பலத்திற்கு குறைவு படாமல் எடுத்துக் கொள்ள வேண்டியது.

(கவனிப்பு) லோஹபற்பமுறைகள் விதவிதங்களாக யிருக்கிறபடியால் வாசிப்பவர்கள் கவனமாய் வாசித்து செய்து உபயோகப்படுத்தவும்

லோஹமாரணம்

லோஹத்தை சிறியரேக்குகளாய்த் தட்டிக்கொண்டு சுத்திசெய்த கெந்தியை தண்ணீரால் அரைத்து ரேக்குகள் மேல் பூசி நெருப்பில் காய்த்து பொன்னாங்காணியிலை ரசத்தில் தோய்க்கவும் அந்த

ரேக்குகள் தூள் ஆகிறவரையிலும் நெருப்பில் காய்ந்து பொன்னாங்காணி இரசத்தில் தோய்த்துக் கொண்டிருக்க வேண்டியது. பிறகு அந்த ரேக்குகளுக்குச் சமயெடை சுத்திசெய்த பாதரசம் சுத்திசெய்த கெந்தி இவைகளைச் சேர்த்து பொன்னாங் காணியிலைச்சாறு. ஆடாதோடையிலைச்சாறு, நொச்சியிலைச்சாறு, இந்தச் சாறுகளில் பிரத்தியேக பிரத்தியேகமாகக் கல்வத்திலிட்டு அரைத்துக் கஜபுடம் போட்டால் லோஹபற்பமாகும்.

மற்றொரு விதம்

சுத்தி செய்த லோஹசூரணத்தை திரிபல கஷாயத்தால் அறைத்து உருண்டை செய்து உலர்த்தி அகலில் வைத்து சீலை மண் செய்து காற்றில்லாத யிடத்தில் பதினாறு அங்குல ஆழமான பள்ளத்தை வெட்டி அதில் புடம்போட வேண்டியது இம்மாதிரியாக அறுபத்துநாலு புடம்போட்டால் பத்மராகத்தைப் போன்ற துல்லிதமான லோஹபற்பமாகும். இம்முறையாய் முடித்த லோக்பற்பம் சகல வியாதிகளையும் நிவர்த்தி செய்யும்.

மற்றொரு விதம்

ஓ பெண்களின் நாயகமே! சுத்திசெய்த இரசம் பாகம்-1, சுத்திசெய்த கெந்தி பாகம்-2, லோஹசூரணம்-2, இவைகளை கல்வத்திலிட்டு கற்றாழை இரசத்தால் இரண்டு ஜாமமறைத்து அதை செம்பு பாத்திரத்தில் வைத்து அந்த பாத்திரத்தின் வாயை ஆமணக்குயிலையால் மூடி இரண்டு ஜாமம் சூரியபுடம் வைத்து மேல்பாத்திரத்திற்கு நன்றாய் சூடுதாங்கினவுடனே அதையெடுத்து தானியராசியில் மூன்றுநாள் வரையிலும் புதைத்து வைக்கவேண்டியது, பிறகு அம்மருந்தை யெடுத்து கல்வத்திலிட்டு அரைக்க பற்பமாகும்.

மற்றொரு விதம்

சுத்திசெய்த ஹயப்பொடியைக் கல்வத்திலிட்டு மை போலரைத்து நாவல்பட்டைச் சாற்றில் இரண்டுஜாமம் வேகவைத்து மறுபடியும் கல்வத்திலிட்டு அறைக்கவும், இம்மாதிரியாக நெல்லிச்சாற்றிலும், புளியிலைச்சாற்றிலும், முருங்கைப்பட்டைச் சாற்றிலும், கோமூத்திரத்திலும் வேகவைத்து கல்வத்தில் இட்டு அரைத்து மூசையில் வைத்து சீலைமண் செய்து கெஜபுடம் போட பற்பமாகும். இந்த லோஹபற்பத்தை இரசயோகங்களில் பிரயோகப்படுத்தலாம்.

லோஹசிந்தூரம்

லோஹபற்பத்தை திரிபல இரசம் ஆவின்பால் எருக்கன்பால் இவைகளால் ஏழுநாள் அரைத்து கஜபுடம் போடவும் இம்மாதிரி ஏழு கஜபுடமிடவும் அல்லது கறுமான் உலையில் வைத்து காய்ச்சினால் லோஹம் சிந்தூரமாகும்.

லோஹதுரிதி

கெந்தி, சிகப்பு, உப்பு இவைகள் சமயெடையாய்ச் சூரணித்து எஃகு பொடியை சட்டியில் போட்டு தீயில் வைத்து மேற்படி சூரணத்தை தூவிக் கொண்டிருந்தால் எஃகு நீர்த்து பாதரசம் போல் ஆகும், மேலும், சகல தாதுப்பொருள்களும் இந்தச் சூரணத்தால் நீர்க்கும் என்று அறிக.

லோஹபற்பகுணம்

(ரஸரத்தினாகரம்) லோஹபற்ப பிரயோகத்தால் கஷ்டமான வியாதிகள் நிவர்த்தியாகும், லோஹபற்பத்தை சதா காலம் உட்கொள்வதால் சரீரகாந்தியும் வலிவும் உண்டு பண்ணி நரையை நீக்கும்.

(நித்தியநாதீயம்) லோஹபற்பம் வாழ்நாட்களை நீடிக்கச் செய்து வீரியத்தை விர்த்திசெய்து பாண்டு மேகம், குஷ்டம், வாதம், நரை முதலிய வியாதிகளைப் போக்கி பசிதீபனையுண்டாக்கும்.

(ஆயுர்வேதம்)லோஹபற்பம் விஷக்கடிகள், காமாலை, எலும்புரிக்கிநோவு, பித்தரோகம், மூலம் கிராணி, கபம், சோகை, பிரமேகங்கள், குன்மம், குஷ்டம், அக்கினி மாந்தியம் முதலியவைகளைப் போக்கி தேகத்திற்கு காந்தியையும் வலியையும் கொடுக்கும்.

அசுத்தலோஹதோஷம்

அசுத்தலோஹபற்ப பிரயோகத்தால் குட்டம், சூலை மேகம் க்ஷயம், காமாலை, மார்வலி, வீரியநாசம், தாபம் முதலிய ரோகங்களை யுண்டாக்கும்.

இதற்குப்பரிகாரம்

வெள்ளறுகு இரசத்தில், தேனாகிலும் அல்லது சர்க்கரையாகிலும் போட்டு உட்கொண்டால் மேற்படி பற்பதோஷத்தால் உண்டாகும் வியாதிகள் நிவர்த்தியாகும்.

மற்றொருவிதம்

கற்கண்டு, தேன் இவைகளில் ஏலக்காய் சூரணித்துக் கலந்து மூன்றுநாள் உட்கொண்டால் மேற்படி பற்பதோஷத்தால் உண்டாகும் வியாதிகள் சகலமும் சூரியனைக்கண்ட பனிபோல் பறந்தோடும்.

லோஹயோனி ரக்ஷமந்திரம்

லோஹமென்றால் காந்தம், எஃகு, இரும்பு இம்மூன்றை அடியில் கண்டிருக்கும் மந்திரத்தைச் சபித்துக் கொண்டு புட மெரிக்கவும். ஓம் அம்ருதோத்பவாயபட்.

லோஹமர்த்தனமந்திரம்

ஓம் அம்ருதோத்பவாய சிவாஹ என்று ஜபித்துக் கொண்டு லோகத்தை கல்வத்திலிட்டு அரைக்கவும்.

பலிதானமந்திரம்.

ஓம் நமச்சண்ட வஜ்ரபாணியே மஹாயக்ஷ சேனாதிபதயே குருகுரு மஹாவித்யாவிலாய சுவாஹ என்று அஜெபித்துக் கொண்டு பலிகொடுக்கவும்.

பக்ஷணமந்திரம்

ஓம் அம்ருதம் பக்ஷயாமிசுவாஹ இந்த மந்திரத்தை ஜபித்துக் கொண்டு லோகபற்பத்தை உட்கொள்ள வேண்டியது.

லோஹ விசேஷகுணம்

ஆயுர்வேதம் மண்டூரம் அதாவது கிட்டத்தைவிட இரும்பு பதின்மணக்கு குணமுடையது, இரும்பைவிட யெழுகு நூறுமண்ங்கு குணமுடையது, எழுகைவிட காந்தம் லட்சமணக்கு மேலானதும் வீரியவிருத்தி உண்டு பண்ணுதலுமாய் இருக்கிறது. ஆகையால் எப்பொழுதும் காந்தத்தை உட்கொண்டால் நிறைமரணம் முதலியவைகளைப் போக்கும்.

(கவனிப்பு) லோஹம் அதாவது எழுகைப்போல் இரும்பையும் சுத்தித்து பற்பங்கள் செய்யவேண்டியது.

இரும்புக்குமுண்டாம், அயஸ்மாரம், கிருஷ்ணலோஹம் அயம் என பெயர்களாம்.

அயபற்பத்தின் குணம்

அயமானது நேத்திர வியாதிகளையும், தேகமெலிதல் முதலிய வியாதிகளையும், கபம், வாதம், சூலை, மூலம், பிரமேகம், காமாலை பாண்டு, குன்மம், ஆமவாதம், சோபை, மார்வலி முதலிய வியாதிகளை நிவர்த்திசெய்யும்.

அசுத்த அயதோஷம்

அசுத்த அயதோஷத்தால் அசுத்த லோஹபற்பத்தால் உண்டாகும் வியாதிகள் சகலமும் உண்டாகும் காந்துபற்பம் எஃகு பற்பத்திற்கு சொல்லியிருக்கும் பரிகாரம் செய்தால் நிவர்த்தியாகும்.

லோஹபற்ப அனுபானம்

லோஹபற்பத்தை சுத்திசெய்த இரசத்தால் உட்கொண்டால் சகல வியாதிகளும்போம, சிறுதேக்கு, திரிகடுகு, தேன் இவைகளுடன் உட்கொண்டால் தாது விகாரங்கள் போம். சுத்தி செய்தரசம், சுத்திசெய்த கெந்தி, தேன் இவைகளுடன் உட்கொண்டால் கபரோகங்கள்போம் லவுங்கப்பூ, இலைபத்திரி, ஏலக்கா சிறுநாவல்பூ இவைகளின் சூரணம் சர்க்கரை இவைகளுடன் உட்கொண்டால் பித்தரோகம் போம் வெள்ளைச் சாரணை சூரணம், பசும்பால் இவைகளுடன் உட்கொண்டால் விசேஷவலிவும், வெள்ளைச்சாரணை கியாழத்தால் பிரயோகித்தால் பாண்டு ரோகமும், மஞ்சள் சூரணம் தேன் அல்லது திப்பிலி சூரணம் தேன் இதுகளில் சாப்பிட்டால் அனேக விதமான பிரமேகங்களும், சிலாசித்து கலந்து உட்கொண்டால் மூத்திர அடைப்பு ஆடாதோடை லோஹபற்பம் திப்பிலி சூரணம் திராக்ஷை தேன் இவைகளில் கொடுத்தால் ஐந்துவிதமான காசங்கள்போம், வெற்றிலை இரசத்தால் உட்கொண்டால் தாதுபுஷ்டி, சரீரகாந்தி பசிதீவனமுண்டாகும். லோஹபற்பத்தை முறைதவராது அனுபானங்களுடன் உட்கொண்டால் தேகம் இரும்பைப்போல் ஆகும்

மண்டூரம் அதாவது சிட்டம் சுத்தி

சிட்டத்தைக் கருமான் உலையில்வைத்து தானிக்கா விறகு கரியாக சிவக்கக்காய்ச்சி பனைமரத்தொட்டியில் கோமூத்திரம் விட்டு அதில் ஏழுதகுதிதொவைத்தால் சுத்தியாகும், அதை மறுபடியும் உலையில் வைத்து ஊதி கோமூத்திரத்தில் தோய்த்தால் சுத்தியாகும், இப்படி சுத்திசெய்த மண்டூரத்தை மருந்துகளுக்கு உபயோகப்படுத்தவேண்டும்.

மண்டூரபற்பம்

சுத்திசெய்த மண்டூரத்தை கோமூத்திரத்தில் மூன்று தடவை வேகவைத்து மூத்திரம் சுண்டினபிறகு திரிபல கஷாயத்தில் மூன்றுநாள் கஷாயம் சுண்டுகிறவரையிலும் வேகவைத்து பிறகு அதையெடுத்து கல்வத்திலிட்டுக் கோமூத்திரம் விட்டு அரைத்துப் பில்லைதட்டி உலர்த்தி சீலைமண் கொடுத்து கஜபுடமிடவும், இம்மாதிரியாய் ஐம்பது புடமிடவும் பிறகு திரிபலகஷாயத்தாலும் ஐம்பது கஜபுடமிடவும் அப்பொழுது சுத்தமான மண்டூர பஸ்மமாகும், அதை சகல வியாதிகளுக்கும் அனுபானத்துடன் உட்கொண்டால் மிகவும் நன்மையாம்.

மண்டூரகுணம்

சுத்திசெய்த மண்டூரபற்பமானது காரமாயும் வெப்பமாயும் இருக்கிறதுமல்லாமல் புழுக்கள், காலஞ்சென்ற சுரங்கள், பாண்டு வீக்கங்கள், க்ஷயங்கள் முதலிய வியாதிகளையும் நிவர்த்தி செய்யும், லோஹபற்பத்தைப் போல இதையும் சகலமான வியாதிகளுக்கும் உபயோகிக்கலாம்.

(கவனிப்பு) மண்டூரம் லோஹத்தின் உட்பிரிவு ஆகையால் அபக்குவ லோஹபற்பசேவையா லுண்டாகும் வியாதிகளைப் போல் அசுத்தமண்டூரம் சாப்பிடுவதாலுண்டாகும். ஆகையால் லோக பற்பத்திற்கு சொல்லிய பரிகாரம் இசற்கும் செய்தால் அசுத்த மண்டூரத்தாலுண்டான வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்குமென்றறிக.

லோஹாஷ்டக பற்பவிதி என்றால் சுவர்ணாதி தாதுகள் பற்பமாகும் முறை

வங்கமானது முருக்கன் இரசத்தாலும், தாளகத்தாலும் பற்பமாகும், நாகம் எருக்கன்பால், மனோசிலை, இவைகளால் பற்பமாகும், தாம்பிரம் ஆட்டின்பால், கெந்தி இவைகளால் பற்பமாகும், எழுகு, நாகம் இவைரெண்டும் எருக்கன்பால் லிங்கம் இவைகளாலும், வெள்ளியானது சதிர்க்கள்ளிப்பால் நிமளை இவைகளாலும், பொன் மனோசிலை நாகபற்பமிவைகளாலும் பற்பமாகும்.

தாளகத்தால் வங்கமும் லிங்கத்தால் லோஹமும், ஈயத்தால் பொன்னும், மனோசிலையால் ஈயமும், கெந்தியால் தாம்பரமும், நிமளையால் வெள்ளியும், உயிர் நீங்கும்.

நவலோஹபற்ப பரிக்ஷை

சுவர்ணபற்பமானது புறாவின் கழுத்தின் நிறமாயும், தாம்பிரபற்பம், வாந்தியும், பிராந்தியும் இல்லாமலும், லோஹபற்பம் தண்ணீரின்மீது மிதக்கும்படியாகவும் இருந்தால் சுத்தமானதென்று அறிக.

சகலலோக பற்பங்களும், மித்திரபஞ்சகத்தைச் சேர்த்து நெருப்பில் வைத்து ஊதினால் மறுபடியும் உயிராகாமல் சலத்தின்மீது போட்டால் மிதந்துக்கொண்டிருந்தால் பரிசுத்தமானதென்று அறியவும்.

மித்திரபஞ்சகமென்றால், வெல்லம், குங்கிலியம், குண்டுமணி, நெய், தேன், வெங்காரம், இவைகளுடன் கலந்து ஊதினால் மறுபடியும் ஜனிக்குமென்று வைத்திய சாஸ்திரங்கள் முறையிடுகிறது.

தேன், வெல்லம், நெய், குண்டுமணி, வெங்காரம், இவ்வைந்தும் மித்திர பஞ்சகமென்று பேர்.

மறுபடியும் சனித்த பற்பத்தையும், கெந்தியையும், சமயெடையாய் எடுத்துக் கொண்டு கற்றாழை இரசத்தால் ஒரு நாளரைத்து மடக்கில் வைத்து சீலைமண் செய்து கஜபுடமிட்டால் சகலலோகங்களும் மறுபடியும் பிறவாமலிருக்குமென்று அறிந்துக் கொள்க.

சூதாதிபற்பகுணம்

இரசத்தைவிட வச்சிரத்திற்கு கோடிகுணம் அதிகம், அப்பிரேகத்தில் ஆயிரம் குணம், பொன்னில் நூறுகுணம், லோகத்தில் எண்பது குணம், காந்தத்தில் நாற்பதுகுணம், வெள்ளியில் அறுபத்திநான்கு குணம், ஈயத்தில் முப்பத்திரெண்டு குணம் அதிகமென்று சொல்லியிருக்கிறது.

நவலோகபற்பங்கள் உட்கொள்வோர் விடவேண்டிய பதார்த்தங்கள்

லோகபற்பத்தை உட்கொள்ளுவோர், கடுகு, எள்ளெண்ணெய் உளுந்தம்பருப்பால் செய்த பண்டங்கள், புளிப்புகீரை வகைகள், கல்யானபூசினிக்காய், வாழைத்தண்டு, பாவக்காய் இவைகளை விடவேண்டியது.

உபதாதுக்கள்

நிமளை, மயில்துத்தம், தாளகம், நீலாஞ்சனம, அப்பிரகம், மனோசிலை, பால்துத்தம் என உபதாதுக்கள் ஏழாம்.

நிமளையின் பேதங்கள்

நிமளையானது ஹேமாட்சிகம், ரௌப்பியமாட்சிகம், காம்ஸ்யமாட்சிகம், தம்ரமாட்சிகம் என நான்கு வகையாம, அதாவது பொன்நிமளை, வெள்ளிநிமளை, வெண்கலநிமளை, செம்புநிமளை, எனபவைகளாம். இவைகளில் சுவர்ணமாட்சிகம் அதாவது பொன்நிமளை, ரௌப்பியமாட்சிகம், அதாவது வெள்ளி நிமளையென இரண்டு ஔஷதங்களுக்கு உபயோகப் படுத்தவேண்டும்.

நிமளைலக்ஷணம்

சுவர்ணமாட்சிகம், அதாவது பொன்மாட்சிகம், கன்னியகுமரி தேசத்தில் அகப்படும். அது பத்துமாற்றுப் பொன்னைப்போல் பிரகாசித்துக்கொண்டு மூலைவாட்டமில்லாமல் இருக்கும் ரௌப்பியமாட்சிகம் அல்லது தாரமாட்சிகம் அதாவது வெள்ளிநிமளை குன்மமாயும், கோணலாயும், தட்டமாயும், வேறு தேகங்களின் அகப்படுமபடியானதாயும் ஐந்துமாற்றுப் பொன்னைப்போல் பிரகாசமாயும் பாஷாணமுடையதாயும, சுவல்பகுணத்தைக் கொடுக்கும்படியான தாயுமிருக்கும்..

சுத்தி

நிமளையை ஆடாதோடை, வெள்ளைச்சாரணை நொச்சிலி என்பவைகளின் இலைச்சாறுகளில் எதினாலாகிலும் டோலா யந்திரத்தில் ஒருநாள் வேகவைத்தால் சுத்தியாம்.

மற்றொரு விதம்

நிமளையையுடைத்து மல்துணியில் மூட்டைகட்டி ஆட்டு மூத்திரத்தில் நான்கு ஜாமமும், புளித்தகாடி நீரால் நாலு ஜாமமும், டோலாயந்திரத்தில் வேகவைத்தால் சுத்தியாம்.

மற்றொரு விதம்

நிமிளையை சூரணித்து துணியில் மூட்டை கட்டி ஆமணக்கெண்ணெய், கொடிமாதளைப் பழச்சாறு, வாழைத்தண்டின் சாறு, இவைகளால் ஒவ்வொன்றில் இரண்டு நாழிடோலாயந்திரத்தில் வேகவைத்தால் சுத்தியாம், அல்லது நிமிளையை நெருப்பில் காய்ச்சி திரிபலகஷாயத்தில் பத்து தடவை தோய்த்தால் சுத்தியாம்.

ஒருபலம் நிமிளையைத் தேன்விட்டு அரைத்து உருண்டை செய்து மல்துணியில் மூட்டைகட்டி கொள்ளுச்சாறு, கோமூத்திரம், காடிநீர் இவைகளால் பிரத்தியேக பிரத்தியேகமாய் ஒருஜாமம் டேலா யந்திரத்தில் வேகவைத்தால் சுத்தியாம்.

மற்றொரு விதம்

நிமிளை 3-பாகம், இந்துப்பு 1-பாகம், இவை இரண்டையும் பழச்சாறு, மாதுளம்பழச்சாறு, இந்தச்சாறுகளால் அரைத்து இரும்பு பானையில் போட்டு அடுப்பின் மீது வைத்து அந்த இரும்புபானை சிகப்பு ஆகிற வரையிலும் இரும்புக் கரண்டியால் மெள்ள ஆட்டிக்கொண்டிருக்கவும், பிறகு அதை அடுப்பிலிருந்து எரக்கி சுடுகை ஆறினபிறகு அதையெடுத்து ஔஷதங்களுக்கு உபயோகப்படுத்திக் கொள்ளவும்.

பொன் நிமளைபற்பம்

சுத்திசெய்த பொன்நிமிளையை கொள்ளுரசத்தாலாவது, ஆட்டுமூத்திரத்தாலாவது, எள்ளெண்ணையிலாவது, மோரிலாவது, கல்வத்திலிட்டு அரைத்து உருண்டை செய்து ஓட்டில் வைத்து சீலைமண்செய்து ஒருதடவை கஜபுட மிட்டால் அது சிகப்பு வர்ணமுடைய பற்பமாகும்.

மற்றொரு விதம்

சுத்திசெய்த கெந்தி 1-பாகம், சுத்திசெய்த பில்லை 4-பாகம், இவைகளை கல்வத்திலிட்டு ஆமணக்கு எண்ணெயால் அரைத்து உருண்டைசெய்து ஓட்டில் வைத்து சீலை மண் செய்து ஒரு கஜபுடம் போட்டால் சிந்தூரவர்னமாய் பற்பமாகும்.

பொன் நிமிளை பற்பத்தின் குணம்

பொன்நிமளை பற்பத்தால் சுக்கிலத்தை விர்த்தி செய்யும், கண்ட ஓசையை சுத்திசெய்யும், கண்ணோய்களை போக்கடிக்கும், ஸ்திரீசம் போகத்தில் விசேஷ வலிவுகொடுக்கும், மேலும் வாயு குமாரன் அக்ஷயகுமாரனை சங்கரித்ததுபோல் அடிவயற்றின்வலி, வீக்கம், மூலரோகம், பிரமேகங்கள் குஷ்டரோகங்கள், வயற்றுநோய்கள், க்ஷயங்கள், பாண்டு விஷங்கள், பித்தரோகங்கள், காமாலை, வாதரோகங்கள், முதலியவைகளை பேர்காட்டாமல் பறக்கடிக்கும்.

அசுத்த நிமளையால் உண்டாக்கும் தோஷங்கள்

அசுத்த நிமளை பற்பம் உபயோகித்தால் அநேகவித ரோகங்கள் உண்டாகிறது.

அதற்குச் சாந்தி

கொள்ளு கஷாயத்தைக் குடித்தாலும் அல்லது மாதளம் பழத்தோலைத்தின்றாலும் அசுத்த நிமிளையின் தோஷம் நீங்கும்.

பற்ப அனுபானங்கள்

தேன், திப்பிலி, சூரணம், இவைகளால் பொன் நிமளை சூரணத்தை உபயோகித்தால் கொடிய ரோகங்கள், காசம், பிரமை முதலிய நோயகள்போம்.

வெள்ளி நிமிளையையும் பொன் நிமளைக்குச் சொல்லி யருக்கிறதுபோல், சுத்தியும், பற்பமும், அனுபானமும் செய்துக் கொள்ளவேண்டும்.

மயில்துத்தத்தின் சுத்தி

மயில்துத்தம் புறாமலம் இவை இரண்டும் சமயிடை இதற்கு பத்துபாகம் வெங்காரம் இவைகளை யொன்றாய்க் கலந்து கல்வத்திலிட்டு அரைத்து யுருண்டைசெய்து நிழலிலுலர்த்தி ஓட்டில்வைத்து சீலைமண் செய்து நெருப்பின் மீது இரண்டு மூன்று நிமிஷம் வைத்து பாகஞ்செய்து எடுத்து அனல் ஆறனபிறகு அதையெடுத்து தயிராலரைத்து மேற் கூறிய பிரகாரம் புடம்போட வேண்டியது மறுபடியும் அதையெடுத்து அனல் ஆற்றி தேனால் அரைத்து புடமிட வேண்டியது இம்மாதிரியாய் செய்தால் மயில்துத்தம சுத்தமாகும்.

மற்றொருவிதம்

மயில்துத்தத்தை தயிரால் அரைத்து பில்லைசெய்து ஓட்டின் மீது வைத்து அனல்கொடுத்தால் சுத்தியாகும்.

மயில் துத்தத்தின் சத்து

மயில் துத்தம் நாலுபங்கு, வெங்காரம் ஒருபங்கு இவை இரண்டையும் சூரணித்து அரைத்து தேனும் நெய்யும் கலந்து கோஷ்டயந்திரத்தில் வைத்து காடாக்கினியாய் யெரித்தால் அது நீர்த்து

அதில் சத்திறங்கும், அந்த சத்தானது கிளிமூக்கைப்போல்சிகப்பு வர்ணமுடையதாயிருக்கும்.

(கவனிப்பு) கோஷ்டயந்திர மென்றால் ஒருமொழம் பிரமாணமான கொட்டத்தை செய்துகொண்டு அதை எட்டு அங்குலம்வட்டமாய் பூமியில் புதைத்து கீழ்ப்பக்கத்தில் வாயினிடத்தில் ஒரு பள்ளம் செய்து அதை செவ்வையாய் மெழுகி அதில் பிடிக்கிற அளவு கரிபோட்டு கொட்டத்தின் மேல்வாயில் துரித்தியை வைத்து ஊதவும் இதற்கு கோஷ்ட யந்திரமென்று பேர்.

மற்றொருவித மயில் துத்தத்தின் சுத்தி

மயில் துத்தம் இதற்குச் சமயெடை பூனையின் மலம் இவை இரண்டிற்கு மூன்றிலொருபாகம் தேன் 1/4-பாகம் வெங்காரம் இவைகளை யொன்றாய்ச் சேர்த்து கல்வத்திலிட்டு அறைத்து பில்லைசெய்து ஓட்டில்வைத்து சீலைமண்செய்து மூன்றுபுட மெரித்தால் வாந்தி, பிரமை முதலிய தோஷங்களில்லாமல் சுத்தியாகும்.

மயில் துத்தத்தின் குணமும் தோஷமும்

சுத்திசெய்த மயில் துத்தத்தால் கபம், சொறி, குஷ்டம், விஷம், கிரிமிரோகங்கள் போம், கண்களுக்கு சுகஞ்செய்யும் திரிதோஷங்களை ஓட்டிவிடும், மலத்தை செவ்வையாய்த் தள்ளும், அசுத்தமான துத்தத்தால் திரிதோஷங்கள் விருத்தியாம்.

இதற்குப் பரிகாரம்

பழச்சாற்றாலாவது, பொரியை ஊற வைத்த ஜலத்தையாவது வெட்டிவேர் ஊரின ஜலத்தையாவது, மூன்றுநாள், உட்கொண்டால் அசுத்தமயில் துத்தத்தா லுண்டான நோய்கள் தீரும்.

மயில்துத்த அனுபானங்களும் தீரும் வியாதிகளும்

மயில்துத்த பற்பத்தை வெண்ணெய் கலந்து சாப்பிட்டால் சொரி, விஷம், குஷ்டம், இவைகள் நீங்கும், வாய்விளங்கச் சூரணத்தால் உட்கொண்டால் கிருமிரோகம் போம். வெற்றிலைச்சாற்றால் உட்கொண்டால் கபரோகம்போம். மேலும் மயில்துத்த பற்பத்தையும், நிமிளையையும், தேனில் கலந்து கண்ணுக்குக் கலிக்கமிட்டால தீராத நேத்திரநோய்கள் தீரும். ஆமணக்கு எண்ணெயிற் கலந்து உட்கொண்டால் சுகமான பேதிகளாம்.

பால்துத்தத்தின் சுத்தி

ஒருபலம் பால் துத்தத்தை அறைத்து சூரணித்து துணியில் மூட்டைகட்டி கொஞ்சம், நீர்ப்பாளையில் வைத்து எரித்தால் சுத்தியாம்.

கபரி அல்லது மடல் துத்தத்தின் சுத்தி

ஒருபலம் கபரியை எடுத்து அரைத்து சூரணித்து துணியில் மூட்டைகட்டி சிறுநீரில் ஏழுஜாமமும், கோமூத்திரத்தில் ஏழுஜாமமும் டோலாயந்திரத்தில் எரித்தால் சுத்தியாம். அல்லது அந்தசூரணத்தை பசுநெய்யில் கலந்து நெய் சுண்டுகிறவரையிலும் எரித்தாலும் சுத்தியாம்.

மற்றொரு விதம்

கபரியை சிறுநீரிலாகிலும், கோமூததிரத்திலாகிலும், டோலாயந்திரத்தில் ஏழுநாள் எறித்தால் சுத்தியாம்.

கபரியின் குணம்

சுத்தி செய்த கபரி, இரத்ததோஷம், குதரரோகம், ஜீரணசுரம், அதிசாரம் முதலிய ரோகங்களை பறக்கச்செய்யும்.

அசுத்தகபரிதோஷம்
அதற்குப்பரிகாரம்

அசுத்தகபரியால் அநேக ரோகங்கள் உண்டாகும் கோமூத்திரத்தை நாலுநட்களாய் உட்கொண்டால் அசுத்த கபரியா லுண்டாகும் ரோகங்கள் நீங்கும்

கபரி அனுபானங்கள்

மிளகு சூரணம் 1-பாகம், சுத்திசெய்த கபரி 2-பாகம் இவை இரண்டிற்கும் எட்டில ஒருபாகம் பசும் வெண்ணெய் இவைகளை ஒன்றாய்ச்சேர்த்துச் செவ்வையாய் அறைக்கவும், பிறகு நெய்யின் கசடுபோகும் படிக்கு பழச்சாற்றால் அறைத்து நெய்யின் சகடுபோனபிறகு மூன்றுகுண்டு மணியெடை மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்தி அதில் ஒரு மாத்திரையை திப்பிலிச் சூரணம் தேன் இவைகளுடன் கலந்துக் கொடுத்தால் விஷசுரங்கள், தாது, கபசுரங்கள் மூலம், ஜீரண சுரம் நேத்திரரோக்ம, பித்தரோகம், இரத்தவிகாரம், இரத்தாதிசாரங்கள் முதலிய வியாதிகள்நீங்கும், இதற்கு பசும்பாலும் சோறும் சாப்பிடும்படி வைக்கவும்.

அஞ்சனங்கள்

அஞ்சனங்கள் ஐந்துவிதங்கள் அவையாவன

புஷ்பாஞ்சனம், வெண்மையாயும், சுத்தமாயும், சீதளமுடையதாயும், சகல நேத்திர வியாதிகளைப் போக்கடிப்பதாயும் இருக்கின்றது.

நீலாஞ்சனம், கருநிறமாயும், நேத்திர தோஷங்கள், க்ஷயங்கள் இவைகளைப் போக்கடிக்கும்.

இரசாஞ்சனம், பச்சையாயும், விஷதோஷங்களையும் நேத்திர ரோகங்களையு மோட்டிவிடும்.

ஸ்ரோதோஞ்சனம், கபிலவர்ணமாயும், நேத்திரரோகங்களையும் சகலரோகங்களையும் போக்கடிக்கும்.

சௌவீராஞ்சனம், சிகப்பாயும், கண்நமைமையையும், விஷதோஷங்களையும் போக்கடிக்கும்.

(கவனிப்பு) வெங்காரம், சங்கு, பலகாரை, ஐந்துவித அஞ்சனகற்கள், நாவிக்கல், அன்னபேதி, பூநாகம் இவைகளை பழச்சாற்றில் ஒருநாள் சூரியபுடமிட்டால சுத்தியாம், பிறகு இவைகளை அவுஷதங்களில் உபயோகப்படுத்தலாம்.

அஞ்சனங்கள் சுத்தி

அஞ்சனங்கள் ஐவகைகளையும் கரசனாங்கணியிலை இரசத்தால் ஒருநாள் முழுதும் ஊறவைத்தால் சுத்தியாம்.

மற்றொருவிதம்

அஞ்சனங்களை சூரணித்து அதைபழச்சாற்றால் அரைத்து ஒருநாள் முழுதும் சூரியபுடமிட்டால சுத்தியாம்.

நீலாஞ்சன குணானுபானங்கள்

சௌவீராஞ்சனம் சீதளமாயும், மலத்தை பந்திக்கும் படியானதாயும்,கண்களுக்கு நன்மை செய்யும் படியான தாயும் மதுரமாயும், க்ஷயம், பித்தம் இரத்தம், கபம், இந்த வியாதிகளை தலைகாட்டாமல் போக்கடிக்கும், சிறுநாவல்பூ, அபினி, இவைகளுடன் நீலாஞ்சனத்தைக் கொடுத்தால் அதிசாரம், கிறாணி, இவைகள்போம் சுத்திசெய்த இரசம், ஈயம் இவைகளிரண்டும் சமயிடை இந்தயிரண்டு இடைகளுக்குச் சமயிடையாய் சௌவீராஞ்சனம் இரசத்திற்கு ஐந்தில்

ஒருபாகம் சுத்திசெய்தகற்பூரம் இவைகளைக் கல்வத்திலிட்டு செவ்வையாய் அரைத்து கண்களுக்கு போட்டுக்கொண்டால சகலமான நேத்திரரோகங்கள் போகிறதுமல்லாமல் முகத்திற்கு நல்ல காந்தியுண்டாகும், நீலாஞ்சனம், இந்துப்பு, குஷ்டம் தகரவிரைகள் வாயுவிளங்கம், கடுகு இவைகளைக் கஞ்சியிலரைத்து தடவினால் நலம் மண்டை குஷ்டம் முதலிய நமைகள் அதிசீக்கிரத்தில் பறக்கும் சர்க்கரை, நெய் இவைகளுடன் நீலாஞ்சனத்தை சேவித்தால் பித்தரோகம் நிவர்த்தியாகும். சுக்கு, கடுக்காய், வெல்லம் இவைகளுடன் உட்கொண்டால் கபரோகம்போம். நீலாஞ்சனம் சுத்திசெய்த பொன்பற்பம் இவையிரண்டையும் சமயிடையாய் சேர்த்து வெண்ணெய், சர்க்கரை, தேன் இவைகளுடன் குன்றியிடை சாப்பிட்டால் க்ஷயரோகம் நிவர்த்தியாகி சரீரத்தில் விசேஷவலியும் காந்தியு முண்டாகும்.

(கவனிப்பு) அஞ்சனங்கள் ஐவகைகளுக்கும் ஒரேவிதமான குணங்கள் இருக்கிறதுபோல் தெரிய வருகின்றது. இதைக் குறித்து மேற்சொல்லிய நீலாஞ்சனம் சௌவீராஞ்சனங்களைக் குறித்து தேவிசாஸ்திரத்தில் அனுபானங்களுடன் அவைகளின் பிரயோகங்களை சொல்லியிருக்கின்றது ஆயுர்வேதத்தில் ஐவகையும் ஒன்றா யெடுக்கலாமென்று சொல்லியிருக்கிறது. ஆகையால் பண்டிதர்களை நீலாஞ்சனத்தையும் கௌவீராஞ்சனத்தையுமே உபயோகப்படுத்த வேண்டியதென்று அறிந்துகொள்ள வேண்டியது.

மனோசிலை பேதங்கள்

மனோசிலை மூன்று விதங்களாக யிருக்கின்றன. அவை யாவன ஸ்யாமாங்கியமானது லிங்கம்போல் சிகப்பாயும கொஞ்சம் பச்சைநிறமாயும் பிரகாசமற்று இருக்கும்.

கரவீரமென்பது, சிகப்பாயும், சூரணமாயும், பளுவாயும் இருக்கும திலிகண்டமென்பது, கொஞ்சம் சிகப்பும், பச்சை நிறமாயும் பளுவாயுமிருக்கும்.

இவைமூன்றில் இரண்டாவதாகிய கரவீர மனோசிலையை அவுஷதங்களில் உபயோகிக்க வேண்டியது.

மனோசிலைசுத்தி

மனோசிலையை மெல்லிய துணியில் மூட்டைகட்டி ஆட்டு மூத்திரத்தாலும் டோலா யந்திரத்தாலும் மூன்றுநாள் எரித்தால் சுத்தியாம்.

மற்றொருவிதம்

மனோசிலையை அகத்தி, இஞ்சி, கரசனாங்கணி இவைகள் இரசத்தில் பிரத்தியேக பிரத்தியேகமாய் ஏழுமுறை வேகவைத்து ஏழுமுறை அரைத்தால் சுத்தியாம்.

மற்றொருவிதம்

மனோசிலையை சுத்தமான கல்வத்திலிட்டு பசுமோரால் ஒருஜாமம் அரைத்தால் மனோசிலை சுத்தியாம்.

மனோசிலை குணம்

சுத்திசெய்த மனோசிலையால் சுரம், நேத்திரரோகம், இரைப்பு இருமல், பூதபீடை, கபரோகம், மூத்திர அடைப்பு விஷம், குஷ்டரோகம் முதலியவை நீங்கும்.

மனோசிலையின் அனுபானங்கள்

சுத்திசெய்த மனோசிலை 1-பாகம், சங்குபற்பம் 2-பாகம், மனோசிலை யெடைக்கு பாதிபாகம் மிளகு சூரணம், மிளகு சூரணத்திற்கு பாதிபாகம் இந்துப்பு இவைகளை யொன்றாய்க் கலந்து மைபோல் சூரணித்து அதில் தேன்கலந்து கண்ணுக்கு கலிக்கமிட்டால் சுக்கிலரோகம், திமிர் ரோகம், கண் ஊளை இவைகள் போம். தயிரின் மேல ஜலத்தால் மேற்சொல்லிய சூரணத்தை கண்ணுக்கு கலிக்கமிட்டால் கண் சிவப்பு நீர் வடிதல் முதலிய ரோகங்கள் போம் திப்பிலி, மிளகு, சுத்திசெய்த மனோசிலை இவைமூன்றையும் சமயிடை யெடுத்து சூரணித்து தண்ணீரால் அரைத்து கண்ணுக்குக் கலிக்கமிட்டால் பூதபீடை, ஜன்னி, பாதசுரம், நிவர்ததியாகும், சிறுதேக்கு சுக்கு இவைகள் சூரணத்தால் உட்கொண்டால் இரைப்பு நீங்கும் பொன்பற்பத்துடன் கொடுத்தால் விஷபீடைபோம், ஆடாதோடைச்சாறு, திரிகடுகு சூரணம் இவைகளுடன் கலந்துகொடுத்தால் கபநோய், இருமல் முதலிய வியாதிகள் போம் மனோசிலை ஏலக்காய் மருதம்பட்டை அன்னபேதி, ஓட்டரை கோரைக்கிழங்கு, வேங்கைப்பட்டை லோத்திரம்பட்டை, கோரோசனம், இவைகளைச் சூரணித்து கடுகு எண்ணெயில் கலந்து தேகத்தில் பூசிக்கொண்டால் விஷக்கடி நமையுடன் கூடியரணம், குஷ்டம் சொறி, பவித்திரம், மூலம், தலையில் மயிர்கள் உதிரும்படியான வியாதி முதலியவைபோம்.

அசுத்தமனோசிலையின் தோஷமும் பரிகாரமும்

அசுத்த மனோசிலையால், வாந்தி, பிரமை முதலிய அனேக வியாதிகள் உண்டுபண்ணும்.

பசும்பால், தேன் இவைளைக் கலந்து மூன்றுநாள் உட்கொண்டால் அசுத்த மனோசிலையினால் உண்டாகும் வியாதிகள் பறந்தோடும்.

கௌரிபாஷாண சுத்தி

இரண்டுபலம் கௌரிபாஷாணத்தை எலுமிச்சம் பழச்சாறுவிட்டு அரைத்து துணியில் மூட்டைகட்டி சுண்ணாம்பு நீரில் டோலா யந்திரத்தில் இரண்டு ஜாமம் எறித்தால் சுத்தியாம்.

வெள்ளை பாஷாணத்தின் சுத்தி

வெள்ளை பாஷாணத்தை சூரணித்துத் துணியில் மூட்டைகட்டி டோலாயந்திரத்தில் சுண்ணாம்பு நீரில் ஒருநாள் யெறித்தால் சுத்தியாம்

மற்றொருவிதம்

வெள்ளை பாஷாணத்தை தேனில் கலந்து ஒரு ஜாமம் மந்தாக்கினியில் வேகவைத்தால் சுத்தியாகும்.

தொட்டிபாஷாணசுத்தி

தொட்டி பாஷாணத்தை சூரணித்து துணியில் மூட்டை கட்டி கோமூத்திரத்தில் டோலாயந்திரத்தில் மூன்றுநாள் எரித்தால் சுத்தியாகும்.

அன்னபேதி

அன்னபேதி இரண்டு விதங்களாயிருக்கின்றன. அவையாவன

வாலுகாசீசம், கருநெறமுடையது.
புஷ்பகாசீசம், கபிலவர்னமுடையது.
இவைகளில் வாலுகாசீசம், மேண்மையானது.

அன்னபேதி சுத்தி

அன்னபேதி கரிசனாங்கன்னி இரசத்தில் வேக வைத்தால் சுத்தியாகும் அல்லது பழச்சாற்றில் ஒரு நாள் முழுதும் ஊறவைத்து தண்ணீர் வற்றுகிற வரையிலும் வைத்தால் சுத்தியாம்.

அன்னபேதி சத்துவபானம்

சிகப்பு, மஞ்சள், வெண்மை, கருப்புயென்கிற நிறத்தால் அன்னபேதி நான்கு விதங்களென்று கூறப்பட்டிருக்கின்றது. அவைகளை மனிதன், குதிரை, மயில், பசு, மீன் இவைகளின் பிச்சுகளால் பிரத்தியேக பிரத்தியேகமாய் அறைத்து பிறக பேய்பீர்க்கன், இலைச்சாறு, பேயாவரை இலைச்சாறு, தேன், நெய், வெங்காரம், குண்டுமணிப்பருப்பு, வெல்லம் என்பவைகளுடன் அறைத்து பில்லைசெய்து யஷ்டிகா யந்திரத்தில் வைத்து ஊதினால் அதில் சத்துயிறங்கும் அந்தச் சத்தை சூரணித்து புடமிட்டால் சிந்தூரிக்கும்.

அன்னபேதியின் குணம்

அன்னபேதியானது புளிப்பாயும், கண்களுக்கு நன்மை செய்யும்படியானதாயும், ரேரமங்களை நாசம் பண்ணும்படியானதாயும், விஷதோஷம், வாததோஷம் சிலேஷ்மதோஷம், ரணதோஷங்கள் போக்கடிக்கும்.

காவிக்கல்லின் பேதங்கள்

காவிக்கல், இரக்தகைரிகம், பூரணகைரிகம், பாஷாண கைரிகம் என மூன்று வகையாம், அவைகளில் இரக்தகைரிகத்தையே கையாடவேண்டியது.

மேற்படி சுத்தி

காவிக்கல்லை பசும்பாலில் அரைத்தால் சுத்தியாம்.

காவிக்கல்லின் குணம்

காவிக்கல் மதுரமாயும், கண்களுக்கு திவ்விய அவிடதமாயும், பசிதீவினை யுண்டுபண்ணும் படியானதாயும், ரத்த பித்தத்தை ஹரிக்கும்படியானதாயும், வாந்தி சுரம், விஷதோஷங்களை போக்கடிக்கும்படியானதாயும், பலத்தை யுண்டும்படியானதாயும் இருக்கின்றன..

சிலாசத்து

சூரியவெப்பம் அதிகமாய் மலைகளின்மீது வீசுவதினால் அதின் தாதுசாரம் கரைந்து மொழுக்குபோல் ஆகும். அதை சிலாசத்து என்பார்கள்.

சிலாசத்தின் பேதம்

கோமூத்திர சிலாசித்து கற்பூரசிலாசித்து
என இரண்டு வகையாம்.

சிலாசத்தை சத்திரக்ஷாரம், யாவக்ஷாரம், டங்கணக்ஷாரம், பழச்சாறு குங்கிலியச் சூரணம் இவைகளால் ஒவ்வொன்றில் ஒவ்வொருநான் வெய்யலில் வைத்து அறைத்து ஒருநாழி வேகவைத்தால் சுத்தியாம்.

கோமுத்திர சிலாசித்தானது கோமூத்திரத்தைப் போல் இருக்கும் கற்பூரசிலாசித்து சிகப்பாயாகிலும் அல்லது வெள்ளையாயாகிலும் இருக்கும் அதின் வெண்மையே மேலானது.

கற்பூரசிலாசித்தின் சுத்தி

கற்பூரசிலாசித்தை தாமரைக்கிழங்கின் இரசத்திலாவது அல்லிக்கிழங்கின் இரசத்திலாவது ஒரு ஜாமம் அரைத்தால் சத்தியாம்

கற்பூரசிலாசித்தை பசும்பால் திரிபலாகஷாயம் கரிசனாங்கணி யிலைச்சாறு இவைகளால் ஒருநாள் இரும்பு கல்வத்தில் அறைத்து வெய்யலில் உலர்த்தினால் சுத்தியாம்.

ஒருபலம் சிலாசித்தை அல்லிக்கிழங்கு இரசத்தில் ஏழு நாழிகை அரைத்து உலர்த்தினால் சுத்தியாம்.

சிலாசித்து 1-பாகம், திராக்ஷை வீசபாகம், அதிமதுரம் வீசபாகம், சந்தணத்தூள் வீசபாகம், இவைகளைக் கலந்து இளநீர் ஜலத்தில் டோலாயந்திரத்தில் மூன்று ஜாமம் வேகவைத்து அதையெடுத்து உலர்த்தி அனுபான விசேஷங்களால் உட்கொண்டால் சகல ரோகங்களையும் போக்கி சரீரத்திற்கு காந்தியையும் புஷ்டியையும் பலத்தையும் உண்டு பண்ணும்.

சிலாசித்தின் குணம்

சுத்திசெய்த சிலாசித்தால் பாண்டு, பிரமேகம், சுரம், சிலேத்துமரோகம், வாதரோகம், அக்கினி மாந்தியம். குஷ்டரோகம் சோகைஷ, க்ஷயம், உள்மாந்தம், சோபை, மூத்திர அடைப்பு, மார்வலி மூலம் காமாலை, நீர்சுருக்கு மேகம், பித்தரோகம், கட்டிகள், கொருக்கு சொரிசிரங்கு இவைகள் போம்.

அபக்குவசிலாசித்தாலுண்டாகும் வியாதிகள்

அசுத்தசிலாசித்தினால் தாகம், மூர்ச்சை, பிரமை, இரத்த பித்தம், அக்கினி, மாந்தியம், மலபந்தம் இவைகளுண்டாம்.

சுத்தசிலாசித்தின் பரீக்ஷை

அக்கினிமேல் போட்டால் புகையெழும்பாம லிருக்கும் பாகமாகும் காலத்தில் லிங்காகாரம் அடைதல், ஒருகொம்பினால் அதில் கொஞ்சம் யெடுத்து ஜலத்தில் போட்டால் தந்தி போல் அது கீழுக்கு இரங்குதல், கோமூத்திரத்தைப் போல் வாசனை யுண்டாகுதல் முதலிய லட்சணங்களிருந்தால் சுத்தமான சிலாசித்தென்று அறிந்துக்கொள்ள வேண்டியது இந்த சிலாசித்தை சாதாரண இரசவர்க்கமென்று சிலவயித்திய கிரந்தங்கள் முறையிடுகின்றன.

சாதாரண இரசங்கள்

கம்பில்லம், கடல் உப்பு, கௌரி பாஷாணம், நவாக்ஷாரம், லிங்கம், வஹனி, ஜாரம், கிரிசிந்தூரம், முதாருசிங்கு யென்கிற எட்டும் சாதாரண இரசங்கள் யென்று பெயர்.

கம்பில்லம்

இதற்கு கிரிமருந்தென்றால் மலைமண், கைரிகதாது, க்ரதாஸ்மா, ரக்தசாந்தியென வடமொழியில் பெயராம்.

(கவனிப்பு) இதற்கு தகுதியான பெயர் தமிழில் அகப்படாமையால் வடமொழிபெயரே எழுதலாயிற்று.

கம்பில்லபேதங்கள்

சௌராஷ்டர தேசத்தில் கனிகளில் உற்பத்தியாகிறது. இது செங்கல் தூளைப் போலிருக்கும். இது விரோசனத்திற்கு கொடுப்பதில் மிகவும் பிரயோசன காரியமாயிருக்கும்

கம்பில்லசுத்தி

கம்பில்ல சூரணத்தை மூட்டை கட்டி கடுக்காய் இரசத்தால் அல்லது காடி நீரால் டோலாயந்திரத்தில் வேகவைத்தால் சுத்தியாகும்.

கம்பில்லத்தின் குணம்

கம்பில்லாமானது விரோசனமாகும்படி யானதாயும், கொஞ்சம் கடுகு உஷ்ணமுள்ளதாயும், இரணங்கள், இருமல், இரைப்பு, புழுக்கள் இவைகளை நாசப்படுத்தும் படியானதாயுமிருக்கும்.

போளசுத்தி போளமென்றால் மூசாம்பரம்

ஒருபலம் கருப்பு போளத்தையாகிலும் செம்போளத்தையாகிலும், காடி நீரால் அரைத்து ஒரு ஜாமம் வெய்யலில் உலர்த்தினால் சுத்தியாம்.

மஸ்தகாசுத்தி

மஸ்தகாயை பழச்சாற்றிலாவது, அல்லது சிறு நீரிலாவது ஒரு ஜாமமரைத்து வெய்யலில் உலர்த்தினால் சுத்தியாம்.

பலகரை சங்கு இவைகள் சுத்தி

பலகரை, சங்கு இவைகளை கோமூத்திரம் பூசினிக்காய் ரசம் பழரசம் காடிநீர் என்பவைகளால் டோலாயந்திரத்தால் வேகவைத்தால் சுத்தியாம்.

சத்தியக்ஷாரசுத்தி

சத்தியக்ஷாரத்தை இரண்டு நாழிகை காடிநீராலாகிலும் அல்லது கோமூத்திரத்தினாலாகிலும் அரைத்தால் சுத்தியாம்.

சத்திய க்ஷாரத்தின் குணம்

சத்திய க்ஷாரம் அக்கினிமாந்தியம், குன்மம், சூலை இவைகளைப் போக்கும்.

யவாக்ஷாரத்தின் சுத்தி

யவாக்ஷாரத்தை கழுநீரால் ஒருநாழிகை அரைத்து உலர்த்தினால் சுத்தியாம்.

யவாக்ஷாரத்தின் குணம்

யவாக்ஷாரத்தினால் பசிதீபனமுண்டாகும், கபநோய் வாதநோய் போம்.

பஞ்சலவண சுத்தி அதாவது ஐந்துவித உப்பின்சுத்தி

(ஆயுர்வேதம்) இந்துப்பை இரண்டு நாழிகை காடிநீரால் அரைத்து வெய்யலில் உலர்த்தினாலும் அல்லது ஆட்டு மூத்திரத்தால் வேகவைத்தாலும் சுத்தியாம்.

சவ்வர்ச்சலவணத்தை எலுமிச்சம் பழசசாறாலரைத்து உலர வைத்தால் சுத்தியாம் பிடாலவணத்தை காடி நீராலரைத்து வெய்யலில்

உலர்த்தினால் சுத்தியாம். கறுப்பு உப்பை புளியிலைச் சாற்றால் அரைத்து வெய்யலில் உலர்த்தினால் சுத்தியாம் கடல் உப்பை வோட்டில் போட்டு மூன்று ஜாமம் வறுத்தால் சுத்தியாம்.

பஞ்சலவணத்தின் குணம்

இந்துப்பு சன்னமாயும், கனமாயும், மிகவும் வெண்மையாயும், சிகப்பும் கலந்த வரணமுடையதாயும் இருக்கும் இது கபநோய், வாதநோய், வயிற்றுவலி போக்கடிக்கும், சல்வர்ச்சலவணம் கறுப்பும், சிகப்பும் கலந்தவர்ணமுடையதாய் குன்மநோய் சூலை இவைகளைப் போக்கும்.

பிடாலவணம் பாண்டுவர்ணமுடையதாய் கொஞ்சம் பித்தமுடையதாயிருக்கும். இது வயிற்றுவலி சரீரத்தின் பீடையைப் போக்கும்.

கறுப்பு உப்பு, வயிற்றுவலியைப் போக்கும்.

கடல்உப்பு, வயிற்று வலியையும் சகல ரோகங்களையும் போக்கும்.

திரிகடுகு சுத்தி

திரிகடுகுயென்றால் சுக்கு, மிளகு, திப்பிலி

சுக்கை, மேல்தோல் சீவி சுண்ணாம்புபூசி ஒரு ஜாமம் வெய்யலில் உலர்த்தினால் சுத்தியாகும். திப்பிலியை, சித்திர மூல இரசத்தில் இரண்டுநாழி ஊரவைத்து உலர்த்தினால் சுத்தியாகும் மிளகை, புளித்தமோரில் மூன்று நாழிகை ஊரவைத்து வோட்டில் போட்டு வருத்தால் சுத்தியாகும்.

ஆனைத்திப்பிலி சுத்தி

ஆனைத்திப்பிலியை, காடிநீராலும் அல்லது ஆட்டு மூத்திரத்திலாகிலும் ஒரு ஜாமம் ஊரவைத்து வெய்யலில் உலர்த்தினால் சுத்தியாகும்.

அபினிசுத்தி

அபினியை, பிரமராாகாசியிலையில் வைத்து மூட்டைகட்டி பசுவின்பாலில் டோலாயந்திரத்தில ஒரு ஜாமம் வேகவைத்தால் சுத்தியாகும்.

பெருங்காயம் சுத்தி

பெருங்காயத்தை தாமரையிலைச் சாற்றில் ஒரு ஜாமம் வெய்யலில் உலரவைத்தால் சுத்தியாகும்.

சீரகசுத்தி

சீரகம், கருஞ்சீரகம், இவை யிரண்டையும புளித்த கழி நீரில் நனைத்து இரண்டு ஜாமம் வெய்யலில் உலரவைத்து பிறகு கொஞ்சம் வருத்தால் சுத்தியாகும்.

ஆமணக்கு வெள்ளைநாகதந்திகளின் சுத்தி

ஆமணக்குவிதை, வெள்ளைநாகதந்தின்விதை, இவை யிரண்டையும் மேல்தோலை யெடுத்துவிட்டு இளநீரில் ஒரு ஜாமம் வைத்தால் சுத்தியாகும்.

எட்டிக்கொட்டைசுத்தி

எட்டிக்கொட்டையைத் துண்டுகளாக்கி சிறுகீரைவேரின் இரசத்தால் மூன்றுநாழிகை வேகவைத்தால் சுத்தியாம்.

நேர்வாளசுத்தி

நேர்வாளத்தில் மேல்தோலைப்போக்கி அதின் மொளைகளை யெடுத்துவிட்டு கற்றாழை இரசம், பானகம், பசும்பால், பசும்நெய் இவைகளில் பிரத்தியேக பிரத்தியேகமாய் வேக வைத்தால் சுத்தியாம்.

சிவதையின் சுத்தி

வெள்ளைச் சிவதையை பசும்பாலில் முழுகும்படி செய்து அந்தப்பால் சுண்டுகிற வரையிலும் வேக்வைத்தால் சுத்தியாம்.

சேராங்கொட்டை சுத்தி

சேராங்கொட்டையைக் கோமயத்தில் வேகவைத்தால் சுத்தியாம்.

நாபியின்சுத்தி

நாபியை துண்டுகளாய் கத்தரித்து துணியில் மூட்டை கட்டி ஒரு பானையில் போட்டு அந்த மூட்டை முழுகிற வரையில் கோமூத்திரம் வார்த்து மூன்றுநாள் வெய்யலில் வைக்க வேண்டியது. மேலும் பிரதி தினம் பானையிலிருக்கும் கோமூத்திரத்தை யெடுத்து விட்டு புதிய கோமூத்திரத்தை வார்க்கவேண்டியது இம்மாதிரியாய் மூன்றுநாள்

செய்து நாலாவது நாள் நாபியை வெளியில்யெடுத்து செவ்வையாய் உலர்த்த வேண்டியது இப்படி செய்தபிறகு சுத்தியாகும். இதை அவஷதங்களில் சேர்க்கும் பொழுது தூளாக்கி சேர்க்க வேண்டியது.

முதாருசிங்கு பேதங்கள்

முதாருசிங்கு இரண்டு விதங்கள்
நாளீகம் பச்சை நிறமாயிருக்கும்
ரேணுகம் நீலவர்ணமாயிருக்கும்.

முதாருசிங்கின்சுத்தி

முதாருசிங்கை சுக்குயிரசத்தால் மூன்றுவிசை ஊரவைத்தால் சுத்தியாம்.

முதாருசிங்கின்குணம்

முதாருசிங்கு, இரணங்கள், சூலை, குன்மம், இரசதோஷங்கள் முதலியவைகளைப் போக்கும்.

நவ இரத்தினங்கள்

(குருவிந்தம் அதாவது கெம்புக்கல்) முத்து, வைரம், வைடூரியம், நீலம், புட்பராகம், மரகதம், கோமேதகம், பவளம் என இரத்தினங்கள் ஒன்பதாம்.

அசுத்த இரத்தினகுணங்கள்

அசுத்த இரத்தினங்களின் பிரயோகத்தினால் கிரந்திகள் தாபம் பிரமை இந்திரிய நஷ்டி, தேகபீடை முதலியவையுண்டு பண்ணும், ஆகையினால் அவைகளை சுத்திசெய்து சேர்க்கவேண்டியது.

கெம்புக்கல் அல்லது மாணிக்கம் சுத்தி

கெம்பை குதிரையின் மூத்திரத்தில் மூன்றுநாள் வெப்பமான சூரியகாந்தியில் ஊரவைத்து பிறகு வெந்நீரால் கழுவினால் சுத்தியாம்

கெம்புபற்பம்

சுத்திசெய்த கெம்பை மூன்று நாள் எருக்கன் பாலில் அரைத்து ஓட்டில் வைத்து சீலைமண் செய்து காட்டு விரட்டியால் மூன்று கஜபுடமிட்டால் கெம்புபற்பமாகும்.

கெம்பு பற்பத்தின்குணம்

கெம்பு பற்பம் சீதளமாயும் மதுரமாயும் பசிதீவினையுண்டு பண்ணும்படியானதாயும தேககாந்தியை யுண்டு பண்ணும் படியானதாயும் கிரதோஷங்களைத் தீர்க்கும்படியாதாயும் இருக்கும்.

முத்தின்சுத்தி

முத்துகளை புளியைக் கரைத்தாகிலும் அல்லது பொன்னாங்காய் இரசத்திலாகிலும் மூன்று தடவை ஊரவைத்தால் சுத்தியாம்.

முத்துபற்பம்

சுத்திசெய்த முத்தை வெள்ளை முள்ளிக்கத்திரி பழத்தின் இரசத்தால் அரைத்து ஓட்டில் வைத்து சீலைமண் செய்து பூபுடமெரித்தால் பற்பமாகும்.

முத்துபற்பத்தின்குணம்

முத்துபற்பத்தினால், ஊஷ்ணரோகங்கள், சூலைகள், கிரஹதோஷங்களைப் போக்கடித்து பசிதீவினையை யுண்டு பண்ணும்.

வைரத்தின் பேதங்கள்

வைரமானது ஸ்வேதம் அதாவது வெண்மை நிறமுடையது பிராமணசாதி, ரத்தம் அதாவது சிகப்பு நிறமுடையது க்ஷத்திரியஜாதி, பீதம், மஞ்சள் நிறமுடையது. வைசியஜாதி, கிருஷ்ணம் கருப்பு நிறமுடைது சூத்திரஜாதியென நான்கு வகையாம்.

வைரத்தின்குணம்

வெண்மை நிறமுடைய முதல் ஜாதியென்கிற வைரக்கல்லை ரசாயனங்களில் உபயோகித்தால் அஷ்ட சித்துக்கள் உண்டாகும்.

சிகப்பு நிறமுடைய க்ஷத்திரிய ஜாதி வைரக்கல், மரணம் நிறை வியாதிகள் முதலியவை போக்கும்.

மஞ்சள் நிறமுடைய வைசியஜாதி வைரக்கல் சம்பத்தைக் கொடுக்கிறது மல்லாமல் சரீரத்தால் வியாதிகளையுண்டு பண்ணும்.

கறுப்புநிறமுடைய சூத்திரஜாதி வைரக்கல் வியாதிகளைப் புறக்கடித்து வயதை விருத்தி பண்ணும்.

வைரக்கல்லின் ஜாதிபேதங்கள்

வைரமானது ஆண்பெண் அலியையென மூன்றுவகையாம், அவைகளைக் கண்டுபிடிக்கும் வகை வட்டமாயும், காந்தியாயும், பெரியதாயும், பட்டைகள் உடையதாயும், கத்திரிக்காயின் மேல்பாகத்தில் இருக்கிறதுபோல் ரேகைகள் உடையனவாய் சதரமாயும், புள்ளிகள் இல்லாமலிருக்கிறது ஆண்யென்றும், ரேகைகள் புள்ளிகள் உடையனவாய் ஆறுகோணமுடையது பெண் என்றும், மூன்று கோணங்களுடையது நிகளமானது அலியென்றும், பெரியவர்கள் சொல்லி யிருக்கின்றார்கள். அதில் ஆண்ஜாதி வைரம் மிகவும் மேன்மையானது, பெண் ஜாதிவைரக்கல் தேகத்திற்கு காந்தி யுண்டுபண்ணும் படியானதும், வீரியபுஷ்டியுள்ளது. அலி வைரக்கல் பிரயோஜன மற்றது.

புருஷர்களுக்கு ஆண் வைரக்கல்லையும், பெண்களுக்கு பெண் வைரக்கல்லையும், பேடிகளுக்கு அலி வைரக்கல்லையும், உபயோகப்படுத்த வேண்டியது. ஆண் வைரக்கல் மிகவும் மேன்மையான படியினால் ஆண் வைரக்கல்லையே சகலருக்கும் உபயோகப்படுத்த வேண்டியது.

வைரக்கல்லின் சுத்தி

சிவதைவேரை சுரசம் செய்து வைரக்கல்லை அதில் இரண்டுநாள் ஊறவைத்து பிறகு கொள்ளு வரகு இவைகளின் கியாழத்தால் மூன்றா நாள் டோலாயந்திரத்தில் வேகவைத்தால் சுத்தியாகும்.

மற்றொருவிதம்

வைரக்கல்லை கண்டங்கத்திரி வேரில் வைத்து எருமை சாணியில்தொய்த்து பழய எருபொட்டு என்பவையுடன் இராத்திரியில் நான்கு ஜாமம் புடமெரித்து காலையில் குதிரையின் மூத்திரத்தில் நனைத்து அதையெடுத்து முன்போல் கண்டங்கத்திரி வேரில்வைத்து இராத்திரி நாலுஜாமம் முன் சொன்னதுபோல் புடமிடவும், இம்மாதிரி ஏழுநாள் யெரித்தால் வைரக்கல் சுத்தியாகும்.

மற்றொருவிதம்

வைரக்கல்லை கண்டங்கத்திரி வேரில் வைத்து கொள்ளு, வரகு என்பவைகளின் கஷாயத்தில் ஏழுநாள் டோலாயந்திரத்தில் யெரித்தால் சுத்தியாகும்.

மற்றொருவிதம்

வைரக்கல்லை எலுமிச்சம் பழத்தில் வைத்து சிறுகீரை, வன்னியிலை, சிவதை, கடுக்காப்பூ, மறுகாளான், வரகு, கொள்ளு, வஞ்சி, எலிக்காதுயிலை, அவத்தி, தலைச்சுருளைவேர், நொச்சிலி என்பவைகளின் கஷாயத்தால் டோலாயந்திரத்தில் மூன்றுநாள் வேகவைத்தால் வைரக்கல் சுத்தியாகும்.

வைரபற்பம்

சுத்திசெய்த ரைவக்கல்லை மூன்று வருஷத்து வயதுடைய பருத்திச்செடி வேரை இடித்து அந்த இரசத்திலாகிலும் அல்லது வெற்றிலைவேரை இடித்து அந்த இரசத்திலாகிலும் ஊறவைத்து பிறகு மேற்படி மூன்று வருஷத்து பருத்திவேர் மூன்று வருஷத்து வெற்றிலைவேரை அரைத்து பில்லைதட்டி அதின் நடுவில் வைரக்கல்லை வைத்து அந்த முத்தையை மூசையில் வைத்து சீலைமண்செய்து ஏழு கஜபுடமிட்டால் வைரக்கல் பற்பமாகும்.

மற்றொருவிதம்

சுத்திசெய்த வைரக்கல்லை மூட்டுப்பூச்சி இரத்தத்தால் ஏழுதகுதி ஊரவைத்து இலந்தயிலையில் கவசஞ்செய்து மேல் சீலைமண்கொடுத்து மூசையில் வைத்து மறுபடியும் சீலைமண் செய்து ஏழுகஜபுட மெரித்தால் பற்பமாகும்.

மற்றொருவிதம்

சுத்திசெய்த வைரத்தை பிரண்டைச் சாற்றில் ஒருநாள் ஊரவைத்து காசி குப்பியில்வைத்து சீலைமண்செய்து காட்டு விரட்டியால் ஏழு கஜபுடமெரித்தால் வைரக்கல் பற்பமாகும்.

வைரபற்பகுணம்

வைரக்கல் பற்பத்தினால் ஆயுசுவிருத்தி, சுகம், வலிவு, சௌந்தரியம் இவைகளை யுண்டுபண்ணும், ரோகங்கள் அபமிருத்துயுவு இவைகளை யோட்டிவிடும்.

அசுத்தவைர தோஷம்

அசுத்த வைரக்கல்லினால் தாபம், பாண்டு, பற்சுவசூலை முதலிய அனேகரோகங்கள் வுண்டாம்.

இதற்குப்பரிகாரம்

தேன், பசுநெய், சர்க்கரை இவைகளை பசும்பாலில் கலந்து ஏழுநாள் உட்கொண்டால் அசுத்த வைரக்கல்லினால் உண்டாகும் வியாதிகள் சகலமும் நிவர்த்தியாகும்.

வைரக்கல்பற்ப அனுபானங்கள்

வைரபற்பத்தைக் கருங்காலி கியாழத்தில் கொடுத்தால் குட்டரோகம் போம். தேன், இஞ்சிரசம், இவைகளால் கொடுத்தால் வாதரோகங்கள் போம். திப்பிலி, மிளகு இவைகள் சூரணம், ஆடாதோடைசாறு இவைகளுடன் கொடுத்தால் இருமல், இரைப்பு, கபம் முதலியவை சந்தேகமற பறந்தோடும் தேன், பசுநெய் இவைகளுடன் கொடுத்தால் இருமல், இரைப்பு, கபம் முதலியவை சந்தேக மற பறந்தோடும் தேன், பசுநெய் இவைகளுடன் கொடுத்தால் சரீர புஷ்டி யுண்டாகும். கோமூத்திரத்தில் கொடுத்தால் பெரும்பாடு சூதரோகங்கள் தீரும். சர்க்கரையில் கொடுத்தால் வியர்வை நீங்கும்.

வைகிராந்தம் அல்லது கண்ணாடி முதலியவைகளை அரக்கும் இரவையின் உற்பத்தி

மகிஷாசுரன் என்கிற அரக்கனை சாமுண்டீஸ்வரி சங்காரம் பண்ண அவனது இரத்தம் விழுந்த யிடங்களிலெல்லாம் வைரத்தைப்போல் இந்த இரவைக்கல்லும் உண்டாயின இந்த இரவைகற்கள் விந்தியா பர்வதத்திற்கு தெற்கிலும் வடக்கிலு மிருக்கின்றன. இவை லோஹங்களையும் துண்டுகளாக்கும் படியான வலிமையுடைய தானதினால் வைகிராந்தமெனப் பேர்பெற்றது.

வைகிராந்தலக்ஷணம்

வைகிராந்தமானது எட்டுபேதங்களுடையதும் எட்டு பலகைகள் ஆறுகோணங்களுடையதும். அமிருத குணமுடையதும் சுத்தமான நிறமுடையதும். பளுவுடையதும் கலந்த நிறமுடையதுமாயிருக்கும்.

வைகிராந்தமானது வெண்மை, சிகப்பு, மஞ்சள், நீலம், கருப்பு, மேகவரணம், புராவரணம், கற்பூரவரணம் என எட்டுவிதங்கள்,

வைகிராந்த சுத்தி

மூன்றுவித க்ஷாரங்கள், ஐந்துவித உப்புகள், வசம்பு, ஏழுவித மூத்திரங்கள், மீன்தைலம், நெய், எண்ணெய், ஆமணக்கெண்ணெய், புளிநீர், இவைகளை டோலாயந்திரத்தில் சேர்த்து கண்டங்கத்திரி வேரை தொளைத்து அதில் ரவையை வைத்து வேகவைத்தால் சுத்தியாம்.

சிகப்பு, வெண்மை, கறுப்பு நிறமுள்ள வைகிராந்தத்தை வைரங்களைப் போல் சுத்தி செய்ய வேண்டியது. மேலும் வைகிராந்தத்தை இருபத்தொரு தகுதி செவுக்க நெருப்பில் வைத்து இருபத்தொரு தகுதி குதிரையின் மூத்திரத்தில் தொவைத்தால் சுத்தியாகும்.

வைகிராந்தத்தின் பற்பம்

சுத்திசெய்த வைகிராந்தத்தை உத்தாமணியை வேருடன் பிடுங்கிவந்து எலைகாய் கொடி முதலியவற்றை யெல்லாம் யொன்றாயரைத்து முத்தைசெய்து அதில் வைத்து மூடி அந்த முத்தை ஒருசின்ன மூசையில்வைத்து அதின்மேல் மற்றொரு மூசையைமூடி சீலைமண்கொடுத்து கஜபுட மிடவேண்டியது பிறகு அதையெடுத்து உத்தாமணி கொடிவேர் முதலியவைகளை யறைத்து முத்தைசெய்து அதில வைத்து மூசையில் வைத்து மற்றொரு மூசைமூடி சீலைமண்செய்து கஜபுட மெரிக்கவேண்டியது இம்மாதிரி ஏழுகஜபுடமெரித்தால் வைகிராந்தம் பற்பமாகும்.

மற்றொருவிதம்

வைகிராந்தத்தை வைரத்தைப்போல் உலையில் வைத்து ஊதி குதிரைமூத்திரத்தில் தோய்த்தெடுத்தால் சுத்தியாகும் இம்மாதிரி சுத்திசெய்த வைகிராந்தத்தை வைரத்தை பற்பிக்கும் விதமாக பற்பமாக்கி வைரபற்பத்தின் பதிலாக இதையும் பிரயோகப்படுத்தலாம்.

கஸ்தூரிமாத்திரை

கஸ்தூரி	விராகநிடை	1/4	குங்குமப்பூ	விராகநிடை	1
கோரோஜனம்	விராகநிடை	1	சுக்கு	விராகநிடை	1
ரசசிந்தூரம்	விராகநிடை	1	மிளகு	விராகநிடை	1
கடுக்காய்த்தோல்	விராகநிடை	1	திப்பிலி	விராகநிடை	1
தான்றிக்காய்	விராகநிடை	1	ஏலம்	விராகநிடை	1
நெல்லிவற்றல்	விராகநிடை	1	கிராம்பு	விராகநிடை	1

இவைகளையெல்லாம் கல்வத்திலிட்டு கருநொச்சியிலைச் சாற்றில் இரண்டு ஜாமம் அரைத்து மிளகு பிரமாணம் மாத்திரை செய்து நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு காலையில் ஒரு மாத்திரையும் மாலையில் ஒருமாத்திரையுமாகத் துளசிச் சாற்றி லிழைத்துத் தேன்கலந்து சாப்பிட வேண்டியது. இவ்வாறு மூன்றுநாள் சாப்பிட வேண்டியது.

புளிகூடாது உப்புவறுத்துச் சேர்த்துக் கொள்ளவும்

இதனால் சுரங்கள் முதலானவைகளும் திரிதோஷங்களும் சூரியனைக் கண்ட பனிபோலாகும் கைகண்டது.

இடுப்புவலி முதலிய வாய்வுகளுக்குபற்று

மைலாலக்டி	பலம்	1
மைசாட்சி	பலம்	1
மூசாம்பரம்	பலம்	1

இவைகளை நன்றாய்ப் பொடிசெய்து ஒரு பாத்திரத்தில் போட்டு அதில் எலுமிச்சம்பழரசம் ஆழாக்குவிட்டு கொதிக்க வைத்து நோயிருக்கும் யிடத்தில் இரண்டு மூன்று பற்றுபோட நிவர்த்தியாகும்

பித்த ஜ்வரத்திற்கு

கடுக்காய்த்தோல்	பலம்	1/2	சுக்கு	பலம்	1/2
சீந்திற்கொடி	பலம்	1/2	வசம்பு	பலம்	1/2
தூதுளைவோர்	பலம்	1/2	ஆடாதோடையிலை	பலம்	1/2
கண்டங்கத்திரிவேர்	பலம்	1/2	சிறுபயறு	பலம்	1/2
முசுமுசுக்கைவேர்	பலம்	1/2	கோரைக்கிழங்கு	பலம்	1/2

இவைகளை மைபோலிடித்து -5 பங்காக்கி ஒரு பங்கை அரைபடி ஜலம்விட்டு ஆழாக்கு ஜலம் இருக்கக்காய்ச்சிக் காலையில் அரையாழாக்கும் மாலையில் அரையாழாக்குமாக சாப்பிடவேண்டியது. இவ்வாறு மற்ற பங்கையும் அப்படியே செய்யவேண்டியது இச்சாபத்தியம்.

வெள்ளைக்கு எண்ணெய்

விளக்கெண்ணெய் பலம்-8, கஸ்தூரிமஞ்சள் துலாம் - 1/2 கருஞ்சீரகம் துலாம்-1/2, கண்டங்கத்திரியிலை துலாம் -1/2, வெங்காயம்

துலாம் -1/2, இவைகளை மைபோலிடித்து மேற்படி எண்ணெயில்போட்டு பதத்தில் காய்ச்சி வடிகட்டிக் கொண்டு காலை மாலை துட்டெடையாக மூன்று நாள் சாப்பிட வேண்டியது இச்சாபத்தியம்.

தாகஜ்வரங்களுக்கு

ஆடாதோடை	பலம்	1/2
பேய்புடல்	பலம்	1/2
சீந்திற்கொடி	பலம்	1/2
தூதுளைவேர்	பலம்	1/2
கண்டங்கத்திரிவேர்	பலம்	1/2

இவைகளை நையயிடித்து ஒரு மண்பாத்திரத்தில் போட்டு அரைபடி ஜலம்விட்டு ஆழாக்குஜலம் இருக்கக் காய்ச்சிக் காலையில் அரையாழாக்கும் மாலையில் அரையாழாக்குமாகத் தேன் கலந்து சாப்பிட வேண்டியது இவ்வண்ணமாக மூன்று நாள் சாப்பிட தாகஜ்வரம் நின்றுவிடும்.

நடுக்கல்ஜ்வரத்திற்கு

தும்பைப்பூ பலம் - 1/2, மிளகுபலம் -1/2, இவைகளை ஒன்று படயரைத்து நடுக்கல் ஜ்வரம் வருகிறபோது காலை மாலைகளிலும் கண்டக்காயளவு மூன்று நாளைக்குச் சாப்பிட வேண்டியது. இச்சாபத்தியம்.

மேகம் -21-க்கும் நெய்

பிரமியிலைச்சாறு படி -1/2, பசுவின்நெய் படி -1/2, மண்பாத்திரத்தில் விட்டு அதில் மிளகு பலம் -1/2 மஞ்சள் பலம்-1/2, திப்பிலிபலம்-1/2, பொடித்துப்போட்டு பதமாகக் காய்ச்சி வடிகட்டிக்கொண்டு -21-நாளைக்கு காலையில் கால்பலமும் மாலையில் கால்பலமுமாகச் சாப்பிட வேண்டியது. இச்சாபத்தியம்

நாக்குப்பூச்சி விழ

குராசானிஓமம்	சூரியகாந்திபூவிரை
பூவரசன்விரை	நொச்சிக்கொழுந்து
வால்மிளகு	கடுக்காய்த்தோல்
மாசிக்காய்	கறுப்புஉப்பு
தான்றிக்காய்	மூசாம்பரம்

இவைகள் வகைக்குப் பலம் -1/2, இவைகளை முசுமுசுக்கைச் சாற்றால் மைபோலரைத்து சுண்டைக்காய்ப் பிரமாணம் மாத்திரை செய்து நிழலில் உலர்த்தி காலை மாலை ஒவ்வொரு மாத்திரை வெந்நீரிலிழைத்துக் கொடுக்கவும் உப்பு புளி ஆகாது.

சீதபேதிக்கு லேகியம்

ஜாதிக்காய்	பலம் 1/4	மாதளங்களாய்தோல்	பலம் 1/4
மாசிக்காய்	பலம் 1/4	களிப்பாக்கு	பலம் 1/4
புளியங்கொட்டைதோல்	பலம் 1/4	கசகசா	பலம் 1/4
உலர்ந்தமாம்பருப்பு	பலம் 1/4		

இவைகளைப் பசுவின்பாலில் ஒருநாள் முழுதும் ஊர வைத்து மறுநாள் உலர்த்தி சூரணித்து வஸ்திரகாயஞ் செய்ய வேண்டியது சீனாகற்கண்டு பலம் -2 1/2, பொடிசெய்து பசும்பால் அரையாழாக்கில் பாகுசெய்து மேற்படி சூரணத்தை அதில் போட்டு கிண்டி ஒருபலம் பசும்நெய்யும் விட்டுக் கிளரி யெடுத்துக் கொண்டு காலை மாலை சுண்டக்காய்ப் பிரமாணம் கொடுக்க சீதபேதி நிவர்த்தியாகும் இச்சாபத்தியம்.

சன்னி தலைநோய்க்கு தலைக்குக் கட்ட

முத்தளைவேர்	பளிங்குசாம்பராணி
கருஞ்சீரகம்	கருஞ்செம்பையிலை
கஸ்தூரிமஞ்சள்	சந்தனத்தூள்
	நொச்சிக்கொழுந்து

இவைகள் வகைக்குப் பலம் - 1/2, எடுத்து நன்றா யிடித்து இரண்டு மூன்றுவேளை தலைக்குக் கட்ட ஜன்னி தலைவலி நிவர்த்தியாகும். இச்சாபத்தியம்.

வாய்வுக்கு

பெருங்காயம்	துலாம் 2	சீரகம்	துலாம் 13
கருஞ்சீரகம்	துலாம் 3	திப்பிலி	துலாம் 4
மிளகு	துலாம் 2 1/2	ஓமம்	துலாம் 2 1/2
சுக்கு	துலாம் 2 1/2		

இவைகளை இடித்து வஸ்திரகாயஞ் செய்துக்கொண்ட சூரணத்தில் நன்றாய் மைபோல் பொடிசெய்திருக்கிற இந்துப்பு துலாம்

2 1/2, கலந்து காலை மாலை ஒரு துட்டெடை சாப்பிட சகல வாய்வுகளும் நிவர்த்தியாகும்.

இதற்குப் புளி புகையிலை ஆகாது.

கண்ணோய்க்குத் தைலம்

நெல்லிக்காய், கையாந்தகரை இவைகளின் சாறு பசுவின் பால் வகைக்குப்படி -3, நல்லெண்ணெய் படி -4, அதிமதுரம், கோஷ்டம், ஏலம், இலவங்கம், சண்பகப்பூ, சந்தனம், வெட்டிவேர், லாமிச்சம்வேர் வகைக்குப்பலம் -1, அரைத்துப் போட்டுக் காய்ச்சி முழுகிவர கண்நாசம், படலம், புகைச்சல் பித்தம் தீரும்.

இதுவுமது

நெல்லிக்காய், கையாந்தகரை வகைக்குச்சாறு படி -2, நல்லெண்ணெய், ஆவின்பால் வகைக்குப்படி -1, இவைகளை ஒன்றாய்க் கலந்ததில் அதிமதுரம் பலம்-1, அரைத்துப் போட்டுக் காய்ச்சி முழுக கண்படலம் காசம் கண்ணெரிவு கபாலவரட்சி தீரும்.

நேத்திரரோகங்களுக்கும் கபாலகுஷ்டத்திற்கும் குமரித்தைலம்

எட்டுபடி குமரிச்சாற்றை ஒருபாண்டத்திலூற்றி ஒரு படியாய் வற்றவைத்து அதில் நல்லெண்ணெய் படி -1, சிறுநாகப்பூ செங்கழுநீர்க்கிழங்கு அதிமதுரம், லாமிச்சம்வேர், நன்னாரிவேர் அஞ்சனக்கல், சந்தனம் வகைக்குக் கழஞ்சு-3, ஆவின்பால் விட்டரைத்துப் போட்டுக் காய்ச்சி முழுகிவரத்தீரும்.

தலைவலி கபாலஜன்னி கண்ணோய்க்குத் தைலம்

தேங்காய்ப்பால் பசுவின்பால் வகைக்குப்படி -3 எலுமிச்சம் பழச்சாறு, முலைப்பால் வகைக்குப்படி -3, ஒன்றாய்க் கலந்ததில் ஏலம் லவங்கம், நற்சீரகம், சுக்கு, கோஷ்டம், சண்பகப்பூ வகைக்குக் கழஞ்சு-1, அரத்தை, மிளகு, மதுரம், சதகுப்பை, மயிரோசனை, குருந்து ஈசுரமூலி, முப்புரமெரித்தான் பெருங்குரும்பை வகைக்குகழஞ்சு-2, இவைகளை யரைத்துப்போட்டு உமிக்காந்தலில் மூன்றுநாள் வைத்திருந்து காய்ச்சி முழுகிவரத் தீரும்.

நேத்திர செவிநோய் தலைநோய்கட்குத் தைலம்

கையாந்தகரை, கற்றாழை, நெல்லிக்காய் இவைகளின் சாறுமுலைப்பால் வகைக்குப்படி -1, நல்லெண்ணெய் படி-1

நன்னாரிவேர், வெட்டிவேர், லாமிச்சம்வேர், கோஷ்டம், மதுரம், சந்தனம் வகைக்குப்பலம் -1/2, இவைகளையரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து முழுகிவரத்தீரும்.

பித்தம் கண்காசம் காதடைப்புக்குத் தைலம்

கையாந்தகரை, நெல்லிக்காய், நொச்சி, ஆதண்டை இவைகளின்சாறு நல்லெண்ணெய், பசுவின்பால் வகைக்குப் படி -1 1/4 அதிமதுரம் கழஞ்சு-2, அரைத்துப்போட்டுக் காய்ச்சி முழுகிவரத் தீரும்.

நேத்திரநோய் தொண்ணூற்றாறுக்குத் தைலம்

பொன்னாங்காணி, சிறுகீரை, ஆவரைமொட்டு கொழுந்து இவைகளை ஆவின்பால் விட்டு இடித்து பிழிந்தசாறு, சிற்றாமணக்கெண்ணெய், ஆவினெய், நல்லெண்ணெய், வகைக்குப் படி-1, ஆவின்பால் படி-6, ஒன்றாய்க்கலந்து அதில் யேலம் கிராம்பு அதிமதுரம், கோஷ்டம், சண்பகப்பூ சாதிக்காய், மிளகு, வால்மிளகு, மிலாக்காய்ச் சந்தனம், செஞ்சந்தனம், மரமஞ்சள் அரத்தை, தேவதாரம், சாத்திரவேதி, வெட்டிவேர் வகைக்குப் பலம்-ஆழாக்கு, பொடித்துப்போட்டு பதமாய்க் காய்ச்சி வடித்து ஒன்றை விட்டொருநாள் தலைக்குத்தேய்த்துச் சீக்காய் சீக்கிறாந்தூள் அரப்பிட்டு ஸ்நானஞ் செய்து வர சகல கணரோகங்களுந் தீரும்.

பீனிசவகுப்பு

வாதபீனிசம், பித்தபீனிசம், சிலேத்மபீனிசம், நீர்ப்பீனிசம், இரத்தபீனிசம், சீப்பீனிசம், சிறாய்ப்பீனிசம், மூலப்பீனிசம், கண்டப்பீனிசம், ஆகப்பீனிசங்கள் எட்டு.

சிறாய்ப்பீனிசக்குணம்

நாசிவழி சிறாய்போலும் ஈருள்ளிக்கூடு போலும் சீழ்திரண்டுவிழும் பிணம்போல் நாறும் மணந்தெரியாது விடா மற்றலை வலிக்கும்.

இதுவுமது

சருகெள்ளெண்ணெய் படி-1, குரட்டைப்பழம், வெற்றிலை, ஆதண்டை, உசிலம்பட்டை, இவைகளின்சாறு வகைக்கு படி -1/4, ஒன்றாய்க் கலந்து அதில் மிளகு, வால்மிளகு சீரகம், சண்பகப்பூ, வகைக்குப்பலம் -1, இவைகளைப் பொடித்துப் போட்டுக் காய்ச்சி வடித்து முழுகி வரத்திரும்.

இதுவுமது

குப்பைமேனி, ஆடுதீண்டாப்பாளை, அளிஞ்சிவேர், முள்ளி இவைகளின் சாறுவகைக்குப்படி -1/2, நல்லெண்ணெய்படி -2, இவைகளை யொன்றாய்க் கலந்து மெழுகுபதமாய்க் காய்ச்சி வடித்து முழுகிவரததீரும்.

நீர்ப்பீனிசத்திற்குத் தைலம்

விஷபித்தமும் வெட்டையு மதிகரித்துச் சிரசிலேறி நாசிவழி நீர்வடிந்துக் கொண்டிருக்கும் பனிவாடை மழையிற்றோய்ந்தால் நீர்மிகுந்து பிடரியும் முகமும் பரபரத்து ஊறும் நாசியரிக்கும் அடிக்கடி தும்மல் விழும் தலைகனத்து வலிக்கும்.

நொச்சிச்சாறு, நல்லெண்ணெய், வெள்ளாட்டுப்பால் வகைக்குப்படி-1, செவியம், திரிகடுகு, வாய்விளங்கம், கருஞ்சீரகம், அரத்தை, கஸ்தூரிமஞ்சள், திப்பிலிமூலம், நொச்சிப்பட்டை வகைக்குப் பலம்-1, இவைகளை அரைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்து முழுகி வரத்தீரும்.

இதுவுமது

நொச்சி கரிச்சாலை, வெற்றிலை, ஆதண்டை, பச்சை மஞ்சள், இவைகளின் சாறு வகைக்குப்படி -1/4, ஈருள்ளிச்சாறு, நல்லெண்ணெய் வகைக்குப்படி-1, மிளகுபடி-1/4, உடைத்துப் போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்து முழுகிவரத்திரும்.

பீனிசம் சலம்வடிதல் தலையரிப்பு
தும்மலுக்குத்தைலம்

ஆயிற்பட்டை பலம்-40, சங்கம்வேர், அரத்தை, மிளகு வகைக்குப்பலம்-10, மஞ்சள் பலம்-5, இவைகளை யிடித்துப் பதக்குநீரிற்போட்டு நாலிலொன்றாய் வற்றவைத்திருத்து அதில் நல்லெண்ணெய் படி -4, நொச்சி மொசிமுசுக்கை ஆயில் கரிசாலை இவைகளின்சாறு வகைக்குப்படி-1/2, ஆவின்பால் படி-1, கூடவிட்டு அதிமதுரம், சதகுப்பை, அரத்தை கோஷ்டம், கடுக்காய், சீரகம், வேலிப்பருத்திவேர் வகைக்கு பலம்-1/4, இவைகளை யரைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்து முழுகிவரத்திரும்.

பீனிசம் விடாத்தலைவலி கபாலசூலை நேத்திர வாய்வுக்குத் தைலம்

நொச்சிச்சாறு நல்லெண்ணெய் வகைக்குப் படி-1, ஒன்றாய்க் கலந்து அதில் ஈருள்ளி இரண்டு சிரங்கை கட்டிப் போட்டுக் காய்ச்சி முழுகிவரத்தீரும்.

மண்டையிடி கபாலசூலை பீனிசம் நாசிபுண்ணுக்குத் தைலம்

எலுமிச்சம்பழச்சாறு, நல்லெண்ணெய் வகைக்குப்படி-1, நத்தைச்சூரிவேர் பலம்-1 1/2, ஆவின்பாலி லரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து முழுகிவரத்தீரும்.

சிரசுநோய் சிரசில் நீரேறு மண்டையிடிக்கு

அரத்தை, சதகுப்பை, திரிகடுகு வகைக்கு விராகனிடை-3, அரைத்து 1/2-படி நொச்சிச்சாற்றில் கலக்கி முரித்து வடிகட்டிக் கொடுத்து அரைத்தையைப்பொடித்து நாசியில் நசியமிட்டு ஒருரூபாயிடை சாம்பிராணி, 1/2 ரூபாயிடை கடுகு, புழுங்கல் அரிசி வகைக்குக் கால்ரூபாயிடைஇவைகளை முலைப்பால்விட்டு மைபோலரைத்து நெற்றியிற் பத்துபோடத் தீரும்.

மேற்படி வியாதிக்கு ஆவி

வேப்பீர்க்கு நொச்சி, உத்தாமணி, பேய்ப்பீர்க்கு, தும்பை இவைகளின்யிலை, எருக்கலம் பழுப்பு, சிறுகீரைவேர், இவைகளை ஓர்நியைா யிடித்துத் தண்ணீரிற்போட்டு வேக வைத்து இறக்கி தலையில் முக்காடிற்று ஆவிபிடித்து ஆவியடங்கினதின்பின் ஒருசெங்கல்லைப் பழுக்கக்காய்ச்சி அதிற் போட்டு மறுபடியும் முன்போல் ஆவிபிடித்தால் தேகம் வியர்த்து தலைப்பாரம் வாங்கும்.

மேற்படி வியாதிக்கு ஒத்தணம்

மாவிலிங்கம்பட்டை பலம்-5, ஆயிற்பட்டை பலம்-4, பெருமரத்துப்பட்டை பலம்-3, உகாய்ப்பட்டை பலம்-4½ இவைகளையிடித்து மூன்று பங்குசெய்து நாலொன்றுக்கு மூன்று தபா வறுத்து சிரசிலும் பிடரியிலும் ஒத்தணஞ் செய்ய மாறும்.

விடாக்குளிர் சுரத்திற்கு

கரிப்பான் ஒருபிடி, வேப்பீர்க்கு ஒருபிடி, நன்றாய் நறுக்கிக் காய்ந்த சட்டியிற்போட்டுப் பொன்னிறமாக வெதுப்பி அதில் ஒருபிடி மிளகுபோட்டு வறுத்து வெள்ளுள்ளி ஒருபூடு கிள்ளிப்போட்டு கரிப்பானிலை, நொச்சியிலை வகைக்கொரு கொட்டைப் பாக்களவு அரைத்துப்போட்டு நாழி தண்ணீர்விட்டுக் காய்ச்சி காற்படியாய் வற்றவைத்துக் கொடுக்கவும் இந்தப்படி மூன்றுநாள் இருபோதும் கொடுக்கத்தீரும்.

திரிதோஷசுரத்திற்கு

சந்தனம், அதிமதுரம், லவங்கம், வெட்டிவேர், லாமிச்சவேர், மல்லி சுக்கு, நிலவேம்பு, பற்பாடகம், சீந்திற்றண்டு, செவியம், இவைகளை ஓர்நிறையாயிடித்து வேளை ஒன்றுக்கு ஒருபலத்தூளை இரண்டுபடி தண்ணீர்போட்டுக் காற்படியாய் வற்றவைத்து 6-வேளை கொடுக்கத்தீரும்.

ஜன்னிசுரத்திற்கு

தைவேளைச்சாறு, இஞ்சிச்சாறு வகைக்குப்படி -1/4, தனித்தனியே முரித்து ஒன்றாய்க் கலந்து அதில் திரிகடி ஒரு துட்டிடை தேன்கூட்டிக் கொடுக்கத் தீரும்.

சகலசுரத்திற்குப் பொதுப் பிரையோகம்

முத்தெருக்கஞ்செவி, திரிபலை, கோரைக்கிழங்கு, சுக்கு, கடுகுரோகணி, நிலவேம்பு, சித்திரமூலம், செவியம், மூக்குரண்டி, சீந்தி விஷ்ணுகாந்தி, வகைக்குப்பலம்-1, இவைகளையிடித்து 4-படி தண்ணீரிற்போட்டு காற்படியாய் வற்றவைத்து கொடுக்கவும் இந்தப்படி 6-போது கொடுக்கத்திரும்.

இதுவுமது

சித்திரமூலம், முத்தக்காக, அக்கிராகாரம், அதிமதுரம், கோஷ்டம், ஏலம், லவங்கம், திரிகடுகு, திரிபலை, வெப்பாலையரிசி, பெர்ரித்தசீரகம், மிளகு பற்பம், வகைக்கு விராகனிடை 3 இவைகளைச் சிதைத்து ஒருபடி தண்ணீரிற்போட்டு அரைக்காற்படியாய் வற்றவைத்துக் கொடுக்கவும் இந்தப்படி ஆறுபோது கொடுக்கத் தீரும்.

சகல பழஞ்சுரத்திற்கும் நெய்

வெள்வேல்வேர், கழற்சிவேர், நாயுருவிவேர், சிறுபூளைவேர் விஷ்ணுகாந்திவேர், வசம்பு, பூடு வகைக்குக் கழஞ்சு-1, இவைகளை யரைத்து ஒருபடி ஆவிநெய்யிற் போட்டுக் காய்ச்சி வடித்து வேளையொன்றுக்கு கழஞ்சுவீதங் கொள்ளத்தீரும்.

விடாச்சுரம், வயிற்றெறிவு, இருமல், சொரி, சிரங்குக்கு நெய்

ஆவிநெய் சுத்தசலம் வகைக்குப்படி-1, ஒன்றாய்க் கலந்து அதில் முந்திரிப்பழம், வெப்பாலையரசி அத்தித்திப்பிலி, கெந்தகம், அதிவிடயம், நெல்லி, நிலவேம்பு, லாமிச்சம்வேர், வில்வவேர் வகைக்குக் கழஞ்சு-1 இவைகளைத் தண்ணீரி லரைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்து நேரமொன்றுக்கு முக்கழஞ்சு வீதம் உண்டுவரத்தீரும்.

சகலசுரத்திற்கும் கண்குளிர்ச்சிக்கும் நெய்

சீரா செங்கழு நீர்ச்சாறு படி -4, நெய் படி -1, ஒன்றாய்க் கலந்து அதில் மஞ்சிட்டி தாமரைக்கிழங்கு யேலம் இலவங்கம் கடுகுரோகணி, கோஷ்டம், நன்னாரிவேர், மதுரம், சந்தனம் வகைக்கு விராகனிடை-1, இவைகளை யரைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்து வேளையொன்றுக்கு ஒருகழஞ்சுவீதம் உள்ளுக்குச் சாப்பிட்டு மேலிலும்பூச சகலசுரமுந்தீரும். கண்ணுங் குளிரும்.

மாறற்சுரம், முறைக்காய்ச்சல், கடுங்காச்சல் அதிசாரம் விஷசுரம், அஜீர்ணம், பூதசுர முதலான சுரத்திற்கு எண்ணெய்

வெருகங்கிழங்கு, சிற்றாமுட்டி, சிறுகாஞ்சொரி, அவிரிசீரா, செங்கழுநீர், துளசி, நொச்சி, பெருங்கரந்தை வகைக்குப் பலம்-10, தூட்செய்து 6-மரக்கால் தண்ணீரிற்போட்டு யெட்டொன்றாய் வற்றவைத்து வடித்து அதில் கொம்பரக்குபலம்-1, ஒரு படி நீரிற்போட்டு அரைபடியாய் வற்றவைத்து வடித்து விட்டு நல்லெண்ணெய்ப்படி -2, மோர் பதக்குக் கூடவிட்டு அரத்தை, அதிமதுரம், முத்தக்காசு, வெப்பாலையரிசி, கோஷ்டம, வாய்விளங்கம், மிஞ்சிட்டி, திரிகடுகு, கொடிவேலி, ஓமம், மரமஞ்சள், கருவேப்பீர்க்கு, கடுகுரோகணி, சந்தனம், வால்மிளகு, மஞ்சள், கஸ்தூரி மஞ்சள், லவங்கப்பட்டை, சதகுப்ஙப, செவியம், தக்கோலம் வெள்ளுள்ளி,

திப்பிலி மூலம், புகையூரல், சிறுதேக்கு வகைக்கு பலம் -¼, இவைகளை மைபோலரைத்துப் போட்டு நாலுநாள் சிறுதீயாயெரித்து 5-ம் பதமாய்க் காய்ச்சி வடித்து ஒருகழஞ்சுவீதம் உள்ளுக்குக் கொடுத்து உடம்பிற்பூசி நசியமிடத தீரும்.

சீதசுரம் குளிர் காச்சலுக்கும் உட்கொள்ளும் எண்ணெய்

வெருகினிலை, தண்டு, கிழங்கு, வில்வவேர், சாரணைவேர், சிற்றாமுட்டி, பேராமுட்டி, அமுக்கிறா விஷ்ணுகாந்தி வகைக்குப் பலம்-1, இடித்துப் பதக்குநீரிற்போட்டு எட்டொன்றாய் வற்றவைத்து வடித்து அதில் நல்லெண்ணைய்படி-1, விட்டு ஆவின்பால் மோர் வகைக்குப்படி-2, மரமஞ்சள், அதிமதுரம், மஞ்சிட்டி, மாமிசம்வேர், நன்னாரிவேர், அரத்தை, சந்தனம், வில்வப்பழச்சதை, கோஷ்டம், திரிகடுகு, திரிபலை, தேவதாரம், அகிற்சந்தனம் வகைக்குக் கழஞ்சு-1, இவைகளை யரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து உள்ளுக்குங் கொடுத்து மேலிலும் பூசி நசியமிடத் தீரும்.

சுரத்திற்குத் தைலம்

வெருகங்கிழங்கு சமூலம் வகைக்குப் பலம்-10, குருந்தட்டி அமுக்குறா சீந்தி சத்திசாரணை இவைகளின் வேர் வகைக்குப்பலம்-3, இவைகளையிடித்து 4-மரக்கால் தண்ணீரிற்போட்டு இரண்டுபடியாய் வற்றவைத்து அதில் ஆவின்பால், வெள்ளாட்டுப்பால், நல்லெண்ணெய் வகைக்குப்படி-2, கூடவிட்டு நன்னாரி, சீந்தி, சிறுகீரை, சிற்றாமுட்டி, வில்வவேர், அமுக்குறா இவைகளின்வேர் சுக்கு, லவங்கம், இந்துப்பு, குக்கில், சாரணைவேர், அதிமதுரம், கோஷ்டம், வசம்பு, முத்தக்காசு, சிற்றரத்தை, தேவதாரம், மஞ்சள், திப்பிலி, சந்தனம், லாமிச்சம்வேர், மிளகு, லவங்கப்பத்திரி வகைக்குக் கழஞ்சு-1, வெள்ளாட்டுப்பாலில் அரைத்துப்போட்டு மெழுகுபதமாய்க் காச்சிவடித்து ஒன்றை விட்டொருநாள் ஸ்நானஞ்செய்து வர விடாச்சுரம், வாதசுரம், பித்தசுரம், விஷசுரம் மூன்றாமாரல் இரண்டாமாரல் ஒன்றைவிட்ட மாரற்சுரமுந் தீரும்.

சுரத்திற்கு நசியம்

குளிர்சுரம் அடிக்கும்போது சிறுதும்பை யிலையையும் மிளகையும் ஒன்றாய்ச் சிதைத்து நாசியில் நசியம் பண்ணத் தீரும்.

இதுவுமது

திப்பிலியையும், வேலிப்பருத்தி யிலையையும் ஒன்றாய்ச் சிதைத்து நாசியில் நசியமிட்டாலும் அல்லது இந்துப்பு உள்ளி கொம்பன் பாகயிலை இவைகளை ஒன்றாய்ச் சிதைத்து நாசியில் நசியமிட்டாலும் சுரதோஷந்தீரும்.

சுரமுதலானதற்கு ஏலாதிமாத்திரை

ஏலம், கிராம்பு, சுக்கு, திப்பிலி, முந்திரிப்பழம், பேரீச்சம்பழம், தாளிசப்பத்திரி, அதிமதுரம், கோஷ்டம், லாமிச்சம்வேர், மிலாக்காய்ச் சந்தனம், லவங்கப்பத்திரி, சாதிக்காய், சாதிப்பத்திரி, கோரோசனை, இலுப்பைப்பூ, சண்பகப்பூ, ஓரிலைத் தாமரைவேர் வகைக்கு விராகனிடை-1, இவைகட்கு நிகர் கடுகுரோகணி கூட்டி செவ்விளநீரால் இரண்டு ஜாமமரைத்துப் பரித்திவிரைப் பிரமாணம் உண்டைசெய்து உட்சுரம், அதிசாரசுரம், ஆமசுரம், வெப்பசுரம் இவைகட்கு முலைப்பாலிலும், தோஷசுரத்திற்கு குதிரைவாலிக் கஷாயத்திலும் கொடுக்கத்தீரும், காசம், சுவாசகாசம் இரத்தகாசத்திற்கு தேனில் கொடுக்கத்தீரும்.

சுரத்திற்கு குங்குமக்குளிகை

குங்குமப்பூ பலம்-1, திரிகடுகு, திரிபலை, சாதிக்காய், கிராம்பு, ஏலம், சந்தனம், தேவதாரம், கடுகுரோகணி, வகைக்குப் பலம் -1/2, இவைகளை ஆறுஜாமம் எலுமிச்சம்பழச்சாற்றிலும், நாலுஜாமம் இஞ்சிச்சாற்றிலும், இரண்டு ஜாமம் கண்டங்கத்திரிப் பழச்சாற்றிலும் ஆட்டி, சிறுபயரளவு வுண்டை செய்துக்கொண்டு அனுபானங்களிலிட குளிர்சுர முதலான சன்னிசுரந் தீரும்.

சுரத்திற்குக் கோரோஜனக் குளிகை

கோரோஜனை, குங்குமப்பூ, பச்சைகர்ப்பூரம், ரசச்செந்தூரம், ரசகர்ப்பூரம், ஏலம், அப்பிரக செந்தூரம், கிராம்பு, கோஷ்டம், சாதிக்காய், அக்கிராகாரம் வகைக்குக் கழஞ்சு-3, சந்தனக் கஷாயத்தில் 4-ஜாமமும், சண்பகப்பூ கஷாயத்தில் 2-ஜாமமும், குங்குமப்பூக் கஷாயத்தில் 2-ஜாமமுமரைத்து குன்றுபோ லுண்டைசெய்து நிழலிலுலர்த்தி முலைப்பாலிட தொண்டைக்கட்டு சிலேத்மம் 96-ம், ஜன்னி 13-ம், மண்டைச் சூலை, நீர்த்தோஷம், மயக்சம், சிலேத்மசுரம், வலிப்பசிவு தீரும்.

சுரத்திற்குச் சஞ்சீவி மாத்திரை

இரசச்செந்தூரம், லிங்கம், தாரம், பூரம், கெந்தி,ரஸபஸ்பம், நாவிக்கிழங்கு, கிராம்பு, பத்திரி, ஏலம், திரிகடுகு, திரிபலைவாளம் வகைக்குப் பலம்-1/2, நிம்பக்காய்ச் சாற்றில் ஒரு ஜாமம், முலைப்பாலில் இரண்டுஜாமம், குமரிச்சாற்றில் நாலுஜாமம், கொன்றைப் பூச்சாற்றில் நாலுஜாமம் ஆட்டிக் குன்றிப் பிரமாணம் உண்டைசெய்து முலைப்பாலிலாவது, தேனிலாவது கொடுக்க ஜன்னிதோஷசுரங்கள் தீரும்.

சுரத்திற்கு ரசகற்பூர மாத்திரை

சுத்திசெய்த ரசகர்ப்பூரம் பலம்-1/4, வாளம் பலம்-1, அளிஞ்சிவேர்ப்பட்டை கொடுவேலிவேர்ப்பட்டை வகைக்குப்பலம்-1/4, கையாந்தகரைச் சாற்றிலும் முலைப்பாலிலும் வகைக்கு-2, ஜாமம் ஆட்டித் துவரைப்பிரமாணம் மாத்திரை செய்துக்கொண்டு தேனிற்கொடுக்க சகலசுரமுந் தீரும்.

சுரத்திற்கு இரதமாத்திரை

சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், இந்துப்பு, கடுகுரோகணி, இரசபஸ்மம், வகைக்குக் கழஞ்சு-1, வாளம் கழஞ்சு-7, இவைகளை யெலுமிச்சம் பழச்சாற்றில் அரைத்து மிளகுப் பிரமாணம் உண்டைசெய்து ஒருண்டையை அனுபானத்திலிட விரோசனமாகி குளிர் சுரந்தீரும், பேதியதிகமானால் குளிர்ந்த தண்ணீர் கொள்ளவும் மீறினால் பாலும் அன்னமுங் கொள்ளவும்.

சுரத்திற்கு லிங்கமாத்திரை

லிங்கம் கழஞ்சு-4, திப்பிலி கழஞ்சு-2, ஆவின்பாலாலரைத்துப் பயரளவு உண்டை செய்துக் கொண்டு சுக்கு, கஷாயத்திலிட சகலசுரமுந் தீரும்.

தாளகமாத்திரை

தாளகத்தைச் சிறுதுண்டுகளாய் வெட்டி சுண்ணாம்புக்குப் பத்துதபாவைத்து தேசிநீர்விட்டு நீற்றியபின் துணியில். முடிந்து சுண்ணாம்புத் தண்ணீருக்குள் தொங்கவைத்து இரண்டு ஜாமமெரித்துச் சுத்திசெய்த தாளகம் விராகனிடை-6, புகையூரல் நீற்றாதகற்சுண்ணம் வகைக்கு விராகனிடை-3, இவைகளை முலைப்பாலில் இரண்டு

ஜாமமரைத்துக் குன்றிபோலுண்டை செய்து வேளையொன்றுக்கு ஒருண்டையாக இரண்டுவேளை வெல்லத்திற் கொடுத்து 6-நாள் உப்பு புளித்தள்ளப் பத்தியமாயிருந்து எட்டாம்நாள் தலைக்குத் தண்ணீர் வார்த்து உப்பு வறுத்துக்கூட்டவும் சுரம் 64-ம் தீரும்.

சுரத்திற்குப் பச்சைகற்பூர வுண்டை

ரசபற்பம், கெந்தகம், பச்சைகர்ப்பூரம், லவங்கம், ஜாதிக்காய், நேர்வாளம் இவைகளை யோர்நிறையாய்க் கற்றாழம்பால் வார்த்தரைத்து உளுந்துப் பிரமாணம் உண்டைசெய்து ஒருண்டையைச் சர்க்கரைக் கலந்து சாப்பிடச் சகலசுரமும் உடனே தீரும்.

இரண்டாமுறை மூன்றாமுறைக்குளிர்சுர முதலான சகலசுரத்திற்கு அஞ்சனம்

இரண்டு கழஞ்சி சீந்திற்பூவை எலுமிச்சம் பழச்சாற்றால் மைப்போ லரைத்து மண்வெட்டிப் பின்புரத்தில் அப்பிவைத்து விளக்கில் நல்லெண்ணெய்விட்டுத் தீபமேற்றி மைப்பற்ற வைத்து அதை வெங்கலவட்டித் தூரிலிட்டுக் கொஞ்சம் நல்லெண்ணைவிட்டு இருப்புக் குழவியாற் களிம்புபோ லரைத்து கொம்புச்சிமிளி லடைத்துக்கொண்டு பணவிடை கண்ணிற்றீட்டத் தீரும்.

சகலஜன்னிக்கும் பொதுப்பிரையோகம்

எருக்கு சிறுகீரை குப்பைமேனி பிராய் இவைகளின் வேர் முருங்கைப்பட்டை, வெள்ளைப்பூடு இவைகளை யோர் நிறையாய் முலைப்பாலிலரைத்துக் குழப்பி வெயிலில் வைத்து சீலையிலூட்டிப் பிழிந்து உள்ளுக்குக்கொடுத்து நாசியில் நசியமிடத்தீரும்.

ஜன்னி-18-க்குந் தயிலம்

வேப்பெண்ணெய் படி-1, விளக்கெண்ணெய்படி-1/2, நல்லெண்ணெய்படி-1/4, ஒன்றாய்க் கலந்து அதில் வெப்புலா துளசி, ஜன்னிநாயகம், வேலிப்பருத்தி, அமுக்கிறா நாய்க்கடுகு, தைவேளை, எருக்கு, சிவதைநாரத்து ஆதண்டை குப்பைமேனி ஈசுரமூலி, பிரண்டைநொச்சி, கொடிவேலி இவைகளின் வேர்ப்பட்டையை அரைத்து வகைக்கொரு எலுமிச்சங்காய்ப் பிரமாணம், அரிதாரம், வெங்காரம், திப்பிலி, கருஞ்சீரகம், ஓமம், கொத்துமல்லி, கடுகு, மிளகு, வெள்ளுள்ளி, கிராம்பு, ஜாதிக்காய், வசம்பு, வெளிச்சிப்பிசின், பெருங்காயம், துருசு, நேர்வாளம், அக்கிராகாரம், நீர்வெடிமுத்து,

பூநாகம் வகைக்குக் கழஞ்சு-1, இவைகளை யரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து உடம்பெங்கும் பூசத்தீரும்.

ஜன்னி, வலிப்பு, தோஷம், பட்சவாதம், நரம்புத் திமிர்வாதம், வாயுவுக்கு விஷமுஷ்டித் தயிலம்

எட்டிப்பழச்சாறுபடி-8, முருங்கைவேர், வேலிப்பரித்தி, எலுமிச்சம்பழம், சிற்றாமணக்கிலை, வெதுப்படக்கி, புளியிலை, உகாயிலை, இஞ்சி, மருதோன்றி, சங்கங்குப்பி, வாதமடக்கி, முடக்கொத்தான் இவைகளின் சாறு வகைக்குப்படி 4, மதுரம், கோஷ்டம், வெள்ளுள்ளி, தேவதாரம், வசம்பு, இந்துப்பு, கொடுவேலிவேர், சதகுப்பை, ஓமம், திரிகடுகு, கடுக்காய் வகைக்குப் பலம் 1/2, இவைகளை மேற்படி சாற்றிலரைத்துப் போட்டு ஆவின் பால்படி 4, நெய்படி-2, சிற்றாமணக்கெண்ணெய்படி-4, நல்லெண்ணெய்படி-8, ஒன்றாய்விட்டுக் கலந்து எரித்துப் பதத்தில் வடித்து மேலிற்பூசத் தீரும்.

ஜன்னிசுரத்திற்கு மதுராதித்தயிலம்

அதிமதுரம், வேப்பம்பட்டை, விராலித்தோல், வேப்பம்பிசின், திராய்வேர், ஊமத்தின்வேர், குன்றிவேர், மேனிவேர், இந்துப்பு வகைக்கு விராகனிடை-1, ஆடாதோடைச் சாற்றிலரைத்து ஒருபடி நல்லெண்ணெயிற்போட்டு பதமாய்க் காய்ச்சி வடித்து உள்ளுக்குங் கொடுத்து மேலிலும் பூசத்தீரும்.

ஜன்னி பதின்மூன்றுக்கும் புறவீச்சு உள்வீச்சுக்கும் லிங்கமாத்திரை

துருசு, பொரிகாரம், துத்தம் வகைக்கு விராகினிடை-3, இவைகளை யெருக்கம்பால் விட்டரைத்து எட்டுவிராகனிடை லிங்கத்தை கவசஞ்செய்து அதன் மேல் கரியுப்பை மேற்படி பாலிலரைத்து கவசஞ்செய்து உலர்த்தி இரண்டுபடி மணலுக்கு மத்தியில் வைத்து எட்டெருவில் புடம்போடவும் இந்தப்படி மூன்று தபா புடம்போட்டுக் கவசம் நீக்கி லிங்கத்தைக் கோசலத்தில் கழுவி அதினுடனே சுத்திசெய்த பொரித்த வெங்காரம் விராகனிடை-3, கூடக்கூட்டி முலைப்பாலிலரைத்து ஒரு சுண்டைக்காய்ப் பிரமாணம் உண்டை செய்துக் கொண்டு இஞ்சிச்சாற்றில் ஒருண்டை வீதம் 6-போது கொடுக்கத் தீரும்.

ஜன்னி தலைவலிக்கு மாத்திரை

நற்சீரகம், கருஞ்சீரகம், அசமதாகம், திப்பிலி, கிராம்பு, வசவாசி, அதிவிடையம், மனோசிலை, பெருங்காயம், அதிமதுரம், வாய்விளங்கம், வேர்க்கொம்பு இவைகளை ஓர் நிரையாய்க் கழற்சியிலைச்சாற்றில் மைபோலரைத்து குன்றிபோலுண்டை செய்து மேற்படி சாற்றில் ஒருண்டை கொடுக்க ஜன்னி தீரும், நொச்சிச் சாற்றிலிட தலைவலி தீரும்.

ஜன்னி பதிமூன்றுக்குக் காலாந்தவயிரவன்

இரதபற்பம், சொர்னபற்பம் வகைக்குக் கழஞ்சு-1, சங்கு, கெந்தகம், முத்து வகைக்குக்கழஞ்சு-2, வெங்காரம் கழஞ்சு-1/2 கொடிவேலிவேர்க் கஷாயத்தில் இரண்டுநாள் விடாமலரைத்து உண்டைசெய்து நிழலிலுலர்த்தி ஒரு பாண்டத்திற் குறுணி உப்பிட்டு அதின்மத்தியில் வைத்து மேலும் குறுணி உப்புபோட்டு நாலஜாமமெரித்து நன்றாய் ஆறினபின் எடுத்து நாலுகுன்றியிடை பற்பமும் பத்துமிளகையும் பத்து திப்பிலியையும் வெதுப்பிப் பொடித்த தூளும் அரைக்காற்படி இஞ்சிசுரசத்தில்மூன்றுநாட் கொடுக்கத்திரும்.

ஜன்னி பதிமூன்றுக்கும் மாத்திரை

காந்தம், சூதம், கெந்தி, மனோசிலை, செம்புபற்பம், லிங்கம் வகைக்குப் பலம்-10, பெருங்காயம் பலம்-10, வெள்ளுள்ளி பலம்-1 இவைளைக் குமரிச்சாற்றால் மூன்றுநாளாட்டிக் குப்பியிலடைத்து வாயை மாற்கல்லால்மூடி வலுவாய்ச் சீலைமண் செய்து மணல்மேல் வைத்து முத்தீயும் மூன்றுநாள் யெரித்து ஆறவிட்டெடுக்கச் செந்தூரமாயிருக்கும். அதில் திப்பிலிமூலம் சாதிப்பத்திரி கடுகுரோகணி வகைக்குப் பலம் -1/4, வீதங்கூட்டி வெண்கருவாலாட்டிக் குன்றுபோற் குளிகைசெய்து முள்ளிச்சாற்றிற் கொடுக்க ஜன்னி பதிமூன்றுந்திரும்.

சகல ஜன்னிசுரம், தோஷம், வலிப்பு, இளைப்பு, சூலைக்கு பூபதி மாத்திரை

லோகம் காந்தம், தாம்பிரம், அப்பிரகம், வெள்ளி, சொர்னம், லவங்கம், வெண்கலம், பித்தளை இவைகளின் பற்பங்களை ஓர் நிரையாய்க் குமரிச்சாற்றில் நாலுஜாமம் ஆட்டி நிழலிலுலர்த்தி முன்போற் குப்பிக்கேற்றி 12-ஜாம மெரித்துத் தீயாற்றியெடுத்து வைத்துக்கொண்டு திரிகடுகுப்பொடியும் தேனுங்கூட்டி மத்தித்து

அதில் பணவிடை வைத்துக் கொடுக்கத் தீரும், கரும்பு, இளநீர், சர்க்கரை, பால், தயிர் மோர் கூட்டிப் பத்தியங் கொள்ளலாம் உப்புப்புளி தள்ளவும்.

மூலமுளைக்கும் மூலக்கடுப்புக்கும்

மருதம்பட்டை பலம் -1/4, அரைத்து அரைக்கால்படி ஆவின்பாலிற் கலக்கி மூன்றுநாட் கொடுக்க மூலமுளை கரையும் கடுப்புத்திரும்.

இரத்தமூலத்திற்கும் மூலமுளைக்கும் எண்ணெய்

பூநாகம்-பலம்-1, நாராகரந்தையிலை, வில்வக்காய்ப் பிரமாணம் இவைகளை யரைத்து அரைப்படி நல்லெண்ணெயிற் போட்டுக் காய்ச்சி வடித்து ஐந்துநாள் இருபோது ஒரு கரண்டி வீதங் கொள்ளத்திரும்.

உள்மூலம், இரத்தமூலம், சீதக்கழிச்சலுக்கும்

ஒருபிடி மூவிலைமின்னியை கருவை நெல்லரிசியுடன் கூட்டியரைத்து அடைதட்டி நல்லெண்ணெயில் வேகவைத்து மூன்றுநாட் கொடுக்கத் தீரும்.

இதுவுமது

மரட்கிழங்கை குருவை நெல்லரிசியுடன் சேர்த்திடித்து சுக்கு மிளகு, திப்பிலி, பூடு ஓமம் வகைக்குப்பலம் அரைக்கால் பொடித்துப் போட்டுப் பிசைந்து களிக்கிண்டியாவது ஆவினெய்யில் அடைசுட்டாவது மூன்றுநாள் கொடுக்கததீரும்.

மூலரோகம் மேற்படி மூளைக்கு

காட்டுக்கரணைக்கிழங்கு கழஞ்சு-16, சுக்கு கழஞ்சு-4 கொடுவேலிவேர் மிளகை வகைக்குக் கழஞ்சு-2, இவைகளைச் சூரணஞ்செய்து கழற்சிக்காய்ப் பிரமாணம் நல்லெண்ணெயிற் குழைத்து இருபோது ஏழுநாள் கொள்ளத் தீரும். புளித்தள்ளவும்.

உள்மூலம் பிரமூலத்திற்கு

மூக்குரட்டை யிலையை யெலுமிச்சங்காய்ப் பிரமாணம் அரைத்துக் கருங்குருவை மாவில் பிசைந்து அடைதட்டி நெய்யில் வேகவைத்து 5-நாள் கொடுக்கத்திரும்.

மூலக்கடுப்பு இரத்தமூலத்திற்கு

அரைக்காற்படி ஓமத்தை ஏழுதடவை வருத்துத் தேய்த்து உமிப்போக்கி அதினுடன் இரண்டு விராகனிடை வசம்பைச் சுட்ட சாம்பலையும் கூட்டி தேனில் மத்தித்து வேளையொன்றிற்கு ஒரு கொட்டைப்பாக்குப் பிரமாணம் கொள்ளத்தீரும்.

மூலவாயு மூலம உதரரோகம் வலிகுன்மம் பயித்தியவாயு ஜன்னிவாயு உடம்பு வியர்வை பசிமந்தத்திற்கு

திப்பிலி பலம்-6, சுக்கு, மிளகு, திப்பிலிமூலம் செவியம் சித்திரமூலம், கடுகு, வாய்விளங்கம், கருஞ்சீரகம், அசமதாகம், இந்துப்பு வெடியுப்பு, சவுக்காரம், கொத்தமல்லி, சதகுப்பை, அதிமதுரம், வெப்பாலையரிசி, சாதிப்பத்திரி கிராம்பு, தாளிசப்பத்திரி, லவங்கபத்திரி வகைக்குப் பலம்-3, இவைகளை வெதுப்பிச் சூரணித்து அதற்குப்பாதி சீனிகூட்டி திரகடிப் பிரமாணம் தேனிற்குழைத்து 10- நாள கொள்ளத் தீரும்.

பித்தமூல கிராணிக்குணம் மலம்சிறுத்துக்கழியும் பலவிதமாய்நாறும் சிலேத்மமூல கிராணிக்குணம் உதிரமாயும் வெண்மலமயும் கழியும் காற்றுபரியும் இவைகட்கு நிவர்த்தி

திப்பிலி, சுக்கு, மிளகு, ஜாதிக்காய் கிராம்பு, இந்துப்பு, ஏலம், சீரகம், பெருங்காயம், வெளாம்பிசின், மாம்பிசின், இலவம்பிசின், முத்தக்காசு, புளியவிரைத்தோல், மாதுளந்தோல் அபின் வகைக்கு விராகனிடை-1, பொடித்து இதற்கு நிகர் சுத்திசெய்த கெஞ்சாத்தூள் கூட்டி வேளையொன்றுக்கு ஒரு விராகனிடை வீதம் தேனிற் கொள்ள மூலகிராணி தீரும்.

சகல கிராணிக்கும்

இந்துப்பு	திப்பிலி
காயம்	ஓமம்
வளையலுப்பு	மிளகு
வெள்ளுள்ளி	சவுட்டுப்பு
சுக்கு	சித்திரமூலம்

இவைகளைப் பிரமிச்சாற்றிலாவது, எலுமிச்சம பழச்சாற்றிலாவது அரைத்துக் கொண்டு ஒரு உடும்பை தலைகால் குடல் தோல் நீக்கி அதின்வயிற்றுக்குள் வைத்துத் தைத்து மடக்கிக்கட்டிப்

பிட்டுபோலரைத்துக் காயவைத்திடித்துச் சூரணம் பண்ணி திரிகடிப்பிரமாணம் ஒருமண்டலங்கொள்ளத் தீரும்.

இதுவுமது

கோவைத்தண்டை இடித்து மேற்றோலியைத் தள்ளி நீரில்லாமல் வருத்துத் தூட்செய்து ஓமத்தை வருத்துத் தேய்த்து சூரணித்து இருவகையும் ஓர்நிரையாய்க் கலந்து நல்லெண்ணெயிற் கொட்டைப்பாக்குப் பிரமாணம் கொள்ளத்தீரும். பத்தியம் பாலுஞ்சோறுங் கொள்ளவும்.

சீதம்விழுவதற்கு

அமுக்குறாவேரும் இந்துப்பும் சமமாய்ப் பொடித்துத் தேனில் மத்தித்துக் கொடுக்கத்தீரும்.

வெள்ளைக்கழிச்சலுக்கு

வெண்குன்றிப்பருப்பும் புளியவிரைத்தோலும் வகைக்கு விராகனிடை-1, வீதம் மைபோற் பொடித்து எருமை வெண்ணெயிற் குழைத்துண்ணவும், இந்தப்படி 6-போது கொள்ளத் தீரும்.

வயிறு இரைந்து கழிதலுக்கு

திரிகடி வெந்தயத்தை நல்லெண்ணெய் விட்டு வருத்துச் சிவந்து வருகிற பருவத்தில் ஆவரையிலை யொருபிடி கூடப்போட்டு வருத்துக் கருகிவருகிற பதத்தில் எருமைமோர் ஒருபடி விட்டுக்காய்ச்சி யிறுத்துக் கொடுக்கத்தீரும்.

கழிச்சல் சுரத்திற்கு அபின் மாத்திரை

அபின்	விராகனிடை 6	சீரகம்	விராகனிடை 9
சுக்கு	விராகனிடை 7	மிளகு	விராகனிடை 10
திப்பிலி	விராகனிடை 8		

இவைகளை விஷ்ணுமூலிக் கஷாயத்தால் நாலுஜாமமரைத்துக் குன்றிபோலுண்டை செய்துக் கொண்டு வில்வம், விஷ்ணுமூலி, சீரகம், வெற்றிலைக்காம்பு இவைகளை ஓர்நிரையாய்க் கியாழஞ்செய்து அதில் ஒருகுளிகைவீதம் 6-வேளை கொடுக்க சுரம் கழிச்சல் தாபசுரம்நீங்கும், புளிதள்ளவும் இதைச் சிறியோருக்கும், பெரியோருக்கும் உபயோகப்படுத்தலாம்.

கழிச்சலுக்கு

விளாம்பிசினைப் பொடித்து எருமைத்தயிரில் மூன்று நாட் கொடுக்கத்திரும்.

சகலகழிச்சலுக்கும் காந்தசெந்தூரம்

காந்தம் பலம்-4, ஆவரைவேர்ப்பட்டை, பலம்-4, இவைகளைப் பொடித்து கற்றாழைமடல் தண்ணீர் வார்த்தரைத்து பில்லைதட்டிக் காயவைத்துச் சட்டியிலிட்டு சீலைமண்செய்து நாலுஜாமம் தீயெரித்து ஆற்றியெடுக்கச் செந்தூரமாகும். அதில் பணவிடைவீதம் அனுபானங்களிற் கொடுக்கத் தீரும். பத்தியம் எருமைப்பால் மோர்கூட்டிக் கொள்ளலாம்.

வயிற்றுக்கடுப்பு கழிச்சலுக்கு

ஓமம், மிளகு வகைக்குப்பலம்-1, ஓர்நிரையாய் வெதுப்பி பொடித்து வெல்லம் பலம்-1, கூட்டியரைத்துத் திருகடிப்பிரமாணம் 10-நாட் கொடுக்கத்தீரும்.

வயிற்றுக் கடுப்பு வாய்வுக்கு

சுக்கு, திப்பிலி, மிளகு, ஓமம், உப்பு, கருவேப்பிலை பெருங்காயம் சுண்டைவற்றல் இவைகளை ஓர்நிரையாய் வெதுப்பி பொடித்துச் சுடுசோற்றில் திரிகடிப்பிரமாணம் தூவி நெய் வார்த்துத் துண்ணதீரும்.

ஆசனக்கடுப்புக்குப் புகை

ஆமையோட்டைப் பொடித்து தணலிற்றூவி அபானவாயிற் புகைபிடிக்க கடுப்பு உடனே தீரும்.

வயிற்றிரைச்சல் கடுப்புக்கு

இரண்டுவிராகனிடை சுக்கை மோர்விட்டு மைபோலரைத்து அரசிலையில் வைத்துத்தைத்து மோரில் 7-தபாவேகவைத்து வடிகட்டின தயிரில் குழைத்துண்ணத்தீரும்

சுரத்தின் பேரிற்காணும் கடுப்புக்கு

நெற்பொரிமா ஆவின்வெண்ணெய் கற்கண்டு நற்சீரகத்தூள் இவைகளை ஓர்நிரையாய் ஒன்றாய்ப் பிசைந்து விளாங் காய்ப்பிரமாணம் 6-வேளை சாப்பிடத்திரும்.

சகலகிராணி அதிசாரம் வயிற்றிரைச்சல் கழிச்சல் சீதம் இரத்தம் விழுதல் மூலக்கடுப்பு வயிற்றுக்கடுப்புக்கு

சுண்டைவற்றல் மாதுளம்பழத்தோல்
கருவேப்பிலை நெல்லிமுள்ளி
மாம்பருப்பு வெந்தயம்
ஓமம்

இவைகளைச் சமமாய்வெதுப்பிப் பொடித்துத் திரிகடிப் பிரமாணம் தயிரிற்கொள்ளத்தீரும்.

இதுவுமது

திரிகடுகு	விராகனிடை 1	அதிவிடையம்	விராகனிடை 1
ஓமம்	விராகனிடை 1	கிராம்பு	விராகனிடை 1
ஜாதிக்காய்	விராகனிடை 1	அககிராகாரம்	விராகனிடை 1
ஜாதிபத்திரி	விராகனிடை 1	அபின்	விராகனிடை 4

இவைகளை எலுமிச்சம்பழச் சாற்றாலரைத்துச் சுண்டைக்காய்ப் பிரமாணம் உண்டைசெய்து யெருமைத் தயிரில் இடந்தீரும்.

இதுவுமது

மாதுளம்பழத்தோல்	வில்வப்பிஞ்சு
விளாம்பிஞ்சு	காட்டாத்திப்பூ
கடுகு	பொன்முகட்டைவேர்
முத்தக்காசு	புளியவிரைத்தோல்
லவங்கம்	இலவம்பிசின்
ஓமம்	குராசானி ஓமம்
திரிகடுகு	வெப்பாலையரிசி
ஆனைத்திப்பிலி	நாவற்பட்டை
பெருமரத்துப்பட்டை	லவங்கப்பட்டை
மாம்பருப்பு	கழற்பருப்பு
கருங்காலி	வயிரம்
வெள்ளிலோத்திரம்	நீர்முள்ளி
அதிவிடையம்	கருஞ்சீரகம்
நற்சீரகம்	காகக்கட்டி

இவைகளை ஓர்நிரையாய்ப் பொடித்து நெல்லிக்காய்ச் சாற்றாலாட்டிக கழற்சிக்காய்ப் பிரமாணம் உண்டை செய்துக் கொண்டு தயிரிற் கொள்ளத்தீரும்.

புளித்தேப்பத்திற்கு

வசம்பு சுட்டசாம்பல, வறுத்தகரியுப்பு, பெருங்காயம் இவைகளை ஓர்நிரையாய்ப் பொடித்துத் திரிகடிப்பிரமாணம் மோரிலாவது வெந்நீரிலாவது கொள்ளத்தீரும்.

ஊஷ்ண வாயுவுக்கு

பிரண்டை, ஓமம், கருவேப்பீர்க்கு, கரியுப்பு வகைக்குப்பலம்-1, வறுத்து மூன்றுபடி எருமைமோர்விட்டு ஒருகொதி வந்த பிறகு இறக்கிவைத்துக் கொண்டு சாப்பிட்டு வரத்தீரும்.

அஜீரணவாயுவுக்கு

சுக்கு திப்பிலி
மிளகு அசமதாகம்
இந்துப்பு நற்சீரகம்
பெருங்காயம்

இவைகளை ஓர்நிரையாய்ச் சூரணித்துத் திரிகடிப் பிரமாணம் அசனத்திற் பிசைந்து ஆவினெய்விட்டு உண்ணத்தீரும்.

மந்தவாயுவுக்கு

சீரகம், ஏலம், பச்சைக்கற்பூரம் இவைகளை யோர்நிறையாய்ச் சூரணித்து அதற்கு நிகர் சீனிகூட்டித் திரிகடி அந்திசந்தி கொள்ளத் தீரும்.

பித்த வாயுவுக்கு

லவங்கம் திரிகடுகு
முத்தக்காசு சிறுநாகப்பூ
திரிபலை

இவைகளை ஓர்நிரையாய்ச் சூரணித்து அதற்கு நாலிலொன்று ஆவின் பாலிற் சுத்திசெய்த சிவதை சூரணங்கூட்டி வேளையொன்றுக்கு முக்கழஞ்சு தேனிற்கொள்ளத் தீரும்.

இதுவுமது

கடுக்காய் திப்பிலி
சுக்கு சீரகம்
ஓமம் இந்துப்பு
நறுக்கு மூலம்

வகைக்குப்பலம்-1, இவைகளைப் பொடித்து ஒருபலம் கருப்புக் கட்டியைப் பாகுசெய்து அதிற்றூவிக்கிண்டி நேரம் ஒன்றிற் கொருகழற்சிக்காய்ப் பிரமாணம் கொள்ளத்தீரும்.

வாயுவுச்சூலைக்கு

திரிகடுகு, இந்துப்பு ஓமம் இவைகளை வெதுப்பிப் பொடித்துத் திரிகடிப்பிரமாணந் தேனிற்கொள்ளத்தீரும்.

ஆனந்தவாயுவுக்கு

தும்பையிலையை எலுமிச்சங்காயளவு அரைத்துப் பழச்சாற்றில் கலக்கிக் கொடுக்கத்தீரும்.

இதுவுமது

ஒரு எலுமிச்சங்காயளவு இலுப்பைப் பிண்ணாக்கை ஆழாக்கு ஈருள்ளிச்சாற்றில் ஊறப்போட்டு வெதுப்பிக் கொடுக்கத்தீரும்.

வாய்வுக்குத்துக்கு

கொடுவேலிப்பட்டை	சுக்கு
பரங்கிப்பட்டை	பிரப்பங்கிழங்கு

இவைகளை வகைக்கு விராகனிடை-3, வீதஞ் சிதைத்து நாலுபடி ஜலத்திற்போட்டு எட்டொன்றாய்க் கியாழஞ் செய்து நாளொன்றிற்கு மூன்றுநேரங் கொடுக்கத்தீரும்.

வாயுப்பொருமலின்குணம்

வாயுப்பொருமி அக்கினி மந்தித்து உண்ட அன்னத்தை வாந்திக்கும் புளித்தேப்பமிடும் காற்றுப்பரியும்.

நிவர்த்தி

பத்துவிராகனிடை சுக்கை வேலிப்பருத்திச் சாற்றால் மைப்போல்ரைத்து பில்லைதட்டி ஒருசட்டியில் இரண்டுவிரற்கனம் உப்பைப் பரப்பி அதின்மேல் பில்லையை வைத்து அதின் மேலும் முன்போல் உப்பைப் பரப்பி ஓடுமூடிச் சீலைமண் செய்து நாலு எருவில்படம்போட்டு பொதித்து தேனிற் கொள்ளத்தீரும்.

குண்டலவாயுவுக்குணம்

வாயுமிகுத்துக் கூப்பிட்டோடித் திரிந்து வயிற்றில் வந்து கற்போற்றிரளும் மறுபடியும் சிதறி உடம்பெங்கும் பரந்து பின்வந்து அடங்கும் தீபனத்தை மிக ஒடுக்கும்.

குடகரி வாயுவுக்குணம்

வாயு அதிகரித்து குடல்முதுகு நெஞ்சு விலா முதலான இடங்களிலோடிப் புடைத்துப் புரண்டு அழன்று வலிக்கும் உடலயரும் மலங்கருகும்.

அனாகதவாயுவுக்குணம்

மென்மேலும் உண்பதினாலும் நொந்த அன்னம் ஊசக்கறி புசித்தாலும் மலங்கட்டினாலும் வாயு அதிகரித்து வயிறு பொருமி வாந்தி பிராந்தியாகும்.

அத்தறாவாயுவுக்குணம்

அக்கினி மந்தித்து சீரணமாகாமல் உண்டவண்ணமாய் பிரவர்த்திக்கும் புளித்தேப்பம் வாந்தி தாகம் காணும் வாயு தரிக்காமற் பரிந்து கொண்டிருக்கும்.

துடிவாய்வுக்குணம்

வாயு அடிக்கடி உடலிற் பறந்தோடித் துடிதுடித்துச் சில நேரமடங்கியிருக்கும் நாடோரு மதிகரித்து இப்படியே செட்டை மிகச்செய்யும் குடல்வாய்வு புரண்டு வலித்துக் குமுறியிரையும் அலைபோற் கலங்கும் மந்திக்கும்.

சகலவாய்வுக்கு

வேப்பீர்க்கு மூக்கரைச்சாரணைவேர் கருவேப்பீற்கு முருங்கையீர்க்கு வகைக்கொருபிடி, சுக்கு, மிளகு, மஞ்சள் வகைக்குவிராகனிடை -3, இவைகளைச் சிதைத்து இரண்டுபடி தண்ணீரிற் போட்டு அரைக்காற் படியாய் வற்றவைத்து போசனத்தின்பேரில் சாப்பிட்டு வரத்தீரும்.

இதுவுமது

சீரகம்	இந்துப்பு
ஓமம்	திரிகடுகு
கருஞ்சீரகம்	பெருங்காயம்

இவைகளை ஓர்நிறையாய் வெதுப்பிச் சூரணித்துத் திரிகடிப்பிரமாணம் தேனிலாவது நெய்யிலாவது உண்ணத் தீரும்.

இதுவுமது

சுக்கு திப்பிலி
மிளகு வெள்ளுள்ளி
ஓமம் வாலுளுவையரிசி

இவைகளை ஓர்நிறையாய் வெதுப்பி பனைவெல்லங்கூட்டி மெழுகுபோல் அரைத்துக் கொட்டைப் பாக்குப் பிரமாணம் சாப்பிட்டு வரத்திரும்.

இதுவுமது

நற்சீரகம் கருஞ்சீரகம்
திரிகடுகு ஓமம்
பெருங்காயம்

இவைகள் வகைக்குப்பலம் -1/4, வெதுப்பிச் சூரணித்து கரியுப்பை எருக்கம் பழுப்பிலைச்சாற்றா லரைத்து 4-அல்லது 6-புடம் போட்டு பஸ்மம் பண்ணி யதை மேற்படி சூரணத்துக்கு நிகர் கூட்டித் திரிகடிப் பிரமாணம் 7-நாள் கொள்ளத் தீரும்.

இதுவுமது

செவியம் கொடுவேலிவேர்
திப்பிலி கண்டத்திப்பிலி
சுக்கு

இவைகளை வகைக்குவிராகனிடை -3, சிதைத்து இரண்டுபடி தண்ணீரிற்போட்டு அரைக்காற்படியாய் வற்றவைத்து அதில் ஜாதிலிங்கத்தை உரைத்துக் கொள்ளத் தீரும்.

இதுவுமது

மிளகு ஓமம்
வெந்தயம் சீரகம்
தைவேளைவேர்

இவைகளை வெதுப்பிப் பொடித்துத் தேனிற்கொள்ளத் தீரும்.

வாய்வுக்கு விரோசனம்

மிளகு	கழஞ்சு	1	கடுக்காய்	கழஞ்சு	15
இந்துப்பு	கழஞ்சு	1	சததிசாரணைவேர்	சூரணம்	10
நற்சீரகம்	கழஞ்சு	2	சுக்கு	விராகனிடை	5
ஓமம்	கழஞ்சு	3	அரியசிவதை	விராகனிடை	5
திப்பிலி	கழஞ்சு	4			

இவைகளை நிழலிலுலர்த்திச் சூரணஞ்செய்து திரிகடிப் பிரமாணங்கொள்ள விரோசனமாகி வாய்வுதீரும்.

ஏழாம் பாகம்

முற்றிற்று

இனி எட்டாம்பாகம்

உ

தேவிசகாயம்

அனுபோகவயித்திய

பிரம்மரகசியம்

எட்டாங்காண்டம்

சூரக்காவயித்தியம்

விநாயகர் துதி

விருத்தம்

அவனியிலுள்ளோ ரெல்லா மனுபவமாகச் செய்ய
தவலயம புகழுமிந்தக் சூரக்காவயித்தியந் தன்னை
பலமரப் பிணிகளோடப் பகரசெந்தமிழி னாலே
வனருளைங் கரன்தன் சேவடி சென்னிவைப்பாம்

முகவுரை

ஆசிரியவிருத்தம்

ஆராய்ந்து பலபலநூல் தேடித்தேடி
அனுபோகமாகவே தேர்ந்தோர்தன்னை
ஏராளமாகவே யடத்துவாங்கி
எண்மர்களின் பாதமலர் தினமும்போற்றி
நேராகுங் சூரக்கா வயித்தியந் தானும்
நெடுநாளா யோசித்து மனதுகூர்ந்து
சீராகப் புவியிலிது விளங்கவேண்டி
செஞ்சியே காம்பரமும் வெளியிட்டானே. 1

வெளியிட்ட யின்னூலை நம்பவேண்டும்
விளங்கவே திரைகடல்சூ ழுலகமெங்கும்
தெளிவாகும் மூலிகை யரியக்கண்டும்
தான்புகலும் முரையளவு போலேயுண்டும்
ஒளியாமலுரிதி யென்றே கொள்ள வேண்டும்
ஒட்டமது பிணிகளென்றே பறக்கவேண்டும்

அளவாகுந் தாவரவர்க் கங்களென்றும்
அனுபோகக் கூரக்கா வயித்தியம் பாரே. 2

பார்க்கவே சித்தர்கை யாண்டமூலி
பல்லோர்க்கும் பதார்த்தவகை யாச்சுதப்பா
ஏர்க்கவே யதையரியா யுலகிலேதான்
ஏங்கியே வலைந்தலைந்து விழலாகாமல்
தீர்க்கவே பிழைக்கடைக்கு ளிருக்குங்கீரை
தனையரிந்து உண்பதற்குச் சூக்ஷமாகக்
கோர்க்கவே கூரக்கா வயித்தயந்தன்னை
குணமாகவோதி வைத்த வுண்மைகாணே. 3

உண்மையெனு மொருமொழியே யுரிதியாக
உலகுதனில் கீர்த்தியது கொள்ளவேண்டும்
எண்ணமது யின்னூர்மேல் வைக்கவேண்டும்
எத்தொழிலைச் செய்தாலும் பக்திவேண்டும்
தண்மையுள புத்திதன்னை வளர்க்கவேண்டும்
தன்புகழை தான்புகழா திருக்கவேண்டும்
வண்மைபெரு முன்னோர்கள் சொன்னவாக்கை
வாமென வேநம்பிமனம் மகிழுவீரே. 4

நாதாக்கள் சொன்னமொழி பொய்யாகாது
நம்பாதவம் பருக்கு மெய்யாகாது
சோதியாம் பதினெண்பேர் சொன்னவாக்கு
ஜெகமீது ஒருக்காலும் வீண்போகாது
நீதியாமிதை விடவே ரினங்கிட்டாது
நிரையாகுங் கூரக்கா வயித்தியந்தன்னை
ஆதியாய்க்கை யேந்தி கண்ணுற்றோர்கள்
அகிலமிசைப் பிணியணுகா வாழ்வார்தாமே. 5

முகவுரை - முற்றிற்று

ஸ்திரீகளுக்குக் காணும் சூதக்கட்டுக்கு

காட்டாமணக்குக் கிழங்கை பச்சையாகக் கொண்டு வந்து அம்மியை சுத்தப்படுத்தி அதில் வைத்து பசும்பால் விட்டு மைபோலரைதது எடுத்து கொட்டைப் பாக்களவு வீதம் பசும்பாலில் கலந்து மூன்றுநாள் காலையில் கொடுத்து வர குணமாகும்.

இதுவுமது

செம்முள்ளியிலையைக் கொண்டுவந்து உரலிலிட்டு துவைத்து பிழிந்தசாறுபடி (காலே அரிக்கால்) பசும்பால்படி (காலே அரிக்கால்) இவைரெண்டையுஞ் சேர்த்து நாள் ஒன்றுக்கு ஆழாக்குவீதம் காலையில் மூன்று நாள் கொடுத்துவர குணமாகும் இச்சாபத்தியம்.

சூதகத்தை கிரமமாக வுண்டாக்க

வெங்காரத்தூள் -7 1/2, குன்றிமணியிடையும், கிராம்புத் தயிலம் ஒருதூளியும், வாலேந்திர பௌலம் 6-குண்டுமணியிடையும், குங்குமப்பூ 1 1/2, குண்டுமணியிடையும், இவைகளைச் சேர்த்து அரைத்து நாள் ஒன்றுக்கு துவரைப் பிரமாணம் ஒரு தடவை அல்லது இரண்டு தடவைகொடுக்க குணமாகும்.

சூதகவாயு சூசிகவாயு இவைகளுக்கு

குப்பைமேனி, பொற்றலைக்கரிப்பான், சிறுசெருப்படை, நிலவாகைவேர் இவைகளைக் கொண்டு வந்து உலர்த்தி வகைக்கு விராகனிடை-5, சேர்த்து சூரணித்து வஸ்திரகாயஞ் செய்து வைத்துக் கொண்டு திரிகடிவீதம் தேனில் குழைத்து -20-நாள் சாப்பிட்டு வர குணமாகும். இச்சாபத்தியம்.

சூதகவலிக்கு

துத்தியிலை, வெள்ளைப்பூண்டு, மிளகு, வகைக்குப்பலம்-1, வசம்பு விராகனிடை-1, இவைகளை ஜலம்விட்டு அரைத்து மூன்று பங்காக்கி மாதாந்திர ருதுகாலமாகிய நாளில் (3 நாளும்) காலையில் ஒரு பாகங்கொடுக்க குணமாகும்.

கெர்ப்பஸ்திரீகளுக்குக் காணும் துவாலைக்கு

நெய்தற்கிழங்கு, அதிமதுரம், சந்தணம், வெள்ளிலோத்திரம் இவைகள் வகைக்கு விராகனிடை -1/2, சேர்த்து ஜலம்விட்டரைத்து 3-பங்கு செய்து ஒரு பங்குவீதம் பச்சரிசி கழுநீரில் கலக்கி காலையில் மூன்று நாள் கொடுக்க குணமாகும்

துவாலையால் காணும் தாகமூர்ச்சைக்கு

அரசன் கொழுந்து, ஆலன்கொழுந்து, மாயிலைக் கொழுந்து, அத்தியிலைக்கொழுந்து இவைகள் வகைக்கு அவுன்சு-1, சேர்த்து

ஒருபடி ஜலம்வைத்து அரைப்படியாக வற்றக்காய்ச்சி யிறக்கி வடித்து (1/4) சேர்வீதங்கொடுக்க குணமாகும்.

கெர்ப்பஸ்திரீகள் சுரத்திற்கு

சிற்றாமுட்டிவேர், போராமுட்டிவேர், சீந்திற்கொடி, திப்பிலி, சுக்கு நிலவேம்பு, இவைகள் வகைக்கு விராகனிடை -1 ஒருபடி ஜலத்தல் பொடித்துப்போட்டு அரைப்படியாக வற்றக் காய்ச்சிய கஷாயத்தில் ¼ சேர்வீதம் நாளொன்றுக்கு இரண்டு தடவை கொடுத்து வர குணமாகும்.

கெர்ப்பஸ்திரீகள் நீர்சுரப்புக்கு

நன்னாரிவேர் அல்லது ரோஜாப்பூ இவைகளில் ஒன்றில் வராகனிடை-3, எடுத்து அரைப்படி ஜலத்தல் போட்டு கால்படியாக கஷாயமிறக்கி 3-நாள் கொடுத்துவர குணமாகும்.

கெர்ப்பஸ்திரீகளின் கல்லடைப்பிற்கு

மாதுளம்பழுத்து விதையைக் கொண்டு வந்து பசும்பால்விட்டு அரைத்துக் கரைத்து அறை அவுன்சுவீதம் கொடுத்து வர குணமாகும்.

கெர்ப்பஸ்திரீகளுக்கு 10 மாதங்களில் வரும் கெர்ப்பவலிகளுக்கு

1-வது, மாதத்திற்காணும் வலிகளுக்கு

தாமரைப்பூ, சந்தணம், விலாமிச்சவேர் வகைக்கு விராகனிடை-2 யெடுத்து பசும்பால்விட்டு அரைத்து பாக்களவு வீதம் பசும்பாலில் கலக்கிக் கொடுக்க வலிதீரும்.

2-வது மாத்திற்காணும் வலிகளுக்கு

தக்கோலம், தாமாரைப்பூவும் வகைக்கு விராகனிடை-5, சேர்த்து பசும்பால்விட்டு அரைத்து பாக்களவு வீதம் பசம்பாலில் கொடுத்து வரதீரும்.

3-வது, மாதத்திற்காணும் வலிகளுக்கு

வெண்தாமரைப்பூ, செங்கழுணி நீர்க்கிழங்கும் வகைக்கு விராகனிடை 2-சேர்த்து பசும்பால்விட்டு அரைத்து பாக்களவு பசும்பாலில் கலக்கிக் கொடுத்து வர வலிதீரும்.

4-வது, மாதத்திற்காணும் வலிகளுக்கு

நெய்தற்கிழங்கும், நொச்சிவேரும் வகைக்கு விராகனிடை-3 சேர்த்து பசும்பால்விட்டு அரைத்து பாக்களவு பசும்பாலில் கொடுக்க வலிதீரும்.

5-வது, மாதத்திற்காணும். வலிகளுக்கு

ஆம்பற்பூவும், விலாமிச்சுவேரும் வகைக்கு விராகனிடை-3, சேர்த்து பசும்பால்விட்டு அரைத்து பாக்களவ் வீதம் பசும்பாலில் கலக்கிச் சாப்பிட்டுவர வலிதீரும்.

6-வது, மாதத்திற்காணும் வலிகளுக்கு

திப்பிலி, திராக்ஷை, நெய்தற்கிழங்கு வகைக்கு விராகனிடை-2, சேர்த்து அரைத்து பாக்களவு பசும்பாலில் கலக்கிக் கொடுத்துவர வலிதீரும்.

7-வது மாதத்திற்காணும் வலிகளுக்கு

விலாமிச்சுவேர், சந்தணம், தக்கோலம் வகைக்கு விராகனிடை-1, சேர்த்து பசும்பால்விட்டு அரைத்தி பாக்களவு பசும்பாலில் கலந்துக் கொடுத்துவர வலிதீரும்.

8-வது, மாத்திற்காணும் வலிகளுக்கு

தாமரைப்பூ, நெய்தற் கிழங்கு வகைக்கு விராகனிடை -2, சேர்த்து அரைத்து பாக்களவு பசும்பாலில் கலக்கிக் கொடுக்க வலிதீரும்.

9-வது மாதத்திற்காணும் வலிகளுக்கு

அரசம்பட்டை, மருதம்பட்டை வகைக்கு விராகனிடை-3, சேர்த்து அரைத்து பாக்களவு வீதம் பசும்பாலில் கலக்கிக் கொடுத்துவர வலிதீரும்.

10-வது மாதத்திற்காணும் வலிகளுக்கு

சர்க்கரையும், இலுப்பைப்பூவும் வகைக்கு விராகனிடை -2, சேர்த்து அரைத்து பாக்களவு பசும்பாலில் கலக்கிக் கொடுத்துவர வலிதீரும்.

வயற்றில் பிள்ளைபிழைத்திருப்பது தெரிய.

வயற்றில் பசும் வெண்ணெயைத் தடவ அது உருகினால் பிள்ளை பிழைத்திருக்கின்றதென்று அறியவும். வெண்ணெய் உருகாவிட்டால் இறந்ததென்று அறிந்துக்கொள்ளவும்.

வயற்றில் இறந்தபிள்ளைவிழ.

நிலக்குமிழம்பட்டையை ஜலம்விட்டு அரைத்து சுண்டக் காய்ப்பிரமாணங் கொடுக்க வயிற்றிலிறந்த பிள்ளை விழும்.

இதுவுமது

உத்தாமணிவேர் விராகனிடை (1/2), யெடுத்து அம்மியில் வைத்து அரைத்து பசும்பாலில் கலக்கிக் கொடுக்க பிள்ளை விழும்.

இறந்தபிள்ளை விழ பூசுமருந்து

பிரண்டைவேரும், குரிஞ்சாவேரும் வகைக்கு விராகனிடை-5, சேர்த்து ஜலம்விட்டு அரைத்து வயற்றின்மீது பூச விழும்.

நஞ்சுக் கொடிவிழ

கருவேப்பிலை, வேப்பங்கொழுந்து, முருங்கைக்கீரைக் கொழுந்து இவைகளில் வகைக்கு அவுன்சு-1, சேர்த்து அத்துடன் ஒரு கடுக்காய் நொருக்கிச் சேர்த்து ஒருபடி ஜலத்தில கரைத்து அடுப்பேற்றி காய்ச்சி அரிக்கால் படியாய் வற்றினபின் வைத்துக் கொடுக்க விழும்

பிரசவித்த ஸ்திரீயின் சுவாசம் தீரு உருண்டை

முருங்கைப்பட்டை கழற்சிப்பருப்பு, பனவெல்லம் வகைக்கு விரானிடை -1, சேர்த்து மைபோல் அரைத்து பாக்களவு கொடுத்தவா சுவாசந்திரும்.

இதுவுமது

சந்தனம்	முல்லைவேர்
அதிமதுரம்	கோரைக்கிழங்கு
கோஷ்டம்	விலாமிச்சவேர்
சாஸ்திரபேதி	வெட்டிவேர்
தக்கோலம்	நெல்லிப்பருப்பு

இவைகள் வகைக்கு விராகனிடை -5, சேர்த்து இளநீர் ஜலத்தாலரைத்து சுண்டைக்காயளவாக மாத்திரைகளாக்கி உலர்த்திவைத்துக் கொண்டு ஒரு மாத்திரை வீதம் வென்னீரில் கரைத்தி 12-நாள் கொடுத்துவரத்தீரும், பத்தியமில்லை.

பிரசவித்த ஸ்திரீகளுக்கு கீழ்வயறு-மார்பு-சிரசு-இவைகளின் குத்தல் நோவிற்கு

ஏலம்	சுக்கு
மிளகு	திப்பிலி
லவுங்கப்பத்திரி	லவுங்கப்பட்டை

வகைக்கு விராகனிடை-2, இவைகளை சூரணித்து வைத்துக்கொண்டு 2-விராகனிடை வீதம் யெடுத்து வெல்லத்திலாகிலும் அல்லது கழுநீர் ஜலத்திலாவது சேர்த்துக் கொடுக்க மேற்கூறிய வியாதி குணமாகும்.

பிரசவித்த ஸ்திரீயின் மார்பில் பால்சுரக்க

தோல்நீக்கின வெள்ளைப்பூண்டு-5, விராகனிடை எடுத்து 2-சேர்பாலில் வேகவைத்துக் கடைந்து அத்துடன் ஏலரிசிதூள் விராகனிடை -1, சீனி விராகனிடை -5 சேர்த்து பாயசம்போல் செய்து தினம் காலையில் 6-மணிக்கு கொடுத்து-3-4, மணி நேரஞ்சென்றபிறகு போஜனஞ் செய்யவும் பால் உண்டாகும்.

இதுவுமது

பார்லி அரிசியைக் கொண்டு வந்து கஞ்சிகாய்ச்சிக் கொடுத்துவர பால் சுரக்கும்.

இதுவுமது

சிற்றாமணக்கு யிலையைக் கொண்டுவந்து வதக்கி மார்பில் போட பால்சுரக்கும்.

பால் வரண்டுபோக

மல்லிகைப்பூவாகிலும் அல்லது கோழிக்கீரை யாகிலும் வதக்கிக் கட்ட பால்வரண்டு போகும் தொந்தரவிராது.

முலைக்காம்பு ரணமாற பத்து

வெங்காரம் -¼, அவுன்சு, சாராயம், -1/2- அவுன்சு, ஜலம் மூணேமுக்காலு அவுன்சு, இவைகளைச் சேர்த்து அதில் துணியை நனைத்து ரணத்தின் மேல்போட 2-3, நாளில் ரணம் ஆறும்.

ஸ்தன்னியக் கட்டுக்கு பத்து.

நவாக்ஷாரம் அவுன்சு (அரிகால்) பன்னீர் பயினட் (1) இவைரெண்டுஞ் சேர்த்து அதில் துணியை நனைத்துக் கட்டியின் மேல் போட்டுவர குணமாகும்.

குழந்தைகளின் சுரமாந்தத்திற்கு

குட்டிவிளாயிலை, வெள்ளைப்பூண்டு, அவுரியிலை இந்த மூன்று தினுசும் வகைக்கு அவுன்சு-1, சேர்த்து வெதுப்பிக் கஷாயஞ்செய்து ஒரு பாலாடைவீதம் கொடுத்துவர குணமாகும்.

ஊதுமாந்தத்திற்கு

வேலிப்பரித்தியிலையை வதக்கிப் பிழிந்தசாறு அவுன்சு-1, சீரகம் கடுகுரோகணி இவையிரண்டும் வகைக்கு அவுன்சு 1/4, சேர்த்து அரைத்துப் பிழிந்தசாற்றில் அரைப்பாலாடை முலைப்பாலுடன் கலந்து கொடுக்க குணமாகும்.

விடமாந்தத்திற்கு

நுணாவேர்	பொடுதலை
நொச்சிவேர்	வெள்ளைப்பூண்டு
வேளைவேர்	வசம்பு
ஓமம்	

இவைகள் வகைக்கு விராகனிடை-1, சேர்த்து நொரிக்கி வெதுப்பி ஒழக்கு ஜலம் வைத்து ஒரு பாலாடை வீதம் கொடுக்கக் குணமாகும்.

நீர்மாந்தத்திற்கு

மூக்கரட்டை வெங்காயம் இவைகளின் சாறு படி அரிக்கால், ஆமணக்கெண்ணெய் படி அரிக்கால் சேர்த்துக் காய்ச்சி வடித்து ஒர பாலாடை வீதம் கொடுத்துவர குணமாகும்.

பால்மாந்தத்திற்கு

வெள்ளைப்பூண்டு, மிளகு, வசம்பு இந்துப்பு, பொடுதலைக்காய் இவைகள் வகைக்கு (30) குன்றிமணியிடை சேர்த்து நொரிக்கி வெதுப்பி ஒழக்கு ஜலத்தில் போட்டு ஆழாக்காய்க் கஷாயஞ் செய்து ஒரு பாலாடை வீதம் கொடுத்துவர பால் மாந்தம் குணமாகும்.

செரியாமாந்தத்திற்கு

வசம்பு	மிளகு
சடாமாஞ்சில்	வெள்ளைப்பூண்டு
ஓமம்	கருஞ்சீரகம்
சுக்கு	ஆமையோடு

இவைகள் வகைக்கு விராகனிடை -1, சேர்த்து நொரிக்கி அரைபடி ஜலத்தில் போட்டு கால்படியாக வற்றக் கஷாயஞ்செய்து ஒருபாலாடைவீதம் கொடுத்துவர செரியாமாந்தம குணமாகும்.

கழிமாந்தத்திற்கு

இண்டின்சாறு, வெங்காயச்சாறு, ஆமணக்கெண்ணெய் வகைக்கு அவுன்சு-2, சேர்த்து யெரித்து வடித்து ஒரு பாலாடைவீதம் கொடுத்துவர குணமாகும்.

இதுவுமது

சுக்கு, கழற்சிப்பருப்பு, மஞ்சள் ஒன்றைத்தலைப்பூண்டு பெருங்காயம் வகைக்கு விராகனிடை 1, சேர்த்து முலைப்பாலால் அரைத்து அரைசேர் வேப்பெண்ணையிற் கலந்து காயச்சி வடித்து ஒரு விராகனிடை வீதம் முலைப்பாலில் சேர்த்துக் கொடுத்துவர கழிமாந்தம் குணமாகும்.

தலைமாந்தத்திற்கு

வெள்ளெருகு, வெதுப்படக்கி, வேலிப்பரித்தி, பெருந்தும்பை இவைகளின் சாறு வகைக்கு அவுன்சு-1, சேர்த்து அதில் திப்பிலி, வசம்பு பூண்டு, சதகுப்பை, தேசவரம் வகைக்கு அவுன்சு (அரிக்கால்) சேர்த்தரைத்து சாற்றில் கலக்கி ஒரு பாலாடை வீதம் கொடுத்துவர குணமாகும்.

மாந்தம்-8-க்கும் விபரம்.

மேற்சொல்லிய 8-வித மாந்தரோகங்கள் தவிர வயருப்பினால் உப்பிமாந்தமென்றும், மலங்கட்டினால் கட்டுமாந்தமென்றும், கண்சொரிகினால் சொரிகிமாந்தமென்றும், வாத மதிகமானால் வாதமாந்தமென்றும், பித்தமதிகரித்தால் பித்தமாந்தமென்றும், சிலேஷ்ம மாந்தமென்றும், இழுப்புமாந்தமென்றும், சன்னிமாந்த மென்றும், பலவாறாக சொல்லுவார்கள், ஆகையால் ரோகங்களின்

லக்ஷணங்களை அறிந்து மருந்துகளைச் சேர்த்து கொடுக்கவேண்டியது. மேற்கூறிய மாந்தங்களுக்கு இச்சாபத்தியம்.

மாந்தம-8-க்கும்

முருங்கைப்பட்டைச்சாறு படி-1, நல்லெண்ணைபடி -1/2, இலைரெண்டுஞ் சேர்த்து அதில் வசம்பின் சாம்பல் விராகனிடை -2½, வெள்ளைப்பூண்டு விராகனிடை-1, இவைகளை பசும்பால் விட்டரைத்து மேற்படி சாற்றில் கரைத்து அடுப்பேற்றி எரித்து வடித்து வைத்துக் கொண்டு ஒரு பாலாடை வீதங் கொடுக்க மாந்தம் 8-ம், தீரும் இச்சாபத்தியம்.

மாந்த வலிப்புக்கு

குப்பைமேனிச்சாறு, முடக்கத்தான்யிலைச்சாறு மூக்காச்சாரணைச் சமூலச்சாறு வகைக்கு அவுன்சு-1, ஆமணக்கெண்ணை அவுன்சு-1, கூடச்சேர்த்து அடுப்பேற்றிக் காய்ச்சி வடித்து ஒரு பாலாடை வீதம் கொடுத்துவர குணமாகும். இச்சாபத்தியம்.

வயற்றுப்பொருமல் மாந்தத்திற்கு

குப்பைமேனிவேர்ப்பட்டை பலம்-04, வருத்த ஓமம் விராகனிடை-2, இவைகளை அரைபடி ஜலத்தில் போட்டு அடுப்பேற்றிக் காய்ச்சி கஷாயமாக்கி வடித்து ஒருபாலாடை வீதம் கொடுத்துவர குணமாகும். இச்சாபத்தியம்.

இதுவுமது

ஓமம், வசம்பு, வகைக்கு (அரிக்கால்) அவுன்சு யெடுத்து இளம்வறுப்பாய் வறுத்து வைத்துக்கொண்டு வேலிப்பரித்தியிலையை வதக்கி எடுத்தசாற்றில் ஒரு சிட்டிகை சூரணத்தைப் போட்டு ஒருபாலாடை வீதம் கொடுத்துவர குணமாகும்.

கருங்கிரந்திக்கு

ஆமணக்கெண்ணை, கருங்கமுதைலத்திச்சாறு, அவுரியிலைச்சாறு, இவைகள் வகைக்குப்படி (அரிக்கால்) சேர்த்து அதில் வசம்பு வெளளைப்பூண்டு வகைக்கு விராகனிடை -1, பொடித்துப்போட்டு அடுப்பேற்றி யெரித்து வடித்து ஒரு பாலாடை வீதம் கொடுத்துவர குணமாகும்.

இதுவுமது

ஒரு பாலாடை கழுதைப்பாலில் 2-3, துளி ஓணான் ரத்தத்தை விட்டுக் கொடுக்க குணமாகும். ஆனால் தாயார் கடும் பத்தியமாக இருக்கவேண்டும்.

செங்கிரந்தி

முருங்கையிலைச்சாற்றை முரித்து ஒரு பாலாடை கொடுக்க குணமாகும், அல்லது முலைப்பாலில் கோரோஜனையை 2-3-உரைவுரைத்துக் கொடுக்க குணமாகும். இச்சாபத்தியம்.

கிரந்தி ஒன்பத்திற்கும்.

செம்பரித்தியெண்ணை, செம்பரித்திச்சாறு, தேங்காய்ப்பால் ஆமணக்கெண்ணை வகைக்குப்படி -1, சேர்த்து அதில் சுக்கு, மிளகு திப்பிலி, ஏலம், கிராம்பு, சுத்திசெய்த ரசகர்ப்பூரம் வகைக்கு விராகனிடை -1, சேர்த்து மேற்படி தேங்காய்ப்பாலிலரைத்து எண்ணையிற்கரைத்து அடுப்பேற்றி பதமாகக்காய்ச்சி வடித்து வைத்துக்கொண்டு ஒரு விராகனிடை வீதம் கொடுத்து வர குணமாகும், ஆனாலிந்த யெண்ணை சூலை-18-க்கும் கொடுக்கலாம். இச்சாபத்தியம்.

சுரத்திற்கு

கீழ்க்காநெல்லிச்சாறு, பாதரிவேர்ச்சார் இவைகள் வகைக்கு அரிக்கால் அவுன்சு சேர்த்து முலைப்பால் கால் அவுன்சில் சேர்த்துக் கொடுத்துவர சுரம் நிவர்த்தியாகும்.

தோஷம் ௯-க்கும் மாத்திரை

மஞ்சள்	முத்தக்காசு
வசம்பு	தேவதாரம்
அதிமதுரம்	கடுக்காய்

வகைக்கு விராகனிடை -2, சூரணித்து பொடுதலைச் சாற்றாலரைத்து பரித்திவிதை அளவாக மாத்திரைகளாக்கி உலர்த்தி வைத்துக்கொ.ாள்ளவும், ஒரு மாத்திரைவீதம் தேனிலாவது முலைப்பாலிலாவது உரைத்துக் கொடுக்க குணமாகும், இச்சாபத்தியம்

அதிசார பேதிக்கு

ஒரு ஜாதிக்காயைத் தொளைத்து அதினுள் ஒரு குண்டு மணியிடை அபினியை வைத்து மஞ்சளை அரைத்து அதற்குக் கவசமிட்டு புடம்போட்டு வெந்தவுடனே மஞ்சளை நீக்கி முலைப்பால்விட்டு கல்வத்தில் போட்டு ஒருமணிநேரம் அரைத்து கடுகு பிரமாணம் மாத்திரைகளாக்கி நிழலில் உலர்த்தி வைத்துக்கொள்ளவும் அதில் ஒரு மாத்திரை வீதம் முலைப்பாலில் உரைத்து கொடுத்துவர குணமாகும், ஆனால் அதிகமாகக் கொடுத்தால் மயக்கங்காணும் கெடுதிநேரிடும்.

சீதபேதிக்கு

வில்வப்பழத்துஒடு சதையுடன் உலர்ந்ததை நொரிக்கி ஜலத்தில் போட்டு காய்ச்சின கஷாயத்தில் ஒரு அவுன்சு வீதம் கொடுத்து வர குணமாகும்.

கால்கடுவனுக்கும் மீண்டைக்கடுவனுக்கும்

ஆமணக்கெண்ணெய் படி	1/4	வெங்காயம் விராகனிடை	5
வசம்பு விராகனிடை	5	இலுப்பைப்பட்டை ”	5
சதுரக்கள்ளிப்பட்டை ”	5	பாலப்பட்டை ”	5

இதை ஜலம்விட்டரைத்து மேற்படி யெண்ணையில் கரைத்து அடுப்பேற்றி யெரித்து வடித்து வைத்துக்கொண்டு ஒருபாலாடைவீதம் ரெண்டுநாள் கொடுக்கக் குணமாகும், இச்சாபத்தியம்.

வயருப்பல் மந்தத்திற்கு

உப்பை வருத்துக் கொட்டின ஒருசட்டியில் -5 விராகனிடை வேளைப்பூண்டை போட்டு வருத்து சிவக்கும் போது -2 1/2 விராகநிடை ஓமத்தைச் சேர்த்து வருத்து 1/2-டி ஜலம்விட்டுக் கால்படியாக வற்றக்காய்ச்சி அதில் 1/4-விராகநிடை பெருங்காயத்தைச் சேர்த்து 2-3-பாலாடைவீதம் கொடுத்து வர குணமாகும், இச்சாபத்தியம்.

சிரங்குகள் ஆர

சந்தணம் நீர்வெடிமுத்து வகைக்கு 5- விராகனிடை சேர்த்து ஜலம்விட்டு அரைத்து சிரங்குகளின் மீது பூசி வர குணமாகும்.

வயிற்றுப்பலுக்கு

நுணாயிலை ஒருபடி		சுக்கு விராகனிடை	2
ஓமம் விராகனிடை	2	வேப்பிலை விராகனிடை	2
மிளகு ”	2		

இவைகளில் நுணாயிலையும் வேப்பிலையும் சட்டியிற் போட்டு வருத்து சிவக்கும் போது மற்றவைகளையும் பொடித்துப் போட்டு ஒருபடி ஜலம்விட்டுக் கால்படியாக வற்றக்காய்ச்சி வடித்து அதில் காலுபாலாடை வீதம் கொடுத்துவர குணமாகும்.

தொப்புள் புண்ணுக்கு

வருத்த சீனாகாரத்தைக் கொண்டு வந்து பொடித்து தொப்புளின் மேல் போட்டுவர குணமாகும்.

இருமலுக்கும் ரத்தம் விழுதலுக்கும்

கால்படி கோதுமையைக் கொண்டுவந்து ஒருபிடி ஜலத்தில் ஊறப் போட்டு ஊறின பின்யெடுத்து மைபோல் அரைத்து அந்த ஜலத்தில் கரைத்து வடித்துக் காய்ச்சி கால் சேராக்கி சீனிசர்க்கரை சேர் *1*, சேர்த்து சுண்டக்காய்ச்சி புன்னக்காயளவு தினம் *2*-தடவை கொடுத்து வர குணமாகும்.

வயற்றில் எண்ணெய்தங்கினால்

வெந்தயமும், ஜலமும் சேர்த்து கஷாயமிட்டுக் கொடுக்கத்தீரும், அல்லது நாயுருவிவேரும், ஜலமும் சேர்த்து கஷாயமிட்டுக் கொடுக்கத் தீரும், அல்லது ஆமணக்குவேரும் ஜலமும் சேர்த்துக் கொடுக்க யெண்ணெய் கழியும், ஒருவிராகனிடை வேருக்கு கால்படி ஜலம் வைத்துக் கஷாயமிட வேண்டும்.

சாம்பல் மண்தின்னால் அதற்கு

கத்தரிக்காயின் சார்பிழிந்து அதில் பெருங்காயம் சிருபயரளவு உரைத்து ஒரு பாலாடைகொடுக்கக் குணமாகும். அல்லது முள்ளங்கிச் சாற்றில் மேற்சொன்னபடி பெருங்காயத்தை உரைத்து ஒரு பாலாடை கொடுத்து வர சாம்பல் மண் கழியும் குணமாகும்.

பால்உண்ணாவிடில்

அதிமதுரத்தை முலைப்பாலில் உரைத்து முலைக்காம்பிற்குத் தடவி குழந்தைவாயில் வைத்துக் குடிக்கச் செய்விக்க பால் குடிக்கும்

குடித்தபாலைக் கக்கினால்

வெள்ளைப்பூண்டும் ஓமமும் வகைக்கு விராகனிடை-*1*, சேர்த்து ஆழாக்கு ஜலம் வைத்து அரையாழாக்காய் கஷாயமிட்டு ஒரு பாலாடைவீதம் கொடுத்துவர குணமாகும்.

வாந்தியை நிறுத்த

நன்னாரிவேர்பட்டைச் சாற்றில் மயிலிறகு சாம்பல் அல்லது மிளகு, வசம்பு இவைகளின் சாம்பலைச் சேர்த்துக் கொடுக்க குணமாகும் இவைகளைச்சுட்டு சாம்பலாக்கிக் கொள்ளவும்.

ஜலுப்பிற்கு கியாழம்

தூதுளையைக் கொண்டுவந்து சார்பிழிந்து ஒரு பாலாடை வீதம் கொடுக்கத் திரும் அல்லது துளசி யிலையைகொண்டு வந்து புட்டுவைத்து ஒருபாலாடை உள்ளுக்குக் கொடுக்கத் திரும்.

ஜலுப்பிற்கு பத்து

வெற்றிலைச்சாற்றில் 1/4- விராகநிடை குங்குமம் சேர்த்துக் கொடுக்கவைத்து மூக்கு, புருவம் முதலிய இடங்களிற் பற்றுப்போட குணமாகும், அல்லது ஜாதிக்காயை ஜலம்விட்டரைத்து சுடவைத்துப் பற்றுப்போட ஜலுப்புத்திரும்.

பேதியை நிறுத்த

மஞ்சள்	சிறுநாகப்பூ
கடுக்காய்	போஸ்தக்காய்
அதிவிடையம்	

இவைகள் வகைக்குப் பலம்-1 ஜடாமாஞ்சில் பலம் 1/4- இவைகளைச் சூரணித்து அரைப்படி கொதிக்குஞ் சலத்தில் போட்டு 1- மணிநேரம் ஊறவைத்து வடித்துக் கொண்டு 2- பாலாடைவீதம் 5-6- மணி நேரத்திற் கொருவிசை கொடுத்து வர பேதிநிற்கும்.

பேதியுண்டாக

சிற்றாமணக்கெண்ணெயும் முலைப்பாலும் சமமாகச் சேர்த்து இரண்டையும் நன்றாய்க் கலந்து ஒரு பாலாடை அல்லது ஒண்ணரைபாலாடை கொடுக்க மலமிரங்கும், அல்லது நாட்டுக் காட்டாமணக்குச் சாறுபிழிந்து ஒரு பாலாடை கொடுக்கப் பேதியாகும்.

கக்குவான்தீர நெய்

மீன்முள்ளு, எலிச்சதை, நத்தைச்சதை வேங்கைப்புலியின் கண்டத்தோல் இவைகளில் எதையாகிலும் (1/4) பலம். எடுத்து (5) பலம், பசும்நெய்யில் போட்டுக் காய்ச்சி வடித்துக் கொண்டு (3-4) விராகநிடை வீதம் கொடுத்துவர குணமாகும்.

இதுவுமது

மிளகு, மயிலிரகு, இவைகளின் சாம்பலை சமமாகச் சேர்த்து விராகனிடை வீதம் பசும்நெய்யில் கொடுக்க கக்குவான் தீரும்.

வாய்ரிணத்திற்கு பூசமருந்து

(10) குண்டுமணியிடை படிகாரத்தூள் ஒரு அவுன்சு தேன்சேர்த்து குழைத்து காலை மாலை குழந்தையின் வாய் ரிணத்திற்கு தடவி வரகுணமாகும் அல்லது பசும்நெய்யில் கோரோசனையை உரைத்து வாய்ரிணத்திற்குத் தடவிவர ரெணமானது ஆறும்.

நீர்க்கட்டுக்கு

வெங்காரத்தைப் பொரித்து அரைகுண்டுமணி யிடை முதல் (2½) குண்டுமணி வரைக்கும் வயதுக்குத் தக்கபடி முலைப்பாலிற் கொடுக்க நீர் இறங்கும் குணமாகும்.

அண்டவீக்கத்திற்கு

கழற்சிப்பருப்பு	சாரணைவேர்
சுக்கு	முடக்கொத்தான்வேர்

இவைகள் வகைக்கு அவுன்சு (1) யெடுத்துப்பொடித்து (13) அவுன்சு ஜலத்தில்போட்டு (6) அவுன்சு கஷாயமாகும் படி யெரித்து வடித்து ஒருபாலாடை வீதம் தினம் ரெண்டு தடவை கொடுக்க குணமாகும்.

அண்டவீக்கத்திற்குக் கட்டு

சிற்றாமணக்கெண்ணெயும் சிற்றாமணக்குயிலையும் வதைக்கிக் கட்ட குணமாகும்.

சகல சுரங்களுக்கும் குளிர் சுரத்திற்கும் மாத்திரை

மிளகு விராகனிடை ஒண்ணை அரிக்கால், பெருங்காயம் அரையே வீசம் விராகனிடை, கழற்சிப்பருப்பு, மூணேவீச விராகனிடை, இவைகளைச் சேர்த்து தேன் போதுமான வரைக்கும் விட்டு மைபோல் அரைத்து (30) மாத்திரகளாக்கி பெரியவர்களுக்கு (2) மாத்திரையும், சிறியவர்களுக்கு (1) மாத்திரையும், தினம் (2-3) தடவை கொடுத்து வர சுரந்திரும்.

விஷசுரத்திற்குக் கியாழம்

நிலவேம்பு	சீந்திற்கொடி
பேய்ப்புடல்	சுக்கு
வேப்பம்பட்டை	கடுக்காய்

இவை வகைக்கு விராகனிடை (5) பொடித்து ஒருபடி ஜலத்தில் போட்டு அடுப்பேற்றி யெரித்து நாலில் ஒன்றாக்கி கால் ஆழாக்குவீதம் கொடுத்து வர விஷசுரந்தீரும்.

பழயசுரத்திற்குக் கியாழம்

பற்பாடகம்	ஆடாதோடை
சிறுதேக்கு	முத்தக்காக
கோஷ்டம்	நிலவேம்பு
சீந்திற்கொடி	சுக்கு
திப்பிலி	சிறுகாஞ்சொரி

இவைகள் வகைக்கு விராகனிடை (5) சேர்த்துப் பொடித்து நாலுபடி ஜலத்தில் போட்டு அடுப்பேற்றி யெரித்து ஒரு படியாக்கி விசம்படி வீதம் கொடுத்துவர பழையசுரந் தீரும் இச்சாபத்தியம்.

அஸ்திசுரத்திற்குச் சூரணம்

தாளிசப்பத்திரி	பலம்	2 1/2	சீரகம்	பலம்	1/4
ஏலம்	பலம்	1/4	திப்பிலி	பலம்	1/4
கிராம்பு	பலம்	1/4	கோஷ்டம்	பலம்	1/4
ஜாதிக்காய்	பலம்	1/4	அக்கிராகாரம்	பலம்	1/4
ஜாபத்திரி	பலம்	1/4	கடுக்காய்	பலம்	1/4
வால்மிகு	பலம்	1/4	தானிக்காய்	பலம்	1/4
லவங்கப்பட்டை	பலம்	1/4	நெல்லிக்காய்	பலம்	1/4
வாய்விளங்கம்	பலம்	1/4	சடாமாஞ்சில்	பலம்	1/4
மல்லி	பலம்	1/4	சோம்பு		

இவைகளை நிறுத்தெடுத்து இளம்வறுப்பாய் வறுத்து சூரணித்து வஸ்திரகாயஞ்செய்து அத்துடன் (5)பலம் சீனியைச் சேர்த்து வைத்துக் கொண்டு தினம் காலை மாலை இரண்டு வேளையும் திரிகடிப்பிராணம் சாப்பிட்டு வர அஸ்திகரம் அஸ்திவெட்டை தீரும் இச்சாத்தியம்.

அசாத்திய சுரத்திற்குக் கியாழம்

தேவதாரம், சுக்கு, கெத்தமல்லி வகைக்கு விராகனிடை (10) நிறுத்தெடுத்து பொடித்து ஒருபடி ஜலத்தில் போட்டு அடுப்பேற்றி யெரித்து கால்படியாய் வற்றினபின் வடித்து அதில் நாலிலொருபாகம் தினம் காலை மாலை இரண்டு தடவை கொடுத்து வர தீரும். இச்சாபத்தியம்.

அதிசார சுரத்திற்குக் கியாழம்

வில்வபழச்சதை, நிலவேம்பு, முத்தக்காக, மாம்பட்டை, சுக்கு பெருமரத்துப்பட்டை வகைக்கு விராகனிடை (10) நிறுத்தெடுத்து பொடித்து இரண்டுபடி ஜலத்தில்போட்டு அரைபடியாய் வற்றக்காய்ச்சி வடித்து நாளொன்றுக்கு வீசம்படி வீதம் கொடுத்துவர அதிசார சுரம் தீரும், இச்சாபத்தியம்.

நடுக்கல் சுரத்திற்குக் கியாழம்

சுக்கு	பற்பாடகம்
கோஷ்டம்	குமிழ்வேர்
தேவதாரம்	சிறுதேக்கு
கடுக்காய்	கண்டங்கத்திரி

இவைகள் வகைக்கு விராகனிடை (5) நிறுத்தெடுத்து பொடித்து (1) படி ஜலத்தில்போட்டு கால் படியாகும்படி வற்றக்காய்ச்சி கொடுக்கத்தீரும். இச்சாபத்தியம்.

இதுவுமது

மிளகு விராகனிடை (5) யெடுத்து நெய்யில் வறுத்து பொடித்து கால்படி ஜலத்தில் போட்டு வீசம்படியாய் வற்றக் காய்ச்சிக் கொடுக்கக் குணமாகும்.

அஜுர்ணசுரத்திற்குக் கியாழம்

சுக்கு, கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல், பேறாமுட்டி, சிற்றாமுட்டி வகைக்கு விராகனிடை (1 1/2) நிறுத்துயெடுத்துப் பொடித்து அரைபடி ஜலத்தில்போட்டு கால்படியாய் வற்றக்காய்சி இருவேளை கொடுத்துவர அஜிர்ணசுரந் தீரும். இச்சாத்தியம்.

விடாசுரத்திற்கு

மிளகு விரானிடை (1/2) அவுரிவேர் விராகனிடை (1 1/2) இவைகளை அரைத்து வெந்நீரில் கலக்கி அதில் அரைபலம் இடை சுண்ணாம்பைப் போட்டு மிசிரித்துக் கொடுத்து வர குணமாகும் இச்சாபத்தியம்.

வாதசுரத்திற்குக் கியாழம்.

சுக்கு, கிராம்பு கோரைக்கிழங்கு, நிலவேம்பு, கொத்து மல்லிவிதை வகைக்கு விராகனிடை (5) பேய்ப்புடல் விராகனிடை (20) இவைகளை நிறுத்தெடுத்துப் பொடித்து ஜலத்தில் போட்டுக் காய்ச்சி கஷாயஞ்செய்து அத்துடன் கொஞ்சம் தேன்விட்டு (2) அவுன்சு வீதம் காலை மாலை கொடுத்து வர தீரும்.

சிலேஷ்மசுரத்திற்குக் கியாழம்

செம்முள்ளி	தூதுவளை
சுண்டை	கண்டங்கத்திரி

இவைகளின் வேர்கள் சுக்கு வகைக்கு விராகனிடை (6) நிறுத்தெடுத்துப் பொடித்து (2) படி ஜலத்தில் போட்டு கால்படியாக வற்றக்காய்ச்சி வடித்து அதில் வீசம்படி வீதம் தினம் காலை மாலை இரண்டு தடவை கொடுத்து வர குணமாகும். இச்சாபத்தியம்.

யானைக்கால் சுரத்திற்குக் கியாழம்

சீந்திற்கொடி பலம் (1) கொண்டுவந்து அரைப்படி ஜலத்தில போட்டு கஷாயஞ் செய்து தினம் காலையில் சாப்பிட்டு வர நின்றுவிடும்.

ஊஷ்ண சுரத்திற்குக் கியாழம்

ஒரு அவுன்சு வில்வவேர் பட்டையை ஒரு ஆழாக்கு ஜலத்தில் போட்டு (1/2) ஆழாக்காக வற்றக்காய்ச்சி அரிக்கால் ஆழாக்குவீதம் தினம் (2) தடவை கொடுக்க ஊஷ்ணசுரம் குணமாகும். இச்சாபத்தியம்.

நேத்திரரோகங்கள் 64-க்கும் அஞ்சனம்

சிறுகீரை, பூலா பொன்னாங்காணி இவைகளின் வேர், துத்தம், துரிசி, திப்பிலி, புளியம்பூ இவைகள் வகைக்கு விராகனிடை (5) நிறுத்துச்

சேர்த்து யெலுமிச்சம் பழச்சாற்றால் மைபோலரைத்து நீண்ட மாத்திரைகள் செய்து உலர்த்தி வைத்துக் கொண்டு யெலுமிச்சம் பழச்சாற்றில் உரைத்துக் கண்களில் போட குணமாகும்.

கண்ணெரிவிற்கு
மிளகு அஞ்சனம்

வெள்ளாட்டுப் பிச்சியைக் கொண்டுவந்து அதிலுள்ள நீர் வெளியே போகாமற் படிக்கு மிளகை அதினுள் கொண்ட மட்டும் நிரப்பி வாயைக்கட்டி நிழலில் தூக்கிட்டுக் கட்டிவைத்து மிளகு உலர்ந்தபிறகு யெடுத்து வைத்துக்கொண்டு ஒருமிளகை ஜலம்விட்டு உரைத்து தினம் (2) தடவை கண்ணிலிட குணமாகும். ஆனால் இதை (1) மண்டலம் அல்லது அரைமண்டலம் இடவேண்டும்.

கண்ணோவுக்கு மருந்து

(1 1/2) குண்டுமணியிடை படிகாரத்தை (1) அவுன்சு ஜலத்தில் போட்டுக் கரைத்து குழந்தையின் கண்ணோவுக்கு தினம் தினம் (4-5) தடவை கண்ணிலிட்டு கண்களைக் கழுவவும் அல்லது துணியை மடித்து நனைத்து கண்களின்மேல் போடவும், பெரியவர்களுக்கு அதிகமாய் சீனாகாரத்தைச் சேர்த்துச் கொண்டு ஜலத்தைக் கண்ணிலிட குணமாகும்.

கண்ணோவுக்கு ஒத்தடம்

போஸ்தக்காயும், துத்தியிலையும் ஓர் அளவாக ஜலத்தில் போட்டு காய்ச்சி சுடசுடயெடுத்து ஒத்தடங் கொடுக்க குணமாகும்.

கண்குளிர்ச்சிக்கு மருந்து

சிற்றாமணக்குவேர் பலம் (2) கொண்டுவந்து அரைத்து அரைபடி பசும்பாலில் சேர்த்துக் காய்ச்சி புரைகுத்தி மறுநாள் காலையில் யெடுத்துக் கடைந்து அதில்வரும் வெண்ணெயை யெடுத்து வைத்துக்கொண்டு கண்களில் தீட்டிவர கண்குளிர்ச்சியாகும்.

கண்றெப்பை வீக்கத்திற்கு
ஒத்தடம்

பசும்பாலைக் காய்ச்சி சுடசுட ஒத்தடம் கொடுக்கக் குணமாகும். அல்லது மிளகை ஜலம்விட்டு அரைத்து றெப்பையின் மேல்போட குணமாகும், அல்லது சங்கை கரிவேப்பிலைச் சாற்றால் உரைத்து தடவி வர குணமாகும்.

கண்சிவப்பு பூவிழுதலுக்கு

புளியன்கொட்டைத்தோல், தேற்றாம்விதை, கடுக்காய்த்தோல் வகைக்கு விராகனிடை (1) சேர்த்து மைபோல் அரைத்து துணியில் மூட்டைகட்டி பசும்பாலில் ஊறவைத்து கண்ணில் பிழிந்துவர குணமாகும்.

கண்படலம் 7-க்கும் பத்து

(1) பலம் வெள்ளைப்பூண்டை பசுவின் மூத்திரத்தில் அரைத்து இராத்திரியில் படுக்கைக்குப் போகும் பொழுது சிரசின் மேல் (7) நாள் பத்துபோட குணமாகும். ஆனால் பெருங்காயத்தை நீக்கி இச்சாபத்தியமாக யிருக்கவேண்டும்.

வேறுமுறை அஞ்சனம்

சமுத்திரத்திலுள்ள ஆமைஒட்டை ஜலத்தில்போட்டு வேகவைத்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு பிறகு முலைப்பாலில் உரைத்து கண்ணிலிட குணமாகும்.

கர்னரோகங்களுக்கு தைலங்கள்

நிலப்பனங்கிழங்கைக் கொண்டுவந்து (5) விராகனிடை நிறுத்தெடுத்து அரைத்து அரைப்படி நல்லெண்ணெயில் சேர்த்து அடுப்பேற்றி யெரித்து வடித்து ஸ்நானஞ் செய்து வர குணமாகும் பகல் நித்திரை நீக்கவும், இப்படி ஸ்நானஞ்செய்து வர கர்னநோய் (25 ம்) தீரும். கர்னரோகமென்பது காது நோய்.

காதுநோயிற்கு முசுறுமுட்டை யெண்ணெய்

குங்கிலியம்	கோழிமுட்டை மஞ்சட்கரு
வசம்பு	வெள்ளைப்பூண்டு
பூவரசன்காய்	கண்டிரைச்சி
முசுறுமுட்டை	

இவைகள் வ்கைக்கு .விராகனிடை (2) சிதைத்து கால்படி வேப்பெண்ணெயிற் சேர்த்து அடுப்பேற்றி யெரித்து வடித்து (4-5) துளிகள் விட குணமாகும், முசுறுமுட்டை யென்பது ஓர்வித யெரிம்பின் முட்டை கடையில் கிடைக்கும்.

இதுவுமது

வெங்காயம்	விராகனிடை	2
வசம்பு	விராகனிடை	2
மஞ்சள்	விராகனிடை	4

இவைகளை பொடித்து ஒருபடி வேப்பெண்ணெயில் கரைத்து அடுப்பேற்றி யெரித்து வடித்து வைத்துக் கொண்டு (4-5) துளி காதில் விட்டு வர காதுரோகங்கள் தீரும்.

காதில்வரும் சீழ்நிற்க யெண்ணெய்

ஒருசேர் வேப்பெண்ணெயில் வசம்பு வெள்ளைப்பூண்டு பெருங்காயம் வகைக்கு விராகனிடை (1) சூரணித்துப் போட்டு அடுப்பேற்றி யெரித்து வடித்து வைத்துக்கொண்டு காதில் (5-6) துளிவிட்டு வர காதில்வரும் சீழ்நிற்கும் குணமாகும்.

இதுவுமது

ஒருசேர் வேப்பெண்ணெயில் கால்சேர் வில்வப்பழச்சதையைப் போட்டு அடுப்பேற்றி யெரித்து வடித்து வைத்துக் கொண்டு வேளையொன்றுக்கு (4-5) துளிவிட குணமாகும்.

காதுஇரைச்சல் தீர எண்ணெய்

2 1/2- அவுன்சு நல்லெண்ணையில் 2-அவுன்சு தைவேளைச் சாரைச்சேர்த்து அடுப்பேற்றி யெரித்து வடித்து காதில் 5-6 துளிவிட்டு வர காதிரைச்சல் தீரும்.

இதுவுமது

முசுமுசுக்கையிலைச்சாறு படி (அரிக்கால்) நல்லெண்ணை படி (அரிக்கால்) இவை ரெண்டையுஞ் சேர்த்து அதில் வெள்ளைப்பூண்டு விராகனிடை 3, எடுத்து மேற்படி சாற்றாலரைத்துக் கரைத்து அடுப்பேற்றி யெரித்து வடித்து வைத்துக் கொண்டு காதில்விட்டு வர இரைச்சல் நிற்கும்.

காதுமந்தம் தீர இஞ்சிச்சாறு

முக்காலரிக்கா விராகனிடை இஞ்சிச்சாறும், ஒரு விராகனிடை குதிரைலெத்திச் சாறும், இவைரெண்டும் சேர்த்து 4-5 துளிவிட்டு வர காதுமந்தம் தீரும்.

இதுவுமது

2- அவுன்சு புங்கம் யெண்ணையில் இரண்டே முக்கால் விராகனிடை பன்றிமுள்ளைச் சிதைத்துப் போட்டு அடுப்பேற்றி யெரித்து வடித்து வைத்துக்கொண்டு அதை காதில் விட்டு பஞ்சால் அடைத்து (4) நாள்வரையில் காற்றுப் புகாமல் வைத்து இருக்கக் குணமாகும்.

காதுப் புழுவுவிழ

முருங்கையிலைச்சாறு -3 - அவுன்சு, நல்லெண்ணை -4 - அவுன்சு இவைரெண்டுஞ் சேர்த்து அடுப்பேற்றி யெரித்து வடித்து வைத்துக் கொண்டு காதில்விட்டு வர குணமாகும். புழு வெளியாகும்.

காதுயெகுட்சிதீர

ஒரு அவுன்சு நல்லெண்ணெயில் கிலுகிலுப்பை வேர் (1/2) அவுன்சு அரைத்துப் போட்டு அடுப்பேற்றி யெரித்து வடித்து வைத்துக்கொண்டு 5-6-துளி காதில் விட்டு வர காதுயெகுட்சி குணமாகும்.

காதுவலிதீர

அபினிப்பாவன திராவகமும் தேங்காயெண்ணெயும் சமனிடையாய்ச் சேர்த்து வைத்துக் கொண்டு (5-6) துளிகாதில் விட்டுவர குணமாகும்.

சிரேரோகங்களுக்கு வைத்தியம்

ஒற்றைத்தலைநோய்தீர தைலம்

இஞ்சிச்சாறும், நல்லெண்ணையும் வகைக்கு அவுன்சு (4) சேர்த்து அடுப்பேற்றி யெரித்து வடித்து ஸ்நானஞ் செய்து வர ஒற்றைத்தலைநோய் தீரும்.

இருபக்கத் தலைநோய் தீர தைலம்

பேய்ப்புடல் சாறும் நல்லெண்ணையும் வகைக்கு சேர் (1) சேர்த்து அடுப்பேற்றி யெரித்து வடித்து வைத்துக் கொண்டு ஸ்நானஞ் செய்து வர குணமாகும்.

நீர்கொண்ட மண்டையிடிக்கு புகை

கர்ப்பூரம், மிளகு, சதகுப்பை, கடுகு, திப்பிலி, மஞ்சள் மரமஞ்சள் வகைக்கு விராகனிடை (1) நிறுத்து யெடுத்து குன்றிமணியிலைச்

சாற்றால் மை போல் அரைத்து மல்துணியில் தடவித் திரியாக்கி உலர்த்தி கொளுத்தி அதில் வரும்புகையை நாசியில் பிடிக்க மண்டைநோய் தீரும்.

கபாலவாயுவிற்குத் தைலம்

குப்பைமேனிச்சாறு படி (1 1/2) நல்லெண்ணெய்படி (2) இவை ரெண்டுஞ் சேர்த்து அடுப்பேற்றி யெரித்து வடித்து ஸ்நானஞ்செய்து வர குணமாகும்.

கபாலவாய்வுக்குப் புகை

நெருக்கன்வேர் விராகனிடை (2 1/2) அரிதாரம் (2 1/2) இவை ரெண்டையுஞ் சேர்த்து யெலுமிச்சம்பழச்சார் விட்டு மைபோலரைத்து மல்துணியில் தடவித் திரியாக்கி உலர்த்தி கொளித்தி அதில்வரும புகையை நாசியில் பிடிக்க கபாலவாய்வு கபால வலி மண்டையிடி ஒற்றைத் தலைவலி இவைகள் தீரும்.

சுவாசகாசம் க்ஷயம் இருமல் இவைகளுக்கு வைத்தியம்

காசம் - 96 - க்கும் சூரணம்

திப்பிலி	பலம்	5	மிளகு	பலம்	2 1/2
சுக்கு	பலம்	2 1/2	சோம்பு	பலம்	1/2
குரோசானிஓமம்	பலம்	1/2	சீரகம்	பலம்	1/2
தும்மராஷ்டகம்	பலம்	1/2	சன்னராஷ்டகம்	பலம்	1/2
தாளிசப்பத்திரி	பலம்	1/2	லவங்கப்பத்திரி	பலம்	1/2
லவங்கப்பட்டை	பலம்	1/2	கடுக்காய்	பலம்	1/2
தானிக்காய்	பலம்	1/2	நெல்லிமுள்ளி	பலம்	1/2
லவங்கம்	பலம்	1/2	ஏலம்	பலம்	1/2
சித்திரமூலம்	பலம்	1/2			

இவைகளை நிறுத்து யெடுத்து இளம்வருப்பாய் வறுத்துச் சூரணித்து வஸ்திரத்தில் வைத்து அத்துடன் சீனிவேர் (2) சேர்த்து தேன்விட்டுப் பிசைந்து வைத்துக் கொண்டு தினம் காலை மாலை யிருவேளையும் கொட்டைப்பாக்குப் பிரமாணம் சாப்பிட்டு வர காசம் முதலிய (96) கபரோகங்களும் தீரும் இச்சாபத்தியம்.

சுவாசகாசத்திற்குப் புகை

ஒரு விராகனிடை பொட்டிலுப்பை (1)படி ஜலத்தில் கரைத்து அதில் ஒருதளமான கடுதாசியைத் தோய்த்து கொஞ்சம் நேரம் ஊறவைத்துப் பின்பு காற்றில் உலர்த்தி ஒரு பீங்கானில் வைத்துக் கொளுத்தி அதில் வரும் புகையை உட்கொண்டால் உடனே குணமாகும்.

காசம்- 5- க்கும் எண்ணெய்

யானையின் நகத்தைக் கொண்டுவந்து கத்தியால் சீவி ஒரு விராகனிடை யெடுத்தி ஒருசேர் வேப்பெண்ணையைக் காய்ச்சி அதில் சீவின நகத்தைப்போட்டுக் கரிசிப்போகாமல் பதத்தில் யிறக்கி வடித்து வைத்துக் கொண்டு ஒரு விராகனிடை வீதம் சாப்பிட்டு வர காசந்தீரும். இச்சாபத்தியம்.

இதுவுமது

குன்றிமணியிடை தங்கரேக்கை கொண்டுவந்து போஜனஞ் செய்யும்போது முதல் அன்னத்தில் மேல்பேட்டு நெய்யைக் காய்ச்சி அதின்மேல் விட்டு பிசைந்து சாப்பிட்டுவிட்டு பிறகு பத்தியமாக வழக்கப்படிச் சாப்பிட்டுவர காசந்தீரும்.

ரத்தகாசம்தீரப் பால்

முக்கால் விராகனிடை படிகாரத்தை (8) அவுன்சு பசும்பாலில் போட்டுக் காய்ச்சி ஆறினபின் அரை அவுன்சு வீதம் தினம் (3) தடவை கொடுக்க ரத்தகாசம் குணமாகும்.

இருமலுக்கு மிளகு சூரணம்

ஒருகுமட்டிக்காயைக் கொண்டுவந்து அதற்கு ஒரு சிறு துவாரஞ் செய்து அதில் மிளகைச் செலுத்தி நிழலிலுலர்த்தி யெடுத்த மிளகில் ஒருதடவைக்கு (7) மிளகை சூரணித்து அத்துடன் தேன் திப்பிலித்தூள் இவைகளைச் சேர்த்துச் சாப்பிட்டு வர குணமாகும் இருமல் நிற்கும்.

இதுவுமது

குன்றுமணியில் கருப்பு சிவப்பு வெள்ளையென 3-விதங்களுண்டு, அதிலொன்றைக் கொண்டு வந்து அந்த யிலையை உலர்த்தி சூரணித்து அத்துடன் சர்க்கரை சேர்த்து தினம் திரிகடி வீதம் சாப்பிட்டு வர இருமல் தீரும்.

கிரகணிரோகம் -11-க்கும் வைத்தியம்
கிரகணி-11ந்தீர மாத்திரை

மாதுளம்பிஞ்சி, ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி, கருவாப்பிசின் காந்தம், கல்மதம், லிங்கம் இந்த (7) தினுசும் வகைக்குப் பலம் -1, நிறுத்தெடுத்து சுத்திசெய்து சேர்த்துக் கல்வத்தில் போட்டு அத்திப்பால்விட்டு (2) ஜாமம் அரைத்த குன்றிமணி அளவாக மாத்திரைகளாக்கி நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு தினம் (2-3) தடவை ஒரு மாத்திரை வீதம் வெல்லத்தில் கொடுத்து வர குணமாகும்.

வாய்வுகிரகணி ஊஷ்ண பேதிக்கு சூரணம்

நூறுவருஷஞ் சென்ற வேப்பமரத்தின் பட்டை வெட்டி உலர்த்தி விராகனிடை -25, மிளகு விராகனிடை 12½, இவை ரெண்டுஞ் சேர்த்துச் சூரணித்து அத்துடன் சர்க்கரை விராகனிடை (பதினெட்டேமுக்கால்) சேர்த்து வைத்துக் கொண்டு 2 விராகனிடை வீதம் (7) நாள் சாப்பிடக் குணமாகும்.

வாதபித்த சிலேஷ்ம கிராணிகளுக்கு அடை

ஒருபலம் சீரகத்தை ஒருபலம் கொட்டாங் கரந்தையுடன் சேர்த்து மைபோலரைத்து சிறுவடைகளாகத் தட்டி நல்லெண்ணெயில் வறுத்து தினம் ஒருவடை சாப்பிட குணமாகும், இச்சாபத்தியம்.

வயறுகடுப்புத்தீர சூரணம்

சீரகம் விராகனிடை-1, வெங்காயம் விராகனிடை -2, கற்கடகசிங்கி விராகனிடை -4, இவைகளை இளம்வறுப்பாய் வறுத்து சூரணித்து வைத்துக்கொண்டு திருகடிகை வீதம் யெருமைத்தயிரில் கொடுக்கத் தீரும்.

வயறுகடுப்பில் வேறு முறை

(7) பலம் சீரகத்தை இளம்வறுப்பாய் வறுத்து சூரணித்து ஒருபலம் சீனாகற்கண்டுப் பொடியை சேர்த்து வைத்துக் கொண்டு தினம் (3) விராகனிடைவீதம் பசும் நெய்யில் சாப்பிட்டு வர குணமாகும்.

வயறுகடுப்பிற்கு வேறு முறை

ஒருபலம் ஒருதலை வெள்ளைப்பூண்டைக் கொண்டு வந்து அதற்கு கரிஉப்பை அரைத்து கவசஞ்செய்து உமிக்காந்தலில் வெதுப்பி பருப்பையெடுத்து அரைத்துத் தயிரில் கொடுக்கக் குணமாகும்.

வயறுகடுப்பிற்கு வேறுமுறை

வெங்காயம் விராகனிடை (1) சீரகம் விராகனிடை (½) கற்கடகசிங்கி விராகனிடை (½) இவைகளை இளம் வறுப்பாய் வறுத்து சூரணித்து யெருமைத்தயிரில் கொடுக்கத்தீரும்.

மூலக்கடுப்பிற்குச் சூரணம்

வெந்தியம், நெல்லிவற்றல், சுண்டக்காய்வற்றல், மாம்பருப்பு, கருவேப்பிலை, ஓமம் மாதுளம் பழத்தோல் வகைக்கு விராகனிடை ஒண்ணுயெடுத்து இளம்வறுப்பாய் வறுத்துச் சூரணித்து வைத்துக் கொண்டு தினம் (3) விராகனிடை வீதம் தயிரில் கொடுக்கக் குணமாகும்.

சகல கழிச்சலுக்கும் கஷாயம்

புளியாரை, வாழைப்பூ வகைக்கு (4) அவுன்சு யெடுத்து பிட்டவிழ்த்துப் பிழிந்தசாற்றில் தேன் (10) துளிவிட்டுக் கொடுக்க சகல கழிச்சலும் நிற்கும்.

அதிசாரரோகங்களுக்கு வைத்தியம்
அதிசாரம் 6-க்கும் சூரணம்

ஓமத்தின் அரிசியும் காட்டாத்திப்பூவும் வகைக்கு விராகனிடை-10,எடுத்து சூரணித்து தேனில் கலந்து கொடுக்க உடனே தீரும்.

சுரமில்லாத அதிசாரத்திற்கு சூரணம்

காசிக்கட்டி விராகனிடை காலும், கருவாப்பட்டை விராகனிடை காலும் எடுத்து சூரணித்து தேனில் கலந்து கொடுக்க உடனே தீரும்.

அதிசார சீதபேதிக்கு மாத்திரை

ஜாதிக்காய்	விராகன் 1	ஜாதிப்பத்திரி	விராகன் 1
மாசிக்காய்	விராகன் 1	கடுக்காப்பூ	விராகன் 1
சீரகம்	விராகன் 1	அதிவிடையம்	விராகன் 1
லவங்கப்பூ	விராகன் 1	அபினி	விராகன் 1
வெந்தயம்	விராகன் 1	கசகசா	விராகன் 1
கோரோஜனம்	விராகன் 1		

இந்த பதினொரு தினுசையும் கல்வத்தில் போட்டு முலைப்பால்விட்டு அரைத்து உளுந்துப் பிரமாணம் மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொண்டு பெரியவர்களுக்கு (2) மாத்திரையும், குழந்தைகளுக்கு (½) முதல் (1) மாத்திரையும் தேனிலுரைத்துக் கொடுக்க குணமாகும். இச்சாபத்தியம்.

அஜீரணபேதிக்கு கஷாயம்

(2) விராகனிடை ஓமம், ஒருபிடி பெரண்டையும் சேர்த்தரைத்து ½-படி ஜலத்தில் போட்டு ஆழாக்குபடியாய் வற்றக் காய்ச்சிக் கொடுக்கக் குணமாகும், பேதிநிற்கும்.

சீதபேதி ரோகங்களுக்கு வைத்தியம்

சுக்கு	பலம்	1
கிராம்பு	விராகனிடை	1
கண்டத்திப்பிலி		1

இவை மூன்றையுங் கல்வத்தில்போட்டு எருமைத் தயிர்விட்டு மைபோலரைத்து சுத்தமான சிறுதுணிகளில் கொஞ்சம் கொஞ்சமாகவைத்து முடித்து ஒரு சட்டியில் ½ -படி எருமைமோர் விட்டு அதில் மேற்படி முடிச்சிகளெல்லாம் போட்டு அடுப்பேற்றி எரிக்க அவைகள் வெந்து மேலே மிதக்கும் அப்போது யெடுத்து அத்துடன் 3, விராகனிடை தேனும் 5-விராகனிடை நெய்யுஞ் சேர்த்து வைத்துக் கொண்டு பாக்களவு கொடுத்து வர சீதபேதி நிற்கும்.

சீதபேதிக்கு மாத்திரை

2½ -விராகனிடை ஜாதிக்காயைச் சீலைமண் செய்து (2) யெருவில் புடம்போட்டு யெடுத்து நெய்யும் தேனுஞ்சேர்த்து கல்வத்திலிட்டு அரைத்து பாசிபயர் பிரமாணம் மாத்திரைகள் செய்து உலர்த்தி வைத்துக் கொண்டு வேளைக்கு ஒரு மாத்திரைவீதம் முலைப்பாலிலிழைத்து காலை மாலை யிருவேளையுங் கொடுத்து வர சீதபேதி தீரும், தீபனம் ரத்தவிர்த்தி யுண்டாகும், இச்சாபத்தியம்.

குழந்தைகளுக்கு வேறுமுறை

மாம்பருப்பும், கருவேப்பிலையும் சமமாகச் சேர்த்தரைத்து பிழந்த ரசத்தில் (1) விராகனிடை கொடுக்க வேண்டும் ஆனால் 4- மணிக்கு ஒருவிசை கொடுக்க வேண்டும் அப்படி கொடுத்து வரக் குணமாகும்.

பெரியவர்களுக்கு வேறுமுறை

கடுக்காப்பூ	விராகனிடை	4
வெங்காயம்	விராகனிடை	4
சீரகம்	விராகனிடை	1

இவைகளை வெதுப்பி அரைத்து எருமைத்தயிரில் கரைத்துக் கொடுக்கக் குணமாகும்.

குழந்தைகளுக்கு வேறுமுறை

மாசிக்காய் தேரினதாய்-1, கொண்டுவந்து நொறுக்கி நெய்யில் வறுத்து சூரணித்து (2½) குன்றிமணி யெடை தேனில் கொடுக்கக் குணமாகும்.

பல்-நாக்கு-வாய்-ரோகங்களுக்கு வைத்தியம் உண்ணாக்கு வளர்த்தியால் காணும் இருமல் 2-3 வேளையில் தீரும்.

நவாக்ஷாரத்தை தூள்செய்து உண்ணாக்கின் பேரில் தடவ உண்ணாக்கு வளர்ந்து காணும் இருமல் தீரும்.

இதுவுமது

நவாக்ஷாரமும் கல்சுண்ணாம்பும் சமமாகச் சேர்த்து யெலுமிச்சம்பழச் சார்விட்டரைத்து உண்ணாக்கில் தடவ குணமாகும்.

ரிணவாடை பிடிக்கு கொப்பளிக்கும் கியாழம்

கருவேலம்பட்டையைக் கொண்டுவந்து சிதைத்து ஜலத்தில்போட்டுக் காய்ச்சின கஷாயத்தில் வாயைக் கொப்பளித்து வரக்குணமாகும்.

தொண்டை கரகரப்பிற்கு சூரணம்

ஒருவிராகனிடை மஞ்சனை தூள்செய்து கால்படி பசும் பாலில்போட்டுக் காய்ச்சி சாப்பிடக் கரகரப்புத்தீரும்.

இதுவுமது

முக்காவேளைவேர் விராகனிடை (¼) முசுமுசுக்கைவேர் விராகனிடை (1) இவைகளைப் பொடித்துக் கால்படி பசம்பாலில் போட்டுக் காய்ச்சிக் கொடுக்கக் கரகரப்புத்தீரும்.

சுண்ணாம்பைத் தின்ன வாய்ரிணத்திற்குக் கியாழம்

மஞ்சளை யரைத்து ரணத்தின்மேல் தடவி ஒரு நிமிஷம் வைத்திருந்து பிறகு வாயை ஜலம் வார்த்துக் கொப்பளிக்க இவ்விதமாய் தினம் (3-4) தடவை செய்ய ரிணம் ஆறும்.

நெஞ்சு ரிணத்திற்குக் கியாழம்

படிகாரம் ஒண்ணேமுக்கால் விராகனிடை மாசிக்காய் கஷாயம் (18) அவுன்சு, தேன் ஒண்ணெமுக்கால் விராகனிடை இவைகளைச் சேர்த்துக் கலந்து வாய் கொப்பளிக்க நெஞ்சுப் புண் ஆறும்.

தொண்டை கம்மலுக்கு

கடலைப்பிரமாணம் காசிக்கட்டியை வாயிலடக்கி வைத்துக்கொண்டு ரசத்தை முழுங்க கம்மல் தீரும்.

தொண்டை நோயிற்கு கியாழம்

(1½) விராகனிடை மிளகாய் தூளும் (4) அவுன்சு ரோஜாப்பூக் கஷாயமும் இவைகளைச் சேர்த்து வாயைக் கொப்பளிக்க குணமாகும்.

வாய்ரிணத்திற்கு கஷாயம்

படிகாரம் விராகனிடை (2) ஜலம் சேர் (1) தேன் விராகனிடை (2) இவைகளைச் சேர்த்து வாயைக் கொப்பளித்து விழிய வாய்ரிணம் அதிசீக்கிரத்தில் ஆறும் அல்லது கருவேலன் பட்டை கஷாயத்தையும் கொப்பளிக்க வாய்ரிணம் ஆறும்.

தந்தவாயுக்குப்பொடி

ஒரு சிறுகலையத்தில் கரியுப்பு (4) அவுன்சு செங்கொட்டை (8) அவுன்சு நரிக்கி குடுவையில்போட்டு அதின்மேல் ஒருவிரற் கடை உயரம் எருக்கன் பால்விட்டு ஓட்டால்மூடி சீலைமண் செய்து ஒருபலம் யிடையில் (30) எருவால் புடம் போட்டு யெடுத்துச் சூரணித்து வைத்துக் கொண்டு பல் துலக்கிக் கொண்டுவந்தால் தந்தவாய்வைக் கண்டிக்கும். பற்கள் கருக்காது இதுமெத்த நல்லமருந்து.

மேற்படி வாய்விற்கு வேறுமுறை

எருக்கன்பழுப்பு சேர் (2) பழங்கொட்டை பருப்பு செங்கொட்டைப் பருப்பு செங்கொட்டை கொட்டை பாக்கு வகைக்கு (7) கரிவுப்புப்படி (¼) இலுப்பையிலைசேர் (12) களிப்பாக்குபலம் (2½)

இவைகளைத் தனித்தனியே கருகிய நிறமாக வறுத்து அத்துடன் காசிக்கட்டி துருசு வகைக்குப் (பலம்) (1¼) சேர்த்துச் சூரணித்துப் பல்விளக்க குணமாகும்.

பல்பூச்சிகள் விழ மேல்பூசும் எண்ணெய்

உமிக்காந்தலில் (50) கண்டங்கத்திரிப் பழத்தைக் கரிசிப்போகாமல் கட்ட கல்வத்திலிட்டு பாகல் இலைச்சார்விட்டு மைபோலரைத்து அரைசேர் நல்லெண்ணையில் கரைத்து (8) நாள் சூரியபுடம் வைத்து யெடுத்து வடித்து வைத்துக் கொண்டு தினம் காலையில் (½) அவுன்சு கொடுத்து வர குணமாகும். இச்சாபத்தியம்.

பச்சை தாவரவர்க்க சூரக்கா வைத்தியங்கள்

குப்பைமேனி உபயோகம்

குப்பைமேனியிலையைக் கொண்டு வந்து உலர்த்தி சூரணித்து வைத்துக் கொண்டு அதில் அரைவிராகனிடை சர்க்கரைச் சேர்த்து வீசம் ஆழாக்கு ஜலத்தில் கலக்கிக் கொடுக்க வயிற்றிலுள்ள கிருமிகள் வெளியாகும். இதின் வேரை சூரணித்துக் கொடுக்க மலம் நன்றாகக் கழியும் இதின் யிலையைப் பச்சையாகக் கொண்டுவந்து ஒரு பாலடை ரசம் பிழிந்து அத்துடன் அரைபாலடை வேப்பெண்ணெய் சேர்த்து வைத்துக் கொண்டு குழந்தையின் நாக்கில் தடவ குமட்டலும் உண்டாகி கபத்தை வெளியாக்கும்.

சிவதைவேர் உபயோகம்

சிவதைவேரின் பட்டையைக் கொண்டுவந்து அரைத்து அதில் பாக்களவு யெடுத்து பசும்பாலில் கரைத்துக் கொடுக்க பேதியாகும். இத்துடன் திராட்சி உப்பு பலம் விராகனிடை சேர்த்துக் கொடுப்பது மிகநன்று

சீமை அகத்தியிலையின் உபயோகம்

சீமை அகத்தியிலையைக் கொண்டுவந்து சார்பிழிந்து அத்துடன் தேங்காய்ப்பால் சமமாகச் சேர்த்து சொரி சிரங்குகளுக்கு மேல்பூச சொரியோடு நமச்சல் தீரும், ஆனால் விடாமல் 4-5 தினத்திற்குப் பூசிக் குளித்து வரவேண்டும்.

சீக்காய்க் கொழுந்தின் உபயோகம்

சீக்காய்க் கொழுந்தைக் கொண்டுவந்து அதற்கு திட்டமாக காய்ந்த மிளகாயும், புளியும், உப்பும் திட்டமாக வைத்துத் துவையல் செய்து

காலை மாலை யிருவேளையும் (20) நாள் சாப்பிட பித்தத்தை சாந்தியாக்கும் போஜனத்தோடும் உபயோகிக்கலாம் காயை துவையல் செய்து சாப்பிட பேதியாகும்.

சுருள்பட்டையின் உபயோகம்

சுருள்பட்டை பலம் (2) கொண்டுவந்து அரைத்து அத்துடன் தேங்காய் நெய் பலம் (1) சேர்த்துக் காய்ச்சி வடித்து வைத்துக்கொண்டு ரணங்களுக்கு தடவி வர உடனே உலரும் ஆனால் ஆறும் வரைக்கும் தடவவும்.

கீழாநெல்லி உபயோகம்

கீழாநெல்லி யிலையைக் கொண்டுவந்து சாறுபிழிந்து (½) பலம் யெடுத்து பசும்பாலில் சேர்த்துக் காலை மாலை இருவேளையுஞ் சாப்பிட மஞ்சள் காமாலை தீரும். சாப்பிட்டு வரும் மூன்று நாளும் கடும்பத்தியமாக யிருக்கவேண்டும். இதின்யிலையை உலர்த்தி தூள்செய்து திருகடிகைப் பிரமாணம் பசும்பாலில் கலந்துக்கொடுக்க பசிதீவனையுண்டாகும், இதின் துளிரும் வெந்தயமும் சமனிடையாகச் சேர்த்து கால்படி ஜலத்தில் போட்டு அரிக்கால்படியாய் வற்றக் காய்ச்சிக் கொடுக்க வயர் கொட்டால் தீரும் இச்சாபத்தியம்.

தகரைவேரின் உபயோகம்

(2) பலம் தகரவேரைக் கொண்டுவந்து எலுமிச்சம்பழச்சார்விட்டு அரைத்து படர்தாமரைக்கு மேல் பூசிவர தீரும். இதின் விரையை அரைத்து மோரில் கலக்கி சொரி கிரங்குகளுக்குப் பூசிவர குணமாகும்.

திருநீற்றுப் பச்சையின் உபயோகம்

திருநீற்றுப் பச்சிலையைக் கொண்டு வந்து ஜலம்விட்டு அரைத்துக் கொட்டைப் பாக்களவு கொடுக்க மேகம் இருமல், வயறு கொட்டல் இவைகள் தீரும். இச்சாபத்தியம் இதின்சாறு காதில் விட காதுவலி தீரும்.

ஆகாயத் தாமரையின் உபயோகம்

ஆகாயத் தாமரை ஒருபிடி யெடுத்து அரைபடி ஜலத்தில் போட்டு கால்படியாய் வற்றக்காய்ச்சி (3) நாள் கொடுக்க நீர் சுருக்குத்தீரும் இலையையரைத்து மூலத்துக்குத் தடவ மூலம் தீரும்.

ஆடுதின்னாப்பாளை யிலையின் உபயோகம்

ஆடுதின்னாப்பாளை யிலையைக் கொண்டுவந்து சார்பிழிந்து அதற்குச் சமநிடையாக நல்லெண்ணெய் சேர்த்து வைத்துக்கொண்டு கருங்குஷ்டம், கரப்பான், சிரங்கு, சிலந்தி இவைகள் மேல் பூசிவர தீரும்.

எள்ளின் உபயோகம்

எள்ளையாவது யெள்ளு யிலையையாவது அரைத்து கால்முள்ளு தைத்தயிடங்களில் வைத்துக்கட்ட முள்ளை வெளிப்படுத்தும் எள்ளெண்ணெய் அப்பட்டமாகக் கொண்டுவந்து வைத்துக்கொண்டு தினம் உச்சிக்கரண்டி வீதம் சாப்பிட்டு வரயிருமல் சொரி சிரங்கு தீரும் தேகம் பூரிக்கும்.

கஞ்சாங்கோரை யிலையின் உபயோகம்

கஞ்சாங்கோரை யிலையைக் கொண்டுவந்து கசக்கிச் சார் பிழிந்து குழந்தைகளுக்கு *(1)* பாலடைகொடுக்க சுரம்மாந்தம் பேதி இருமல் இவைகள் தீரும்.

கருநொச்சி யிலையின் உபயோகம்+

ஒருபடி கருநொச்சியிலையைக் கொண்டுவந்து அரைபடி ஜலத்தில்போட்டு கால்படியாய் வற்றக் காய்ச்சிக் கொடுக்க சுரம் தீரும். இலையும் உப்பும் சேர்த்து வறுத்து மூட்டு வலிகளுக்கு ஒத்தடம் கொடுக்கத்தீரும். இலைச்சாறும் யெண்ணையுஞ் சேர்த்து வீக்கங்களுக்குத் தடவிவர குணமாகும்.

கர்ப்பூரவள்ளியிலையின் உபயோகம்

கர்ப்பூரவள்ளியிலையைக் கொண்டு வந்து அரை பாலடை ரசம்பிழிந்து அதில் *(2-3)* உரை கோரோஜன மாத்திரையை உரைத்துக் கொடுக்க குழந்தைகளின் ஜலுப்பு, இருமல் இவைகள் தீரும்.

காக்கட்டான் வித்தின் உபயோகம்

காக்கட்டான் விதையைக் கொண்டுவந்து நெய்யால் வறுத்துப் பொடித்து ஒரு விராகனிடை வீதங் கொடுக்க பேதியாகும், இதின் வேரை சூரணித்து அரை விராகனிடை குழந்தைகளுக்குக் கொடுக்க வோக்காளம், வாந்திகாணும், கபத்தை வெளியாக்கும் ஆனால் இதில் வெள்ளை நீலம் என இரண்டுவிதங்களுண்டு அதில் வெள்ளை சிரேஷ்டமென்று அறியவும்.

நிலவிளாம், நரிவிளாம், குட்டிவிளாம் இலையின் உபயோகம்

இதில் யேதேனு மொன்றில் அரைபிடி யிலையைக் கொண்டுவந்து கால்படி ஜலத்தில்போட்டு அரிக்கால் படியாய் வற்றக் காய்ச்சிக் கொடுக்க சுரம், பித்தம், அதிசாரம் இவைகள் தீரும், இச்சாபத்தியம்.

சிறுநெருஞ்சி சமூலத்தின் உபயோகம்

(2) பலம் சிறுநெரிஞ்சி சமூலங்கொண்டு வந்து (½) படி ஜலத்தில்போட்டு கால்படியாக வற்றக்காய்ச்சி வடித்து சர்க்கரைசேர்த்து காலையில் மூன்றுநாள் கொடுத்துவர நீர் யெரிவு சீழ்மேகம் இவைகள் தீரும், இச்சாபத்தியம்.

ஆனைநெரிஞ்சின் உபயோகம்

ஆனைநெரிஞ்சிச் சமூலங்கொண்டு வந்து அரைத்து கொட்டைப் பாக்களவு யெருமைத்தயிரில் கலக்கி (3) நாள் காலையில் கொடுத்து வர மயக்கம், தாகம், வெள்ளை, வெண்குஷ்டம், தேகயெரிவு இவைகள் தீரும்.

பிரண்டை சமூலத்தின் உபயோகம்

பிரண்டையைக் கொண்டு வந்து கணுவைப்போக்கி (2) பலமெடுத்து அரைத்து தினம் பாக்களவு எட்டுநாளைக்குக் கொடுத்துவர ஆசன தினவுரத்தமூலம் தீரும்.

பூவரசன் பட்டை உபயோகம்

பூவரசன் பட்டையைக் கொண்டுவந்து ஜலம்விட்டு அரைத்து பாக்களவு நீராகாரத்தில் கலக்கிக் கொடுக்க பேதியாக சொரிசிரங்கு தீரும், இதின் காயின் ரசத்தை எச்சத்தழும்பின் மேல் ஊரல் அடங்கும்படி தேய்த்துவர குணமாகும்.

பொடுதலைசமூலத்தின் உபயோகம்

ஒருபலம் பொடுதலை யிலையைக் கொண்டுவந்து ஆழாக்கு ஜலத்தில் போட்டு அரை ஆழாக்காய் வற்றக்காய்ச்சி குழந்தைகளுக்கு ஒரு பாலாடை வீதங் கொடுக்க மாந்தம், சுரம் இவைகள் தீரும்.

வல்லாரை சமூலத்தின் உபயோகம்

வல்லாரை யிலையைக் கொண்டு வந்து நிழலில் உலர்த்தி சூரணித்து வைத்துக் கொண்டு (¼) விராகனிடை வீதம் ஜலத்தில்

கலக்கி காலை மாலை கொடுத்துவர திரேக சௌக்கிய முண்டாகும் இதின் தூளை ரணத்தின் மேல் தூவினால், ரணம் ஆறும்.

விஷ்ணுகிரந்தியின் உபயோகம்

விஷ்ணுகிரந்தியிலை ஒருபலம் கொண்டுவந்து அரைப்படி ஜலத்தில் போட்டு கால்படியாக வற்றக்காய்ச்சி (3) நாள் காலையில் கொடுத்து வர சுரம் இருமல் இவைகள் தீரும்.

வெட்டிவேரின் உபயோகம்

அரைபலம் வெட்டிவேர் கொண்டுவந்து கால்படி ஜலத்தில் போட்டு அரிக்கால்படியாய் வற்றக்காய்ச்சிக் கொடுத்து வர தாகசுரம், வாதரோகம் இவைகள் தீரும்.

வெண்டயிலையின் உபயோகம்

வெண்டயிலையைக் கொண்டுவந்து ஜலம்விட்டு அரைத்து போஷ்டு செய்து கட்டிகளுக்குக் கட்டலாம், இதில்விதையைக் கஞ்சிக்காய்ச்சிக் கொடுக்க இருமல் நீர்யெரிவு மலக்கட்டு இவைகள் தீரும்.

அம்மான்பச்சரிசி சமூலத்தின் உபயோகம்

அம்மான்பச்சரிசியில் வெள்ளை சிகப்புயென இரண்டு விதமுண்டு இதில் வெள்ளையைக் கொண்டுவந்து ஜலம்விட்டரைத்துப் பாக்களவு காலையில் (3) நாள்சாப்பிட்டு வர தேகத்தடிப்பு, எரிப்பு, புண், பிரமேகம், மலக்கட்டு இவைகள் தீரும். சிகப்பை இவ்விதமாகச் சாப்பட்டுவர சுக்கிலத்தை விர்த்தியாக்கும் பிரமேகத்தை நீக்கும், இச்சாபத்தியம்.

கற்றாழைசோரின் உபயோகம்

கற்றாழைமடலைக் கொண்டுவந்து அதின் உள்ளிருக்குஞ் சோற்றையெடுத்துக் கழுவி (2) பலம் எடுத்து அத்துடன் கால் விராகனிடை படிகாரத் தூளைச் சேர்த்து துணியில் மூட்டைகட்டி கண்ணோவுக்கு ஒத்தடங்கொடுக்க கண்ணோவு தீரும் வீக்கங்களுக்குக் கட்டகரையும்.

விலாரியிலையின் உபயோகம்

விலாரியிலையைக் கொண்டுவந்து ஆமணக்கெண்ணையில் வதைக்கி வீக்கம் கட்டி இவைகளின் மேல் போட்டுக் கட்டத் தீரும்.

அத்திப்பட்டையின் உபயோகம்

4- பலம் அத்திப்பட்டையைக் கொண்டு வந்து 1-படி ஜலத்தில் போட்டு அரைபடியாக வற்றக்காய்ச்சி 3-நாள் ஆறுவேளை சாப்பிட சீதபேதி, புண், பெரும்பாடு, ரத்தமூத்திரம் இவைகள் தீரும் இதின் விதையில் காலாழாக்குப் போட்டு பாயசஞ்செய்து அதில் சீனிக்கலந்து சாப்பிட மலம் நன்றாய் இறங்கும். அத்திப்பிஞ்சை சமையல்செய்து சாப்பிட ரத்தமூலம், வாயு, கிராணி குணமாகும், அத்திப்பாலை (½) பலம் யெடுத்து வெண்ணையில் கலந்து சாப்பிட்டு வர மேகம், காரிகம், பித்தமயக்கம் இவைகள் தீரும்.

புங்கன் வேரின் உபயோகம்

புங்கன்வேர் பச்சையாகக் கொண்டுவந்து கத்தியால் அதின் பட்டையைச்சீவி பிழிய சார்வரும் அதையெடுத்து புரையுள்ளரணத்தில் செலுத்தி தடவி வர ரணம் உலர்ந்து ஆறும், இதின் நெய்யை கரப்பான், கிரந்தி, செவிநோய் இவைகளுக்குத் தடவ குணமாகும். காதில் விட வேண்டும்.

நெல்லிவேரின் உபயோகம்

ஒருபலம் நெல்லிவேரைக் கொண்டு வந்து (½) படி ஜலத்தில் போட்டு (¼) படியாகக் காய்ச்சி காலையில் சாப்பிட்டு வர பித்தம், தாகம், வாந்தி இவைகள் தீரும் மலம் நன்றாய்க் கழியும்.

நெல்லிக்காயின் உபயோகம்

இரண்டுபடி நெல்லிக்காயைக் கொண்டு வந்து உரலில் போட்டு துவைத்து கொட்டையை நீக்கி அதற்குப் போதுமான மிளகாயும் உப்புஞ் சேர்த்துப் பிசைந்து எலுமிச்சங்காய்ப் பிரமாணம் உருண்டைசெய்து அடைத்தட்டி வெய்யிலில் உலர்த்தி வைத்துக்கொண்டு தேவையான போது ஒரு அடையை துவையல் செய்து சாதத்தோடு உபயோகிக்க கபரோகம், மலக்கட்டு, வாந்தி இவைகள் தீரும், காலையில் கொட்டைப் பாக்களவு சாப்பிட நன்று.

நெல்லிவிதையின் உபயோகம்.

நெல்லிவிதையைக் கொண்டுவந்து நொருக்கி அதினுள்ளிருக்கும் பருப்பையெடுத்து கால்பலம் வீதம் சாப்பிட்டு வர சூடு ஒக்காளம் இவைகள் தீரும்.

அருநெல்லிக்காயின் உபயோகம்

பிரதிதினம் காலையில் (5) அரிநெல்லிக்காய்வீதம் (20) நாள் சாப்பிட்டு வர சுரம், அரோசிகம் இவைகள் தீரும், பித்தத்தை சாந்தப்படுத்தும்.

பனங்கிழங்கின் உபயோகம்

(2) அல்லது (3) பனங்கிழங்கைக் கொண்டுவந்து சுட்டாவது வேவித்தாவது தினம் (3) கிழங்கு சாப்பிட்டு வர மேகம் (20)ம், கரப்பான், ரணம், ரத்தசீதபேதி இவைகள் தீரும்.

பனனுங்கின் உபயோகம்

பனனுங்கு நாள் ஒன்றிற்கு (4-5) வீதம் (10) நாள் சாப்பிட்டு வர சீதபேதி இவைகள் தீரும். ஆனால் தோலோடு சாப்பிட வேண்டும்.

பனங்கள்ளின் உபயோகம்

தினம் பனங்கள்ளை காலையில் கால்படி வீதம் (40) நாள் சாப்பிட்டு வர சுக்கிலம் விர்த்திக்கும் 7-தாதுக்களும் வலுக்கும்.

மாதுளம்பிஞ்சியின் உபயோகம்

ஒரு மாதுளம் பிஞ்சைக் கொண்டு வந்து மேல்தோல் நீக்கி அதின் உள்ளிருக்கும் விதையை சாப்பிட்டு வர அதிசாரம் (9)ம் தீரும். ஆனால் 10-நாளைக்குச் சாப்பிடவேண்டும். மேற்சொன்ன பிரகாரம் பழத்தைச் சாப்பிட பித்தம், தாகம், கபம், வாந்தி இவைகள் தீரும்.

இலந்தம்பழம் உபயோகம்

20-நாளைக்கு நாள் ஒன்றுக்கு 5-யிலந்தம்பழம் வீதம் காலை மாலையில் சாப்பிட்டு வர வாந்தி பித்தம், மூர்ச்சை தீரும்.

கள்ளியின் உபயோகம்.

கள்ளி, திருகுகள்ளி, சதுரக்கள்ளி, கொடிக்கள்ளி, இலைக்கள்ளியென -5- விதங்களுண்டு, இதில் ஏதேனும் ஒருபாலை வெல்லத்தல் பணவிடை வைத்துக் கொடுக்க பேதியாகும்.

வேப்பனிலையின் உபயோகம்

ஒருபிடி வேப்பனிலையை (½) படி ஜலத்தில் போட்டு கால்படியாய் வற்றக்காய்ச்சி (3) வேளை கொடுக்க சுரம் (64)ம் தீரும்.

அம்மைகண்டபேர்க்கு அரைத்து மேல்பூசகுணமாகும், கட்டிக்குத் தடவ கட்டி உடையும் ரணத்துக்குத் தடவ ரணம் உலரும்.

வேப்பங்கள்ளின் உபயோகம்

வேப்பங்கள்ளை வீசம்படிவீதம் 20- நாள் காலையில் சாப்பிட்டுவர பசிதீபனமுண்டாகும். இதின் கொட்டையை உடைத்து மேல்தோல்நீக்கி அரைத்துப் பாக்களவு (3) நாள் சாப்பிட ஜன்னிநோய் தீரும். இதின் எண்ணையைத் தடவ ரணம் ஆறும். இதின் பூவை சமைத்துச் சாப்பிட பித்தசாந்தியாகும்.

வேப்பம்பட்டையின் உபயோகம்

3-பலம் வேப்பம்பட்டையைக் கொண்டுவந்து (½) படி ஜலத்தில் போட்டு கால்படியாய் வறறக்காய்ச்சி இருவேளை சாப்பிட பசியுண்டாகும், சீதசுரம் தீரும், சுரம் விட்டிருக்கும் போது பட்டையைச் சூரணித்து அதில் பணவிடை வீதம் ஜலத்தில் கலக்கி 3-நாள் கொடுக்க பின்பு சுரம் வராது.

பூவரசன் கொட்டையின் உபயோகம்

5- பூவரசன் கொட்டையை யெடுத்து மேல்தோல் போக்கி பசும்பால் விட்டரைத்து அந்தபாலில் கலக்கிச் சாப்பிட பேதியாகும். குன்மம். வயிற்றுயிரைச்சல், கிருமி, கரப்பான் இவைகள் தீரும், ஆனால பித்தம் அதிகரிக்கும்.

அழிஞ்சில் வேர்ப்பட்டையின் உபயோகம்

அழிஞ்சில் வேர்ப்பட்டை பச்சையாகக் கொண்டு வந்து அம்மியில் வைத்து ஜலம்விட்டு மைபோலரைத்து அதில் பாக்களவு காலையில கொடுக்க பித்த சாந்தியாகும் மயக்கந்தீரும்.

ஆலம்பாலின் உபயோகம்

ஆலம்பாலைக் கரந்து வந்து கால்வெடிப்புகளுக்கும் பல்நோய்களுக்கும் மேல் தடவி வர காலவெடிப்பு ஆறும். பல்நோய் தீரும். நாவரட்சிக்கு உச்சிக்கரண்டி வீதம் உள்ளுக்குச் சாப்பிட குணமாகும்.

ஆலம்பட்டையின் உபயோகம்

ஆலம்பட்டை பலம் -2, கொண்டு வந்து (½) -படி ஜலத்தில் போட்டு ¼- படியாக வற்றக்காய்ச்சி தினம் காலையில அரிக்கால் படிவீதம் 3-நாள் சாப்பிட்டுவர நீரிழிவு தீரும்.

சுரயிலையின் உபயோகம்

சுரயிலையை கொண்டுவந்து சார்பிழிந்து தினம் காலையில் (½) படி சார்வீதம் (3) நாள் சாப்பிட்டுவர திரேகவீக்கம் சோகை இவைகள் தீரும், இச்சாபத்தியம்.

பாகயிலையின் உபயோகம்

பாகயிலையைக் கொண்டுவந்து ரசம்பிழிந்து நாள் வொன்றுக்கு காலையில் ஒரு ரூபாயிடை 3-நாள் சாப்பிட்டு வர விரோசனக்காரி, திரிதோஷம், கிரிமிதோஷம் இவைகள் தீரும், இச்சாபத்தியம்.

கொடிகுரிஞ்சாயிலையின் உபயோகம்

கொடிகுரிஞ்சா யிலையைக் கொண்டு வந்து உலர்த்தி சூரணித்து வைத்துக்கொண்டு குழந்தைகளுக்கு (¾) விராகனிடை தூள் எடுத்து ஜலத்தில் கரைத்துக் கொடுக்க வாந்தியாகும். அன்றியும் நாக்குப்புண் காசம் இவைகளுக்கும் உபயோகிக்கலாம்.

கொடிகுரிஞ்சாவேரின் உபயோகம்

கொடிகுரிஞ்சாவேரைக் கொண்டுவந்து உலர்த்தி சூரணித்துக் கொண்டு திரிகடிகை பிரமாணம் யெடுத்துப் பெரியவர்களுக்கு ஜலத்தில் கரைத்துக் கொடுக்க வாந்தியாகிக் கபத்தை அறுக்கும்.

கோவையிலையின் உபயோகம்

கோவையிலையைக் கொண்டுவந்து ரசம்பிழிந்து தினம் காலையில் (½) ஆழாக்கு வீதம் (3) நாள் சாப்பிட்டுவர நீர்க்கட்டு, வாதம் இருமல், ஊஷ்ணம் இவைகள் தீரும் இச்சாபத்தியம்.

கோவைக்கிழங்கின் உபயோகம்

கோவைக்கிழங்கைக் கொண்டுவந்து உலர்த்தி சூரணித்து வைத்துக்கொண்டு தினம் திரிகடிகைப் பிரமாணம் (10) நாள் காலையில் சாப்பிட்டுவர கோழை, குஷ்டம், பித்தம், மதுமூத்திரம் இவைகள் தீரும் இச்சாபத்தியம்.

கோவைக்காயின் உபயோகம்

கோவைக்காயைக் கொண்டுவந்து வத்தலாக உலர்த்தி வைத்துக்கொண்டு சமைத்துச் சாப்பிட்டு வர கவம், சுரம், ஊஷ்ணம் இவைகள் முதலானதும் தீரும்.

உத்தாமணியிலையின் உபயோகம்

உத்தமணியிலையைக் கொண்டுவந்து சார்பிழிந்து தினம் ¼ ஆழாக்கு வீதம் (3) நாள் காலையில் சாப்பிட்டு வர தீபனகாரியுண்டாகும் வயற்றெரிச்சல், வாதம் (80) சுவாசகாசம் -5, சன்னி-13, தேகவலிதீரும் இச்சாபத்தியம். இந்தயிலை ரசத்துடன் சுண்ணாம்பைக் கலந்து வீக்கங்களுக்கு மேல் பூசிவர வீக்கம் வாடி நோய்தீரும்.

சித்திரமூலவேரின் உபயோகம்

சித்திரமூலத்தில் நீலம், சிவப்பு, வெள்ளை, (3) விதங்களுண்டு அதில் ஏதாவது ஒன்றைக் கொண்டு வந்து ஜலம்விட்டு அரைத்துப் போடக் கொப்பளிக்கும். அரையாப்புக் கட்டியின் பேரில் போட கட்டி உடையும், இருமலுக்கு மார்பின் பேரில் போட இருமல்தீரும்.

வெள்ளரிக்காயின் உபயோகம்

வெள்ளரிக்காயைக் கொண்டு வந்து மேல்தோல் சீவி துண்டுதுண்டுகளாக அரிந்து வைத்துக்கொண்டு மிளகும் உப்பும் சமமாகச் சேர்த்து பொடித்து வைத்துக்கொண்டு மேற்படி துண்டுகளை தூளில் தொட்டு நாள் ஒன்றுககு ஒரு காய் வீதம் பனிரெண்டுமணிக்குச் சாப்பிட்டு வர நீர்எரிவு நீர்க்கட்டு இவைகள் தீரும். 5-6-நாள் சாப்பிடவும்.

வெள்ளரி விதையின் உபயோகம்

வெள்ளரிவிதையை யெடுத்து மேல்தோல் நீக்கி உள்ளிருக்கும் பருப்பை (½) ஆழாக்குவீதம் (20) நாள் சாப்பிட்டு வர நீரடைப்பு, கல்அடைப்பு, சதை அடைப்பு பிரமேகம் (20)ம் தீரும் பத்தியமில்லை.

தாமரைக்கிழங்கின் உபயோகம்

தாமரைக்கிழங்கைக் கொண்டு வந்து உலர்த்தி சூரணித்து சமனிடை சீனிகலந்து திரிகடிகைப்பிரமாணம் (10) நாள் காலையில்

சாப்பிட்டு வர கண்களைப் பிரகாசிக்கச்செய்யும். விதையைச் சாப்பிட சுக்கிலத்தை விர்த்திக்கும், தாமரைப்பூவைச் சாப்பிட தேகசூடு நீர்யெரிவு சுரம் இவைகள் தீரும் பத்தியமில்லை.

பேய்ப்புடலின்வேரின் உபயோகம்

பேய்ப்புடலின்வேர் கொண்டுவந்து ரசம் பிழிந்து வீசம் ஆழாக்குவீதம் (3) நாள் காலையில் கொடுத்துவர மலங்கழியும் திரேக சவுக்கியமுண்டாகும். இதுபோல் இலைரசங் கொடுக்க வாந்தியாகும் சுரம், இருமல் இவைகள் தீரும். இச்சாபத்தியம்.

மிளகரணைவேரின் உபயோகம்

மிளகரணை வேராகிலும், பட்டையாகிலும், யிலையாகிலும், இம்மூன்றில் ஒன்றைக் கொண்டு வந்து அதில் பலம்-2, யெடுத்து (½) படி ஜலத்தில் போட்டு கால்படியாக வற்றக்காய்ச்சி வடித்து, மூன்றுபோது கொடுக்க கபம், அஜீரணம், வாயு இவைகள் முதலானதும் தீரும். இச்சாபத்தியம்.

மராட்டிமொக்கின் உபயோகம்

மராட்டிமொக்கில் ஒன்று எடுத்து கால்படி பசும்பாலில் போட்டுக் காய்ச்சிக் கொடுக்க வயற்று வேதனைதீரும் பேதிகட்டும். ஆனால் இது மயக்கமுள்ளதாதலால் ஜாக்கிரதையாக உபயோகிக்கவேண்டும்.

மூக்குரட்டைவேரின் உபயோகம்

மூக்குரட்டைவேர் பலம்-3, கொண்டுவந்து - (½) படி ஜலத்தில் போட்டு கால்படியாக வற்றக் காய்ச்சி இருவேளையுங் கொடுக்க மலம் நன்றாகக் கழியும் கிரிமிகள் வெளியாகும், வயற்று வலி தீரும்.

திராட்சைபழத்தின் உபயோகம்

பச்சை திராட்சைபழத்தை (20) நாள் சாப்பிட்டுவர மயக்கம், பித்தம் இவைகள் தீரும். உலர்ந்ததைச் சாப்பிட்டு வர தாகம், சுரம் தீரும். சுக்கிலத்தை விர்த்திக்கும்.

காட்டாமணக்கு யிலையின் உபயோகம்.

காட்டாமணக்கு யிலையைக் கொண்டுவந்து ரசம்பிழிந்து (அரிக்கால்) ஆழாக்கு வீதம் தினம் காலையில் (3) நாள் கொடுத்துவர வெள்ளைவிழுதல், குன்மம்எட்டு, மேகப்புண், ஊஷ்ணம், உள்மூலம் இவைகள் தீரும் இச்சாபத்தியம்.

துத்தியிலையின் உபயோகம்

துத்தியிலையைக் கொண்டுவந்து ரசம்பிழிந்து அரிக்கால் ஆழாக்கு வீதம் (3) நாள் காலையில் கொடுக்க மூலம் தீரும். வயற்றிலுள்ள கிரிமிகள்விழும் பத்தியமில்லை.

துத்திவிதையின் உபயோகம்

துத்திவிதையை (1) விராகனிடை யெடுத்து அத்துடன் சீனி கலந்து நாளொன்றுக்கு இம்மாதிரியாக (20) நாள் சாப்பிட்டு வர கருமேகம் குஷ்டம் தீரும் இச்சாபத்தியம்.

துத்திப்பூவின் உபயோகம்

துத்திப்பூ (½) பலமெடுத்து அரைபடி ஜலத்தில் போட்டு கால்படியாக வற்றக்காய்ச்சிக் கொடுத்து வர காசம் தீரும்.

விழிதியிலையின் உபயோகம்

விழிதியிலையைக் கொண்டுவந்து ரசம்பிழிந்து அரிக்கால் ஆழாக்குவீதம் காலையில் சாப்பிட பேதியாகும்.

விழிதிவேரின் உபயோகம்

விழிதிவேர் பலம் (2) எடுத்து அரைப்படி ஜலத்தில் போட்டு கால்படியாக வற்றக்காய்ச்சி வடித்து ஸ்திரீகளுக்குக் கொடுக்க வயற்றிலுள்ள கிருமிகள் செத்து வெளிப்பட்டு கெர்ப்பந்தரிக்கும்.

தும்பையிலையின் உபயோகம்

தும்பையிலையைக் கொண்டுவந்து ரசம்பிழிந்து அரிக்கால் படிவீதம் காலையில் (3) நாள் கொடுத்துவர மந்தம், வாதம், சிலாரோகம் இவைகள் தீரும் இச்சாபத்தியம்.

தும்பைப்பூவின் உபயோகம்

தும்பைப்பூவை பலம் (2) எடுத்து ஒரு பலம் சுத்தமான எள்ளெண்ணையில் போட்டு (40) நாள் ஊரினபின் யெடுத்துக் கண்ணில் கலிக்கமிட ஜன்னி (13) நேத்திரரோகம் தீரும்.

கண்டங்கத்திரியிலையின் உபயோகம்

கண்டங்கத்திரியிலையைக் கொண்டு வந்து ரசம்பிழிந்து (3) நாளைக்கு காலையில் (1/8- அரிக்கால்) படி வீதம் கொடுத்தாலுஞ்சரி

அல்லது ஒருபிடியிலையை ½, படி ஜலத்தில் போட்டுக் கால்படியாய் வற்றக்காய்ச்சிக் கொடுக்க நீர் யேற்றம், யீளை, சுவாசம், ஜலபீனிசம் இவைகள் தீரும் பத்தியமில்லை.

கண்டங்கத்திரிக்காயின் உபயோகம்

கண்டங்கத்திரிக்காயைச் சமைத்துச் சாப்பிட சிலேஷ்ம ரோகம் (20) குணமாகும். ஆனால் உஷ்ணஞ் செய்யும்.

பசு முன்னையிலையின் உபயோகம்

பசுமுன்னையிலையைக் கொண்டு வந்து எருமைபாலில் அவித்து சமைத்துச் சாப்பிட மந்தாக்கினி வாதம் இவைகள் தீரும்.

நாவல்பட்டையின் உபயோகம்

நாவல்பட்டையைக் கொண்டுவந்து பசும்பால் விட்டு அவித்துயிடித்து ரசம்பிழிந்து அரிக்கால்படி வீதம் (3) நாள் காலையில் சாப்பிட்டு வர வாய்ரோகம் கபரோகம் தீரும் இதுபோல் வேரையிடித்துக் கொடுக்க சீதபேதி சுரம் அதிமூத்திரம் இவைகள் தீரும்.

மாவிலிங்கம்பட்டையின் உபயோகம்

மாவிலிங்கப்பட்டை பச்சையாகக் கொண்டு வந்து இடித்து ரசம்பிழிந்து ஆழாக்குவீதம் (3) நாள் காலையில் கொடுத்து வர வாதம் 80-ம், ஜன்னி-13-ம் திரேக அஸ்திதீரும், இச்சாபத்தியம்.

பாதரிவேரின் உபயோகம்

ஒருபலம் பாதரிவேரைக் கொண்டுவந்து ½-படி நல்லெண்ணெயில் போட்டு தயில பதமாகக் காய்ச்சி வாரத்திற்கு இரண்டு முறை ஸ்நானஞ்செய்துவர கை, கால், கண்கள் இவைகளின் எரிவு, மதுமூத்திரம் மேகசுரம் இவைகள் தீரும் ஸ்நானஞ் செய்யும் நாள் பகலில் நித்திரை நீக்கவேண்டும்.

சண்பகவேரின் உபயோகம்

அரிக்கால்பலம் சண்பகவேரை -2½ பலம் நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சி ஸ்நானஞ் செய்து வர சுரம் தீரும் பசியுண்டாகும் பூவை உபயோகிக்க கண்ணெறிவு தீரும், சுக்கிலத்தை விர்த்திக்கும்.

இலுப்பைவேரின் உபயோகம்

இலுப்பைவேர் பலம் -2, எடுத்து - ¾ படி நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சி ஸ்நானஞ் செய்துவர சுரம் -¾ அதிமூத்திரம் குணமாகும்.

சாரைப்பருப்பின் உபயோகம்

கால்படி சாரைப்பருப்பு யெடுத்து ஜலம்விட்டு மைபோலரைத்து வைத்துக்கொண்டு 4-பலம் பூராசக்கரையைப் பாகுசெய்து அதில் அரைத்து பருப்பைப் போட்டுக் கிண்டி (2½) பலம் நெய்விட்டு லேக்கிய பதமாகக்கிளரி இறக்கி தேன்பலம் அரைவிட்டு பிசரிக்கலந்து வைத்துக்கொண்டு பாக்களவு காலை மாலை சாப்பிட்டுவர நீர்யெரிவு பிரமேகம் தீரும். சுக்கிலத்தை தடிப்பிக்கும். இச்சாபத்தியம்.

முசுமுசுக்கையிலையின் உபயோகம்

முசுமுசுக்கையிலையைக் கொண்டுவந்து ரசம்பிழிந்து அரிக்கால்படி வீதம் (3) நாள் காலையில் சாப்பிட்டு வர கோழை சுவாசம் காசம் இவைகள் தீரும். இச்சாபத்தியம்.

கோவைக்கிழங்கின் உபயோகம்

கோவைக்கிழங்கு சாதாரணமாகக் கடையில் அகப்படும். அதில் ஒரு விரல்பெருமனாயும் நரைபோல் வெளுத்த நிறமாயும் உள்ள கிழங்குகள் கொண்டுவந்து உலர்த்தி சூரணித்த வஸ்திரத்தில் வடிகட்டி வைத்துக்கொண்டு திரிகடிகைப் பிரமாணம் சக்கரையில் கலந்து சாப்பிட்டு வர மூலவியாதிகள் தீரும். இச்சாபத்தியம்.

தேள்கொடுக்கிலையின் உபயோகம்

தேள்கொடுக்கி னிலையைக் கொண்டுவந்து ஜலத்தில் அலம்பி ஜலம் போக வோர் சீலையில் ஒத்தி எடுத்து உள்ளங்கையில் வைத்துக் கசக்கி ரசம்பிழியாமல் துல்லியமாக மெல்லிய சீலையில் வைத்து மூட்டைகட்டி கண்ணோயிற்கு (3) நாள் மணிக்கொருவிசை ரசத்தைக் கண்ணில் பிழிந்து வர கண்ணோய் தீரும். கண் எரியாது ஆனால் யிலையை அப்போதைக்கப்போது கசக்கி உபயோகிக்க வேண்டும்.

நன்னாரிவேரின் உபயோகம்

நன்னாரிவேர் புதிதாகக் கொண்டு வந்து உலர்த்தி சூரணித்து வஸ்திரத்தில் வடிகட்டி வைத்துக்கொண்டு திருகடிகைப் பிரமாணம்

நாள் ஒன்றுக்கு இருவேளையும் (40) நாள் சாப்பிட்டுவர தீரும் வியாதிகள். ஸ்ரீகளால் உண்டாகும் சூடு, உழலை, கசலதோஷம், சுரம், தாகம், புண், மதுமேகம் இவைகள் குணமாகும், இதை 1-பலம் கற்றாழைச் சோற்றில் கலந்துக் கொடுக்கவும். அல்லது தேனில் வெதுப்பி அரைத்துப் பாக்களவு (3) நாள் சாப்பிட வண்டுகடி விஷந்தீரும். இச்சாபத்தியம்.

நன்னரிவேரின் வேறுவித உபயோகம்.

நன்னாரிவேர் பறித்தவுடன் (4) அவுன்சு யெடுத்து அதை சிதைத்து ஒரு மண் பாத்திரத்தில் ஒரு புட்டி ஜலம் விட்டு நன்றாய்க் கொதிக்கவைத்து அதில் மேற்படி வேரைப் போட்டு மூடிவைத்து 2-மணி நேரம் பொறுத்து யெடுத்து வடிகட்டி இருத்துவைத்துக் கொண்டு பிராயமானவர்களுக்கு ஒரு நேரத்திற்கு 3-அவுன்சு வீதம் நாள் ஒன்றுக்கு 2-நேரங் கொடுக்கவும். குழந்தைகளுக்கு ஒரு நேரத்திற்கு 1½ அவுன்சு வீதம் கொடுக்கலாம். பிராயமுள்ளவர்களுக்கு யேது காரணத்தினாலாவது வரும் பலவீனமாகி பலனையுண்டாக்கும். குழந்தைகளுக்குக் கொடுக்க தேக ஒளிதீரும், அன்றியும், மேகவியாதிகள் பருக்கள் தோல்வியாதிகள் அஜீரணம் பசியின்மை நெடுநாள் சென்ற வாதம் இவைகளுக்கெல்லாம் உபயோகிக்கலாம். இச்சாபத்தியம்.

நாகமல்லிவேரின் உபயோகம்

புதிதான நாகமல்லிவேர் கொண்டு வந்து அதில் பலம் (2) யெடுத்து சிதைத்து (10) பெரிதான எலுமிச்சம் பழம் கொண்டு வந்து ரசம்பிழிந்து அதில் மேற்படி சிதைத்தவேரைப் போட்டுக் கலந்து வைத்துக்கொண்டு படர்தாமரைக்கும் தோலைப் பற்றி வந்து சொரி சிரங்குகளுக்கும் மேல் பூசிவர குணமாகும். (10) நாள் பூசவும்.

நீராகாரத்தின் உபயோகம்.

காலையில் மலசலங் கழிந்தவுடனே தந்தகத்தி செய்துக் கொண்டு ஒருவேளை நீராகாரத்தில் போதுமான உப்பு சேர்த்து கலக்கிச் சாப்பிட்டுவர தாகம் முத்தோஷம் வரட்சி இவைகள் தீரும். தாதுபுஷ்டியுண்டாம்.

அருசுவையின் உபயோகம்

பதார்த்தங்கள் சமைத்துச்சாப்பிடுவதில் துவர்ப்பு, புளிப்பு மிஞ்சுமாகில் வாதமுண்டாகும். உவர்ப்பு, கசப்பு மிஞ்சுமாகில் பித்தம் உண்டாகும். கார்ப்பு, இனிப்பு, மிஞ்சுமாகில் சிலேஷ்மமுண்டாகும்.

யாவும் சமமாக சமைத்துச் சாப்பிடில் பலனுண்டாகும் வியாதியில்லையாம்.

அன்னபின்னத்தின் உபயோகம்

அன்னம் பொசிப்பதற்கு -8- பங்கு பலனாம். அவல் பொசிப்பதில் -8- பங்கு பலனாம், முப்பழம்பால் பொசிப்பதில் -8- பங்கு பலனாம். ஊண் ஊணிர்க்கு -8- பங்கு பலனாம்.

ஆகாபசும்பாலின் உபயோகம்

பசுக்கள் அலைந்தும் திரிந்தும் சுடுகாட்டாடு யெலம்பைத்தின்றும் நோய்கொண்டதும் மலம் அரிந்தினதும் வெண்புள்ளி யுடையதும் இவ்வகையான பசுக்களின் பால் சாப்பிடுவதில் கபனோயும் திரிதோஷமும் வயது குறைவு முண்டாகும்.

ஆட்டின் கொழுப்பின் உபயோகம்

ஆட்டின் கொழுப்பு பலம்-2-ல் ஜாதிக்காய், வால்மிளகு, சங்கம்பழம் இவைகள் வகைக்குக் கால்பலம் சேர்த்து அரைத்து வைத்துக் கொண்டு பாக்களவு சாப்பிட்டு வர ரத்தகாசம், இரத்த ரோகம், இமைக்காசம், க்ஷயரோகம், கோழைநோய் இவைகள் தீரும். இச்சாபத்தியம்.

ஆட்டுப்பாலின் உபயோகம்

வெள்ளாட்டுப்பால் கறந்து நாள் ஒன்றுக்கு இருவேளையும் வேளையொன்றுக்கு அரிக்கால் படி வீதம் (20) நாள் சாப்பிட்டு வர க்ஷயரோகங்கள், மூர்க்கமான யிருமல், பித்தகாசம், மந்தம் இவ்வகளுக்குக் கொடுக்கப்படும். அன்றியும் சரீர பலயீனர்களுக்கு வயறு கழிச்சலுள்ளவர்களுக்கும் பசியின்மைக்கும் சந்தேகமின்றிக் கொடுக்கப்படும். இவை சஞ்சீவியென நம்பவேண்டும்.

சித்தாமணக்கெண்ணெயின் உபயோகம்.

காலாழக்கு சித்தாமணக்கு எண்ணெயும் ஒரு எலுமிச்சம்பழச்சாறும் கால்பலம் சீனாகற்கண்டும் சேர்த்து நன்றாக மிசிரித்து காலையில் சாப்பிட பேதியாகும். நீர்க்கட்டு மலக்கட்டு இவைகளை வெளியாக்கும். திரேகத்திற்குச் சவுக்கிய முண்டாம். சிறு குழந்தைகளுக்கு முலைபாலும் யெண்ணெயும் ஒரு பாலடை வார்த்துவர மிக நன்றாம். தோலுக்கடுத்த நோய்களுக்கு மேல்பூசி வர குணமுண்டாம்.

இரவிலுண்ணும் பதார்த்தங்களின் உபயோகம்

அத்திக்காய், அவரைப்பிஞ்சு, ஆவின்பால் கண்டங்கத்திரிக்காய் துவரை தூதுளம் முருங்கைக்காய் இவைகள் சாப்பிட நன்றாய் போஜனம் செய்தான பிறகு சயனிக்கும் போது ஆழாக்குப் பசும்பால் சாப்பிட்டுவர க்ஷயரோகம் நேத்திரரோகம் தீரும். தாதுபுஷ்டியும் திரேகத்தில் ரத்தம் பரவலும் உண்டாகும்.

இராப்பசுவின்பால் உபயோகம்

இரவில் சுரக்கும் பசும்பாலை போஜனஞ் செய்தான பிறகு படுக்கைக்குப் போகும்போது (¼) படி அல்லது (½) படிவீதம் பிரிதிதினம் சாப்பிட்டுவர அழல், ஈளை, கபம், கண்களிலுண்டாகும் பிணிகள் இவைகள் தீரும், தாதுகட்டும், திரேகம், மேனி கொடுக்கும் பாலைக்காய்ச்சி உபயோகிக்கவும்.

இரும்பு கரண்டியின் வென்னீர் உபயோகம்.

நாள்தோறும் இரும்புப் பாத்திரத்தில் ஜலம் விட்டுக் காய்ச்சி போஜனஞ் செய்யுங்காலமும் மற்றக்காலமும் சாப்பிட்டு வர பாண்டு நோய் போகும். இந்திரிய புஷ்டி யுண்டாகும். நரம்புகள் உறப்பாகும். திரேகம் குளிர்ச்சியோடு மெத்தச் சுகமுண்டாகும்.

இலந்தன்வேரின் உபயோகம்

1-பலம் இலந்தன் வேரை கொண்டு வந்து சமைத்து அரைப்படி ஜலத்தில் போட்டுக் காய்ச்சிக் கால்படியாக வற்றினபின் வடித்து மூன்றுநாள், காலையில் கொடுத்து வர ஆயாசந் தீரும் பசி தீவினமுண்டாகும். இதுபோல் இதில யிலையைக் கஷாயமிட்டுக் கொடுக்க இரத்தம் விழல் யெரிச்சல் கடுப்பு சீழ்மூலம் மேகம் பித்தம் இவைகள் தீரும், இச்சாபத்தியம்.

இலுப்பைப் பிண்ணாக்கின் உபயோகம்

இலுப்பைப் பிண்ணாக்கைக் கொண்டுவந்து அரைத்து அப்பியங்க ஸ்நானத்திற்குத் தேய்த்துக் கொள்ள யெண்ணெய்க் கசிவு தீரும். அன்றியும் பிரதி தினமும் உடம்பு குளிக்கும்போது உடம்புக்குத் தேய்த்துக்கொண்டு குளிக்க. கடுவன், கரப்பான், ஜன்னிதோஷம் விரைவீக்கம் இவைகள் தீரும், விரைவீக்கத்திற்கு அரைத்து விரையின் மீதுவைத்துக் கட்ட குணமாகும். நோய்தீரும்.

கொட்டைப்பாக்கின் உபயோகம்

இளங்கொட்டைப் பாக்கை வெற்றிலை சுண்ணாம்பு இவைகளோடு சேர்த்து உபயோகித்தாலுஞ்சரி அல்லது சாதாரணமாக பெரும்பாக்கைப் போட்டு மென்று தின்றுக் கொண்டு வந்தாலுஞ்சரி (குணம்) கோழைக்கட்டு சிலேஷ்மம் வாதம் இவைகள் தீரும், ஆனால் சூடுண்டாம் இளங்கொட்டைப் பாக்கென்பது முற்றாதபாக்கு

இளநீரின் உபயோகம்

இளநீர்க்காயில் வழுக்கைப் பற்றாதத் தேங்காயின் நீரை தினம் ஒருகாய் ஜலம் சாப்பிட்டுவர (குணம்) அனல், கபம், நீரடைப்பு பித்தம், வாந்தி, பேதி, வாதம், இவைகள் தீரும். கண் ஒளிதரும் திரேகம் குளிர்ச்சியோடு மனது தெளிவுண்டாம்.

உகரம்பட்டையின் உபயோகம்

உகரம்பட்டையைக் கொண்டு வந்து கஷாயமிட்டுக் கொடுக்க சுரங்கள் நிவர்த்தியாகும். இதின் வேரின்பட்டையைக் கொண்டு வந்து ஜலம்விட்டு அரைத்து கட்டிகள் மீது வைத்துக் கட்டக் கட்டிகள் உடையும். வாசனையாகவிருக்கும்.

ஊமத்தின்யிலையின் உபயோகம்

ஊமத்தின்யிலையில் வெள்வூமந்தன் கருவூமத்தன்யென இரண்டு விதமுண்டு அதில் கருவூமத்தன் யிலையைக் கொண்டு வந்து உலர்த்தி புகையிலை சுருட்டைப் போல்செய்து புகைக் குடிக்கில் சுவாசகாசம் உடனே தீரும், நாள்பட்ட யிருமல் போகும். இந்த யிலையைப் பச்சையாக அரைத்து போஸ்டு செய்து வாதவீக்கம் வாதக்கட்டிகள் தோல்மேல் யிருக்கும் வீக்கங்கள் இவைகளுக்குக் கட்டகுணமாகும். மேகவியாதி கட்டிக்கு இந்த யிலையைசாராயத்தில் வூரவைத்து நோய் இருக்குமிடத்தில் கட்ட குணமாகும். நரம்பு சிலந்திகளுக்கும் கட்டலாம், இந்த இலையைக் காயவைத்துப் பொடி செய்துப் பன்றிக்கெழுப்பில் கலந்து வைத்துக்கொண்டு முகத்திலுண்டாகும் வலிபோன்ற அனேகவித நரம்புவலிகளுக்கு மேல் தடவி வர குணமாகும். ஆனால் இது நஞ்சுள்ள வஸ்து வானபடியால் இதை அனுபோகமும் ஆலோசனையுங் கொண்டு உபயோகப் படுத்தவது மகா உத்தமமாம்.

எருக்கன்பாலின் உபயோகம்

ஜன்னிகட்டி புரங்கழுத்திசுவு கீல்வாய்வு இவைகளுக்கு எருக்கன் பாலைச் சுரந்து• நோயுள்ள விடங்களில் தளும்பப்பூசி அதின்மேல் கரிமஞ்சளை தூள் செய்து போடவும் இந்தப்படி மூன்றுநாள் செய்துவர குணமாகும்.

எருமைசாணத்தின் உபயோகம்

எருமைசாணம் போடும்போது அதில் கொஞ்சம் எடுத்து வந்து ஒரு சீலையில் வைத்துப் பிழிய ரசம்வரும் அந்த ரசத்தில் ஒருகரண்டி வீதம் காலையில் (3) நாள் சாப்பிட்டு வர குணமாகும். இரத்தவாந்தி காமாலை புண் பெரும்பாடு வயறுப்பிசம் இவைகளுக்கு உபயோகிக்கவும், ஆனால் அனலுண்டாம் உப்பில்லாத பத்தியம்.

எருமைத்தயிரின் உபயோகம்.

எருமைத் தயிர் சாப்பிட்டுவரின் கண்ணொளிவு தரும் பித்த சாந்தியாகும் யெரிச்சல் இவைகள் தீரும். ஆனால் மந்தமும் வாதமுமுண்டாகும்.

எருமைநெய்யின் உபயோகம்

எருமைநெய்யை போஜனத்தோடு உபயோகப்படுத்தி வரில் கண்ஒளிவு தரும், ஆனால் புத்திகெடும் மெய்யின் அழகு போகும் கரப்பான் பித்தம் வாதம் இவைகளுண்டாம்.

எருமைப்பாலின் உபயோகம்

எருமைப்பாலைச் சாப்பிட்டுவரின் புத்திதெளிவு போம். திமிருண்டாகும் மருந்துகளுக்கு முறிவென்றறியவும்.

எருமைமோரின் உபயோகம்

எருமை மோர் சாப்பிட்டுவரின் காமாலை, கிராணி, ஜலக்கழிச்சல் தாகம், கெர்ப்பப்புழு இவைகளுக்கு உபயோகப்படுத்தி வர மிகவும் நன்றாம்.

எருமைவெண்ணெயின் உபயோகம்

எருமைவெண்ணெயைச் சாப்பிட்டுவரின் யெரிவு நீரிழிவு இவைகள தீரும், ஆனால் கபம், கரப்பான், கிரிமி, மந்தவாதம் இவைகள் உண்டாகும்.

எருமைமூத்திரத்தின் உபயோகம்

எருமை காலையில் விடும் மூத்திரத்தைப் பிடித்து அதில் வீசம்படி வீதம் காலையில் (2) நாள் சாப்பிட்டுவர சோகை பாண்டு மேகம் வயற்று நோய் இவைகள் தீரும் அனலுண்டாகும், உப்பில்லாத பத்தியமாக யிருக்கவேண்டும்.

எலிக்காதிலையின் உபயோகம்

எலிக்காதிலை பலம் - 1½ எடுத்து அரைபடி ஜலத்தில் போட்டு ¼- படியாக வற்றக்காய்ச்சி (3) நாள் காலையில் சாப்பிட்டு வரசுரம், தாகம், நீரிழிவு, பிரமியம், கடுப்பு இவைகள் தீரும், தாதுபுஷ்டியுண்டாம். இச்சாபத்தியம்.

எலியாமணக்கன்பாலின் உபயோகம்

எலியாமணக்கன்பால் கரந்து வீசம்படி வீதம் காலையில் சாப்பிட்டு வர யெலிவிஷம், குன்மம், பலவிஷங்கள், பீலிகம், விரைவீக்கம் இவைகள் குணமாகும். ஆனால் பேதி யதிகமாகும் ஆள்பெலமரிந்து கொடுக்கவும் (3) நாள் கொடுக்க வேண்டும். இச்சாபத்தியம்

வெள்ளெருக்கன் பட்டையின் உபயோகம்

2-பலம் வெள்ளெருக்கன் பட்டையைக் கொண்டு வந்து உலர்த்திப் பொடி செய்து 5-பலம் வேப்பெண்ணையில் கலந்து வைத்துக்கொண்டு கீல்வாதம் சத்துவாதம் இவைகளுக்கு மேல்பூச்சாகப் பூசிவர குணமாகும்.

வெள்ளைக்கடுகின் உபயோகம்

வெள்ளைக்கடுகை யரைத்த போஸ்டு செய்து ஜன்னிக்கும் அகோர தலைநோயிற்கும் உள்ளகாலிலும் கண்ட சதையிலும் வைத்துக்கட்ட குணமாகும், வாந்தி பேதிக்கும் குன்மத்திற்கும் வாய்விற்கும் குடல்வலிகளுக்கும் சுரமில்லாமலிருந்தால் வயற்றின்பேரிலும் திமிர்வாதமாகில் முதுகின் பேரிலும் வைத்துக்கட்ட குணமாகும். இதனோடு முருங்கை பட்டையுஞ் சேர்த்து அரைத்துக் கட்ட மிகவும் அதிகாரமுண்டாம்.

புன்னக்கொட்டையின் உபயோகம்

புன்னக்கொட்டையைக் கொண்டு வந்து மேல்தோல் நீக்கி அதினுள்ளிருக்கும் பருப்பையெடுத்து வென்னீர்விட்டு அரைத்து

தனுர்வாதங்களுக்கு மேல்பூசிவர குணமாகும். ஒரு கொட்டையின் பருப்பை நசிக்கி-¼ - பலம் நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சி காதில்விடக் காதிலுள்ள புண்கள் ஆறும்.

நிலப்பனங்கிழங்கின் உபயோகம்

நிலப்பனங்கிழங்கைக் கொண்டுவந்து உலர்த்தி சூரணித்து சீலையில் வடிகட்டிச் சமனிடை சர்க்கரைச் சேர்த்துக் கொண்டு திருகடிகைப் பிரமாணம் காலை மாலை (10) நாள் சாப்பிட்டு வர விலாக்குத்தல் மேகம் தீரும், வீரியவிர்த்தியுண்டாம் நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சி ஸ்நானஞ் செய்துவர செவி நோய் தீரும். இச்சாபத்தியம்.

முசுர்க்காதிலையின் உபயோகம்

முசுர்க்காதிலையைக் கொண்டுவந்து வதக்கி கை கால் கீல் வீக்கங்களுக்கு மேல் வைத்துக் கட்ட வீக்கம் வாடி குணமாகும்.

கோழியவரையிலையின் உபயோகம்

கோழியவரை யிலையைக் கொண்டுவந்து ரசம்பிழிந்து வீசம்படி வீதம் உள்ளுக்குக் கொடுக்க வயற்றுவலி ஆமைக்கட்டி இவைகள் தீரும். இச்சாபத்தியம்.

சிறுபூனைக்காலிலையின் உபயோகம்

ஒரு பிடி சிறு பூனைக்காலி யிலையைக் கொண்டு வந்து ¼ -படி ஜலத்தில் போட்டுக் காய்ச்சி வடித்து அரிக்கால்படி வீதம் கொடுக்க க்ஷயம் கோழை மந்தம் இவைகள் தீரும்.

செந்தாமரையிலையின் உபயோகம்

ஒருபிடி செந்தாமரை யிலையைக் கொண்டு வந்து ½ - படி ஜலத்தில் போட்டு கால்படியாகக் காய்ச்சி வடித்து (3) நாள் கொடுக்க பசியுண்டாகும். நீர் எரிவுமுனை மூலம் வாதம் இவைகள் தீரும். இச்சாபத்தியம்.

சீந்தில்கிழங்கின் உபயோகம்

சீந்தில் கிழங்கைக் கொண்டு வந்து உலர்த்தி சூரணித்து சமனிடைச் சர்க்கரைக் கலந்து வைத்துக்கொண்டு காலை மாலை இருவேளையும் திரிகடிகைப்பிரமாணம் சாப்பிட்டு வர பசியுண்டாகும்.

பித்தம் (40)ம் சாந்தியாகும் கஷாயமிட்டு குழந்தைகளுக்கு வார்க்க மாந்த சுரமிவைகள் தீரும் இச்சாபத்தியம்.

தண்ணீர்விட்டான் கிழங்கின் உபயோகம்

தண்ணீர்விட்டான் கிழங்கைக் கொண்டுவந்து உலர்த்திச் சூரணித்து சமனிடை சர்க்கரைக் கலந்து சாப்பிட்டு வர சோபை சுரம் வெள்ளை அதிமூத்திரம் இவைகள் தீரும். வேளை யொன்றுக்கு திருகடிகைப் பிரமாணம் காலை மாலை சாப்பிட வேண்டியது.

நெய்தல்கிழங்கின் உபயோகம்

நெய்தல் கிழங்கைக் கொண்டுவந்து சூரணித்து வைத்துக் கொண்டு (2) பலம் தூள் நிறுத்தெடுத்து (3) பலம் சர்க்கரையை பாகுசெய்து அதில் தூளைப் போட்டு ஒருபலம் நெய்விட்டு லேக்கிய பதமாகக்கிண்டி இறக்கி ¼ -பலம் தேன் விட்டு மிசிரித்து வைத்துக்கொண்டு காலை மாலை இருவேளையும் கொட்டைப் பாக்களவு சாப்பிட்டுவர பித்தம் 40, ரத்த கிரகணி சூடு இவைகள் தீரும். சுக்கிலத்தை விர்த்திக்கும் இச்சாபத்தியம், ஆனால் இது சீதளக்காரி யென்றறியவும்.

செங்கழநீர்க்கிழங்கின் உபயோகம்

செங்கழணீர்க் கிழங்கைக் கொண்டுவந்து உலர்த்தி சூரணித்து வைத்துக்கொண்டு காலை மாலை இருவேளையும் திருகடிகைப் பிரமாணம் சாப்பிட்டுவர பித்தம் -40, மேகம்-20, புணர்ச்சியின் ஊஷ்ணம் இவைகள் தீரும். இச்சாபத்தியம்.

கோரைக்கிழங்கின் உபயோகம்

கோரைக்கிழங்கைக் கொண்டுவந்து சூரணித்து சமனிடை சர்க்கரைக் கலந்து காலை மாலை இருவேளையும் திருகடிகைப் பிரமாணம் சாப்பிட்டுவர குளிர் சுரம், பித்தம், தாகம், கபம், மூர்ச்சை பேதி, வாந்தி இவைகள் தீரும். அதிகமூத்திரமிறங்கும்.

இஞ்சிக்கிழங்கின் உபயோகம்

ஒருபலம் இஞ்சிக்கிழங்கைக் கொண்டுவந்து நசிக்கிச் சார்பிழிந்து பொங்கக்காய்ச்சி இறக்கி அதில் ஒரு காசிடை தேன்விட்டு இவ்விதமாக மூன்றுபோது கொடுக்க சுரம், சன்னி, ஒக்காளம், வாதம் கபம் இவைகளுக்குக் கொடுக்கத் தீரும்.

கருஞ்செம்பைப்பூவின் உபயோகம்

கால்பலம் கருஞ் செம்பைப்பூவை -2-பலம்-நல்லெண்ணையில் போட்டு காய்ச்சி வடித்து ஸ்நானஞ் செய்து வர கபால, சூலை, பீனிசம், நீர்கட்டு இவைகள் தீரும்

வெங்காயவிதையின் உபயோகம்

வெங்காயவிதையும் பனங்கற்கண்டும் சமநிடையாக வேளை ஒன்றுக்கு ஒருபலம் வீதம் (3) நாள் சாப்பிட்டுவர மேகம் மூலம் தேககாங்கை நீர் எரிவு இவைகள் குணமாகும்.

துளசிவிதையின் உபயோகம்

ஒருபலம் துளசிவிதையும், ½ - பலம் பனங்கற்கண்டும் சேர்த்து ஒருமண்பாத்திரத்திலாவது கோப்பையிலாவது போட்டு ஆழாக்கு ஜலம் விட்டு ஒரு ராமுழுதும் ஊரவைத்து மறுநாள் காலையில் யெடுக்கப் பாயாசம்போல் இருக்கும் அதைச் சாப்பிட சீதம் விழுதல் தீரும், ஆனால் இவ்விதமாக (3) நாள் சாப்பிட வேணும் அன்றியும் யிலையைப்பிட்டு வைத்து ரசம்பிழிந்து பெரியவர்களுக்கு (அரிக்கால்) படியும் குழந்தைகளுக்கு ஒரு பாலடையும் கொடுக்க ஜலுப்புத் தீரும்.

சங்கன்வேரின் உபயோகம்

ஒருபலம் சங்கன்வேரைக் கொண்டுவந்து (½) படி ஜலத்தில் போட்டு (¼) படியாய் வற்றக்காய்ச்சி வடித்து (3) நாள் கொடுக்க கிரிமி, வாதம், காசம், கோழை, கபம் இவைகள் தீரும் இச்சாபத்தியம்.

பேராமுட்டிவேரின் உபயோகம்

ஒருபலம் பேராமுட்டிவேரை சிதைத்து (½) படி ஜலத்தில் போட்டு (¼) படியாக வற்றக்காய்ச்சி வடித்து (3) நாள் சாப்பிட்டு வர பித்தம், சுரம், தாகம், மாந்தம் இவைகள் தீரும். சிற்றாமுட்டி வேரை இம்மாதிரியாக கஷாயமிட்டுக் கொடுக்க சுரம் -94-ம் கேழ்க்கும். இச்சாபத்தியம்.

அவுரிவேரின் உபயோகம்

½ - பலம் அவுரிவேரை (½) படி ஜலத்தில்போட்டு கால்படியாக வற்றக்காய்ச்சி பாகித்து (3) நாள் கொடுக்க வெள்ளை விழுதல், வயற்றுவலி, மூர்ச்சை இவைகள் தீரும். இச்சாபத்தியம்.

முக்காவேளைவேரின் உபயோகம்

ஒருபலம் முக்காவேளை வேரைக் கொண்டுவந்து ½ -படி ஜலத்தில் போட்டு கால்படியாக வற்றக்காய்ச்சி வடித்து இருவேளையும் (3) நாள் கொடுக்க அன்னத்துவேஷம், சுரம், மந்தம், வாதம் இவைகள் தீரும்.

பெரியாநங்கையிலையின் உபயோகம்

½ படி பெரியாநங்கை யிலையைக் கொண்டுவந்து ½ படி ஜலத்தில் போட்டு ¼ படியாக வற்றக் காய்ச்சி (3) நாள் ஆறுவேளை கொடுக்க மலக்கட்டு பித்தம்-40-ம்-தீரும், இச்சாபத்தியம்.

மிளகுதக்காளியிலையின் உபயோகம்.

ஒருபிடி மிளகு தக்காளியிலையை - ½ - படி ஜலத்தில் போட்டு ¼ -படியாக வற்றக்காய்ச்சி வடித்து நித்திரையில் கை கால்களைச் சேர்த்து முரிக்கிக் கொள்ளும் வாதத்திற்கும் பாண்டு மேகம் உட்சூடு இவைகளுக்கும் உபயோகிக்க குணமாகும். இச்சாபத்தியம்.

பேரீச்சங்காய் பழத்தின் உபயோகம்

நாள் ஒன்றுக்கு -5- காய்வீதம் (6) நாள் சாப்பிட்டு வர மதுமூத்திரம் உமிநீர்வடிதல் இவைகள் குணமாகும். இம்மாதிரியாக பழத்தைச் சாப்பிட்டுவர நீர்கட்டு பித்தசுரம் இவைகள் குணமாகும்.

தேயிலையின் உபயோகம்

தேயிலையில் கருப்புப் பச்சையென இரண்டு விதங்களுண்டு இதில் கருப்பைக் காப்பிசெய்து உபயோகிக்க நரம்புகளில் வியாபித்து தென்பைக்கொடுத்து ஆயாசத்தை நீக்கும் வியாதியாளருக்கு இளப்பையாற்றும்.

பச்சை தேயிலையின் உபயோகம்

பச்சைதேயிலையைக் காப்பிசெய்து கொடுக்க நித்திரையைப் போக்கடிக்கும் ரத்த ஓட்டத்தைக் குறைத்து விடும் சாராயங் குடித்தவர்களுக்கு காணும் மயக்கத்தைத் தணிக்கும் திரேகமலுப்பாகக் காண்கிற உறக்கத்தையும் நீக்கும், தேய்த்தண்ணீர் காரமாகச்செய்து கொடுத்தால் சிலவேளை தென்பையும் சிலவேளை சோம்பலையுந் தரும் ஆனால் அல்ப ஊஷ்ணஞ்செய்யும்.

காசிக்கட்டியின் உபயோகம்

காசிக்கட்டியைக் கொண்டுவந்து ஜலத்திலாவது சாராயத்திலாவது உரைத்து முலைக்காம்பு வெடிப்புகளுக்கும் தொண்டை கம்மல்களுக்கும பத்துப்போட குணமாகும். சீதபேதி வெள்ளைவிழுதல். அதிசாரம் இருமல் இவைகளுக்கும் பெரியவர்களுக்கும் -15- குன்றுமணியிடையும் சிறியவர்களுக்கு -5- குன்றுமணியிடையும் பொடித்துக் கொடுக்க குணமாகும்.

சூரத்து நிலாவரையின் உபயோகம்

அரைபலம் சூரத்து நிலாவரையைக் கொண்டு வந்து கால்படி ஜலத்தில் போட்டு (அரிக்கால்) படியாய் வற்றக்காய்ச்சி இருவேளை கொடுக்க மலச்சிக்கல், நீர்யேற்றம், குணமாகும். குமட்டல் உண்டாகாமல இருக்க காப்பிபோல் செய்து சாப்பிட வேண்டில் பசும்பால், சுக்குத்தூள் திராட்சை உப்பு இவைகளில் ஏதாகிலும் ஒன்றைச்சேர்த்துக் கொடுக்கவும். கெர்பஸ்திரி மூலரோகி சிறுகுழந்தை இவர்களுக்கு நிலாவரை கொடுக்கப்பட கூடாது.

நிலாவரை வேறுவித உபயோகம்

½ - பலம் நிலாவரையும் ¼ - பலம் சுக்குத்தூளும் சேர்ந்து கால்படி ஜலத்தில் போட்டு அரிக்கால்படியாய் வற்றக் காய்ச்சி வடித்து அதில் ஆமணக்கெண்ணெய் ½ -பலம் விட்டுக் காலையில் சாப்பிட சுகபேதியாகும். நிலாவரை சிறுகுடல்களில் வியாபித்து பேதியை உண்டாக்கும்.

அதிமதுரவேரின் உபயோகம்

ஒண்ணரை அவுன்சு அதிமதுரத்தை ஒருபயிண்டு ஜலத்தில் போட்டுக் காய்ச்சி வடித்துக் கொடுக்க நீர்சுருக்கு மூத்திரரோகம் இவைகள் தீரும். அதிமதுரத்தின் கிறியதுண்டை வாயில் அடக்கி சாரத்தை முழுங்கினால் இருமல் தணியும், கரகரப்புத்தீரும். இதுபோல் பட்டையை உபயோகிக்க பேதி, இருமல் தீரும்.

சோம்புவிதையின் உபயோகம்

சோம்புவிதையைக் கஷாயமிட்டு வடித்து குழந்தைகளுக்கு (15) குண்டுமணியிடை வீதங் கொடுக்க அதிசாரம் வாயுவால் காணும் வலி இவைகள் குணமாகும். முலைப்பாலைச் சுரப்பிக்கும் குணமிதற்குண்டு.

சீரகத்தின் உபயோகம்

வேளைக்கு ஒரு விராகனிடை சீரகமும், ½ - விராகனிடை சீனாகற்கண்டும் சேர்த்து இவ்விதமாக (6) நாள் சாப்பிட் டு வர பித்தம் சமமாகும் பசிதீவன முண்டாகும்.

கொத்தமல்லிவிதையின் உபயோகம்

ஒருபலம் கொத்தமல்லி விதையை (¼) படி ஜலத்தில் போட்டுக் காய்ச்சி வடித்த கஷாயத்தில் கால்படி பசம்பாலும், 2-பலம் சர்க்கரையும் சேர்த்து தினம் இம்மாதிரியாகக் காய்ச்சிக் காலையில் சாப்பிட்டுவர பித்தத்தை சமமாக்கும். ஆரோக்கியத்தைத் தரும், வாதத்தை ஹரிக்கும், தாகத்தையடக்கும், வாந்தியை நிறுத்தும்.

காப்பிக் கொட்டையின் உபயோகம்

காப்பிக்கொட்டை பித்தத்தை விர்த்திக்கும் திரேகத்திற்கு பலத்தை யுண்டாக்கும் பசிதீவனங்கொடுக்கும் ஊஷ்ணத்தைச் செய்யும் இவ்வித குணங்களுண்டாம். காப்பி செய்து பால் சர்க்கரை சேர்த்து கொஞ்சமாகச் சாப்பிட்டால் பேதியைக் கட்டும் அதிகமாகக் குடித்தால் பேதியாகும். காசம் சுவாசம் இவைகளுக்குக் கொடுத்தால் உடனே சாந்தமாகும் குழந்தைகளுக்கு வாந்தியை நீக்கும். சுரம் முகஜன்னி கக்கிருமல் தலைவலி முதலியவைகளுக்குங் கொடுக்கப்படும்.

சடாமாஞ்சில்வேரின் உபயோகம்

சடாமாஞ்சில்வேர் பலம் -½, எடுத்து நொரிக்கி அரைபடி ஜலத்தில் போட்டு கால்படியாக வற்றக்காய்ச்சி வடித்துக் கொடுக்க சூதகஜன்னி, காக்கைவலி, இரைப்பு, இருமல், சுவாசம், கிரிமி, அக்கினிமந்தம், குடைச்சல், சுரம், குஷ்டம் இவைகளுக்குக் கொடுக்க நன்று. சூதகஜன்னிக்கு அடிக்கடி உபயோக்கப்படுத்தவும்.

அக்கராகாரத்தின் உபயோகம்

அக்கராகாரத்தை வாயில்போட்டால் ஜலம் ஊறும் ½ -பலம் அக்கராகாரத்தை நொரிக்கி ½ -படி ஜலத்தில் போட்டு ¼ படியாக வற்றக்காய்ச்சி வடித்து (3) நாள் (4) போது சாப்பிட்டு வர தந்தரோகம், சுரம், தாகம், வாதம் இவைகள் தீரும். ஒருதுண்டை வாயில் போட்டு மென்றால் நீர்வடியும் பல்நோய் குணமாகும்.

ஜாதிக்காயின் உபயோகம்

முத்தின ஜாதிக்கா ஒன்று கொண்டு வந்து பொடி செய்து 3-குன்றிமணியிடை தூள்யெடுத்து ½ -திராம் போர்ட்டொயினில் தூளைப்போட்டுக் கொடுக்க ஊஷ்ண வாய்வைக் கண்டிக்கும் இதை பேதி மருந்துகளோடு சேர்த்துக் கொடுக்க வயிற்றுக்கடுப்பை நீக்கும் ஆனால் அசதி ஜன்னிக்கு இதை கொடுக்கப்படாது.

மிளகின் உபயோகம்

½ - பலம் மிளகையெடுத்து நெய்விட்டு வறுத்து கடைய விட்டு (¼) படி ஜலம்விட்டு அரிக்கால் படியாய் வற்றக்காய்ச்சி வடித்துச் சாப்பிட ஊஷ்ணித்து வாய்வைக் கண்டிக்கும் பசியுண்டாகும் கண்கள் மேல்வரும் கண்கட்டிகளுக்கு மிளகை யெடுத்து ஜலம்விட்டு உரைத்துத் தடவி வர உடனே குணமாகும். பேதி அதிசாரம் அஜீரணம் இவைகளுக்கு இந்த கஷாயங் கொடுக்க நன்மைதரும் வியாதியைக் கண்டிக்கும்.

வெள்ளைப்பூண்டின் உபயோகம்

வெள்ளைப்பூண்டை அரைத்து மேல்தடவ நோய்கள் தீரும் உட்கொள்ள மூத்திரம் உஷ்ணமும் அதிகரிக்கும் கபத்தை வெளிப்படுத்தும் கிரிமிகளை நீக்கும் யெண்ணெயில் போட்டுக் காய்ச்சி செவியில் விட காது நோய்தீரும்.

புகையிலையின் உபயோகம்

புகையிலையை ½ -பலம் எடுத்து ¼ -பலம் ஜலத்தில் போட்டு அரிக்கால் படியாய் வற்றக்காய்ச்சி 3-நாள் காலையில் கொடுக்க மலக்கட்டு, நீர்க்கட்டு, குடல்வாதம் இவைகள் குணமாகும், புகையிலையை கருட்டு செய்துப் பிடித்து வர மலம் நன்றாயிறங்கும், அதின் தூள் நாசிக்கு உபயோகித்து வர பீனிசரோகம் குணமாகும். இதைவாயிலடக்க உமிநீர் வடிந்து தந்தநோய் குணமாகும். இதற்கு இருதயத்தின் நடையைக் குறைக்கின்ற குணமிருப்பதால் அளவுக்கு அதிகமானால் மார்புநோய் உண்டாகும் குழந்தை பலயீனர் கிழவர் இவர்களுக்கு இதை கொடுக்கப்படாது.

சாலாம்பிசிரிவேரின் உபயோகம்

சாலாம்பிசிரிவேர் பலம் -½, எடுத்துத் தூள்செய்து ¼ -படி பசும்பாலில் போட்டுக் காய்ச்சி வடித்து ஒருபலம் சர்க்கரைச் சேர்த்துச்

சாப்பிட்டுவர திரேகத்திற்குப் பலமும் தாதுபூஷ்டியுமுண்டாம் இதை க்ஷயரோகத்திற்குங் கொடுக்கலாம் 20 -நாள் சாப்பிடவேண்டும்.

சுக்கு உலந்தகிழங்கின் உபயோகம்

தேரின சுக்கைக்கொண்டு வந்து சூரணித்து வஸ்திரத்தில் வடிகட்டி வைத்துக்கொண்டு காலை மாலை திருகடிகைப் பிரமாணம் சாப்பிட்டுவர வாய்வைக் கண்டித்துப் பசியை உண்டாக்கும், அதிசாரம், இரைப்பு, செவிநோய், தலைநோய், வாதம், குன்மம், மந்தம், கபம், சூலை முதலியவைகளுக்கு இதை அடிக்கடி உபயோகப்படுத்த குணமாகும்.

ஜாதிக்காயின் உபயோகம்.

½ - பலம் மிளகையெடுத்து நெய்விட்டு வறுத்து கடைய விட்டு (¼) படி ஜலம்விட்டு அரிக்கால் படியாய் வற்றக்காய்ச்சி வடித்துச் சாப்பிட ஊஷ்ணித்து வாய்வைக் கண்டிக்கும் பசியுண்டாகும் கண்கள் மேல்வரும் கண்கட்டிகளுக்கு மிளகை யெடுத்து ஜலம்விட்டு உரைத்துத் தடவி வர உடனே குணமாகும். பேதி அதிசாரம் அஜிரணம் இவைகளுக்கு இந்த கஷாயங் கொடுக்க நன்மைதரும் வியாதியைக் கண்டிக்கும்.

வெள்ளைப்பூண்டின் உபயோகம்

வெள்ளைப்பூண்டை அரைத்து மேல்தடவ நோய்கள் தீரும் உட்கொள்ள மூத்திரம் உஷ்ணமும் அதிகரிக்கும் கபத்தை வெளிப்படுத்தும் கிரிமிகளை நீக்கும் யெண்ணெயில் போட்டுக் காய்ச்சி வெயில் விட காது நோய்தீரும்.

புகையிலையின் உபயோகம்

புகையிலையை ½ -பலம் எடுத்து ¼ - பலம் ஜலத்தில் போட்டு அரிக்கால் படியாய் வற்றக்காய்ச்சி 3-நாள் காலையில் கொடுக்க மலக்கட்டு, நீர்க்கட்டு, குடல்வாதம் இவைகள் குணமாகும், புகையிலையை சுருட்டு செய்துப் பிடித்து வர மலம் நன்றாயிறங்கும், அதின் தூள் நாசிக்கு உபயோகித்து வர பீனிசரோகம் குணமாகும். இதைவாயிலடக்க உமிநீர் வடிந்து தந்தநோய் குணமாகும். இதற்கு இருதயத்தின் நடையைக் குறைக்கின்ற குணமிருப்பதால் அளவுக்கு அதிகமானால் மார்புநோய் உண்டாகும் குழந்தை பலயீனர் கிழவர் இவரகளுக்கு இதை கொடுக்கப்படாது.

சாலாம்பிசிரிவேரின் உபயோகம்

சாலாம்பிசிரிவேர் பலம் -½, எடுத்துத் தூள்செய்து ¼ படி பசும்பாலில் போட்டுக் காய்ச்சி வடித்து ஒருபலம் சர்க்கரைச் சேர்த்துச் சாப்பிட்டுவர திரேகத்திற்குப் பலமும் தாதுபூஷ்டியுமுண்டாகும் இதை க்ஷயரோகத்திற்குங் கொடுக்கலாம் 20-நாள் சாப்பிடவேண்டும்.

சுக்கு உலர்ந்தகிழங்கின் உபயோகம்

தேரின சுக்கைக்கொண்டு வந்து சூரணித்து வஸதிரத்தில் வடிகட்டி வைத்துக்கொண்டு காலை மாலை திருகடிகைப் பிரமாணம் சாப்பிட்டுவர வாய்வைக் கண்டித்துப் பசியை உண்டாக்கும், அதிசாரம், இரைப்பு, செவிநோய், தலைநோய், வாதம், குன்மம், மந்தம், கபம், சூலை முதலியவைகளுக்கு இதை அடிக்கடி உபயோகப்படுத்த குணமாகும்.

மஞ்சள் கிழங்கின் உபயோகம்

மஞ்சள்கிழங்கை சூரணித்து சமனாய்ச் சர்க்கரை கலந்து கொட்டைப்பாக்களவு சாப்பிட்டுவர வயறுபொருமல் தீரும். முழுகிழங்கை தீயில்கொளுத்தி தீயை யமர்த்தி அதில் வரும் புகையை நாசியில் பிடித்து சலதோஷம் தீரும், தலை வலி வீக்கம் இவைகளுக்கு உரைத்து சுண்ணாம்பும் கொஞ்சம் சேர்த்து பத்துப்போட குணமாகும்.

கசகசாவிதையின் உபயோகம்

கசகசாவை பால்விட்டு அரைத்து (அரிக்கால்) படிபால் பிழிந்து (5) நாள் சாப்பிட்டு வர கிரகணி திமிரு அதிசாரம் இவைகள் தீரும், தாதுபுஷ்டியுண்டாகும், கசகசாவும், அத்தியிலையும் சமமாகச்சேர்த்து காடிவிட்டு அரைத்து நமைச்சல்களுக்குப்பூச நமைச்சல் தீரும், மேற்கூறியபடி பால்விட்டு அரைத்துப் பால்பிழிந்துக் கொடுக்க சீதபேதி, ரத்தபேதி, நித்திரைபங்கம் இவைகளுக்குக் கொடுக்க குணமாகும்.

அப்பியங்கஸ்நானத்தி உபயோகம்

வாரத்திற்கு இரண்டுவிசை சனி புதன்கிழமைகளில் எள்ளெண்ணெயை சிரசில் தேய்த்து ஸ்நானஞ்செய்து வருதலால் நோய் அணுகாது, மயிர்வளத்தியாகும், தலைக்கும் முழங்காலுக்கும் வலிவுண்டாகும் தாதுகட்டும் பித்தசாந்தியாகும்.

துவரம்பருப்பின் உபயோகம்

முளைக்கட்டி உடைந்த துவரம்பருப்பைக் கொண்டு வந்து நன்றாய் வேகவைத்துக் கடையல் செய்து போஜனஞ் செய்யும் போது முதற்சாதத்திற்கு ஆழாக்குப் பருப்பும் கால் ஆழாக்கு நெய்யும் விட்டுக் கொண்டுச் சாப்பிடப் பிடிசாதத்திற்குப் பிடிசதை யுண்டாகும் ஆனால் அன்னம் நன்றாய் சமையாதிருந்தால் திரேபலன்போம் ஆனால் மலஜல சிக்குகள் மற்றாநாள் உண்டாகும் சாதம் நன்றாய் வேகவேண்டும்.

கடுக்காயின் உபயோகம்

கடுக்காய் (50) எடுத்து கழுநீரில் ஒருநாள் ஊறவைத்து மறுநாளும் புதுகழுநீரில் ஊறவைக்கவும் இப்படி (9) தடவை செய்து யெடுத்து கொட்டைகளை நீக்கி எலுமிச்சம் பழச்சாற்றில் ஒருநாள் ஊற வைத்து எடுத்து (2) படி புளித்த மோரில் போட்டு அடுப்பேற்றிச் சுண்டக்காய்ச்சி யெடுத்து வைத்துக் கொண்டு மிளகு, சீரகம், திப்பிலி சுக்கு, பொருங்காயம் வகைக்குப் பலம் (½) இந்துப்பு பலம் (1½) இவைகளைச் சூரணித்து மேற்படி கடுக்காய்களில் செலுத்தி உலர்த்தி ஒரு ஜாடியில் வைத்துக்கொண்டு தினம் ஒரு கடுக்காய்வீதம் காலையில் சாப்பிட்டு வர அரோசிகம், பித்தம், அக்கினி மந்தம், வாயு, குன்மம், இவைகள் தீரும், நன்றாய் மலமிரங்கும்.

பாவன சீரகத்தின் உபயோகம்

ஒருசேர் சீரகத்தை வல்லாரை, கையாந்தகரை, பொன்னாங்காணி, புளியாரை, இஞ்சி, எலுமிச்சம்பழம் இவைகளின் சாறுகளில் தனித்தனியே ஒருநாள் ஊரவைத்து நிழலில் உலர்த்தி தினம் காலையில் 2-விராகனிடை வீதம் சாப்பிட்டு வர பித்தவாய்வு, ஊஷ்ணம், அக்கினிமந்தம், மலபந்தம் இவைகள் தீரும் ரத்தபுஷ்டி தாதுவிர்த்தியுண்டாகும்.

பாவன மிளகின் உபயோகம்

அரைசேர் நல்லமிளகை ஒருசேர் கையாந்தகரைச் சாற்றில் போட்டுச் சுண்டக்காய்ச்சிப் பிறகு ஒருசேர் யெலுமிச்சம் பழச்சாற்றில் போட்டு இந்துப்பு சேர் -¼ சேர்த்துச் சுண்டக்காய்ச்சி நிழலில் உலர்த்தி தினம் காலை மாலை (5) அல்லது 10) மிளகுவீதம் சாப்பிட்டு வர அக்கினி மந்தம் ஊஷ்ணவாய்வு தீரும் ரத்தவிர்த்தியாகும்.

பாவன திப்பிலியின் உபயோகம்

ஒருசேர் பெரிய அரிசிதிப்பிலியை எடுத்து கையாந்தகரை, வல்லாரை, நெய்கட்டி, சிறுகீரை, இஞ்சி, முசுமுசுக்கை பொன்னாங்காணி, கீழாநெல்லி, நாயுருவி, இவைகளின் சாற்றில் வகைக்கு மூன்றுநாள் ஊரவைத்து பிறகு எலுமிச்சம் பழச்சார் சேர்-1, இந்துப்பு சேர்-½ இவ்விரண்டுஞ் சேர்த்து அதில் (3) நாள் ஊரவைத்து உலர்த்தி வைத்துக்கொண்டு தினம் காலையில் ஒரு திப்பிலி வீதம் சாப்பிட்டு வர காசம்-5, சுவாசம்-5, ஊஷ்ணவாயு முதலியவைகள் தீரும் பசியுண்டாகும்.

பாவன ஓமத்தின் உபயோகம்

ஒருசேர் ஓமத்தின் அரிசியை ஒருநாள் புளித்தமோரில் ஊரவைத்து உலர்த்தி பிறகு ரெண்டுசேர் எலுமிச்சம்பழச்சாறும் அரைசேர் இந்துப்பும் சேர்த்து அதில் இரண்டுநாள் ஊரவைத்த உலர்த்தி வைத்துக்கொண்டு தினம் காலை மாலை இரண்டு தடவையும் ஒரு விராகனிடை வீதங் கொடுக்க வயற்றுவலி, அக்கினிமந்தம், வாயு, வயற்றுப்பல், அஜீரணம், குன்மம் முதலிய பற்பல ரோகங்கள் குணமாகும.

வாதுமை ஹல்வாயின் உபயோகம்

கோதுமை, கசகசா, சவ்வரிசி, சுத்தஜலத்தில் இரண்டு மணிநேரம் ஊரவைத்து மேல் தோல் நீக்கின வாதுமைப் பருப்பும் வகைக்கு சேர் ¼ ஜலத்தில் ஊரவைத்து மைபோல் அரைத்து (4) சேர் பசும்பாலில் கரைத்து அதில் சீனிசேர்-1, பன்னீர் சேர் -¼ நெய் சேர்-¼ சேர்த்துக் காய்ச்சி பதத்தில் எடுத்து வைத்துக்கொண்டு கால்சேர் வீதம் சாப்பிட்டுவர தாது புஷ்டியுண்டாகும்

கோதுமை ஹல்வாயின் உபயோகம்

கோதுமையின் வெண்மையான வரலா நொய்யை யேந்திரத்திலிட்டு மாவாக்கினமாவும், பச்சைசம்பா அரிசியை ஜலத்தில் ஊரவைத்து எடுத்து இடித்து வஸ்திரகாயம்செய்த மாவும் வகைக்கு ஆழாக்கு 1ம் எருமைப்பால் முற்றின தேங்காய்ப்பால் வகைக்குப்படி - 1, இவைகளில் சேர்த்துக் கரைத்து யெரித்து அடிக்கடித்தொழாவிக் கொடுத்து பதத்தில் சீனி சேர் -1½, ஏலரிசிதூள் விராகனிடை (2) முன்போல் செய்த வாதுமைப்பருப்பு சேர் -¼, நெய்

சேர் -½, பன்னீர் சேர் - ½, இவைகளையெல்லாஞ் சேர்த்து சரியான பதத்தில் யெடுத்து வைத்துக்கொண்டு கால்சேர் வீதம் தினம் சாப்பிட்டுவர தாது புஷ்டியாகும்.

போகவல்லி ஹல்வாயின் உபயோகம்

சுத்தஜலத்தில் இரண்டுமணி நேரம் ஊரவைத்து தோல் போக்கின பாதுமைப்பருப்பு பலம் (8) கசகசா பலம் (4) சாலாம்மிசரி பலம்-2, நீர்முள்ளிவிதை பலம்-1, ஜாதிக்காய் பலம் -½ வால்மிளகு பலம் (¼) யேலம் அரிக்கால், இவைகளை பசும்பாலால் அரைத்து (6) சேர் பசும்பாலில் கரைத்து யெரித்து இரண்டுசேர் ஆக்கி அதில் பன்னிர் சேர் -½, நெய்சேர் (1) சீனிசேர் 2, போட்டுக் காய்ச்சி பதத்திலிரைக்கி வைத்துக்கொண்டு தினம் கால்சேர்வீதம் சாப்பிட்டுவர நீர் யெரிவு, போகத்தாலுண்டாகும் ஊஷ்ணம் இவைகள் தீரும், தாதுபுஷ்டி யுண்டாகும்.

கிராம்பின் உபயோகம்

ஒருபலம் கிராம்பை இரவில் முலைப்பாலில் ஊரவைத்து மறுநாள் அந்தப் பாலால் மைபோல் அரைத்து தேன் பலம் (¼) சேர்த்து கொதிக்க வைத்து பதத்தில் இரக்கி வைத்துக்கொண்டு கடலை அளவாகக் கொடுத்துவர தீபனம் ரத்த விர்த்தி யுண்டாகும்.

வெந்தயத்தின் உபயோகம்

வெந்தயம் கோதுமை வகைக்கு அரை அவுன்சு வருத்து இரவில் பசும்பாலில் ஊரவைத்துக் காலையில் அதைக் கடைந்து வடித்து நெய், தேன், சர்க்கரை வகைக்கு அவுன்சு அரை சேர்த்து தினம் காலையில் சாப்பிட்டு வர ரத்தவிர்ததியுண்டாகும் விந்து ஊறும்.

பச்சைக்கடலையின் உபயோகம்

ஒருபிடி பச்சக்கடலையை இரவில் அரைசேர் ஜலத்தில் போட்டு ஊரவைத்து காலையில் வடித்து அந்த ஜலத்தில் ஜாதிக்காய் ஜாதிப்பத்திரி வஃகக்கு விராகனிடை -½ - சூரணித்துப்போட்டு தேன் -2-விராகனிடை விட்டு கொடுத்துவர வீரியவிர்த்தி யுண்டாகும்.

கசகசாவின் உபயோகம்

கசகசா, வால்மிளகு வகைக்குப்பலம்-2 இளம்வருப்பாய் வருத்து அத்துடன் வாதுமைப்பருப்பு சீனாகற்கண்டு வகைக்குப் பலம் -2- சேர்த்து கல் உரலில்போட்டுக் கட்டப்பாரையால் இடித்து

லேகியமாகச் செய்து பாக்களவு தினம் காலை மாலை சாப்பிட்டு வர தாதுபுஷ்டியுண்டாகும்.

அகத்திக்கீரையின் உபயோகம்

அகத்திக்கீரையைக் கொண்டுவந்து பழுப்பை நீக்கி சமைத்துச் சாப்பிட்டு வர பித்தசாந்தியாகும் மலத்தைக் கழிக்கும் மிகநன்று

முருங்கைக்கீரையின் உபயோகம்

முருங்கைக்கீரையை காம்புப் பழுப்பும் நீக்கி சமைத்துச் சாப்பிட சிரக, தாபம் மூர்ச்சை, உட்சூடு தணியும் அதின் காயைச் சமைத்துச் சாப்பிட விந்தூரும்.

புளியன் துளிரின் உபயோகம்

புளியன் துளிரைக் கொண்டுவந்து உலர்த்தி சூரணித்து வைத்துக் கொண்டு துவையல் குழம்புகள் இவைகளில் சேர்த்துச் சமைத்துச் சாப்பிட பாண்டு கண்ணோய் இவைகள் சாந்தியாகும்.

கீரைத்தண்டின் உபயோகம்

கீரைத்தண்டை சமைத்துச் சாப்பிட ரத்தகழிச்சல் கிரிச்சாரம் சாந்தியாகும்.

புதினாகீரையின் உபயோகம்

புதினாவைக் கொண்டுவந்து நெய்விட்டு வதக்கி துவையல் செய்து காலையில் பாக்ளவு வெரும்வயற்றில் சாப்பிட்டு வரவும் சாதத்தோடு உபயோகிக்கவும் பேதி, மந்தம், அரோசகம் சாந்தமாகும்.

வெள்ளைக்கீரையின் உபயோகம்

வெள்ளைக்கீரையை சமையல்செய்து சாப்பிட முலைப் பாலதிகரிக்கும திரேகத்திற்கு சவுக்கியமுண்டாம்.

பருப்புக்கீரையின் உபயோகம்

பருப்புக்கீரை சமைத்துச் சாப்பிட பித்தத்தைக் கண்டிக்கும

பசலக்கீரையின் உபயோகம்

சங்கிலைச்சாறும் வெள்ளாட்டுப்பாலும் ஒன்றாய்க் கலந்து வேளை யொன்றுக்குக் காற்படி வீதம் மூன்று நாள் கொள்ளத்தீரும்

பால்சொரி கீரையின் உபயோகம்

பால்சொரி கீரையைச் சமைத்துச் சாப்பிட பித்தத்தைக் கண்டிக்கும் மயக்கத்தை தணிக்கும்.

முளக்கீரையின் உபயோகம்

முளக்கீரையைச் சமைத்துச் சாப்பிட பசியுண்டாகும் காசரோகத்தை நிவர்த்தியாக்கும் சுரமுள்ளவர்களுக்கு கொடுக்கலாம்.

முள்ளுக்கீரையின் உபயோகம்

முள்ளுக்கீரையைச் சமைத்துச் சாப்பிட்டு வர மந்தம் நீர்க்கட்டு சாந்தமாகும்.

அரைக்கீரையின் உபயோகம்

அரைக்கீரையை சமைத்துச் சாப்பிட்டுவரில் காசம் சுரம் சாந்தமாகும் தாதுவிர்த்திக்கும்.

சிறுகீரையின் உபயோகம்

சிறுகீரையை சமைத்துச் சாப்பிட்டுவரில் கிரிச்சாரம் பித்தம் நேத்திரகாசம் குணமாகும் திரேககுளிர்ச்சி யுண்டாகும்.

புளியாரைக்கீரையின் உபயோகம்

புளியாரைக் கீரையைச் சமைத்துச் சாப்பிட்டுவரில் ரத்தமூலம் பித்தம், மூலவாயு இவைகள் சாந்தியாகும்.

கோழிக்கீரையின் உபயோகம்

கோழிக்கீரையை சமைத்துச் சாப்பிடில் கிருமி கரப்பான் இவைகள் சாந்தமாகும்.

கொத்தமல்லிக்கீரையின் உபயோகம்

கொத்தமல்லி கீரையைச் சமையல் செய்தாகிலும் தொவையல் செய்தாகிலும் சாப்பிட்டுவர அரோசிகம் பித்தம் - 40 வாதம் 80 - ம், சாந்தியாகும் வீரியவிர்த்தியுண்டாம்.

தென்னங்குருத்தின் உபயோகம்

தென்னங்குருத்தைச் சாப்பிட்டுவா கபம் பித்தம் மூலம் இவைகள் சாந்தமாகும்.

செந்தாமரைப்பூவின் உபயோகம்

இருமல், தொண்டை கம்மல் சிரக தாபம் இவைகளுக்குக் கொடுக்க சாந்தமாகும்.

பன்னீர்பூவின் உபயோகம்

பன்னீர் பூவை பித்த வாந்தி இவைகளுக்குக் கொடுக்க சாந்தமாகும்.

பிரம்மதண்டிப்பாலின் உபயோகம்

கண்சிவப்பு, கண்கசிதல், கண்ணில் நீர்வடிதல், கண்குருகல், கண்வலி இவை முதலானதற்கும் ஒருதுளி இரண்டு துளிவிட சாந்தமாகும்.

கருவேப்பிலையின் உபயோகம்

கருவேப்பிலையை துவையல்செய்தாவது அல்லது குழம்பு வைத்தாவது சாப்பிட்டு வர சீதபேதி சுரம் அரோசிகம் இவைகள் சாந்தமாகும்.

தேங்காய்ப்பாலின் உபயோகம்

தேங்காயை உடைத்து திரிகி அப்பட்டமாகப் பால் பிழிந்துச் சாப்பிட்டு வர கரப்பான் தீரும். சுக்கிலத்தை விர்த்திக்கும் ஆனால் வாதம் பிந்தம் அதிகரிக்கும்.

குன்மம் மூலவாயு பாரிசவாயு வயிற்று வலிக்கு

ஒருபலம் வெள்ளுள்ளியை மேற்றோல் நீக்கி ஆவின் பாலிலவித்து அதில் சீரகம், இந்துப்பு, சுக்கு, திப்பிலி, மிளகு, ஓமம், பொருங்காயம் இவைகளை வகைக்குப்பலம் ஒன்றுவீதம் வெதுப்பிப் பொடித்துத் தூவிக்கடைந்து வேளை யொன்றிற்கு யெலுமிச்சங்காய்ப் பிரமாணம் ஒரு மண்டலங் கொள்ளத்தீரும்.

சகலகுன்மத்திற்கு

நொச்சி, தழுதாழை, மாவிலிங்கு இவைகளினிலைகளை ஓரளவாய்ச் சிதைத்துப் பிழிந்தசாறு ஆழாக்கு வெள்ளுள்ளித் தயிலம் ஆழாக்கு பொருங்காயம் பலம்-1, பொடித்துப் போட்டு குழம்பாய்க் காய்ச்சி ஒருகரண்டி வீதம் பத்துநாட் கொடுக்கத் தீரும்.

அண்டவாதம், நடுக்குவாதம், முடக்குவாதம் சந்துவாதம், முகவாதம் இவைகட்கு

சித்திரமூலம், மாவிலிங்கு, கொன்றை, முறுங்கை, சங்கு, வெள்ளறுகு வேம்பு, எருக்கு, சுக்கு, திப்பிலி, மிளகு பஞ்சலவணம் இவைகளை ஓர் நிரையாய் ரவியிலுலர்த்திச் சூரணித்து ஒருமண்டலம் திருகடிகைப் பிரமாணம் சாப்பிட்டு வரத்தீரும்.

அரைவாதம் கால்வாதத்திற்கு

முற்றின தேங்காயை கண்திறந்து நீரை நீக்கிப் போட்டு அதற்குள் திருகுகள்ளிப் பால்விட்டு காஞ்சிரை முளையடித்து புளியந்தணலிற் போட்டுச் சுட்டு சிரட்டை வெந்தபின் எடுத்து ஓடுநீக்கி அறைக்குக் கீழ் பாதவரைத் தடவி மாலையில் வென்னீரில் ஸ்நானஞ்செய்யத் தீரும்.

வாதக்கடுப்பு குத்து கைகால் முடக்கு திமிர் வாதத்திற்கு

புனலித்தண்டு திருகுகள்ளி, சுடுதுரத்தி, தழுதாழை முடக்கொத்தான் வேப்பம்பட்டை சங்கு உத்தாமணி வெண்ணொச்சி வெள்ளிண்டு, பிரப்பங்கிழங்கு வகைக்குப் பலம்-10 இடித்து ஒரு பாண்டத்திற்போட்டு அன்றாடம் ஜலம் விட்டுக் கொதிக்க வைத்து வேதுவிடவும்.

பக்கவாதம் முகவாதத் திமிர் நடுக்குவாதம் முதலான சகலவாதத்திற்கும் உட்குத்துப் புறவீக்கக்கும். தலைவலிக்கும் மேற்பூச்சு

உகாய், எருக்கு, கழற்பொடி, மாவிலிங்கு, சாரணை, குப்பைமேனி கருநொச்சி, கொன்றை, ஈசுரமூலி, கொடுவேலி இவைகளின் வேர்ப்பட்டை, சுக்கு, திரிகடுகு, வசம்பு, வெளிச்சிப்பிசின் அரத்தை வெள்ளைப்பூடு, கருஞ்சீரகம், இவைகளை ஓர்நிறையாய் உத்தமாணிச் சாற்றிலாட்டி கொதிக்கவைத்துப் பூசத்தீரும்.

வாதக்கடுப்புக்கு மேற்பூச்சு

கள்ளிக்கொழுந்தை வாட்டிப் பிழிந்த சாற்றில் பூநீர் சீரகம் வகைக்கு ஒருசிரங்கை போட்டு மறுநாளந்தத் தண்ணிராற் கடுகையரைத்து கடுக்கிறயிடத்திற் பூசத்தீரும்.

முழங்கால் வாதத்திற்கு

வீழியிலை, பிண்ணாக்குபூடு, அவரையிலை, வெள்ளைப்பூடு இவைகளை யோர்நிரையாய் இடித்து ஒரு துணியில் முடிந்து விளக்கெண்ணெயில் வெதுப்பி ஒத்தணஞ் செய்து ஆறுநாள் கட்டத்திரும்.

வாதக்கடுப்பு வாயுக்கு

சங்கம்வேர், முக்கொழுஞ்சு, கொடுவேலி, பரங்கிப்பட்டை, சுக்கு வாய்விளங்கம், சிறுதேக்கு, கொத்தமல்லி வகைக்கு விராகனிடை -2, இவைகளைச் சிதைத்து ஒருபடி தண்ணீரிற்போட்டு அரைக்காற் படியாய் வற்றவைத்து அதில் ஒரு விராகனிடை மிளகுப்பொடியும் ஒரு துட்டிடை விளக்கெண்ணையும் சேர்த்து இப்படி ஆறுவேளை கொடுக்கத்திரும்.

வாதக்கடுப்பு முடக்குவாதம் மேக வாயுவிற்கு

பரங்கிப்பட்டை சித்திரமூலம் சங்கு அமுக்கிறா இவைகளின் வேர்ப்பட்டை வகைக்குப் பலம் -2, திரிகடுகு, சீரகம், ஏலம் வகைக்குப் பலம் ½ , இவைகளை இடித்துச் சூரணித்து ஒருசட்டியில் அரைப்படி ஆவிநெய்யும், காற்படி தேனும் எட்டுப்பலம் சீனியுங் கூட்டிக் காய்ச்சி இறக்கி அதில்சூரணத்தைத் தூவிக் கிண்டி வேளையொன்றுக்கு ஒரு கொட்டைப் பாக்களவு கொள்ளத் தீரும்.

அண்டவாதத்திற்கு

ஒருபிடி கருஞ்சீரகமும், 10-வெள்ளைப்பூண்டு தேனிற் குழைத்து இந்தப்படி ஆறுபோது கொள்ளத்திரும்.

முருங்கையிலை ஒருபிடி, வெந்தயம், வெள்ளுள்ளி, கழற்பருப்பு வகைக்குப்படி அரைக்கால், சுக்கு, மிளகு வகைக்கு விராகனிடை-2 இவைகளை மயனமாயரைத்துக் காய்ச்சிக் கொடுக்கத் தீரும்.

தண்டுவாதத்திற்கு

பிரண்டைத்தண்டு கோவைத் தண்டு சீந்திற்றண்டு இவைகளைச் சிதைத்துக் காற்படி சாறுபிழிந்து சுக்கு, மிளகு, ஈருள்ளி வகைக்கு விராகனிடை -3 அரைத்துக் கலைக்கி இந்தப் படி -3 நாட்கொடுத்து காத்தட்டியிலையை அரைத்து தண்டிற்பூசத் தீரும்.

சந்துவாதத்திற்கு

தேய்காய்க்குள் கடுகைப் போட்டு மூடி ஓடு வெந்தபின்பு கடுகைக்கொட்டி மோரில் அரைத்துக் கலைக்கி மூன்று நாட்கொடுக்கத்தீரும், முட்குருந்தம் பட்டையும் பாஞ்சா வேரும் ஒரு எலுமிச்சங்காய்ப் பிரமாணமரைத்து வெந்நீரிற்கரைத்து உள்ளுக்குச் சாப்பட்டு மேற்படி வேர்களை யரைத்து சந்திற் பூசத்தீரும்.

தோள்வாதத்திற்கு

தழுதாழை, நொச்சி வாதமடக்கி இவைகளை யிடித்துத் தண்ணீரிற்போட்டுக் காய்ச்சி வேதுவிட்டு விளக்கெண்ணையைப் பூசிப் பிடித்துவிடத்தீரும்.

நடுக்குவாதத்திற்கு

காரெள்ளெண்ணெய் படி - 2½ ஆயிற்பட்டை வெள்ளைப்பூண்டு வகைக்குப் பலம் -1, வசம்பு பலம் -½ காயம், திப்பிலி வகைக்கு விராகனிடை -5, அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து ஒரு கரண்டிவீதம் உள்ளுக்கும் கொடுத்து மேலும் பூசத்தீரும் பத்தியம் புளித்தள்ளவும்.

கெண்டைக்கால் வாதத்திற்கு

மாஞ்செவிக் கள்ளியிலைச்சாற்றை மூன்றுநாட்பூசி அப்பால் வெந்நீரில் குளிக்கத்தீரும்.

இடுப்புவலி உளைவு மேகநீர்கட்டு சூலைகளுக்கு

முற்றின ஆறு தேங்காயைப் பால்பிழிந்து அதில் கெந்தகம் கருஞ்சீரகம் வகைக்குக் கழஞ்சு-6 தாளகம் மனோசிலை வகைக்கு விராகனிடை-3, இவைகளைக் கொடிக்கள்ளிப் பாலாலரைத்துப் போட்டுக் காய்ச்சி நெய்வடித்து ஒரு துட்டிடை கொடுத்து பத்தியம் மிளகு நீரும் அன்னமும் பாசிப்பயறுங் கூட்டத்தீரும்.

சூலைக்கடுப்பு வாயுஉட்குடைதல் வாதக்கடுப்புக்கு

பரங்கிப்பட்டை திரிகடுகு வகைக்குப் பலம்-5, இடித்துச் சூரனித்து திரிகடிப்பிரமாணம் வாததேகிக்குத் தேனிலும், இளைத்ததேகிக்கு ஆவிநெய்யிலும், வாயுபதார்த்தந் தள்ளி (10) நாள் சாப்பிடத்தீரும்.

இடுப்புவலிகாசத்திற்கு

வீழிச்சாறும் நல்லெண்ணையும் ஓரளவாய் மத்தித்து வேளை ஒன்றுக்கு அறைக்காற்படி வீதம்-3, நாள் கொள்ளத் தீரும்.

மொளிவீக்கத்திற்கு

பிரண்டையை பிடித்து எருக்கஞ்சாறுவிட்டு வதக்கி வீக்கத்தில் வைத்துக்கட்டத் தீரும்.

திமிருக்கு

சங்கிலைச்சாறும் வெள்ளாட்டுப்பாலும் ஒன்றாய்க் கலந்து வேளையொன்றுக்குக் காற்படி வீதம் மூன்று நாள் கொள்ளத்தீரும்.

அலகுப் பூட்டுக்கு

முருங்கப்பட்டை, வசம்பு, வெள்ளைப்பூடு, பெருங்காயம் இவைகளைத் தைவேளைச்சாறுவிட்டுச் சிதைத்துத் துணியில் முடிந்து நாசியில் நசியமிடத்தீரும்.

எரிவாதத்திற்கு

இலந்தையிலையை அரைத்துக் காடியிற் கறைத்து மத்தாற் கடைந்து இதில் வருகிற நுறையை உடம்பிற் பூச யெரிச்சல்மாறும்.

தோள்கடுப்புக்கு

சிறுபூளைவேர் பலம் 1- மிளகு, மஞ்சள் பூடுவகைக்கு விராகனிடை -1, இவைகளைக் குன்றிமணிச்சாற்றாலாவது ஊசிநீராலாவது மயனமாயரைத்து அயக்கரண்டியில் கொதிக்கவைத்து நாலுவேளை பற்றுபோட்டு பிரப்பங் கிழங்கு மிளகு பரங்கிப்பட்டை சுக்கு அல்லது அரத்தை வகைக்கு விராகனிடை -6, வீதமிடித்து-6 பங்கிட்டு வேளை ஒன்றிற்கு ஒரு பங்கை இரண்டுபடி தண்ணீரிற் போட்டு அறிக்காற்படியாய் வற்றவைத்து ஆறுபோது புளி புகைதள்ளிச் சாப்பிடத் தீரும்.

எட்டாம்பாகம்

முற்றிற்று.

அவுஷதங்களின் அட்டவணை.

ஐந்தாவது காண்டம்

அவுஷதங்களின் அட்டவணை.

அவுஷதங்களின் அட்டவணை.

அவுஷதங்களின் அட்டவணை.

அவுஷதங்களின் அட்டவணை.

அவுஷதங்களின் அட்டவணை.

அவுஷதங்களின் அட்டவணை.

அவுஷதங்களின் அட்டவணை.

அவுஷதங்களின் அட்டவணை.

அவுஷதங்களின் அட்டவணை.

அவுஷதங்களின் அட்டவணை.

அவுஷதங்களின் அட்டவணை.

அவுஷதங்களின் அட்டவணை.

அவுஷதங்களின் அட்டவணை.

அவுஷதங்களின் அட்டவணை.

அவுஷதங்களின் அட்டவணை.

அவுஷதங்களின் அகராதி
முற்றுப் பெற்றது

.......xxx......

தாமரை
நூலகம்